# ராஜலக்ஷ்மி

அல்லது

# ஜெகஜாலக்கள்வன்

530 292

இஃது

ஸ்ரீமதி V. சரஸ்வதியம்மாள்

இயற்றியது

மதுரை காமராசர் பல்கலை...
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

திருச்சிராப்பள்ளி

ஜெகம் அண் கோ., டாட்ஸன் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1938

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.] [விலை அணா 12

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 555
நூல் கொடை எண்: 555



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

hole
ating
and
tric-

செய்
பாகங்
கவும்,
ரூப
மாய எழுதவும் நடிக்கவும் கூடாதென்பதைத் தெரிவிக்கின்றோம்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

# முகவுரை

"ராஜலக்ஷ்மி" அல்லது "ஜெகஜாலக்கள்வன்" என்று பெயர்பூண்ட இக்கதையை நான் கவனமாய் வாசித்தேன். நல்ல நடையில், காதுக்கும் மனதிற்கும் சுவையளிக்கக்கூடிய விதத்தில் இலக்கணத்திற்கு விரோதமன்றி எல்லோரும் எளிதில் படித்தறியக்கூடிய முறையில் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு மனிதன் எவ்வளவுதான் கஷ்டநஷ்டங்களில் மூழ்கியிருந்தபோதிலும் அவைகளை அகற்றுவதற்குப் பொறுமையுடன், சத்தியம், தர்மம் தெய்வபக்தி இவை முதலான நீதிமுறைகளைத் தவிர வேறுவழி கிடையாது என்பதையும் அவைகளுக்கு விரோதமாய் மனம் கூசாது, ஜனங்களைத் துவேஷித்து, பிறர் சொத்தைக் கவர்ந்து அநியாயமும் அக்கிரமமும் நிறைந்த முறைகளைக் கையாடினால் அவை அவனுக்கு ஸ்வல்பகாலத்திற்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதுபோலிருந்தாலும் கடைசியில் அவனுக்கு நாசத்தையே விளைவிக்குமென்பதையும், இந்தக் கதையில் நன்கு வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் உலகத்தில் நடந்தேறிவரும் வஞ்சகமும், போலிவாழ்வும், துற்பழக்கங்களும், ஆபாசமான செயல்களும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டு கண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஜெகஜாலக்கள்வனின் திடுக்கிடும் சம்பவங்கள் அநேகம். அவை வெகு ரஸமாக படிப்பவர் மனதைக் கவரக்கூடியவாறு வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இக்கதையானது ஸினிமா பேசும படத்திற்கு—அதுவும் ஸ்டண்டு (Stunt) படத்திற்கு—மிகவும் உதவக்கூடியது. இப் புஸ்தகத்திற்கு ஆசிரியையான, ஸ்ரீமதி ஸரஸ்வதியம்மாள், எனக்கு அறிமுகமானவர். நான் காரியதரிசியாயிருக்கும் திருச்சிராப்பள்ளி ரஸிகரஞ்சனசபாவில் ஒரு நபராயிருந்து நாடகக்கலைக்கு தன்னால் முடிந்தவரை உதவிசெய்து வருகிறார். இவர் இதற்குமுன் எழுதிய "பிரேமாஹரன்" என்கிற கதையை நாடக ரூபமாக எங்கள் சபாவில் நடத்தப்பட்டு பார்த்தவர்கள் எல்லோராலும் புகழப்பட்டுள்ளது. அதே மாதிரி இந்த "ஜெகஜாலக்கள்வன்" என்னும் கதையும் படிக்கிறவர்கள் யாவருக்கும் ஆனந்தத்தையளித்து நற்புகழ் பெருமென்பதற்குச் சந்தேகமில்லை. ஸ்ரீமதி ஸரஸ்வதி அம்மாளுடைய சேவையானது போற்றத்தக்கது. இத்துடன் அன்னவருக்கு இச் சேவைபுரிவதில் சகல உதவியும் சௌகரியங்களும் கொடுத்து உத்ஸாகப்படுத்திவரும் அவருடைய பர்த்தா ஸ்ரீமான் டாக்டர் பி. டி. வரதராஜுலு I. M. D., அவர்களுடைய பரந்த மனதும், விசால புத்தியும், கலையுணர்ச்சியும் போற்றத்தக்கவன.

"மனோஹரவிலாஸ்"
உறையூர், திருச்சிராப்பள்ளி,
31—7—1938.

எப். ஜி. நடேச அய்யர்,
ரிடயர்டு டி. டி. எஸ்.,
தென் இந்தியா ரெயில்வே.

அவ்வை
...முகம் நூலகம்

# பொருளடக்கம்

பக்கம்

1. வைத்தியம் செய்யச்சென்றார்—வகைமோசம்போனார் 1

2. மணமகனின் ஆசை—மணப் பெண்ணின் மூர்ச்சை 15

3. பிடித்த கள்ளனை விட்டார்—பிரம்படியும் பட்டார் 25

4. அகமகிழ்ந்த அன்னை—இழந்து நின்றாள் பெண்ணை 34

5. கண் கட்டுக்காக்ஷியா ?—இந்திரஜால வித்தையா ? 42

6. மருமகன் வரவு—மகத்தான களவு 52

7. பாதாள நிலயம்—பலத்தகார்யாலயம் 63
(பாதாள நிலயத்தில்—பலத்த ஆலோசனைகள்)

8. கள்ளப் புலியின் வெற்றி—காவலரின் தோல்வி 73

9. தெப்போற்ஸவ காட்சி—திகைப்படைந்து போச்சி 78

10. குறத்தியின் குறி—சொன்னதெல்லாம் சரி 84

11. காதலின் வன்மை—கட்டிற் கடங்காதன்மை 95

12. உப்புக்கடலை சுவாமியார்—உய்யானவனத்து காமியர் 105

13. விநோத பார்ஸல் வரவு—விபரீத முடிவு 113

14. தீவாந்தர சிட்சை—தீர்ந்தது ரச்சை 120

15. சிறுவனின் சூழ்ச்சி—திருமண நிகழ்ச்சி 132

16. கன்னியின் கனவு—கதையின் முடிவு. 148

அவ்வை
தி. க. சண்முகம்
தமிழியல் துறை

# ராஜலக்ஷ்மி

## அல்லது

# ஜெகஜாலக் கள்வன்

### 1-வது அத்தியாயம்

#### வைத்தியம் செய்யச்சென்றார்—வகைமோசம் போனார்

ஸ்ரீதரன், எம்.பி.,பி.எஸ். என்பவர், தேவிபுரத்திலுள்ள பிரபல டாக்டர்களில் ஒருவர். அவர் 30 வயதுடன் கூடிய கட்டழகுவாய்ந்த சுந்திர புருஷராக விளங்கினார். ரூபத்தில் சிறந்து விளங்கியதுபோல் குணத்திலும் சிறந்து விளங்கினார். டாக்டர்களுக்கு முக்கியமா யிருக்கவேண்டிய "கைராசி" என்பதும் அவருக்கு நன்கு அமைந்திருந்தது. ஆதலால் அவ்வூரிலுள்ளவர்களில் பெரும்பாலார் அன்னவரின் மருத்துவத்தையே எதிர் பார்த்து அவரது வீட்டுத் தெருவாயிலில் சதா கார்த்துக் கொண்டிருப்பார்கள்.

காலை மணி 7 அடித்ததைக் கண்ட டாக்டர் பரபரப்புடன் உடைகளை அணிந்துகொண்டு தன் வீட்டின் ஒருபுறத்தில் அமைக்கப்பட்டிருந்த "பார்மஸி"யை நாடிச் சென்றார். அவர் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வியாதியஸ்தர் கூட்டங் கூட்டமாய் எழுந்து நின்று அன்பு ததும்பிய பார்வையுடன் நமஸ்கரித்து வரவேற்றார்கள். அவர்களுக்கெல்லாம் பதில் வந்தனம் புரிந்தவண்ணம் டாக்டர் சென்று அவர் ஸ்தானத்தை யடைந்து, முறையே ஒவ்வொருவரையும் விசாரித்து வியாதி

களைப் பரிசீலனைசெய்து மருந்து முறைகளைக் கடிதத்தில் எழுதிக் கொடுத்துக்கொண்டிருந்தார். கம்பவுண்டர் ஒருவன் அதன்படி மருந்துகளைத் தயார்செய்து ஒவ்வொருவருக்காய் கொடுத்தனுப்பிக்கொண்டிருந்தான். அச்சமயம் தபால்காரன் ஒருவன் அங்குவந்து 'லக்ஷ்மிநரசு அவர்களுக்கு' என்று கூறிக்கொண்டே ஒரு கடிதத்தை அவன்முன் நீட்டினன்.

சாந்தமே உருவெடுத்து வந்ததுபோல் விளங்கிய லக்ஷ்மிநரசு ஆவலுடன் அதைக் கையில் வாங்கி 'எங்கிருந்து வந்த கடிதமிது' என கவனித்துத் தன் தாயினிடமிருந்து வந்த கடிதம்தான் என்பதையும் தெரிந்துகொண்டான். அப்பொழுது இன்னும் 7, 8 "பிரிஸ்கிருப்ஷன்"களே பாக்கி யிருந்தமையினல், அக்கடிதத்தைத் திறக்காமல் அப்படியே மேஜைமீது வைத்துவிட்டு, அந்த "பிரிஸ்கிருப்ஷன்"படி மருந்துகளைத் தயார்செய்துகொண்டிருந்தான். அப்பொழுது டாக்டர் வெளி கேசுகளைக் கவனிக்கச்செல்வதாக, கம்பவுண்டரிடம் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். சிறிதுநேரத்தில் "பிரிஸ்கிருப்ஷன்கள்"யாவும் தீர்ந்துவிட்டமையினல், லக்ஷ்மிநரசு சாவதானமாக ஓர் நாற்காலியில் அமர்ந்து கடிதத்தைத் திறந்து வாசிக்கலானன். அக்கடிதம் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

கடிதம்

என்னருயிர் மைந்தா !

உன் தந்தை இறந்தபோது 14 வயது பாலனுகவிருந்த நீ, என்னையும் உனது உடன்பிறந்தாரையும் ஆதரிக்கும் கடமை உனதென்பதையறிந்து அந்தோ ! நீ, எமக்காகப் பட்ட கஷ்டங்களை எவ்வாறு மறப்பேன். அவ்வித நீதிவானகிய நீ இந்த 6 மாதங்களாக எம்மை அடியோடு மறந்துவிட்டு, நான் எத்தனை கடிதங்கள் எழுதியும் பாராமுகமாயிருப்பதன் காரணம்தான் என்னவோ தெரியவில்லையே !

நீ பிரதி மாதமும் 20 ரூபாய் தவராமல் அனுப்பிக்கொண்டிருந்தகாலத்தில், தற்செயலாய் ஒருமாதம் எப்போதும் அனுப்பும் தவணைக்கு 4, 5 நாட்கள் பிந்திவிட்டதற்காக, தேதிப்படி

அனுப்பமுடியாமல் தவரிவிட்ட காரணத்தை எழுதி இதனுல் தாங்களும் குழந்தைகளும் என்ன கஷ்டடப்பட்டீர்களோ? ஒருக் கால் பட்டினியாகவேயிருந்து பொழுதைப் போக்கினீர்களோ என்று எவ்வளவு அன்பாய் கடிதம் எழுதியிருந்தாயப்பா! இப் போது நான் பல கடிதங்களில் எமது கஷ்டங்களை எத்தனையோ விதமாய் தெரிவித்தும் சற்றும் கவனிக்கமாட்டேன் என்கிருயே ஈதென்ன விந்தை! எந்த மோகனங்கியின் மோகவலையில் சிக்கி எம்மை இவ்விதம் மறந்துவிட்டாயடா! என் கண்ணே! நான் இப்போதிருக்கும் நிலமையில் பேனுவைப் பிடித்து எழுத வும் சக்தியில்லையே! சுருக்கமாய் எழுதுகிறேன்.

குழந்தைகள் பசி தாங்கமாட்டாமல் கதறுகிருர்கள். உனது சிறிய தங்கை யமுனு நேற்றிய இரவு வீதியிற் சென்ற ஒரு பிச்சைக்காரப்பெண்ணைப்பார்த்து அம்மா! அதோ பாரும் அந்தப் பிச்சைக்காரி ஒரு பாட்டுப்பாடினதற்கு அந்தம்மா சோறு போடுகிருள். எனக்கு எத்தனையோ பாட்டுகள் தெரி யுமே! நானும் அம்மாதிரி பாடி சோறு வாங்கித் தின்கிறேன். என்னுல் பசிப்பொருக்கமுடியவில்லை. என்று கூறி கோவென கதறி யழுதது. அதைக்கண்ட உனது தம்பி நரசிம்மன், ஹா! என்ன சொன்னுய்? பிச்சை எடுத்தா சாப்பிடப்போகிருய்? வெட்கங்கெட்ட நாயே? நமது வம்சத்தின் கண்ணிய மென்ன? நமது தந்தை யிருந்த நிலமை யென்ன? பாழும் வயிற்றை வளர்க்கும்பொருட்டு எத்தனையோ ஈனத்தொழில்கள் செய் தாயிற்று, இதொன்றுதான் பாக்கியிருக்கிறதோ? நீ, சற்று முன் புஸ்தகத்தில் "ஏற்பது இகழ்ச்சி" என்று படித்துக்கொண் டிருந்தாயே! அதை மறந்து விட்டாயா? பிச்சை எடுத்து உண்டு உயிரைக் காப்பாற்ற வேண்டுமா? மானம்போன பிறகு பிராணன் எதற்கு? அதைவிட இப்படியே பட்டினிக் கிடந்து சாகலாமே" என்று தன் பெயருக்கேற்ற சொரூபத்தோடு கர்ஜித்தான்.

இதைக்கேட்ட குழந்தை பிரமித்து மவுனமாய் சிறிது நேரம் நின்றிருந்து பிறகு ஒரு மூலையில் பாயை விரித்துப் படுத்துக்கொண்டது. அதனைக்கண்ட நரசிம்மன் கண் கலங் கியவனுய் பசிதாங்கமாட்டாமல் குழந்தை அப்படி சொல்ல

வும், நாம் கேட்கவுமாயிற்றே. அம்மா! நான் இப்போதே சென்று ஏதேனும் ஒரு வேலைபார்த்து வருகிறேன் என்று எழுந்தான். இராக்காலத்தில் இப்போது எங்கு சென்று, என்ன செய்வாய்? போகவேண்டாமடா! என்று எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் சென்றான்; சென்றவன் இது வரையில் திரும்பி வரவில்லை.

அப்போது படுத்த குழந்தை இதுவரையில் கண்ணைத் திறக்கவேயில்லை. இதனையெல்லாம் காணும்போது என்மனம் எப்படியிருக்கும் என்பதை யோசித்து பாரடா! என் கண்ணே லக்ஷ்மி நரசு! நீ இவ்விதம் எம்மைக் கைவிடலாமா? இப்போது நாங்கள் இருக்கும் நிலமை, முன்னும் பின்னுமாய் இன்னும் ஒரு வாரத்தில் நாங்கள் எல்லோரும் பட்டினியால் உயிர் துறப்போம்போல் காண்கிறது. வேணுமானால் அப்போது நீ, நிம்மதியாக யிருக்கலாம். அதற்குமுன் நீ இவ்விதமிருப்பது நீதி யல்லவென்று கடைசி முறையாக கூறுகிறேன்.

இங்ஙனம்,

ஆதரவற்ற உனது ஏழைத்தாய்,

தேவி அன்னபூர்ணா.

என்ற கடிதத்தைப் படித்து முடித்த லக்ஷ்மிநரசுவின், மனக்கண்களுக்கு முன் தனது சகோதர சகோதரிகள் பசியால் வாடி மூலைக்கொருவராய் சுருண்டு கிடப்பது போன்றும் அதைக்கண்டு தன் தாய் ஒருபுறம் அமர்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பது போன்றுமான காக்ஷிகள் தத்ரூபமாய் தோன்றி அவனை பெரும் வேதனைக்குள்ளாக்கிவிட்டது. கண்களில் நீரை பலபலவென உதிர்த்த வண்ணம் ஹா! நான் மகா பாபி, முந்திய கடிதத்தில் மிஞ்சியிருந்த ஒரே ஒரு பித்தளைப் பாத்திரத்தை அடகு வைத்து அதன் மூலம் கிடைத்த 4 அணாவிற்கு நொய் அரிசி வாங்கி அதில் ஒரு பாகம் எடுத்து கஞ்சி காய்ச்சி ஆளுக்கு ஒரு மிடர் குடித்ததாக எழுதியிருந்த என் அன்னையின் நிலைமையை எப்படி மறந்துவிட்டேன்! மறந்து விட்டேனா? இல்லை இல்லை நேற்று மாலை வரையிலும்கூட நான் பலவிடங்களிலும் சென்று என் நண்பர்கள் எல்லோரையும்

கடன் கேட்டேன், ஒருவரும் கொடுக்கவில்லை. என் எஜமானர் (டாக்டர்) நான் வாய்திறந்து கேட்ட மாத்திரம் தவராமல் கொடுப்பவர்; எப்படியோ என் நடவடிக்கைகளைத் தெரிந்துக்கொண்டு இத்தடவை கண்டிப்பாய் கடன் கொடுக்கமாட்டேன் என்று கூறிவிட்டார். நான் என்ன செய்வேன். இன்னும் ஒரு வாரத்தில் சம்பளம் வரும், வந்தவுடன் 10 ரூபாய் அனுப்பிவிடலாம் என்று இருந்தேன். ஹா! என் சொற்ப சம்பளம் 25 ரூபாயில் 10 ரூபாயை அனுப்பிவிடுவேனுகில் மிகுதி ரூபாய் 15ல் நாகரீக நங்கையாகிய எனது சந்திரா எப்படி சம்சாரத்தை நடத்துவாள்? 25 ரூபாயை அப்படியே சிலவு செய்துவந்தகாலத்திலேயே தேதி 20 ஆனதும் சிலவிற்கு இல்லாமல் சிற்சிலவேளை பட்டினியாகவிருப்பாள் என்ருல் இப்போது இந்த ரூபாய் 15ல் என்ன செய்வாள்? இந்த 10 ரூபாயில் என் தாயார்தான் என்ன செய்யக்கூடும்? அவர்கள் கஷ்டம் எவ்வாறு நிவர்த்தியாகக்கூடும்?

அந்தோ! நான் என்ன காரியம் செய்தேன். என் நிலைமைக்கு ஒரு தனி சம்ஸாரத்தையும் ஏற்படுத்திக்கொண்டேனே நம் கதிதான் இப்படி முடிந்தது, தம்பிமார்களையாவது நன்ருய்ப் படிக்கவைப்போம், தங்கைகளை நல்லவிடத்தில் கல்யாணம் செய்துக்கொடுப்போம், அதன்பிறகு நாம் கல்யாணம் செய்துகொள்வோம் என்றெல்லாம் நினைத்திருந்த நான் எப்படியோ மதிமயங்கி இதற்குள் சந்திராவைக் காதலித்து, என் தாயையும், உடன் பிறந்தாரையும் இவ்வித கஷ்டத்திற்குள்ளாக்கிவிட்டேனே! ஐயோ! இனி நான் எப்படி இந்த இரண்டு குடும்பத்தையும் நிர்வஹிப்பேன்?

"ஹே! ஜெகதீசா! எனக்கொன்றும் தோன்றவில்லையே! இதுவரையில் ஏற்பட்டிருக்கும் கடன்களை நினைத்தால் அதை எப்படி தீர்ப்பது என்னும் பயம் என் ஹிருதயத்தைத் துளைக்கிறதே" என்று பெருமூச்செறிந்தவனுய் நாற்காலியின் மீது சாய்ந்தான். சிறிதுநேரத்திற்குப் பிறகு திடீரென்று எழுந்து உட்கார்ந்து,

"ஆம், என் நண்பர்கள் சொல்வது சரிதான். அதுதான் சரியான வழி. பாவமும் புண்யமும். அதைப்பற்றியெல்லாம் இனி நான் ஒன்றும் யோசிக்கமுடியாது. நன்மையோ தீமையோ எல்லாம் கிருஷ்ணார்பணம் என்று துணிந்துவிட்டேன். இன்று முதல் நான் பழைய லக்ஷ்மிநரசு அல்ல புதியவன் முற்றும் புதியவன். கண்ணா! கார்மேக வண்ணா! என்னை இந்த வழியில் நடத்தவோ திருவுளம் கொண்டாய். இதுவோ உன் சம்மதம். என்னாலேயே நினைவும், அறிவும் உண்டாகின்றன என்று கீதையில் நீ சொல்லியபடி இப்போது எனக்கு உண்டாகிய இந்த புதிய நினைவு உன்னால் உண்டாகியதென்பதில் என்ன சந்தேகம்? ஹே! தீனசரண்ய! இதை உனது ஆக்ஞை என்றே மேற்கொண்டுவிட்டேன். தேவா! என்னை ஆட்கொண்டருளும்." என்று கரங்களைக் கூப்பியவண்ணம் தியானத்திலாழ்ந்தான்.

சிறிதுநேரத்திற்குப் பிறகு கண்விழித்த லக்ஷ்மிநரசு தன்னை ஒரே க்ஷணத்தில் புதிய மனிதனாய் மாற்றிவிட்ட தன் தாயின் கடிதத்தை மடித்து ஜோபியில் வைத்துக்கொண்டு எழுந்து "பார்மஸி"யைப் பூட்டிவிட்டு, வெளியில் சென்று விட்டான்.

அன்றிரவு 9 மணி. டாக்டர் ஸ்ரீதரன் சாப்பிட்டு தாம்பூலம் அணிந்தவண்ணம் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அப்பொழுது ஒரு மகமதியன் ஓடிவந்து "டாக்டர் ஐயா! ஆபத்து பெரிய ஆபத்து பிராணன் போய்விட்டதோ என்னமோ சீக்கிரம் வாருங்கள்" என்பதாக, கண்ணீரும் கம்பலையுமான தோற்றத்துடன் பிரார்த்தித்தான். டாக்டர் மறு பேச்சின்றித் துரிதமாய் உடைகளை அணிந்து வைத்திய பெட்டியையும் எடுத்துக்கொண்டு வெளியில் வந்தார். டிரைவர் வர தாமதமாகுமென அறிந்த டாக்டர், காரைத் தானே செலுத்திக்கொள்வதாக கூறிக்கொண்டே சென்று காரில் அமர்ந்து, வந்த மகமதியனையும் பக்கத்தில் அமர்த்திக்கொண்டு அவன் சொல்லிய வழியைப் பிடித்துக் காரை வேகமாய் நடத்தினார். மனித சஞ்சாரம் அதிகமில்லாத ஓர் மார்க்கமாய் அதிகதூரம் வந்த கார்,

கடைசியாக ஓர் பங்களாவின்முன் நின்றது. முன்பு மகமதியன் இறங்க, பிறகு டாக்டரும் இறங்கினுர். இருவருமாக உள்ளே சென்றனர்.

உட்புறம் கூடத்திற் சிலர் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தவர்கள், இவர்களைக் கண்டதும் பணிவுடன் எழுந்து நின்ருர்கள். மகமதியன் அவர்களில் ஒருவனை நோக்கி "குப்புசாமி! இதோ இந்த பிரபல டாக்டரை உனக்கு அறிமுகம் செய்துவைக்கிறேன்" என்று கூறிக்கொண்டே டாக்டரின் கரத்தைப்பற்றியவாறு அவன் சமீபத்திற் சென்ருன்.

உடனே குப்புசாமி என்னும் அந்நய வஞ்சகன் புன் முறுவலுடன் டாக்டரின் கரத்தைப்பற்றி 'ஷேக்ஹேண்ட்ஸ்' கொடுப்பவனைப் போல் கொடுத்து, அப்படியே கையைப் பிடித்த வண்ணம் சமீபத்திலிருந்த தூணின் பக்கம் இழுத்துச் சென்ருன். திகைப்புற்ற டாக்டர், திரு திருவென விழித்தவாறு தன்னை அழைத்து வந்த மகமதியனை நோக்கினுர். அப்போது கட்டுமஸ்தான தேக வலிமைப் பெற்ற மற்ருெருவன், கையில் உறுதியான கயிறு ஒன்றைக் கொண்டுவந்து டாக்டரைத் தூணோடு பிணைத்துக்கட்டினுன். அச்சமயம் குப்புசாமி கம்பீரமான குரலில் "ஓய்! டாக்டரே! தாங்கள் இப்போது எங்கே வந்திருக்கிறீர்? எதற்காக வந்திருக்கிறீர் என்பதைத் தெரிந்துக் கொண்டீர்களா?" என்ருன்.

டாக்டர் :—"ஆம்; தெரிந்துக்கொண்டேன். உலகத்தில் பிழைக்க வழி தெரியாப் பேதைக் கூட்டத்தார் சிலர் இருக்கிருர்கள். அதில் ஒரு சாரார் ஐயா! பசிப் பொருக்க முடியவில்லை, ஏதாவது பிச்சைக் கொடுங்கள் என்று கெஞ்சிக் கேட்டு வயிறு வளர்க்கும் பிச்சைக்காரக் கூட்டம். மற்ருென்று தங்கள் வஞ்சக வலையிற் சிக்கி நிராதரவாயிருக்கும் என்போன்றவர்களை பயமுறுத்தி வழி பறிக்கொள்ளைச் செய்யும் கள்ளக்கூட்டம். அவ்விதக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள் என்பதை அறிந்துக்கொண்டேன்.

இதோ! நீங்கள் விரும்பிய பொருள்களை யாதொரு ஆட்சேபணையுமின்றி மனப்பூர்வமாய்க் கொடுத்துவிடுகிறேன். பெற்

றுக்கொள்ளுங்கள்" என்று கூறிக்கொண்டே தன் கைகளை மாத்திரம் திமிரி விடுவித்துக்கொண்டு தன் சட்டை ஜேபியிலிருந்த, தங்க சங்கிலியுடன் கூடிய கடியாரத்தையும் (பாக்கெட் வாட்ச்) வைர கடுக்கன்கள், வைர மோதிரம், தங்க மோதிரம், தங்க பித்தான்கள் முதலியவைகளையும் கழற்றி, மற்றும் தன் பாக்கெட்டிலிருந்த மணிபர்ஸைத் திறந்து அதிலிருந்த 10ரூபாய் நோட் ஒன்றையும் இரண்டு ரூபாய்களையும் எடுத்து யாவற்றையும் குப்புசாமியிடம் கொடுத்து "ஐயா என்னிடமிருந்த எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேன். இனி என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?"

குப்பு:—வேறு ஒன்றுமில்லை. இப்போது தாங்கள் அணிந்திருந்த ஆபரணங்களை யெல்லாம் எவ்வாறு கொடுத்துவிட்டீர்களோ; அதேபோல் தங்கள் மனைவியாரின் மீதிருக்கும் ஆபரணங்களெல்லாம் இந்தக்ஷணம் எங்களுக்கு வந்து சேரும்படி செய்யவேண்டும்.

டாக்டர்:—"ஹா! அப்படியா! இந்நிலைமையில் நான் எப்படி அவைகளை இவ்விடம் கொண்டு வருவது?"

குப்புசாமி:—தங்கள் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதி இவரிடம் கொடுத்து அனுப்புங்கள். அதைப்பார்த்தவுடன் அவர்கள் ஆபரணங்களை யெல்லாம் உடனே இவரிடம் கொடுத்து அனுப்பும்படியாய் இருக்கவேண்டும்.

டாக்டர்:—"சரி, அப்படியே!" என்று கூறிக்கொண்டே தன் ஜேபியில் கையை விட்டு கடிதமும் பேனாவையும் எடுத்துக் கீழ் வருமாறு எழுதுகிறார்.

காதலி சுசீலா!

இக்கடிதம் கொண்டு வருபவரிடம் உனது ஆபரணங்கள் யாவற்றையும் உடனே கொடுத்தனுப்பவேண்டும். விஷயத்தை விவரமாய் எழுத நேரமில்லை. நேரில் வந்து விவரங் கூறுகிறேன். நீ புத்திசாலி ஆகையினால் காரணமின்றி இவ்விதம் எழுத நேராது என்பதை உணர்ந்து, தியங்காமல் உடனே அனுப்புவாய் என்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

ஸ்ரீதரன்.

என்று எழுதி முடித்து குப்புசாமியிடம் கொடுத்தார். அதைக் குப்புசாமி வாங்கி மகமதியனிடம் கொடுத்தான். மகமதியன் அதைப் படித்துப்பார்த்து, "பிரபுவே! இதில் மற்ருெரு விஷயம் எழுதவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்" என்ருன்.

டாக்டர் :—அப்படியா! அதென்ன விஷயம்?

மகமதியன் :—வேறு ஒன்றுமில்லை. இந்த மாதம் வசூல் ஆகிய பில் கலெக்ஷன் ரூ. 800 இன்னும் பாங்கியில் போடாமல் வீட்டில் இருக்கிறதல்லவா? அதையும் கொடுத்தனுப்பும்படி எழுதவேண்டும் என்று கூறிக்கொண்டே கடிதத்தை அவரிடம் திருப்பிக் கொடுத்தான். இதைக்கேட்ட டாக்டர் "ஹா! என்ன! இப்போது இவன் பேசிய குரலோசை நமது லக்ஷ்மிநரசுவின் குரலோசையை அல்லவா ஒத்திருக்கிறது. மேலும் இந்த இரகசியம் லக்ஷ்மிநரசுவையன்றி வேறு யாருக்கும் தெரியாது என்று யோசித்தவண்ணம் திகைத்து நின்ருர். இதைக்கண்ட மகமதியன் "பிரபுவே! என்ன யோசிக்கிறீர்கள்? சற்று முன்பு தாங்கள் கூறியதுபோல், சம்பாதிக்கக் கையாலாகாத பேதைகள் நாங்கள்தான் இந்த 800 ரூபாயைப் பிரமாதமாக மதிக்கிருேம். சர்வ வல்லமையுடன் இத்தொகையை ஒரேநாளில் சம்பாதிக்கத் திறமைவாய்ந்த தாங்கள் இதையொரு பொருட்டாய் எண்ணி இவ்வளவு யோசிக்கவேண்டுமா? தயவுசெய்து சீக்கிரம் எழுதுங்கள்" என்ருன்.

டாக்டர், பதில் ஒன்றும் பேசாமல் அக்கடிதத்தில் அதையும் எழுதி அவனிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட மகமதியன் உடனே அவ்விடத்தைவிட்டகன்ருன்.

வெகுநேரம் வரையில் தூணோடு தூணைப் பிணைக்கப்பட்டிருந்த டாக்டர், தாங்கமாட்டா வேதனையுடன் போனில் அடைபட்ட ஆண் சிங்கத்தைப்போல் தவித்துக்கொண்டிருந்தார்.

அதிர்ஷ்டவசமாய் நல்ல சக்திவாய்ந்து மனிதர்களின் அன்பைக் கவர்ந்த சில பிரபல டாக்டர்கள் இக்காலத்தில் ஒருவர், ஆபத்து, அவசரம் என்று எவ்வளவு வருந்தி அழைத்தாலும் ஆபத்திற்கு உதவாதவர்களாயிருக்கும் இந்நாளில்; இராப்பகல்

எந்த நேரமானாலும் தன் உதவியை நாடுகிறவர்களை உடனே சென்று கவனிப்பது தன் கடமை. என்றெண்ணியிருந்த மஹோபகாரியான நமது டாக்டர் ஸ்ரீதரன் இந்நிலைமையை அடையவேண்டுமென்பது எந்த தெய்வத்தின் சங்கல்பமோ தெரியவில்லை.

பாவம்! இவர் இப்படிக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க, இவர் மனைவி சுசீலை, வெளியிற் சென்ற தன் கணவர் யாதொரு ஆபத்துமின்றி வீடுவந்து சேரவேண்டுமே, என்று எப்போதும் கவலையோடு அவரது வருகையை எதிர்பார்ப்பவளாகையால் "என்ன! அவர் இன்னும் வரவில்லையே! ஏன்? இன்னும் வரவில்லை" என்று எண்ணி யெண்ணி தூக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரண்டுக்கொண்டிருந்தாள். அச்சமயம் ஓர் சிறுவன் வந்து "அம்மா! நமது கார் திரும்பிவந்தது, ஆனால் நமது ஐயா வரவில்லை. அவரை அழைத்துக்கொண்டுபோன சாயபு திரும்பி வந்திருக்கிறார். அவர் இதை உம்மிடம் கொடுக்கும்படி கொடுத்தார்" என்று கூறிக்கொண்டே ஓர் கடிதத்தைக் கொடுத்தான். சுசீலை, அதை ஆவலுடன் கையில் வாங்கி வாசித்துப்பார்த்து, திகைப்பும் பிரமிப்புமடைந்தவளாய் "கோபாலா! நீ சென்று அந்த சாயபுவை இங்கு அழைத்துக்கொண்டுவா" என்றாள்.

சிறிது நேரத்தில் அம்மனிதனுடன் திரும்பி வந்தான் கோபாலன்.

சுசீலை:—ஐயா! இக்கடிதம் கொண்டுவந்தவர் தாங்கள் தானா?

மஹமதியன்:—ஆம்; அம்மணீ!

சுசீலை:—இதை உம்மிடம் கொடுத்தவர் யார்?

மஹமதியன்:—நமது டாக்டர் ஐயாதான் என் கையில் கொடுத்தார் அம்மணீ!

சுசீலை:—அப்படியானால்; இதைப்பற்றிய விபரம், தங்களுக்கேதேனும் தெரியுமா?

மஹமதியன்:—ஆம்; தெரியும் அம்மணீ! டாக்டர் இவ்விடமிருந்து வந்தவுடன் பிராணபத்திலிருந்த எனது மனைவிக்குச்

செய்யவேண்டிய சிகிச்சைகளைச் செய்துமுடித்தார். அப்போது என் மனைவியின் சகோதரர் சையத் உஸ்மான் சாயபு, உங்களுக்கும் தெரிந்திருக்கும் நமது டாக்டருக்கு பால்ய சிநேகிதராம். அவர் தன் சகோதரியின் நிலைமையைக் கேள்விப்பட்டு ஓடி வந்தார். வந்தவர் நமது டாக்டரைக் கண்டு இனித் தன் தங்கை பிழைத்துக்கொள்வது நிச்சயம் என்பதாய் பெரும் மகிழ்ச்சி யடைந்தவராய் டாக்டருடன் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது இவ்வூரில் இன்று மத்தியான முதல் ஏற்பட்டிருக்கும் தீவட்டித் திருடர்கள் இரவு 1 மணிக்கு வரப்போவதான புகாரைப்பற்றிப் பேசத் தொடங்கினூர்கள். அப்போது இதைப்பற்றித் தாங்கள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? என்று டாக்டரை நமது மைத்துனர் கேட்டார். அதைக்கேட்ட, டாக்டர் இதைப்பற்றிய விவரம் தனக்கொன்றும் இதுவரையில் தெரியாமையினூல் ஒருவித ஏற்பாடும் செய்யவில்லை என்றும்; இப்போது இதற்கு என்ன செய்யவேண்டும் என்றும் மைத்துனரைக்கேட்டார். அதைக் கேட்ட நமது மைத்துனர் தானும் இன்னும் இவ்வூரிலுள்ள சில பிரபலஸ்தர்களும் தங்கள் தங்கள் ரொக்கம் ஆபரண முதலியவைகளைத் தனித்தனிப் பெட்டிகளில் வைத்துப்பூட்டி அதை அப்படியே போலீஸில் ஒப்படைத்து விடுவதாயும், அதைப் போலீஸார் கத்தி துப்பாக்கிகளுடன் பாராக்களை யேற்படுத்தி இரவுப்பொழுது காப்பாற்றிக் கொடுப்பதுமான ஏற்பாடுகளைச் செய்திருப்பதாயும் தெரிவித்தார். அதைக்கேட்ட டாக்டர் தானும் அப்படியே செய்வதாய்க் கூறி இக்கடிதத்தை எழுதி என்னிடம் கொடுத்தனுப்பினூர் என்பதாய் முடித்தான். இதைக் கேட்ட சுஸீலை சற்று யோசித்து ஏதோ பிரமாதமான அவ்வித ஏற்பாட்டின்பேரில்தான் தன் நாதன் அவ்விதம் எழுதியிருப்பார் என்பதாய் நம்பி உடனே பீரோவைத் திறந்து தனது ஆபரணங்களாகிய வைர நெக்லேஸ் 1, வைர அட்டிகை 1, வைர வளையல்கள் 2 ஜதை, வைர மோதிரங்கள் 2, நவரத்னமிழைத்த ஒட்டியாணம்1 மற்றும் ஜடைபில்லை, வங்கி முதலியவைகளுடன் காதிலணிந்திருந்த வைர கம்மல், ரூபாய் 800 முதலியவைகளையும் எடுத்து சிறிய சூட் கேஸ் ஒன்றில் வைத்து அதைப்பூட்டி அதன் சாவியை ஓர் கவர்க்குள் வைத்து அத்துடன் ஒரு கடிதம்

எழுதி அக்கடிதத்தில் தான் அனுப்பும் வஸ்துக்களின் எண்ணிக்கையைக் குறித்து கவர்க்குள் வைத்து கவரை ஒட்டி அதன் வாய்ப்புரத்தில் அரக்கு முத்திரை வைத்து, மறுபுரத்தில் தன் கணவர் பெயர் முதலியவைகளை எழுதி அக்கவரையும் சூட்கேஸையும் மகமதியனிடம் கொடுத்து "இனித் தாங்கள் போகலாம்" என்றாள்.

இவைகளைப் பெற்றுக்கொண்ட மகமதியன், தன் வலக்கரத்தின் மத்திய மூன்று விரல்கள் (உட்புறம்) நெற்றியில் படத் தலையைக் குனிந்து "சலாம் ஆலேகு" என்று வந்தனம் கூறிச் சென்றான்.

கள்வரைப்பற்றிய நினைவினால் பெரும் பயமும், திகைப்பும் அடைந்த சுசீலை, வேலைக்காரர்களையெல்லாம் அழைத்து விஷயத்தைத் தெரிவித்து சர்வ ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். என்பதாய் திட்டம் செய்துவிட்டுத் தன் நாதனின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

"மணி 12 அடித்துவிட்டது. திருடர் வரும் வேளையும் சமீபித்துவிட்டது. இன்னும் அவர் ஏன வரவில்லை? ஒரு வேளை நகைகளோடு தானும் இராப்பொழுது அவ்விடமே இருந்து விடுவாரோ" என்று நினைப்பதும் "சீ! என்ன! நாம் இப்படி நினைக்கிறோம். அவர் என்ன! அவ்வளவு அற்ப மனிதரா? திருடர் வரும் வேளையில் நம்மைத் தனியாய் விட்டு வைப்பாரா? ஒருக்காலும் அப்படிச் செய்யமாட்டார். செய்ய வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் ஒழுங்காய் செய்துவிட்டு வந்துவிடுவார். என்ற நம்பிக்கையடைந்தவளாய் சிறிது நேரமிருந்தாள். அப்போது மணி 12½யும் ஆகிவிட்டதைக்கண்ட அவ்விளங்கொடியாள் மனதிற் பெரும் பீதியடைந்தவளாய் "ஹா! இன்னும் அவர் வரவில்லையே! என்ன செய்வது? எதற்கும் நாம் இருக்க வேண்டிய ஜாக்கிரதையில் யிருந்தால் பிறகு கடவுள் விட்டவழி யாகட்டும். சர்வரூபியாய் எங்கும் நிறைந்திருக்கும் ஹே! அனாதரக்ஷகா! நீயே துணை" என்பதாய்க் கடவுளை மனதில் தியானித்தவண்ணம் "வேலையாட்களெல்லாம் விழித்துக்கொண்டிருக்கிறார்களா? பார்த்து விட்டு வருவோம்" என்றெண்ணி அங்கு ஒரு பக்கம் தரையில் படுத்து கவலையற்று

நித்திரையில் ஆழ்ந்திருந்த வேலைக்காரியை எழுப்பித் தன்னுடன் அழைத்துக்கொண்டு வந்து, முன் வாசற்கதவைத் திறந்தாள். அப்போது அக்கதவினின்று ஒரு கடிதம் கீழே விழுந்தது. அதை எடுத்து வாசிக்கலானாள். அது பின்வருமாறு எழுதியிருந்தது.

கனம் எஜமானி அம்மாள் அவர்களுக்கு, அடிமை லக்ஷ்மிநரசு அநேக நமஸ்காரம் செய்து தெரிவித்துக்கொள்வது.

இரவு 9 மணிக்கு ஓர் மகமதியனைப்போல் வந்து எஜமானரை அழைத்துக்கொண்டு போனவனும், தங்களிடம் நகைகளைப் பெற்றுக்கொண்டு போனவனும் நான்தான் எனத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதனால்; யாரோ ஒரு அன்னியன் உங்களை ஏமாற்றி உங்கள் அபாரமான பொருள்களையெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டான் என்பதைவிட, ஏதோ தங்களிடம் வெகுநாள் உழைத்துத் தங்களுக்குப் பல நன்மைகள் புரிந்து வந்த தங்கள் அடிமைதான் அவ்விதம் கொண்டுபோனான் என்பது தங்கள் மனதிற்குப் பெரும் ஆற்றலையளிக்கும் என்று நம்புகிறேன்.

சில சமயங்களில் கஷ்டம் பொறுக்கமுடியாமல் கடனாக 40, 50 ரூ. கேட்டதற்கு; அதெல்லாம் முடியாது இனி உனக்குக் கடன்கிடன் கொடுக்கமாட்டேன் என்று தாக்ஷண்யமின்றி கூறிவிட்ட எஜமானர், இவ்வளவு சுலபத்தில் அத்தனைப் பொருள்களைத் தான் கொடுத்ததல்லாமல், உங்களையும் கொடுக்கும்படி ஆக்ஞாபிக்க, நீங்களும் அதுபோல் கொடுத்துவிட்டதற்காக நான் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாகிறேன்.

இறைக்கும் கிணறு சுரக்கும் என்பதாக இதுபோல் இன்னும் பன்மடங்கு அதிகமான செல்வத்தை அளிக்கவேண்டுமாய் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். அத்துடன் இதுவரையில் உங்களுக்கேற்படாதிருக்கும் புத்திர சம்பத்தும் உண்டாகவேண்டுமென்று இருதயப் பூர்வமாய் ஆசீர்வதிக்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் ஊழியன்,
லக்ஷ்மிநரசு.

என்றதைப் படித்து முடித்த அவ்வணிதை பிரமையடைந்தவளாய் ஹா! நான் காண்பது கனவா? என்ன விந்தை! சகல நற்குணங்களுக்கும் இருப்பிடமாகிய லக்ஷ்மிநரஸா இவ்விதம் செய்தான்! என்னால் நம்பமுடியவில்லையே! ஆனால் அவர் சில சமயம்; லக்ஷ்மிநரசு முன்போலில்லை அவனுக்குத் துஷ்டர்கள் சகவாசமும் வைப்பாட்டி முதலிய துர்நடத்தைகளும் அதிகமாகிவிட்டது என்றாரே. அதுபோல் அவனது சகவாசதோஷம் அவனை இந்த வழியில் கொண்டுவந்துவிட்டதா? அல்லது அவன் பெயரால் யாரோ மோசக்காரர்கள் செய்த சூழ்ச்சியாகவிருக்குமா? எதையும் நினைக்கமுடியவில்லையே! எப்படியானாலும் என் நாதன் இப்போது கள்வர் வசமல்லவா சிக்கியிருக்கிறார்? அவர் எப்படிப்பட்ட ஆபத்தில் சிக்கியிருக்கிறாரோ! என்ன நிலைமையிலிருக்கிறாரோ!" என்பதை நினைத்தவுடனே அவள் தலை சுழன்றது. மறுநிமிஷம் மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிட்டாள். இதைக்கண்ட வேலைக்காரி "ஐயையோ! அடேய் கோபாலா! அடே போயி! அடே காவல்காரா! அடே தோட்டக்காரா! ஓடிவாங்கடா!" என்று கத்தினாள். இதனைக் கேட்ட வேலையாட்களெல்லாம் அரைக்குறைத் தூக்கக் கண்களோடு; இரவு எஜமானியம்மாள் கூறியதுபோல் கள்வர்களே வந்துவிட்டார்கள் என்பதாய் எண்ணி ஒருவன் கையில் உலக்கையும் மற்றொருவன் கையில் கடப்பாரையையும், இன்னொருவன் கையில் தடியையும், பின்னொருவன் கையில் கோடாலியையும் தூக்கிக் கொண்டு எங்கே திருடன்? எங்கே திருடன்? என்று மூலைக்கொருவராய் ஓடிவந்தார்கள்.

———

# 2-வது அத்தியாயம்

## மணமகனின் ஆசை—மணப்பெண்ணின் மூர்ச்சை

லக்ஷ்மிபுரத்திலுள்ள இராஜபவனம் என்ற ஒரு பங்களாவின் மத்திய ஹாலிலுள்ள ஓர் சோபாவின்மீது 16 வயதுடைய பூம் பாவை பொருத்தி கையில் நியூஸ்பேப்பரை வைத்துப் படித்துக்கொண்டிருந்தாள். அச்சமயம் அங்கு வந்த, அன்னவளின் தாயாகிய சுந்திராம்பாள் "விஜயா! என்ன! இன்னும் சும்மா யிருக்கிறாய்? சீக்கிரம் புறப்படு" என்றாள். இதைக் கேட்ட விஜயலக்ஷ்மி "இப்போது மணி 3 தானே அம்மா! நாமென்ன? மாமா வந்த பிறகு 6 மணிக்குதானே போகவேண்டும். இதோ பார்த்தீர்களா? ஒரு கள்வனின் சாமர்த்தியத்தை" என்று கூறிக்கொண்டே தன் கையிலுள்ள பத்திரிகையை (ஒரு விடத்தைக் கைவிரலால் குறிப்பிட்டவண்ணம்) தன் தாயினிடம் கொடுத்தாள். அதில் 1வது அத்தியாயத்தின் இறுதியில் நடந்த கொள்ளை விஷயமும், பரம சாதுவாகவிருந்த லக்ஷ்மிநாசு பரம துஷ்டனாய் மாறிய விந்தையையும் விவரிக்கப்பட்டிருந்தது. அதை வெகு சுவாரஸ்யத்துடன் படித்துக்கொண்டிருந்தாள் அன்னை சுந்திராம்பாள். அதேசமயம் அவளது சிறுவனாகிய ராஜபகதூர் என்னும் 12 வயது சிறுவன் வெளியில் விளையாடச் சென்றிருந்தவன் இரைக்க இரைக்க ஓடிவருகிறான். அவனுக்குப் பின்னால் ஒரு ஸ்திரீ தனது 10 வயதுள்ள மகனைக் கையில் பிடித்தவண்ணம் வேகமாய் வருகிறாள். அப்பையனின் நெற்றியில் ஒருபுறம் இரத்தம் வடிந்தவண்ணமாகவிருக்கிறது, பையன் தேம்பி தேம்பி அழுகிறான். இந்த அலங்கோலங்களைக்கண்ட சுந்திராம்பாள் கையிலிருந்த பேப்பரை வீசி யெறிந்துவிட்டு, ஓடிவந்து ஒளிந்துக்கொண்ட ராஜபகதூரை விஷயம் என்னவென்று மிரட்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறாள். விஜயலக்ஷ்மி ஓடி இரத்தமயமாய் வந்த சிறுவனை இடதுகரத்தால் அணைத்துக் கொண்டு, வலது கரத்தை காயத்தின்மீது வைத்து அழுத்திப் பிடித்தவண்ணம், விஷயமென்ன? என்று ஆத்திரத்தோடு அவனையும் அவனது தாயையும் மாறிமாறிக் கேட்டுக்கொண்டிருக்கிறாள். வந்த ஸ்திரீ "உமது பையனின் துஷ்டத்தனத்தை

நான் என்னவென்று கூறுவேன், அவன் சொல்லுகிறமாதிரி யெல்லாம் இவன் செய்யவேண்டுமாம். வீட்டில் பணத்தைத் திருடிக்கொண்டுவா என்றால் உடனே திருடிவந்து கொடுக்க வேண்டும். இல்லையானால் இப்படி கல்லாலும் கட்டையாலும் அடித்துப் பயமுறுத்துகிறான். இந்த அநியாயத்தை நான் எங்கேபோய் சொல்லுகிறது? உங்களிடம் எத்தனை தடவை சொல்லியும் நீங்கள் சிறிதும் கவனிக்கமாட்டேன் என்கிறீர்களே! தாக்ஷண்யத்திற்காக நான் எவ்வளவுகாலந்தான் பொருத்துக்கொண்டிருப்பேன். இனி என்னால் பொறுக்கமுடியாது"....

விஜயாள் :—அம்மணி! தாங்களென்ன? அப்படி சொல்லுகிறீர்களே! நாங்கள் கவனிக்காமலா? இருக்கிறோம்? நாங்களும் அப்படி விட்டுவிட்டோமானால் அவன் எதற்கு உதவுவான்? ஒரு நாளையில் 14 மணி நேரத்தையும் அவனுக்குப் புத்திமதி சொல்லி நல்வழிப்படுத்துவதிலேயே செலவிடுகிறோம். எவ்வளவு அடித்தும் பிரயோஜனமில்லை, நல்லவிதமாய் சொல்லியும் பிரயோஜனமில்லை. கடவுள்தான் எங்களுக்குத் துணைபுரிய வேண்டும். அம்மா! உங்கள் குழந்தையைப் பார்த்தால் என் வயிறே பற்றுகிறதென்றால்; பெற்ற வயிறு எப்படியிருக்கும்? என்று நினைக்கும்போது என் மனம் படும்பாட்டை அந்த ஈசன் தான் அறிவார் அம்மணி! இந்த ஒரு தடவையும் பெரிய மனது பண்ணிப் பொறுத்துக்கொள்ளுங்கள்" என்று அவள் கரத்தைப் பிடித்து மன்றாடிக் கேட்டுக்கொண்டாள்.

அச்சமயம் அச்சிறுவனது நெற்றியில் இரத்தம் கசிவது நின்றுவிட்டமையினால், அவனை வீட்டிற்குள் அழைத்துச்சென்று கொஞ்சம் பஞ்சியில் ஐயோடின் என்னும் மருந்தை ஊற்றி அதனால் காயத்தை நன்றாய்த் துடைத்து சுத்தம்செய்து, வேறு கொஞ்சம் பஞ்சையெடுத்து மெல்லிய துணியைப்போல் செய்து, அதை டின்சர் பென்ஜாயின் என்னும் மருந்தில் நனைத்து அந்த காயத்தின் வாய்புறத்தில் வைத்து நன்றாய் மூடிவிட்டாள். அப்பொழுதேற்பட்ட எரிச்சலைத் தாங்கமாட்டாத சிறுவன் வீறிட்டு அழுதான். அதைக்கண்டு சகிக்கமாட்டாதவளாய், மனதில் பெரும் வேதனையடைந்து விசிறியால் விசிறிக்கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் எரிச்சல் தணியப்பெற்றவனுய் அழுகையை நிறுத்தினுன் சிறுவன். அதைக்கண்டு மகிழ்ந்த விஜயாள் குழாயினருகில் சென்று கையை நன்ருய் தேய்த்துக் கழுவி உட்புறம் சென்று கைநிறைய பெப்பரமிண்டைக் கொண்டு வந்து பையனின் ஜேபியை நிறப்பினுள்.

அச்சமயம் வேறு இரண்டு ஸ்திரீகள் அங்குவந்து சேர்ந்தார்கள். அதில் ஒருத்தி,

"என்ன விஜயலெக்ஷூமி! உன் தம்பி, யாரோ ஒரு பையனைக் கல்லால் அடித்துவிட்டானுமே? ஓகோ இவனைத்தானே? என்ன? உன் தம்பி இப்படிக் கெட்டுப்போய்விட்டானே! ஒரே பையன் என்று நீங்கள் ரொம்ப செல்லம் கொடுக்கிறீர்கள். அதனுலேதான் அவன் அப்படி கெட்டுப்போகிருன். ஆசையிருந்தால் உள்ளுக்குள்ளே இருக்கவேண்டுமேயன்றி, இப்படி செல்லங்கொடுக்கக்கூடாது. அனியாயமாய் பையன் கெட்டுப் போய்விடுவான். நேற்றையதினம் என்ன செய்தான் தெரியுமா? நாங்களெல்லோரும் கீழே யிருந்துவிட்டோம். எங்கள் வீட்டுப் பையன் இவனைச் சேர்த்துக்கொண்டு மாடியில் விளையாடிக் கொண்டிருந்தானும். இவன் கூடத்தில் ஏணியைப் போட்டு அதன்மீது யேறி குருவியைப் பிடிக்கப்போனுனும். அந்த அமர்க்களத்தில் ஒரு பெரிய படத்தை அனியாயமாய் தள்ளி உடைத்துவிட்டான். இதைக் கண்ட எங்கள் பையன், சிறிது கோபத்துடன் எங்கள் அப்பா வந்தால் என்னைக்கோபிப்பாரே! நீ என்ன இப்படி அமர்க்களம் செய்கிருய்! வேண்டாம் உனது சிநேகிதம்; வீணுய் உன்னுல் எங்கப்பாவிடம் நான் உதைபடனும். நீ போய்விடு என்று சொன்னுனே இல்லையோ இவனுக்கு வந்துவிட்டது கோபம். உடனே அங்கிருந்த ரூல்தடியை எடுத்து மேஜைமேல் யேறி அங்கு சுவரில் மாட்டியிருந்த பெரிய கடிகாரத்தை உடைத்துவிட்டான். இதைக்கண்ட எங்கள் பையன் பயந்து பெரிய கூச்சலிட்டான். அதைக்கேட்டு நாங்களெல்லோரும் அலறிப்புடைத்து ஓடிப்பார்க்கிறோம், உங்கள் பையன் திருடனைப்போல் ஓடுகிருன். நான் நேற்றையதினமே வந்து சொல்லி யிருப்பேன். சாவகாசமில்லாது போய்விட்டது." என்று சொல்லிச் சற்று ஓய்ந்தாளோ யில்லையோ,

உடனே அவளுடன் வந்த மற்றொருத்திப் பெரியதோர் நகைப்புச் செய்து "உங்கள் வீட்டில் இப்படிச் செய்தானா? நாலு நாளைக்கு முன் நம்மபையனோடு சேர்ந்து மாடியிலே காத்தாடி விட்டுக்கொண்டிருந்தானாம். அந்தக் கயிறு அவ்விடமிருந்த ஊருக்காய் ஜாடியில் மாட்டிக் கொண்டதாம். உடனே இவனுக்குப் பிரமாதமாய்க் கோபம் வந்துவிட்டதாம். என்ன செய்தான் தெரியுமா? அந்த ஜாடியை அப்படியே தூக்கிப் பக்கத்துவீட்டுமேல் வீசி யெறிந்தான். ஜாடி உடைந்து ஊருகாய் பாழாகியதல்லாமல், அந்த சத்தத்தைக் கேட்ட பக்கத்து வீட்டுக்காரன் ஓடெல்லாம் உடைந்து விட்டதென்று சண்டைக்கு வந்துவிட்டான். இந்த அனியாயத்தை என்னென்று சொல்வது? நாமென்ன? வேலையில்லாமலா யிருக்கிறோம்? உடனே மடியைத் தட்டிக்கொண்டு சண்டைக்கு வர; நாளைக்குப் போய் சொல்லலாம், நாளைக்குப்போய் சொல்லலாம் என்று தினம் ஒரு நாளாய் தள்ளிக்கொண்டுபோய்விட்டது" என்று ஒருவாறாய் நிறுத்தினாள். இதைக் கேட்ட தாயும் பெண்ணும் அப்படியே திகைத்துப்போய் பிரமையடைந்தவர்களாய் அவர்களுக்கெல்லாம் தக்க சமாதானங்களைக் கூறி அந்த நஷ்டத்தை ஈடு செய்து கொடுப்பதாய் வாக்களித்தார்கள். அதுசமயம் வெளியிற் சென்றிருந்த சுந்திராம்பாளின் தம்பி ராமமூர்த்தி என்பவர் உள்ளே வந்தார். வந்தவர் வெகு அவசரத்துடன் "அக்கா! என்ன! இன்னும் சும்மா யிருக்கிறீர்களே! அந்தக் கலியாணத்திற்கு நாம் இன்றே போகவேண்டுமென்பதை மறந்துவிட்டீர்களா? யாரோ ஒரு அன்னியரைப்போல் நாளைக்குச் செல்வது சரியல்ல. மேலும் அதிகாலை 5 மணிக்கு முகூர்த்தமாகையால் நாம் இப்போதே செல்வதுதான் சரி, சீக்கிரம் புறப்படுங்கள். நான் சென்று ஒரு டாக்ஸிக் காரை அமர்த்திக்கொண்டு வருகிறேன்" என்றார். இதனைக் கேட்ட சுந்திராம்பாள் "தம்பீ! நாங்களும் இன்றே செல்லவேண்டுமென்றுதான் எல்லாம் தயார்செய்துவிட்டோம். உடுத்திக் கொள்வது ஒன்றுதான் பாக்கியிருக்கிறது. நீ சென்று காரை அழைத்துவருவதற்குள் நாங்கள் ரெடியாகிவிடுவோம். நீ சென்றுவா" என்றாள். உடனே ராமமூர்த்தி வெளியிற் சென்று சிறிதுநேரத்தில் காருடன் திரும்பிவந்தார். அதற்குள் புறப்பட்டுக் காரை எதிர்பார்த்திருந்தவர்கள் காரில் ஏறி உட்

கார்ந்தார்கள். காரும் வாயுவேக மனோவேகமாய்ச் சென்று கல்யாண வீட்டையடைந்தது.

பலவித சிறப்புடன் கூடிய அந்த கல்யாண வீடு வெகு ஆடம்பரமாயிருந்தது. திரள்திரளாக ஜனங்கள் வந்துகொண்டேயிருக்கிறார்கள். இதில் நூதன ஆடம்பரத்துடன் வந்திருக்கும் ஒருவரைக் குறித்து சற்று விவரிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. சற்றேறக்குறைய 40 வயதென மதிக்கக்கூடிய ஓர் கம்பீர புருஷர் இடுப்பில் ஜரிகை வஸ்திரம் ஒன்றை பஞ்சக்கச்சமாக உடுத்தி அதற்குமேல் உடம்பில் சில்க் ஜிப்பா ஒன்றை அணிந்து கையில் காப்பு, கொலுசு, காதில் பளிச்சென்று மின்னும் 7 கல் வைரக் கடுக்கன், கைவிரல்களில் விதவிதமான வைர மோதிரங்கள், தங்க கடிகாரம், கடிகாரச் சங்கிலியோ அவர் கையிலிருந்த கொலுசைவிட சற்று பருமன் அதிகமாகவிருந்த தல்லாமல், அவற்றிலும் ஜிலுஜிலுவென்று வைரங்கள் ஒளி விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. மற்றும் அவர் கழுத்திலணிந்திருந்த உருத்திராக்ஷ முழுதும் வைரமயமாய் ஜொலித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவரது நடைபாவனை முதலியதும் ஒரு ஸ்திரீயின் சாயலை ஒத்திருந்தது. அத்துடன் அவர் தலையில்அடர்ந்த மயிரை நேராக வகுத்தெடுத்து அழகாய் வாரி முடிந்திருந்தது. இதனால் அவர் சற்று ஸ்திரீயின் சாயலை ஒத்திருந்தாரெனினும் அவரது முகத்தில் ஆண்மக்களின் வீரம் ததும்பிக் கொண்டிருந்தது. இதற்குக் காரணம் அவரது முகத்திலுள்ள பெருத்த மீசையாகவிருக்கலாம். நிற்க,

அவர் நிற்குமிடம் உட்காருமிடமெல்லாம் பக்கத்திற்கு இரண்டு ஆட்கள் வீதம் நின்று, அவர் வாயினின்றும் எப்பொழுது என்ன உத்திரவு வருமோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள். அவர் உலாவும்போது அவருடன் கூடவே சற்று தூரத்தில் மரியாதையாக உலாவிக்கொண்டே யிருப்பார்கள். திடீரென்று அவர் நின்றால், உடனே ஒருவன் ஓடி நாற்காலியைக் கொண்டுவந்து போடுவான். மற்றொருவன் விசிறியைக் கொண்டு விசுறுவான். பின்னொருவன் குனிந்து அவர் பாதத்திலணிந்திருக்கும் சிலிப்பரின் தூசியைத் தன் கையில் தயாராய் வைத்திருக்கும் துவாலையால் துடைத்துவிடுவான். வேறு ஒருவன் தனது கக்கத்தில் தயாராய் வைத்திருக்கும் வெள்ளி வெற்

றிலைப் பெட்டியைத் திறந்து விதவிதமான வாசனைகளுடன் சேர்ந்த பாக்குத்தூளை வைத்து பீடாவாகச் செய்து அதை மிகுந்த பயபக்தியுடன் அவர்முன் நீட்ட, அவரும் அதை வெகு ஆவலாய் வாங்கி வாயில் போட்டுக்கொள்வார். அத்துடன் அவர் அடிக்கடி தன் ஜேபியிலிருந்த பொடி டப்பியைத் திறந்து அதில் ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்து மூக்கில் வைத்து உறுஞ்சிக்கொண்டேயிருப்பார். அந்த டப்பியோ! சாதாரண டப்பியாக அல்லாமல் தங்கத்தால் செய்து நவரத்தினங்களு மிழைத்திருந்தது. அதனால் அவர் அதைக் கையில் எடுக்கும் போதெல்லாம் அந்த நவரத்னங்களின் சுடர் பச்சை, சிகப்பு, நீல முதலிய நிறங்கள் அவர் முகத்திலும் தேகத்திலும் வீசிக் கொண்டேயிருந்தது. இதைக் காணும் ஒவ்வொருவரும் அவர் யாரோ ஒரு பெரிய பிரபுவென்றும் அவருக்குச் சமானமான பிரபுக்கள் இந்தத் தென்னிந்தியாவிலேயே எவரும் இருக்கமாட் டார்கள் என்றும் பற்பல விதமாகப் பேசிக்கொண்டார்கள். பெண்வீட்டார் இவரை பிள்ளைவீட்டைச் சார்ந்தவர் என் றெண்ணிப் பெரிதும் உபசரித்தனர். பிள்ளை வீட்டார், பெண் வீட்டைச்சார்ந்தவர் என்று பெருமைப்படுத்தினர். ஆனால் இந்தப் பிரபுமட்டும் தான் எல்லோருக்கும் பொது மனிதன் என் பதாக யாரைக்கண்டாலும் வெகு நாட்கள் பழகியவரைப்போல் சுமுகமாய் உறவுபாராட்டிக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு ஏற்பட்ட மேளவாத்தியங்களின் கோஷம் அவர்களை அதிகமாய் பேசவிடாது தடுத்தது. சிறிது நேரத்தில் போஜ னம் செய்ய அழைக்கப்பட்டவர்களாய் எல்லோரும் அவ் விடத்தைவிட்டு அகன்றனர்.

போஜனம் முடிந்து அவரவர் ஸ்தானங்களை யடைந்து போஜன மயக்கம் தீரும்படி படுக்கையிற் படுத்துப் புரண்டார் கள். நித்ரா தேவி ஆட்சிப்புரிந்தாள்.

எல்லோரும் நித்திரையில் ஆழ்ந்தாரெனினும் அந்த மண மகன் மட்டும் நித்திரைகொள்ளாமல் நாளை அவனது சகதர் மிணியாக வரப்போகும் மணமகளின் திவ்ய சவுந்தர்யத்திலேயே யீடுபட்டவனாக எப்போது பொழுது விடியும் என்பதானக் கவலையை மேற்கொண்டவனாய்த் தவித்துக் கொண்டிருந்தான்.

கடிகாரத்தில் அடிப்பது 1 மணியாக விருந்தாலும் 4 மணி யடித்ததாக அவனது அரிய புலன்களுக்குத் தோன்றும். உடனே வாரிச் சுருட்டிக்கொண்டு தன்னை மணவரைக்கு அழைத்துச்செல்ல வந்துவிடுவார்கள் என்று எழுந்து உட்கார்ந்துக்கொள்வான். தலையணையின் அடியிலிருந்த தனது கை கடிகாரத்தையெடுத்து இடது மணிக்கட்டில் அணிந்துக்கொண்டு அது சரியாகச் செல்கிறதா? என்று உற்று கவனிப்பான். அப்பொழுது அதில் மணி 1 என்பதைக்கண்ட மணமகன் தன் கடிகாரம் சரியானபடிச் செல்லவில்லையென்பதாயெண்ணி அதைச் சரிப்படுத்தும்பொருட்டு கையில் எடுத்து அங்கு சுவரில் மாட்டப்பட்டதும் சற்று முன்பு மணியடித்ததுமான கடிகாரத்தைக் கவனிப்பான். அப்பொழுது அதிலும் 1 மணிதான் என்பதைக்கண்ட மணமகன் கடிகாரம் தவறில்லை, தவறுதலுக்குக் காரணம் தான்தான் என்பதை உணர்ந்து சற்று வெட்கிப் படுக்கையில் சாய்வான். இவ்விதமாய்ப்பெரும்பாடுபட்டு அவ்விரவைக் கழித்தான். மணியும் 3 அடித்தது. மணமகனை அழைப்பதற்காக உண்மையாகவே ஒரு பெரியவர் வந்து கதவை யிடித்தார். தன் காதலியின் முகாரவிந்தத்தை மற்றொரு முறை பார்க்கும்படியானதும், அவளுடன் அணுகி உட்கார்ந்துகொள்வதுமான திவ்ய வேளை சமீபித்து விட்டதென்பதை யுணர்ந்து பெருமகிழ்ச்சி யடைந்தவனாய் எழுந்து கதவைத் திறந்துக்கொண்டு வெளியில் வந்தான். அதே சமயத்தில் வீடு முழுவதும் "ஐயையோ! என்ன அநியாயம்! பெருத்த மோசமாகயிருக்கிறதே!" என்ற பேரிரைச்சலும் கூக்குரலுமாக ஜனங்களெல்லாம் தத்தளித்துக்கொண்டிருந்தார்கள். இதைக்கண்ட மாப்பிள்ளையும், மாப்பிள்ளையை அழைக்க வந்த பெரிய மனிதரும் ஒரே ஓட்டமாக ஓடி மணப்பெண்ணின் விடுதியை அடைந்தனர். அங்கு மணப்பெண்ணும் வேறு சில பெண்களும் ஸ்திரீகளும் பிணங்களைப்போல் அசைவற்றுக்கிடந்தனர். அங்கு வந்தவர்களில் டாக்டராக யிருந்த ஒருவர் உடனே அவர்களைப் பரிசோதித்து அவர்கள் எல்லோரும் ஒரேவிதமான மயக்க மருந்தின் சுவாசத்தால் தாக்கப்பட்டிருப்பதாகவும், சிறிது நேரத்தில் அவர்களெல்லாம் நல்லுணர்ச்சியடையக்கூடும் என்றும் கூறினார். அதன் பிறகு கவனித்ததில், அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களெல்லாம் களவாடப்பட்டும் அவைகளிற் சில நகை

...மராசர்

கள் அங்கு கீழே சிதறியும் அவர்களுடைய பெட்டிகளெல்லாம் கள்ளச்சாவியைக் கொண்டு திறக்கப்பட்டு அவற்றிலிருந்த நல்ல துணிமணிகளை யெடுத்துக்கொண்டு, சாதாரணமானதுகளையெல்லாம் அங்கங்கே குவியல் குவியலாக போடப்பட்டு மிருந்தது. இதனைக்கண்ட யாவரும் யாரோ கள்வர்களே வந்து இவ்விதம் செய்தார்கள் என்றெண்ணி அக்கள்வர்கள் அந்த நிகரில்லாப் பிரபுவை என்ன பாடுபடுத்தினரோ; சென்று பார்ப்போம், என்பதாய் நினைத்து வேகமாய்ச் சென்று அப்பிரபுவின் விடுதியைக் கவனித்தார்கள். அங்கு அந்தப் பிரபுவாவது, அவரது பணியாட்களாவது ஒருவரும் காணப்படவில்லை. ஆனால் அங்கு ஒரு கடிதம் மட்டும்

இந்தக் கல்யாண வீட்டிலுள்ள மகாஜனங்களுக்கு

என்ற குறிப்போடு காணப்பட்டது. உடனே அதை எடுத்து வாசித்தார்கள். அக்கடிதம் பின்வருமாறு :—

என் அன்பிற்கும் வந்தனத்திற்கும் உரியவர்களான சீமான்களே! சீமாட்டிகளே! நேற்றிரவு நான் யார்? என்பதைத் தெரிந்து கொள்ள ஆவல்கொண்டிருந்த தங்களுக்கு, சில நாட்களுக்கு முன்பு தேவிபுரத்தில் தனது எஜமானராகவிருந்த டாக்டரை வஞ்சித்து அமோகமான பொருட்களைக் கொள்ளைகொண்ட நன்றிகெட்ட விசுவாசமற்ற லக்ஷ்மிநரசு நான்தான் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி எனதன்பார்ந்த எஜமானர் விஷயத்திலேயே நான் அவ்விதத் துரோகம் செய்தேன் என்றால், உங்கள் விஷயத்தில் நான் செய்தது உங்களுக்கு ஆச்சர்யத்தையும் என்மீது அசூயையும் உண்டாக்காதென்று நினைக்கிறேன்.

இப்படி உங்களை வஞ்சித்துக் கொள்ளையடித்ததுமல்லாமல், உங்கள் மனமெல்லாம் புண்ணாகும்படி ஏளனம் செய்து கடிதம் எழுத நேர்ந்ததைப்பற்றி விசனிக்கிறேன். அப்படி உங்கள் மனதைப் புண்படுத்தவேண்டுமென்ற கருத்துடன் நான் எழுதவில்லை. ஏதோ பூர்வ கர்ம பலனால், பழிபாவங்களுக்கு அஞ்சாமல் இந்த இழிவுத் தொழிலாகிய கள்ளத் தொழிலை நடத்திவருகிறேன் என்றாலும், ஏதோ எனக்குத் தெரிந்த சில

நீதிகளைக் கூறி உங்களை இனியாவது எச்சரிக்கையாக இருக்கச் செய்யவேண்டும் என்பதே எனது கருத்து.

இதில் முக்கியமாய் நேற்று என்னைக்கண்ட இவ்வளவு ஜனங்களும் யார்? இது யார்? என்று சமுசயித்தீர்களேயன்றி ஒருவராவது இவ்வளவு சமுசயத்திற்கிடமான இந்த ஆடம்பர மனிதன் யார்? யாரைச் சேர்ந்த மனிதன்? இவனைப்பற்றிய விவரமென்ன? என்பதை அறிந்துகொள்ளாமல் குருட்டு அபிப் பிராயத்துடன் முழு மூடத்தனமாயிருந்துவிட்டீர்களே! இனி யாவது மடமையை ஒழித்து எல்லாவற்றிலும் முன்னணியில் நில்லுங்கள்.

இரண்டாவது நமது ஜனசமூகத்தில் நடந்துவரும் ஓர் துர் வழக்கத்தை நான் வெகுநாட்களாய்க் கேள்விப்பட்டும், சில விடங்களில் பார்த்தும் வருகிறேன். அதாவது, எங்கேயாவது ஒரு காரியம் என்றால் உடனே பெருத்த ஆசாமிகளைப் பிடித்து அமோகமான இரவல் நகைகளை வாங்கித் தங்கள் மனைவி மக்கள் அவயவங்களும் தெரியாவண்ணம் பூட்டி ஜம்பமாய் அழைத்து வரும் கனவான்களை நான் அறிந்திருக்கிறேன். இஃதென்ன மடத்தனம்! நல்லகாலமிருந்து நல்லவிதமாய் அவைகளைத் திருப்பிக்கொடுக்க நேர்ந்தால் பாதகமில்லை. ஒருக்கால், அவை கள் தவறுதலாக இழந்துவிடநேர்ந்தாலும், கள்வர்களால் அபக ரிக்கப்பட்டாலும் அவர்களுக்கு எவ்விதமான பதில் சொல்வது? அவர்கள் ஒற்றைக்கு இரட்டையாக அதன் கிரயத்தைக் கேட் டாலும், அதன்படி கொடுத்துத்தானே தீரவேண்டும், என்பதை யும் கவனிப்பதேயில்லை. இது பெரிய கொடிய வழக்கம் என் பதை இனியாவது தெரிந்துகொள்ளுங்கள். அவரவர்களுக்கு இயற்கையாயுள்ள ஆபரணங்களைமட்டும் அணிந்துவந்தால், அது போனாலும் வந்தாலும் மனதிற்கு அவ்வளவு ஆயாசத்தை உண் டாக்காது. பிறர் பொருளை இழந்துவிட்டோம்; என்பதை அறிந்தபோது மனம் என்ன பாடுபடும் என்பதை அறிந்து கொள்ளவே நான் இவ்விதம் செய்தேன். இதில் நான்கு பிரபலஸ்தர்கள் அவ்வித பேர்வழிகள், என்பதை நான் அறி

வேன். சிலர், புத்திசாலிகளாக இக்கொடிய பழக்கத்திலீடுபடா திருப்பவர்களேயும், அவர்கள் மனைவிமார்கள் அவர்களை வற் புறுத்தி சுயமாய் சம்பாதித்துப்போடத்தான் கையாலாகவில்லை என்றால், இப்படிப்பட்ட நல்ல நாட்களின்போது இரவல் நகை களையாவது வாங்கிவரத் திறமையற்ற புருஷர்களும், ஒரு ஆண் பிள்ளைகளா? என்ற சுடு சொற்களால் கணவன்மாரை வாட்டிடும் சகோதரிகள் இதில் சேர்ந்திருப்பதால்தான், இக்கடிதத்தில் சீமாட்டிகளேயும் சேர்த்திருக்கிறேன். மன்னிக்கவும்,

இங்ஙனம்,

லக்ஷ்மிநரசு.

இதை வாசிக்கக் கேட்ட எல்லோர் மனதும் ஒரே கொதிப் பாகக் கொதித்தது.

அச்சமயம், அங்கு கூடியிருந்த கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு போலீஸ் ஜவான்களும், இன்ஸ்பெக்டர்களும் வந்து சேர்ந்தார்கள். இன்ஸ்பெக்டரிடம் விஷயங்களை விவரமாய்க் கூறி அக்கடிதத்தையும் கொடுக்கப்பட்டது. அதைப் படித்த இன்ஸ்பெக்டர் "ஆஹா! அந்த லக்ஷ்மிநரசா இங்கு வந்திருந் தான்! அடாடா! அவனைப் பிடித்திருந்தால்; பிரபலக் கள்வனைப் பிடித்த புகழ் நமக்குக் கிடைத்திருக்குமே!" என்பதாய் எண்ணி, அப்போதே அவரது பட்டங்களேயும், பிரமோஷன்களேயும் இழந்துவிட்டவர்களைப்போல் தவியாய் தவித்துக்கொண்டிருந் தார்கள். கடைசியாக "ஊம்; சரி எப்படியானாலும் அந்தத் துஷ் டன் இருக்குமிடமே தெரியாமலிருந்ததற்கு இப்போது இவ் வளவு கிடைத்தமையினால் இனி அவனை சுலபமாய்க் கண்டு பிடித்துவிடலாம் என்பதாய் நினைத்து பெரும் திருப்தியடைந்த வர்களாய், அவ்விடமிருந்த ஒவ்வொருவரையும், ஒவ்வொருவித மான கேள்விகளைக் கேட்டு ஆர்பாட்டம் செய்துக்கொண் டிருந்தனர்.

இதோ! அந்த துஷ்டனை இப்பொழுதே நான் தேடிக் கண்டுபிடித்துவிடுகிறேன், என்பதுபோல் கிரணங்களாகிய குதிரைகளை தீவிரமாய் விரட்டிக்கொண்டிருந்தான் ஆகாய மண் டலத்திற் திகழும் தினமணி.

---

## 3-வது அத்தியாயம்.

### பிடித்த கள்ளனை விட்டார்—பிரம்படியும் பட்டார்

லிங்கப்ப செட்டியார், வர்த்தக விஷயமாய் வெளியூர் சென்றிருந்தசமயம் அவர் வீட்டில் நடந்த ஒரு சம்பவத்தைக் கவனிப்போம்.

காலை மணி 9 இருக்கும். லிங்கப்ப செட்டியாரின் ஏக புத்திரன் சுந்திரமூர்த்தியும் ஏதோ ஒரு அலுவலாய் வெளிச் சென்றிருந்தார். அவரது மனைவி சுப்புலக்ஷ்மி அம்மாளும், வேலைக்காரி தங்கமும் வீட்டிலிருந்தார்கள். அன்று வெள்ளிக் கிழமையாதலால் சுப்புலக்ஷ்மி எண்ணெஸ்நானம் செய்வதற்காகத் தன் ஆபரணங்களையெல்லாம் ஒரு வெள்ளித் தட்டில் கழட்டிவைத்து, அதை பீரோவில் வைத்துப் பூட்டி சாவியை அதிலேயே தொங்கவிட்டு, தன் உடைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு ஸ்நான அறைக்குச் சென்றாள். அங்கு வேலைக்காரி தங்கம், தன் எஜமானிக்கு வேண்டிய ஸ்நான ஏற்பாடுகளையெல்லாம் தயாராய்செய்துவைத்துக்கொண்டு காத்திருந்தவள், எஜமானி வந்ததும் எண்ணெ தேய்த்து ஸ்நானம் செய்வித்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் "ஹல்லோ! மிஸ்டர் C.R.K.R. L. S. மூர்த்தி!" என்று கூப்பிட்டுக்கொண்டே, சுந்திரமூர்த்தியின் அரிய நண்பரான எதிர்வீட்டு M. K. மூர்த்தி மாடிமீது விஜயம்செய்தார். அவர் சாக்ஷாத் கிருஷ்ணமூர்த்தி யாகையால் வீட்டு விஷயங்கள் எல்லாம் ஞானதிருஷ்டியால் அறிந்தோ அறியாமலோ இதுதான் தக்க சமயம் "காற்றுள்ளபோது தூற்று" என்ற பழமொழியைக் கடைப்பிடிக்கவந்தவர்போல் சிறிதும் கூசாமல் தாராளமாய் ஹாலில் சென்று பீரோவில் தொங்கிக்கொண்டிருந்த சாவியால் பீரோவைத் திறந்து மேற்படி சுப்புலக்ஷ்மி அம்மாளால் வைக்கப்பட்டிருந்த நகைத்தட்டில் கையைப்போட்டு வாரி வாரி தன் கால் சட்டை ஜேபிகள் இரண்டிலும் நிரப்பிக்கொண்டார். சரி; வந்தகாரியம் பரிபூர்ண வெற்றியோடு முடிந்துவிட்டது, என்ற குதூகலத்தோடு பீரோக் கதவை மெதுவாய் மூடிவிட்டுச் செல்ல நினைத்தவராய், கதவைப் பாதியளவுக்கு மூடுவதற்குள், தங்கம், எஜமானி உத்திரவுப்படி அங்கு மேஜைமேல் வைக்கப்பட்டிருந்த புதிய சோப்புக்கட்டியை

எடுத்துச்செல்வதற்காக வந்தாள். அவளைக் கண்ட கிருஷ்ண மூர்த்தி கதவை அப்படியே விட்டுவிட்டு ஒரே ஓட்டம்பிடித்தார். இதைக்கண்ட தங்கம் எஜமானியிடம் இதைத் தெரிவிப்பதற்காக மறுபக்கமாய் ஒரே ஓட்டம்பிடித்தாள்.

உடனே வீடு முழுவதும் ஒரே ஆரவாரம்; கீழே குடித்தனக்காரர் வீட்டிலிருந்த இரண்டொரு ஆண்பிள்ளைகள் விஷயத்தைக் கூறிக்கொண்டே தெருவில் வந்து "பிடியுங்கள் அவனை! விடாதேயுங்கள் அவனை!" என்ற கூச்சலோடு மூர்த்தியைத் துரத்திக்கொண்டு ஓடினார்கள். அக்கம்பக்கத்திலிருந்த சில புருஷர்களும் விஷயத்தைச் சுருக்கமாய் ஊகித்தவர்களாய் அப்படிப்பட்ட சண்டாளனை விடுவதா? பிடித்து ஒரே நசுக்காய் நசுக்க வேண்டாமா? என்று வீரம் பேசியவாறு கூட்டமாய் ஓடினார்கள்.

அந்த மூர்த்தி இவர்கள் கையிலெல்லாமா பிடிபடுவார்? அவர் முயல்வேகமாய் ஓடுகிறார். ஆனால் ஏதோ கொஞ்சம் கிரகசார தோஷம் குறுக்கிட்டு, பின்னவர்களின் ஓட்டத்தையும் கூச்சலையும் கண்ட முன்னவர்கள் சிலர் சேர்ந்து மூர்த்தியை மடக்கிப் பிடித்துவிட்டார்கள். பிடியினின்றும் தப்பி ஓடிவிடாதபடி ஜாக்கிரதையாக இரண்டு கைகளையும், கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள். திரு திருவென்று விழித்தார் மூர்த்தி. உடனே நிமிர்ந்து பெருமூச்சு விடுபவர்போல் நடித்து ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டார். பிடித்திருந்தவர்கள் கைகளில் அவரது இரண்டு கைகளும் அப்படியே நின்றுவிட்டன. இதனால், அவர் கையில்லா முண்டமாக ஓடினார் என்று? நினைக்கிறீர்கள். இல்லை, இல்லை அவர் கைகள் அப்படியேதான் அவருடன் சென்றன. ஆனால் அவர் முன்ஜாக்கிரதையாகப் பிடிபட்டுவிட்டால், தப்பி ஓடுவதற் கென்று உபாயமாக ரப்பரால் செய்த இரண்டு செயற்கை, கைகளை முழங்கைவரையில் அணிந்திருந்தார். அக் கைகளே அவர்கள் கையில் தங்கி அவர்களை பிரமிக்கச் செய்தது. ஆனால் அவர்கள் அந்த பிரமிப்பில் அவரை விட்டு விட்டார்களென்று நினைக்கிறீர்கள்? அதுவுமில்லை.

இதனைக்கண்ட அவர்கள் இன்னும் பதின்மடங்கு ஆத்திர மூண்டவர்களாய், பலவித கூக்குரலோடு வேகமாய்ப் பின்

தொடர்ந்தார்கள். இவர்களின் ஆரவாரத்தைக்கேட்ட முன்னவர்கள் பலர் சேர்ந்து மூர்த்தியைத் திரும்பவும், மடக்கிப் பிடித்துவிட்டார்கள். முந்திய விஷயமறிந்த அன்னவர்கள், அவரது கையைப் பிடிக்கப் பயந்து கோட்டை கழுத்து (காலர்) பக்கமாய் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டார்கள். உடனே மூர்த்தி, சற்றும் சளைக்காமல் ஒரே இழுப்பில் பித்தான்களைக் கழற்றி அந்தக் கோட்டை அவர்கள் கையிலேயே தங்கவிட்டுக் காற்றாய்ப் பறந்தார்.

ஏமாற்றமடைந்தவர்கள் இன்னும் அதிக சினமூண்டவர்களாய்க் காற்றினும் வேகமாய், பேரிரைச்சலுடன் பின்தொடர்ந்தார்கள். முன்னால் சென்றுகொண்டிருந்த சிலர் பின்னவர்களுடைய கூச்சலைக் கேட்டு கும்பலாய்ச் சேர்ந்துவந்து, ஓடிவரும் மூர்த்தியை மடக்கிப் பிடித்துக்கொண்டு "இதோ! பிடித்துவிட்டோம் சீக்கிரம் வாருங்கள்" என்று பின்னவர்களைப் பார்த்துக் கூவி அழைத்தார்கள்.

இதனைக்கண்ட மூர்த்தி "ஹா! பிடித்துவிட்டீர்களா?" என்று கூறிக்கொண்டே ஒரு திமிர் திமிரி அவர்கள் பிடியினின்றும் விலகிக்கொண்டு, அவர்களில் ஒருவர் கையிலிருந்த பிரம்புத் தடியை சரேலென பிடுங்கிக்கொண்டு "எங்கே அந்த துஷ்டன் இவன்தானா?" என்று கூறிக்கொண்டே அவர்களில் இரண்டொருவரை அப்பிரம்பால் சுளீர் சுளீரென்று தாக்கினார். இதைக்கண்ட அவர்கள் யாவரும் திடுக்கிட்டுப் பயந்து தூர விலகினார்கள். இதுதான் சமயமென்று பிரம்பை வீசி எறிந்த வண்ணம் ஓரே ஓட்டம்பிடித்தார் மூர்த்தி.

அச்சமயம் போலீசுகளுக்கெல்லாம் தகவல் எட்டிவிடவே போலீஸ் கான்ஸ்டேபிள்கள் கூட்டங் கூட்டமாய் ஓடிவருவதல்லாமல், இன்ஸ்பெக்டர், சார்ஜண்டு முதலியவர்கள், மோட்டார் சைக்கிளிலும் குதிரையின்மீதும் ஏறி காற்றினும் கனவேகமாய் பறந்து வந்துகொண்டிருந்தார்கள். திரும்பிப்பார்த்தார் மூர்த்தி. திக்பிரமையடைந்தார். ஆயினும் "பார்ப்போம் ஒருகை, பிறகு கடவுள் விட்டவழி" என்பதாய் எண்ணி மனோவலிமையுடன், தேகவலிமையையும் சேர்த்து, மான் வேகமாய் ஓடினார். என்ன பிரயோஜனம்? மோட்டார் சைக்கிள், குதிரை இவற்றின்முன்

சாதாரண மனிதன் ஓட்டம் எம்மாத்திரம்? அவர்கள் அரை பர்லாங்கு தூரத்தில் வந்து தன்னை நெருங்கிவிட்டார்கள் என்பதைக் கண்ட மூர்த்தியின் மனம் "இனி தப்பமுடியாது" என்று எண்ணித் தவித்தது. அச்சமயம், அங்கு ஓர் வீட்டின் தெருவாயிலில், காலியாக நின்றிருந்த ஒரு "பேபி ஆஸ்டின்" காரில் சரேலெனப் பாய்ந்து ஏறி அமர்ந்து முழு வேகத்தில் (Full Speed) காரைச் செலுத்தினர்.

இதைக்கண்ட இன்ஸ்பெக்டர், சார்ஜண்ட் முதலியவர்களும் பெரும் ஆத்திரமூண்டவர்களாய், அவரவர் குதிரைகளையும் மோட்டார் சைக்கிள்களையும் அதிவேகமாய் நடத்தி மூர்த்தியைப் பின்தொடர்ந்தார்கள்.

அச்சமயம், மூர்த்திக்கு உதவிபுரிந்த கார் இருந்த வீட்டிலிருந்து ஒரு டாக்டர் வெளியில் வந்து "என் கார் எங்கே?" என்று விழித்தார். அங்கிருந்தவர்கள் "அதோ! ஒரு திருடன் உங்கள் காரை கடத்திச்செல்கிறன் பாருங்கள்" என்று கார் போகும் திசையைச் சுட்டிக்காட்ட ஒரு பர்லாங்கு தூரத்தில் பறந்துசெல்லும் தனது காரைக்கண்டு என்ன செய்வது என்று தோன்றமல் திகைத்து நின்றர்.

10 நிமிஷங்களுக்கு முன்பு காரை வெளியில் நிறுத்திவிட்டு, உள்ளே சென்று வியாதியஸ்தரைப் பரிசோதித்துவிட்டுத் திரும்பி வருவதற்குள் தனது காரைக் கள்வன் கடத்திச்சென்ற விந்தையை எண்ணித் திகைத்துநிற்கும் டாக்டரின் பரிதாப நிலமைக்கு வருந்தியவர்களாய் அவ்வீதியெங்கும் கூட்டங்கூட்டமாய் குழிமிவிட்டார்கள். அன்றியும், அவ்வீதியில் போகிற வருகிற கார்களும் அப்படி அப்படியே நின்று விஷயமென்னவென்று விசாரிக்கத் தொடங்கின.

விவரமறிந்த பொதுஜனங்கள் உள்ளமெல்லாம் ஒரே கொதிப்பாய்க் கொதித்து "ஹா! அப்படிப்பட்ட பாதகனை விடலாமா? வாருங்கள்; நாமெல்லோரும் இந்த மோட்டார் கார்களில் ஏறி திசைக்கு ஒரு காராக விட்டு, அவன் எத்திசை போனலும் தப்பவிடாமல் மடக்கிப் பிடித்துவிடலாம்" என்று முன்பு கள்வனைத் தொடர்ந்து ஓடி ஓடி அலுத்துப்போயிருந்த

பொதுஜனங்களையும், போலீஸ் ஜவான்களையும் அங்கிருந்த கார்களில் ஏற்றி திசைக்கு இரண்டு கார் வீதம் பறக்கவிட்டார்கள்.

முன்பு, இன்ஸ்பெக்டர், சார்ஜண்ட் முதலியவர்களால் துரத்திக்கொண்டு செல்லப்பட்ட மூர்த்தி, எப்படியாவது அவர்கள் கண்ணில் மண்ணைப்போட்டு தப்பி ஓடிவிடவேண்டும், என்று பெரு முயற்சிசெய்கிறார்.

இன்ஸ்பெக்டர், சார்ஜண்ட் முதலியவர்கள், எப்படியும் அக்கள்வனை இம்முறை பிடித்துவிடுவதே சரி, என்பதாய் தீவிரமாய் துரத்திக்கொண்டு சென்றார்கள். இப்படியாய் அரை பர்லாங்கு தூர வித்தியாசத்தில், முன்னும் பின்னுமாய் அவரவர் வாகனங்களையும் காற்றினும் கடும் வேகமாய் பறக்கவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அச்சமயம், மூர்த்தி செல்லும் பாதையிலிருந்த ரயில்வே கேட்டு (Level crossing) லெவல்கிராஸிங் அடைக்கப்பட்டிருந்ததல்லாமல், சற்று தூரத்தில் ரயிலும் வந்துகொண்டிருந்தது. இதைக்கண்ட மூர்த்தி சற்று திகைத்து, அவருக்கு இடபுறம் வலப்புறமாயிருந்த பாதைகள் பக்கம் காரைத் திருப்ப முயன்றவராய் அத்திசைகளை நோக்க, அந்த இரண்டு பக்கங்களிலும், பக்கத்திற்கு இரண்டு கார்கள் வீதம் நின்று அதிலுள்ள போலீசாரும் மற்றவர்களும், தன்னை வளைத்துப் பிடிக்க முயன்றவர்களாய்ப் பிரயத்தினப்பட்டுக்கொண்டிருப்பதைக் கண்டார். பின்பக்கத்திலோ இன்ஸ்பெக்டர் சார்ஜண்ட் முதலியவர்கள் நெருங்கிவிட்டார்கள். மத்தியில் அகப்பட்டுக்கொண்ட மூர்த்தியின் பாடு க்ஷணநேரம் திண்டாடிப்போய்விட்டது. என்றாலும், நிலைமையைச் சமாளித்துக்கொண்டு, உடனே காரை விட்டுக் கீழே யிறங்கி ரயில் கேட்டின்மீது ஏறி மறுபக்கம் குதித்தார். அதேசமயம் ரயிலும் வேகமாய் வந்து சென்றுவிட்டது.

இதைக்கண்ட எல்லோரும், அவன் ரயிலில் அகப்பட்டு நசுங்கிப்போயிருப்பான், என்பதாய் எண்ணி மிக மகிழ்ச்சியடைந்தவர்களாய், அவனது தேகம் அங்கு சிதறிக் கிடக்கும் என்று தரையை நோக்கித் தேடினார்கள்.

இவர்கள் இங்ஙனமிருக்க, கேட்டைவிட்டுக் குதித்து வாயு வேக மனோவேகமாய் ஓடிவந்த நமது மூர்த்தி, அங்கு ஓர் பெட்ரோல் பங்கில் பெட்ரோலை நிறப்பிக்கொண்டிருந்த ஓர் மோட்டார் காரைக் கண்டார். அதை கவனித்துக்கொண்டே சென்று காரை நெருங்கினர். அதன் முன்புறத்தில் டிரைவர் மட்டும் உட்கார்ந்திருந்ததைக் கண்ட அவர் மனங் களித்தது. இதற்குள் பெட்ரோல் நிறப்பப்பட்ட அக்காரை, டிரைவர் மெல்லச் செலுத்த ஆரம்பித்தான். பின்புறத்தின் கதவை மெதுவாய் திறந்துகொண்டு பூனைபோல் ஏறி அமர்ந்தார் மூர்த்தி. காரும் வேகமாய்ச் செல்ல ஆரம்பித்தது.

"இன்று, என்னை போலீஸாரால் பிடிபட்டுச் சிறைசெல்ல விடாமலும் ரயிலில் நசுக்குண்டு எமபுரம் செல்லவிடாமலும் காத்து ரக்ஷித்ததல்லாமல், வெகுதூரம் ஓடிவந்து அலுப்புற்ற எனக்கு இவ்வித வசதியைக் கொடுத்தருளிய ஹே! பரமாத்மா! உன் மகிமையை என்னென்று புகழ்வேன்? ஆபத்சகாயன் என்னும் அரிய நாமம் உனக்கே தகும்" என்பதாய் எண்ணி கடவுளை மனதிற்குள் துதித்தவண்ணம், காரில் வெகுதூரம் ஆரோகணித்துவந்த மூர்த்தி, தான் இறங்கவேண்டிய ஓர் இடம் சமீபித்ததைக் கண்டு,

"அஸேய்! டிரைவர்! காரை நிறுத்து, நான் இறங்கி விடுகிறேன்" என்றார். இதைக்கேட்ட டிரைவர் திடுக்கிட்டவனாய்த் திரும்பிப்பார்த்து "யாரையா நீர்? எப்படி, என் உத்திரவின்றி இதில் ஏறினீர்?" என்று கோபித்தவண்ணம் கூறிக்கொண்டே, காரை நிறுத்தினான். இதைக்கேட்ட மூர்த்தி "கோபித்துக் கொள்ளவேண்டாம், நான் ஒரு அவசர காரியமாய் வந்தவன், உன்னிடம் வாடகைபேச நேரமில்லாமையினால், நீ கேட்ட வாடகையைக் கொடுத்துவிட்டால் போகிறது, என்று ஏறிவிட்டேன். இதோ! இதை வைத்துக்கொள்" என்று கூறிக்கொண்டே, தன் டிரவ்ஸர் பின்புறத்திலுள்ள சிறிய பாக்கெட்டில் கையை விட்டு 10 ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அலக்ஷியமாய் அவன்முன் எறிந்துவிட்டு இறங்கி வேகமாய் நடந்தார்.

புன்னகைபுரிந்தவண்ணம் அதை எடுத்து பத்திரப்படுத்திக்கொண்ட டிரைவர் "இம்மனிதன் யார்? இவர் எப்பொழுது,

எப்படி இதில் ஏறினர்" என்று யோசித்துக்கொண்டே காரை நடத்திச் சென்றான்.

* * * *

அன்று பகல் முழுவதும் கள்வனைத் தேடுவதிலும் போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுப்பதிலும் நேரத்தைப் போக்கிய நமது C. R. K. R. L. S. மூர்த்தி சிறிதும் ஓய்வின்றி அலைந்து கடைசியாய் மாலை 5 மணிக்கு வீடு வந்து சேர்ந்தார். நகைகளைப் பறிகொடுத்துவிட்டு, அன்று முழுவதும் கவலையில் ஆழ்ந்திருந்த சுப்புலக்ஷ்மி அம்மாள், ஓடிவந்து கணவரை உபசரித்து ஓர் நாற்காலியில் உட்காரச்செய்தாள். உடனே அவர்முன் ஒரு சிறிய (Teapoy) டீ மேஜையைப் போட்டு அதன் மீது டிபன், டீ, வகையறுக்கள் தயார்செய்யப்பட்டது. அதே சமயம் தபால்காரன் ஒருவன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். அதைக்கண்ட மூர்த்தி செட்டியார் தன் தந்தையின் கடிதமாயிருக்கும் என்று அதன் மேல்புறத்தைக் கவனிக்க, லோக்கல் (Local) என்று குறிப்பிட்டிருந்தமையினால், உள்ளூரிலிருந்து வரக்கூடிய கடிதம் தனக்கு ஒன்றுங் கிடையாதாகையால் அநேகமாய், அக்கள்வனைப்பற்றியே யாரோ அன்னியர்கள் எழுதியிருக்கிறார்கள் என்றெண்ணி வெகு அவசரத்துடன் அக்கடிதத்தை திறந்து வாசிக்கலானார். தன் நகைகளைப் பற்றிய தகவல் ஏதாவது வந்திருக்குமா? என்ற ஆசையோடு சுப்புலக்ஷ்மி அம்மாளும் ஓடிவந்து அவருக்கு எதிரில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்துக்கொண்டு கேட்கலானாள். அக்கடிதம் பின்வருமாறு எழுதியிருந்தது.

என் அன்பார்ந்த நண்பராம் சுந்திரமூர்த்திக்கு :— லக்ஷ்மி நாசு தெரிவித்துக்கொள்ளும் விண்ணப்பம். நான் உங்கள் எதிர் வீட்டில் குடிவந்து இந்த ஒருமாதகாலமாய் ஈருடல் ஓருயிர்போல் தங்களிட மிக்க அன்னியோன்னியமாய் பழகிக் கடைசியில் உங்களை நான் இவ்வித மித்ரத் துரோகம் செய்ய நேர்ந்ததை எண்ணி விசனிக்கிறேன். ஆனால் நான் இவ்வித நோக்கத்துடனே தான் உங்கள் வீட்டிற்கு எதிர்வீட்டு மாடியில் குடியமர்ந்து உங்கள் சிநேகிதத்தையும், உங்கள் வீட்டு விவரங்கள் ஒவ்வொன்றையும் எவ்வளவோ சிரமப்பட்டு கிர

கித்து வந்தேன். அதன்படி காரியத்தையும் பூர்த்தி செய்து கொண்டேன். ஏதோ என் தொழில் முறையை யெண்ணி, என்னை மன்னிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சகோதரி ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி அம்மாளுக்கு :—தங்கள் ஆபரணங்களை நான் அவசரமாய் எடுத்ததில் உங்கள் மூன்றுகல் பேசரி ஒன்று கைதவறிக் கீழே விழுந்துவிட்டது. அதுபோல் இன்னும் பல நகைகள் சிதறிக்கிடக்குமென்று தேடியிருப்பீர் என்று நினைக்கிறேன். பாவம்! உங்கள் நகைகளை அபகரித்த தல்லாமல், உங்களுக்குத் தேடும்படியான சிரமத்தையும் கொடுக்கநேர்ந்ததை எண்ணி நான் பெரிதும் வருந்துகிறேன். அப்படி நான் பல நகைகளைச் சிதறவிடவில்லை என்பதையும், தங்கள் நகைகள் யாவும் என்னிடம் சேர்ந்திருக்கிறதென்பதை யும் நீங்கள் தெரிந்துகொள்ளும்பொருட்டு என்னிடம் சேர்ந் துள்ள, தங்கள் நகைகளின் ஜாப்தா, இதோ தருகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| வைரக்கம்மல் | ஜதை | 1 | வைர வளையல் ஜதை | 2 |
| வைர டோலக் | ,, | 1 | வைர மோதிரங்கள் | 2 |
| வைர அட்டிகை | | 1 | 8 கல் வைர பேசரி | 1 |
| வைர நெக்லெஸ் | | 1 | வைர புரூச் | 1 |

ஒரு செட் வைர பித்தான்கள் 4

இத்தனையும் என்னிடம் ஒப்படைத்து ஏமார்ந்துநிற்கும் தங்களுக்கு ஒரே ஒரு எச்சரிக்கை :—

அதாவது, நீங்கள் நகைகளைக் கழற்றியது, பீரோவில் வைத்துப் பூட்டியது எல்லாம் சரிதான். ஆனால் அந்த சாவியை எடுத்து பத்திரப்படுத்தாமல், அதிலேயே விட்டுச் சென்றதினால் தானே! இவ்வளவு நஷ்டத்திற்கும் கஷ்டத்திற்கும் ஆளானீர் கள், என்பதைத் தெரிந்துகொண்டு, இனியாவது ஜாக்கிறதை யாய் நடந்து என் நண்பருக்கு இவ்வித நஷ்டத்தை உண்டாக்கா மல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

தங்கள் அன்புள்ள,

லக்ஷ்மிநரசு (எம். கே. மூர்த்தி)

என்று படித்துவிட்டு "என்ன! லக்ஷ்மிநரஸா! எந்த லக்ஷ்மிநரசு? பேர்போன கள்வன், எஜமானரை துரோகம் செய்து, அந்தக் கல்யாண வீட்டிலும் ரகளை செய்தானே அவன்தானு" என்று ஆச்சர்யப்பட்டுக்கொண்டே அக்கடிதத்தைத் திருப்பிப் பார்த்தார்கள். அங்கு ஓரிடத்தில் "ஆம், சந்தேகம் வேண்டாம். அந்த லக்ஷ்மிநரசுதான் நான்" என்று எழுதியிருந்தது.

அதைக்கண்ட மூர்த்தி செட்டியார், "அடா! பாவி! அன்று என்னிடம் தேவிபுரத்திலிருந்து சட்டப் பரீட்சைக்கு படிக்க வந்திருப்பதாகச் சொன்னுயே! இன்னும் என்னென்னமோ சொன்னுயே! அதையெல்லாம் நான் உண்மை என்று நம்பி மோசம்போய் விட்டேனே!" என்று பிரமையடைந்தார்.

இதைக்கேட்ட சுப்புலக்ஷ்மி "ஆம்; நீங்கள் எப்பொழுதும் இப்படித்தான் செய்கிறீர்கள். ஒன்றுக்கும் உதவாச் சோம்பேரிப் பயல்களுடனெல்லாம் சிநேகிதம் செய்து வீட்டில் தாராளமாய் வரப்போக வைத்து விடுகிறீர்கள். அதனுலல்லவா அந்தத் திருட்டுப்பயல் தாராளமாய் உள்ளே வந்து திருடிக்கொண்டு போனதல்லாமல், எனக்கு புத்திசொல்கிருன். சொல்லுகிற கழுதை இங்கு என்முன் வந்து சொன்னுல், இப்படியே ஒரு உதை உதைப்பேன்" என்று ஆத்திரத்துடன் தன் முன்னிருந்த டீ மேஜையை (Teapoy) எட்டி உதைத்தாள். அது தடாரென எதிரிலிருந்த மூர்த்தி செட்டியார் மீது சாய, உடனே அவர் பயந்து நாற்காலியோடு பின்புறம் சாய்ந்தார். இதைக்கண்ட சுப்புலக்ஷ்மி "ஓ! ஓ! அடி தங்கம்! ஓடிவாடி, ஓடிவாடி" என்று கத்தினுள்.

இந்தக் கூக்குரலைக்கேட்ட தங்கம், "அந்தக் கள்ளப்பயல் மறுபடியும் வந்தானு? அப்படியானுல் இதோ! இதனுல் அவன் மண்டையை உடைத்துவிடுகிறேன் பார்" என்று கூறிக்கொண்டே கையிலிருந்த ஜல்லிக்கரண்டியோடு ஓடி வந்து "எங்கே அவன்" என்று ஜல்லிக்கரண்டியை ஓங்கினுள். இந்த ஆரவாரத்தைக் கேட்டு கீழே குடியிருப்பவர்கள் ஓடி வந்து "என்ன சங்கதி! என்ன சங்கதி!! என்றுர்கள். இதற்குள் தங்கமும், சுப்புலக்ஷ்மியும் சேர்ந்து, மூர்த்தி

செட்டியார்மீது விழுந்து கிடந்த டீ மேஜையை தூக்கி அவரையும் எழுப்பிவிட்டார்கள். ஆனால், அந்த டீ மேஜை மீதிருந்த பால் சர்க்கரை முதலியதும் அவர் முகத்தில் விழுந்து கிடக்கும் அகோரக் காக்ஷியைக்கண்டு வந்தவர்களெல்லாம் பயந்துவிட்டார்கள். அதில் ஒருவர் மட்டும் பெரிய ஒரு சிறிப்பு சிறித்துவிட்டு "தபால்காரன் வந்த சிறிது நேரத்தில் இவையெல்லாம் நடந்திருப்பதைப் பார்த்தால், என்ன ஸார்! பாதருக்கு (Father) ஏதாவது உடம்பு சௌக்கியமில்லையா?" என்றார். அதில் ஒரு அம்மாள் "ஆம்; அப்படித்தான் இருக்கும். திருட்டுப்போன கவலையினாலும், இன்றெல்லாம் சாப்பாடில்லாமல் இருந்ததாலும், கடிதத்தைப்படித்ததும் மயக்கம் வந்து விழுந்துவிட்டார்போலிருக்கிறது" என்றாள். "கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது ஸார்!" என்று ஒரு கேள்வி போட்டார் மற்றொருவர்.

வெட்கத்தால் நிறைந்த மூர்த்தி, இத்தனைக்கும் பதில் ஒன்றும் பேசாது தன் மனைவியை மனதிற்குள் திட்டிக்கொண்டே தலைகவிழ்ந்தவண்ணம் ஸ்நான அறையை நாடிச் சென்றார்.

---

## 4-வது அத்தியாயம்.

### அகமகிழ்ந்த அன்னை—இழந்து நின்றாள் பெண்ணை

லக்ஷ்மிபுரத்திலுள்ள "இராஜபவனம்" என்னும் மாளிகை விஜயலக்ஷ்மியின் விவாகத்தை முன்னிட்டு ஆடம்பர அலங்காரங்களுடன் தேவேந்திரனது கொலுமண்டபம்போல் விளங்கினது. விடியற்காலை $5\frac{1}{2}$ மணிக்கு முகூர்த்தமாதலால் விவாகச் சடங்குகளெல்லாம் அதி மும்மரமாய் நடந்துகொண்டிருந்தது. அவர்களது பந்துக்களெல்லாம் கூட்டங் கூட்டமாய் வந்து எள் விழ இடமில்லாவண்ணம் நிறைந்துவிட்டார்கள். வீடு முழுவதும் ஓரே குதூகலம். சிறுவர்களின் கொண்டாட்டம் சொல்ல முடி

யாததாய் இருந்தது. மணமகளின் தாயாகிய சுந்திராம்பாள், விவாகத்திற்கிணங்காத தன் மகள் ஒருவிதமாய் இணங்கி நாளை விவாகம் நடக்கப்போவதையும், லக்ஷ்மிபுரத்தில் நிகரில்லா தனிகராய் விளங்கும் அனந்தகிருஷ்ணப் பிரபு தனக்கு மருமகனாய் வாய்த்துவிட்டதையும் எண்ணியெண்ணி ஆனந்தித்துக் கொண்டிருந்தாள். அந்தம்மாளின் செல்வ மைந்தனாகிய இராஜ பஹதூர், இன்று தனக்கு அபூர்வமாய்க் கிடைத்திருக்கும் கட்டுக்கட்டான ஸ்நேகிதக் கூட்டங்களைக் கண்டும், தன் வீடு என்றுமில்லாவண்ணம் இன்றிருக்கும் கோலாகலத்தைக் கண்டும் பொங்கி பூரித்து நின்றான். அவனது சகோதரியும் மணமகளுமான விஜயலக்ஷ்மி மாத்திரம், துயரமே உருவாய் அமைந்த வண்ணம் கண்ணீர் உதிர்த்துக்கொண்டிருந்தாள். இவள் இங்ஙனமிருக்கக் காரணம் தன்—சிறியபிராயத்தில் தன் தந்தையால் நியமிக்கப்பட்ட ராஜசேகரனை விட்டு, வேறு ஒருவரை மணக்கும்படி தன் தாயாராலும் தாய் மாமனாலும் நிர்ப்பந்திக்கப்பட்டு நாளை விவாகம் நடக்கப்போவதை எண்ணியெண்ணி மனம் புழுங்கினாள்.

தந்தையையிழந்த அபலை விஜயாள், தாயினிடம் பேரன்பு கொண்டிருந்தாள். அவளது இயற்கை அன்போடு, "தாயினும் சிறந்த கோயிலில்லை; தாய்சொற்றுறந்தொரு வாசகமில்லை" என்னும் வாக்கியங்கள் இன்னும் அதிகமான அன்பையும் பக்தியையும் அளித்தன. ஆகவே தாய் சொல்லை ஒருநாளும் தடுத்தறியாத பாவையாதலால், இதுவிஷயத்தில் பூரணமாய் மறுத்துத் தாயை எதிர்க்க மனமில்லாமல் ஒருவாறு சம்மதித்தாள். ஆயினும் அவளது இருதயமென்னும் பூமியில் செழித்துத் தளிர்த்து வேரூன்றியிருந்த காதல் விருட்சத்தைக் களைந்துவிட்டுப் புதிய விதையை நாட்டமுடியுமா? என்று எண்ணியெண்ணிப் பார்க்கிறாள். 'அது முடியாத காரியம்' என்பதாக அவளது மனசாட்சி தடுக்கிறது. இந்நாள் வரையில், மனமார ஒருவனைக் கணவனாய் வரித்திருந்து இப்பொழுது திடீரென்று ஓர் அன்னியனைக் கணவனென்பதாய் நினைத்த மாத்திரத்திலேயே மனதில் ஒருவித வெறுப்பும் அசூயையும் உண்டாகியது. இப்படிப்பட்ட விவாகத்தைச் செய்துகொண்டு உயிர்வாழ்வதினும் பிராணனை விடுவதே சிலாக்கியம் என்று எண்ணுவாள்.

மறுநிமிஷம், "ஹா! நான் அப்படிச் செய்தால், என்னையே தன்னுயிரென யெண்ணிவரும் என் தாயின் கதி என்னவாகும்" என்று ஏங்குவாள்.

"என்றாலும், நான் எவ்வளவு தடுத்தும் என் நிலைமையைச் சற்றும் உணராமல் முரட்டுத்தனத்துடன் பிடிவாதமாய் இவ் விதம் செய்த என் அன்னைக்கு இது தகுந்த சிட்சையாகவிருக் கட்டும். இதைக் கண்டேனும், உலகத்திலுள்ள தாய் தந்தை யர் தம் மக்கள் விவாக விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருப்பார் கள். இதனால் என்போன்ற பல சகோதரிகள் நன்மையடையக் கூடும். இஃது உலகத்திற்கே ஒரு உபகாரமாக முடியும். ஆகையால் கட்டாயம் நான் இவ்விதம் செய்வதுதான் சரி," என் பதாக ஒருவித முடிவுக்கு வந்தவளாய், தன் படுக்கையினிடம் சென்று படுத்தாள்.

"ஒரே ஒரு தூக்கம் தூங்கி எழுந்துவிடலாம்" என்பதாய் விவாக காரியங்களை ஒருவாராய் முடித்துக்கொண்டு யாவரும் நித்திரையில் ஆழ்ந்தார்கள்.

நடு நிசி. எங்கும் ஒரே நிசப்தம். தூக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரண்டுகொண்டிருந்த விஜயலக்ஷ்மி, "நமது காரியத்தை முடிக்க இதுதான் தக்க சமயம்" என்பதாய் எழுந்து அடிமேலடிவைத்துப் பின்புறத் தோட்டத்துக் கிணற்றரு கில் சென்றாள்.

தன் இருதயத்தில் குடி கொண்டிருந்த ஸ்ரீபரமாத் மாவை தன் முன்பு பிரம்மாண்டமான உருவாக தியானித்து மானசீக மலர் மாலைகளால் அலங்கரித்து தேஜோமயமான திவ்ய ரூப சௌந்தர்யத்திலீடுபட்டவளாய்ப் பரவசமுற்றிருந்தாள்.

"ஹே! ஜெகத்ரக்ஷகா! எல்லாம் உமது திருவுளப்படி நடக்கின்றனவென்பதை யறிந்துக்கொண்டேன். எந்த நேரத் தில் நான் மணக்கோலத்துடன் இருக்கவேண்டுமோ அந்த நேரத்தில் என்னை பிணக்கோலமாய்க் கண்டுகளிக்கத் திருவுளங் கொண்டீரல்லவா? இதோ! உமது விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறேன். என் ஆன்மா சாந்தியடைந்து உம் பாதார

விந்தம் சேர அருள்புரியவேண்டும்" என்று இருகரங்களையும் கூப்பித் தொழுதவண்ணம் கிணற்றில் விழப்போனாள்.

"ஐயோ! அக்கா! விழாதே!" என்று அலறிக்கொண்டே ஓடிவந்து முந்தானையைப் பிடித்திழுத்தது ஒரு சிறிய உருவம். திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்த விஜயாள், "தம்பி! ராஜபஹதூர்! நீயா? ஏது இவ்வளவு நேரம் வரையில் தூங்காமலிருப்பது?

ராஜபஹதூர்:—அது சரி; நீமாத்திரம் தூங்காமல் இங்கு என்ன செய்கிறாய்?

விஜயா:—நானா? நாளை எனக்குக் கல்யாணமாகப்போகிறதென்னும் சந்தோஷத்தினால் தூக்கம் பிடிக்கவில்லை. நிலவு வெளிச்சத்தில் சற்று காற்றுவாங்கி வரலாமென்பதாய் இங்கு வந்தேன்.

ராஜ:—ஓஹோ! எனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்தாயா? இந்நேரம் நீ என்னென்னமோ சொல்லி அழுதுகொண்டே கிணற்றில் விழப்பார்த்தாயே! நான் ஓடி வந்து தடுக்காமலிருந்தால் இந்நேரம் நீ விழுந்துவிட்டுத்தானேயிருப்பாய். நீ சாகவேண்டுமென்றுதானே அப்படிச்செய்தாய்? அக்கா! உனக்கென்ன அவ்வளவு கஷ்டம்? உண்மையை என்னிடம் சொல்லு. ஆம்; இப்பொழுது எனக்கு ஞாபகம் வருகிறது. அன்று ஒரு நாள் அம்மாவிடம் இந்த விவாக விஷயமாய் ஏதேதோ சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாய். அத்தான் ராஜசேகரனையன்றி வேறு ஒருவரையும் கலியாணம் செய்துக்கொள்ள மாட்டேன் என்றும் சொன்னாய். ஆம், இப்பொழுது எனக்கு நன்றாய்த்தெரிந்து விட்டது. இவரைக் கலியாணம் செய்துக்கொள்ள உனக்கு இஷ்டமில்லை. இதுதானே காரணம்? அப்படியானால் என்னிடம் சொல்லு. இப்பொழுதே இந்தக் கலியாணத்தை நிறுத்திவிடுகிறேன் பார்.

விஜயா:—தம்பீ! ஏது, நீ என்னென்னமோ பிதற்றுகிறாயே! கனவு, கினவு கண்டாயா?

ராஜ:—நான் தூங்கவே யில்லையே, கனவு எப்படி காண முடியும்?

விஜயா:—என்ன! இதுவரையிலும் தூங்காமல் விழித்துக் கொண்டாயிருந்தாய்?

ராஜ:—ஆம்; அந்த அத்தான் வந்திருக்காரே!

விஜயா:—எந்த அத்தான் ?

ராஜ:—அவர்தான், மாப்பிள்ளை. எல்லாரும் என்னை, அவரை அத்தான் என்றுதான் கூப்பிடச்சொன்னார்கள். அவர் என்னிடம் ரொம்பநேரம் விளையாடிக்கொண்டிருந்தார். பிறகு அவர் தூங்கிவிட்டார். எனக்கென்னமோ தூக்கம் பிடிக்காமல்யிருந்தது. இங்கே கதவு திறந்த சத்தங்கேட்கவே வராண்டாவில் வந்து எட்டிப்பார்த்தேன். நீ யாத்திரம் ஒண்டியாய் வருவதைப் பார்த்தேன். அக்காவுக்கு துணையாய் நாம் போகலாம் என்று மெத்தையை விட்டு இறங்கி வந்தேன். நீ செய்வதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தேன். அதிருக்கட்டும் அக்கா! நீ ஏன் கிணற்றில் விழுந்து சாக நினைத்தாய்? அதை முன்பு என்னிடம் சொல்லு.

விஜயா:—(பெருமூச்சு விட்ட வண்ணம்) தம்பி! நீ தூங்காமலிருந்தால் அநியாயமாய் உன் உடம்பு கெட்டுப்போய்விடும். என் கண்ணல்ல! நீ, சீக்கிரம் போய் படுத்துக்கொள்.—என்று அவன் முகவாய்க்கட்டையைப் பிடித்து மன்றாடும் பாவனையாய்க் கூறிக்கொண்டே தன் இடுப்பில் சொருகிவைத்திருந்த கொத்துச் சாவியை எடுத்து "இதோ! இந்த கொத்துச்சாவியை நீ வைத்துக்கொண்டு என் பெட்டியிலிருக்கும் ரூபாய்களையெல்லாம் எடுத்து உன்னிஷ்டம்போல் சிலவு செய்துக்கொள்.

ராஜ:—அக்கா! முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறாய். என்று பல தடவை என்னைச் சொன்னாயே! அதுபோல் இன்று நீ மறைக்கப் பார்க்கிறாயோ? நான் கேட்டதற்குப்பதில் சொல்லாமல் உன் பணத்தையும் பெட்டியையும் பற்றிய பெருமையை என்னிடம் சொல்லி ஏமாற்றப் பார்க்கிறாயே! உன் பணம் எனக்கு கிடைத்து விட்டது போதும் என்றெண்ணி உன்னைக் கிணற்றில் விழுந்து சாகும்படி விட்டுச் சென்றுவிடுவேன் என்று நினைத்தாய்?—என்று கூறும்பொழுது அவன் கண்களில் நீர் சிறு முத்துகள்போல் உருண்டு ஓடிற்று.

விஜயா:—(தன் முந்தாணையால் அவன் கண்களைத்துடைத்துக்கொண்டே, தானும் கண்ணீர் வடித்தவண்ணம்) தம்பி! நீ சிறியவன்; உனக்கு என் நிலைமை தெரியாது.

ராஜு:—அக்கா ! எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. உன் மனதிற்குப் பிடிக்காத இந்தக் கலியாணத்தை இப்பொழுதே நிறுத்திவிடுகிறேன். இதற்காக நீ ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும். நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். இனி எல்லாவற்றையும் நான் சரிப்படுத்திவிடுகிறேன். வா ! போகலாம்.

விஜயா:—தம்பி ! இனி உன்னால் என்ன செய்ய முடியும் ? ஒன்றுமாகாது. ஏதோ இரண்டு நாளைக்கு முன்பானாலும் ஏதாவது செய்திருப்பாய்; அப்போதெல்லாம் நீ ஒன்றும் கவனிக்காமல் விளையாட்டுத்தனமாய் இருந்து விட்டாய்.

ராஜு:—அக்கா ! என்னால் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறாய்? இதோ பார் ! இப்போது மணி 12 தான் அடித்தது. முகூர்த்தமோ $5\frac{1}{2}$ மணிக்குத்தானே! 3 மணிவரையில் பார்! அதற்குள் நான் காரியத்தை முடிக்காவிட்டால் அதன் பிறகு உன்னிஷ்டம்போல் செய். அதுவரையில் நீ பொருத்துக் கொள்; வா போகலாம்.

விஜயா:—தம்பீ ! இன்று நீ இருக்கும் நிலைமையும் உன் பேச்சுத்திறமை முதலியவைகள் முற்றும் மாறியல்லவோ இருக்கிறது. நீ இவ்வளவு புத்திசாதுர்ய முள்ளவன் என்பதை நான் தெரிந்துக் கொள்ளாமல் போனேனே. ஆயினும் இவ்வளவு சீக்கிரத்தில் இத்தனை பெரிய காரியத்தை எப்படி சாதிப்பாய் ?

ராஜு :—சூக்ஷமத்திலிருக்கிறது மோக்ஷம் என்பதுபோல் எப்படி சாதிக்கிறேனென்பதை நீதான் பாரேன் ?

விஜயா:—ஓ ! அப்படியா ? நீ சொல்வதைப் பார்த்தால் இப்போதே அதற்கான பிளான்களை மனதில் போட்டு வைத்திருப்பதாக தெரிகிறதே! ஏதோ! அப்படிப்பட்ட திட்டங்கள் என்னென்ன போட்டு வைத்திருக்கிறாய் ? கொஞ்சம் சொல்லேன் பார்ப்போம்.

ராஜு:—ஆம் ; நீ சொல்வதுபோல், அதற்கான பிளான்களையெல்லாம் போட்டு வைத்துத்தானிருக்கிறேன்—என்று கூறி

தன் சகோதரியின் காதிற்கருகில் சென்று குசு குசு வென்று சிறிது நேரம் எதையோ சொன்னான். இதைக் கேட்ட விஜய லக்ஷ்மி முகமலர்ச்சியுடன் "ஓ! அப்படியா? ஆனால் சரி, வா போகலாம்" என்று சகோதரனை தன்னுடன் அழைத்துக் கொண்டு தன் அறையில் சென்று பெட்டி ஒன்றைத் திறந்து சில கரென்ஸி நோட்டுகளை யெடுத்து அவனிடம் கொடுத்தாள். அதைப் பெற்றுக்கொண்ட ராஜபஹதூர் வெகு சந்தோஷத் துடன் அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

மணி 1 அடித்ததைக் கண்ட விஜயலக்ஷ்மி திடுக்கிட்ட வளாய் "ஹா! எனது முகூர்த்த காலம் சமீபிக்கிறதே; ஏதோ சிறுவன் சொல்லை நம்பி காலஹாரணம் செய்கிறேனே! அவன் கூறியது போல் செய்து என்னை மீட்பானா? அல்லது இப் போது கிடைத்த ரூபாயைக்கொண்டு நாளைக்கு ஜமாய்க்கலாம் என்று நிம்மதியாய் படுத்துத் தூங்குகிறானோ? ஒன்றும் தெரிய வில்லையே! ஈசா! எல்லாம் உனது செயல்" என்று பகவானை ஸ்மரித்த வண்ணம், படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள்.

மேளவாத்தியம் காதைப் பிளக்கிறது. வீடு முழுவதும் ஒரே ஆரவாரம். 60-வயதடைந்த கிழவர் ஒருவர் "எழுந்திருங் கள்! எழுந்திருங்கள்! மணி மூன்று அடித்துவிட்டது. இன்ன மும் தூக்கமா? முகூர்த்தவேளை சமீபிக்கிறது; முகூர்த்தத்திற்கு முன் நடக்கவேண்டிய உபசடங்குகள் எல்லாம் துரிதமாய் நடக் கட்டும்" என்று இறைந்து கூறினார். சுமங்கலிகள் சிலர் மணப்பெண்ணை அழைத்துச் செல்ல வந்தார்கள். "எங்கே? விஜயலக்ஷ்மியைக் காணோமே!" என்றாள் ஓர் அம்மாள் "கொல்லைப்பக்கம் சென்றாளோ?" என்றாள் மற்றொரு அம்மாள்.

"விஜயலக்ஷ்மி! விஜயலக்ஷ்மி!! விஜயம்! விஜயம்!! விஜயா! விஜயா!!" என்ற கூக்குரல்கள் வீடுமுழுவதும் பரவிற்று. பதிலில்லை. கொல்லைப்புறம் சென்றார்கள்.

அங்கு ஒரு மாமரத்தின் அடியில் ஜ்வாலையிட்டு எறிந்து அப்பொழுதே தணிந்து வரும் ஒரு தணற்குவியலைக் கண், டார்கள்.

"இதென்ன! இதேது? என்று எல்லோரும் பிரமித்தார் கள். தூரத்தில் வந்துகொண்டிருந்த சுந்திராம்பாள் அடிவயிற்

யில், பகீர் என்று தீ மூட்டி பலவித சந்தேகத்தை யுண்டாக்கியது. மனதில் பற்பல எண்ணங்கள் சூழப்பட்டவளாய் ஒரே பாய்ச்சலாய் தணற் குவியலை அணுகினாள். மரத்தடியிலிருந்த ஓர் காகிதச் சுருள் அவள் மனதைக் கவர்ந்தது. துரிதமாய் ஓடி அதன் மீதிருந்த கல்லை அகற்றி விட்டு கையில் எடுத்துப் பார்த்தாள். "ஹா! விஜயா!" என்று அலறி மண்மீது சாய்ந்தாள். எல்லோரும் ஓடி அவளுக்குச் சிகிச்சை செய்யத் தொடங்கினார்கள். ஆனால் விஷயம் ஒருவருக்கும் புரியவில்லை. அதில் ஒருவர் அக்கடிதத்தை எடுத்து உரத்தக் குரலில்,

எனதன்புள்ள அன்னையே!

நான் எதிர்பாராத இந்த விவாகம் என்னை, இந்த உலக வாழ்க்கையை வெறுக்கச் செய்து, தீக்குளிக்கத் தூண்டிற்று. 'எல்லாம் அவரவர் விதிப்படி' என்று மனதைத் தேற்றிக்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

நமஸ்காரம்,
இப்படிக்கு,
விஜயலக்ஷ்மி.

என்று வாசித்தார். இதைக் கேட்ட எல்லோர் கண்களும் நீரைக் கக்கிற்று. தூக்கவெறி நீங்கி விஷயம் அப்பொழுதே புரிந்த ராஜபஹதூர் "ஆ! அக்கா! அக்கா!!" என்று அலறிக் கொண்டே தணற் குவியலிடம் ஓடினான். இதற்குள் சிலர் ஓடி ஒரு கட்டையால் அக்குவியலைக் கிளறினார்கள். அதில் கடைந்தெடுத்த தந்தக் குச்சிகள்போன்றும் சில அஸ்திகள் காணப்பட்டது. இதனைக் கண்ட ராஜபஹதூர் "இதென்ன? உனது கைகளா? அக்கா! இதுவா உன் தலை? என்னை ஆசையோடு பார்க்கும் உன் கண்கள் எங்கே? என்னிடம் சிரிச்சி சிரிச்சிப் பேசும் பற்களா இது?"—என்று பற்பலவிதமாய் பிதற்றிக் கொண்டே அத்தலையைப் புரட்டிக்கொண்டிருந்தான். இதைக் கண்ட எல்லோர் மனதும் பாகாய்க் கரைந்து கண்களில் நீராய் ஓடிற்று.

தன்னை மணந்துகொள்ள விருப்பமற்று, தற்கொலை செய்து மாண்டுபோன மங்கையைப்பற்றி வருத்தப்பட மனமில்

லாது உள்ளுக்குள் வெறுப்புற்றிருந்த மாப்பிள்ளை, தன்னிடம் வெகு வாஞ்சைகொண்டிருந்த இளம்மைத்துனன் வருத்தத்தைக்கண்டு சகியாதவராய், கண்களில் நீரைத் தாரை தாரையாய் வடித்தார்.

நமது வாசகர்கள் மட்டும்:—அப்போதென்னமோ பிரமாதமாய் நான் அப்படிச் செய்வேன் இப்படிச் செய்வேன் என்று ஏமாற்றிச் சற்றும் கவனியாமல் அவளைச் சாகவிட்டுத் தூங்கி விழுந்தத் திருட்டுப்பயல், இப்போதென்னமோ ரொம்ப உருகிப்போகிறானே—என்று நினைப்பார்கள்.

என்னவென்றாலும் 12 வயதும் நிறம்பாத சின்னஞ் சிறு பயல்தானே! பாவம்! அந்த நெருக்கடியான சமயம் 2 மணி நேரத்தில், இத்தனை பெரிய காரியத்தை எப்படி சாதிக்க முடியும்? என்பதைக் கவனித்து இப்பொழுது அவன் தன் அருமை சகோதரியை இழந்து தவிக்கும் பரிதாப நிலைமையைக் கண்டேனும், அவன் பால் மனமிரங்கி அவனைத் திட்டாமலும் வெறுக்காமலுமிருக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

---

## 5-வது அத்தியாயம்

### கண்கட்டுக்காக்ஷியா?—இந்திரஜால வித்தையா?

லக்ஷ்மிபுரத்தில் 12-வது டிவிஷன் போலீஸ் ஸ்டேஷனில், மூன்றாம் அத்தியாயத்தில் நிகழ்ந்த சம்பவத்தையும், அந்த அஞ்சா நெஞ்சம் படைத்த கள்வன் லக்ஷ்மிநாஸை எந்த விதத்தில் பிடிப்பது? என்பதாக எண்ணி இன்ஸ்பெக்டர்கள் கூடி ஆலோசித்துக்கொண்டிருக்கும் சமயம் ஓர் செட்டியார் கையில் கடிதத்துடன் வேகமாய் வருகிறார்.

இன்ஸ்பெக்டர்:—ஏது; செட்டியார்வாள் இவ்வளவு அவசரத்துடன் இங்கு வந்தது?

சேட்டியார் :—என்னங்கோ ஸார்! இப்படிப்பட்ட அநியாயங்கள் ஜாஸ்தியாய்விட்டதே! சற்று முன்பு எனக்கு வந்த கடிதமிது, இதைப்படித்து பாருங்கள்,—என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தை அவரிடம் கொடுத்தார். அதை வெகு அவசரத்துடன் கையில் வாங்கி வாசித்தார் இன்ஸ்பெக்டர். அது கீழ் வருமாறு :—

கடிதம்

கனம், கோடீஸ்வர செட்டியார் அவர்கள் திவ்ய சமுகத்திற்கு:—உங்கள் பெயருக்கேற்ப நீங்கள் பலகோடி ஆஸ்திக்காரர் என்பதாய் கேள்விப்பட்டேன். அன்றியும் சிலவழிக்க வழியின்றிக் குவிந்து கிடக்கும் உங்கள் ஆஸ்தியில் ரூபாய் 50 ஆயிரம் எனக்குத் தேவையாகயிருக்கிறது. ஆகையால் தாங்கள் தயவு செய்து நான் விரும்பும் மேற்படித் தொகையைக் கீழ்க்காணும் விவரப்படி எனக்கு அர்ப்பிக்கவேண்டும்.

உங்கள் இரும்புப் பெட்டியின் 5-ம் நெம்பர் அறையில் 1000 ரூபாய் கரென்ஸி நோட்டுகளாக ஒரு லக்ஷ ரூபாய் வைத்திருக்கிறீர்களே! அதில் பாதியைத்தான் நான் கேட்டது. மேற்படி என் பங்குத்தொகையாகிய ரூபாய் 50 ஆயிரம், அதாவது மேற்படி நோட்டுகளில் 50ஐ எடுத்து ஒரு பெரிய கவர்க்குள் வைத்து, உங்கள் பங்களாவின் பின் புறத்தோட்டத்திலுள்ள பவழ மல்லி மரத்தடியில் இருக்கும் சலவைக்கல் சோபாவின் அடியில் வைத்துவிடவேண்டியது. நான் சரியாய் இரவு 1-மணிக்கு வந்து எடுத்துக்கொள்வேன்.

எச்சரிக்கை :—நான் வந்தபிறகு, மேற்கண்ட என் உத்திரவுப்படிச் செய்யாமல் என்னை அவமதித்து என் கோபத்திற்குப் பாத்திரமானீர்களோ! மேற்படி உங்கள் 100 நோட்டுகளும், நீங்கள் எவ்விடத்தில் எவ்வளவு பத்திரமாய் வைத்தாலும் அந்தக்ஷணம் அவைகள் மறைந்து விடும். அத்துடன் உங்கள் கதியும் அதோகதிதான் என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.

இங்ஙனம்,

மேற்படித்தொகையைக்கொண்டு உங்களுக்கு

பெரும் புண்ணியத்தைச் சம்பாதித்துக்

கொடுக்கப்போகும் அன்பன்,

லக்ஷ்மி நரசு.

இதைப் படித்து முடித்த இன்ஸ்பெக்டர், மீசைகள் துடிக்க "ஹா! என்ன தைரியம்! என்ன திமிர்!" என்று கர்ஜித்து "செட்டியார்வாள்! இக்கடிதம் தங்களுக்கு எப்போது வந்தது?" என்று கேட்டுக்கொண்டே அக்கடிதத்தின் உரைமீதிருக்கும் முத்திரைகளை கவனிக்கத் தொடங்கினர்.

செட்டி:—சரியாய் 9 மணிக்கு வந்தது. பார்த்து நாங்கள் எல்லோரும் அப்படியே பிரமித்துப் போய்விட்டோம். அதன் பிறகு இவ்விடம் வந்தேன்.

இன்ஸ்:—சரி, (தன் கை கடிகாரத்தைப் பார்த்து) இப்போது மணி 10 அடித்து 5 நிமிஷம் (புஸ்தகத்தில் குறித்துக்கொண்டார்) செட்டியார்வாள்! இதற்குத் தாங்கள் என்ன செய்யப்போகிறீர்?

செட்டி:—தாங்கள் எப்படிச் சொன்னால், அப்படியே செய்கிறேன்.

இன்ஸ்:—சரி, அவன் உத்திரவுப்படியே செய்து அவன் கோபத்திற்குப் பாத்திரமாகாதிருப்பது உங்கள் கடமை. பிறகு செய்யவேண்டியதைச் செய்து, உங்களால் அங்கு வைக்கப்படும் பணத்தை எப்படி அவன் வந்து அடைவான்? என்பதைக் கவனித்து அதே சமயம் அவனை பிடித்துத் தண்டனைக்காளாக்கி உங்கள் பணத்தை உங்களிடம் சேர்ப்பிப்பது என் வேலை. இவ்வளவுதானே. சரி, நீங்கள் போய் உங்கள் வேலையைப் பாருங்கள். நான் என் வேலையைப் பார்க்கிறேன்.

செட்டி:—சரி, நான் போய் வருகிறேன், நமஸ்காரம்.

இன்ஸ்:—நமஸ்காரம், போய்வாருங்கள், என்று அவரை அனுப்பிவிட்டு, அங்கிருந்த மற்ற சப் இன்ஸ்பெக்டர்களை அழைத்து "பார்த்தீர்களா இதை!" என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தை அவர்களிடம் கொடுத்தார். அந்த மூன்று பேரும் ஏககாலத்தில் வெகு அவசரத்துடன் அதைப்படித்துப் பார்த்து "அடே முட்டாள்!" என்று அலட்சியமாய் சிரித்தார் ஒருவர். "இப்படி எழுதிவிட்டு வந்து அவன் நினைத்ததுபோல் திருடிக்கொண்டுபோக முடியுமா?" என்றார் மற்றொருவர்.

"இதுவரையில் ரொம்ப சாமர்த்தியமாய்த் திருடிக்கொண்டு வந்தான், இன்றென்னமோ ரொம்ப (Fool) பூலாக ஆக்கிச் செய்திருக்கிறுனே. இல்லை சார்! இதை நான் நம்பவே மாட்டேன். அவன் நம்மை ஏமாற்றும் பொருட்டுத்தான், ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறுன்" என்றுர் சப் இன்ஸ்பெக்டர் ரெங்கசாமி.

இன்ஸ்:—ஓ! நீ அப்படியா எண்ணிவிட்டாய்? நாம் அப்படி நினைத்து அஜாக்கிரதையாயிருந்து விட்டோமானுல், பெரும் அவமானமடைந்துபோக நேரிடும். இத்தடவை விடாமுயற்சியாய் வேலைசெய்து, அதிக ஜாக்கிரதையாயிருந்து புலியை போனில் பிடிப்பதுபோல் பிடித்து, பேர்போன கள்ளனைப் பிடித்த கீர்த்தியை நாம் அடையவேண்டும். போனுக்குள் இரை நமது செட்டியார் பணம் தெரியுமா? சீக்கிரம் இதற்கான ஏற்பாடுகளை முன்யோசனையுடன் ஜாக்கிரதையாய்ச் செய்யுங்கள். இதோ நானும் சென்று சிலகாரியங்களைக் கவனித்துவிட்டு வருகிறேன். என்று கூறியவாறு எழுந்து மோட்டார் சைக்கலில் துரிதமாய்ச் சென்றுர்.

* * * *

இரவு 10 மணி. செட்டியார் வீடுமுழுதும் ஒரே குழப்பம் பின்புற தோட்டத்தின் ஒவ்வொரு மரத்திற்கும் 10 ஆட்கள் வீதம் போலீஸார் கையில் கத்தி, ஈட்டி, துப்பாக்கி முதலியவைகளுடன் வெகு ஜாக்கிரதையாய் காவல் புரிகின்றனர்.

இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் நிசப்தத்துடன் எல்லோரும் உஷாராய் இருக்கும்படி எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறுர்கள். செட்டியாரும் அவரைச்சேர்ந்தவர்கள் சிலரும், திருடன் உத்திரவுப்படி பணத்தை வைக்க வேண்டிய விடத்தில் வைத்துவிட்டு, போலீஸார் திருடனைப் பிடித்து நமது பணத்தையும் திருப்பிக்கொடுப்பார்களோ! என்னமோவென்ற ஏக்கத்துடன் மேல்மாடியிலுள்ள ஒரு வாராண்டாவில் மறைவாய் நின்று, அவர்கள் பணம் வைத்திருக்கும் இடத்தை கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருக்கிறுர்கள்.

எங்கும் ஒரே இருள் சூழ்ந்திருந்தமையினுல் மரத்தின் மீதிருப்பவர்களில் சிலர் கை கடிகாரத்தை எடுத்துப்பார்ப்பதும்

மணி தெரியாமல் அதிருப்தி யடைந்து சரி, இப்போது மணி $10\frac{1}{2}$ $10\frac{3}{4}$ இருக்கும் என்று யூகித்தவர்களாய்த் துரிதப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் வீட்டிற்குள் சுவற்று கடிகாரத்தில் டாங் டாங்கென்று மணி 11 அடித்தது. அதன் பிறகு மணி 12ம் அடித்தது. திருடன் வரும் நேரம் சமீபித்து விட்டதால் எல்லோரும் ஒரே திகிலும் கள்வனை இதோ! பிடித்துவிட போகிறோம். என்ற ஒரே குதூகலமுமாகப் பரவசப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இன்ஸ்பெக்டர் இருவரும் நிமிஷத்திற்கு நிமிஷம் ரேடியம் கை கடிகாரத்தில் இருட்டில் தெரியும் (Radium Wrist Watch) நேரத்தை கவனித்தவர்களாய் $12\frac{1}{4}$, $12\frac{1}{2}$, $12\frac{3}{4}$, ஆய்விட்டது. இதோ! ஒன்று அடிக்க இன்னம் 10 நிமிஷம்தான். ஆச்சுது இன்னும் 5 நிமிஷம்தான். என்று அடிக்கடி, கடிகாரத்தையும் பணமிருக்கும் விடத்தையு மாறி மாறிப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். கடைசியாக மணி 1 அடிக்க இன்னும் 3 நிமிஷம். 2 நிமிஷம். 1 நிமிஷம்தான். எல்லோர் இருதயமும் பட படவென்று அடித்தது. அதே சமயம் நிசப்தத்தைப் பிளந்துக்கொண்டு வீட்டிற்குள் சுவறு கடிகாரம் "டர்ங்" என்று 1 மணி அடித்த சப்தம் எல்லோர் காதுகளையும் தாக்கிற்று. எல்லோரும் ஒரே கலக்க முற்றவர்களாய் பணமிருக்குமிடத்தை. ஆம், அதுதான் கள்வன் வருகையை வைத்தக்கண் வாங்காமல் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள்.

பார்த்து பார்த்துக் கண்களும் பூர்த்துவிட்டது. எல்லோர் மனதிலும் ஏககாலத்தில் "என்ன! ஒரு சந்தடியுங் காணேமே!" என்று தோன்றியது. சிறிது நேரத்தில் மணி 2ம் அடித்தது. ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொருவித எண்ணங்கள் தோன்றி மறைந்தது. மூச்சு பேச்சின்றி விழித்துக்கொண்டே யிருந்தார்கள். மணி 3ம் அடித்துவிட்டது. சிப்பந்திகளெல்லாம் அலுத்துவிட்டார்கள். இனித்திருடன் வரமாட்டான், என்று தெரிந்துகொண்டார்கள். என்றாலும், இன்ஸ்பெக்டர் உத்தரவில்லாமல் அவர்கள் என்ன செய்ய முடியும்? மரத்தை விட்டு இறங்க முடியுமா? இல்லை வாய்விட்டுக் கூப்பிட முடியுமா? பேசத்தான் முடியுமா? ஒன்றும் செய்யமுடியாது. இன்ஸ்பெக்டர் பிகில் போட்டால்தானே அனைவரும் இறங்கவேண்டும்.

அல்லது கள்வன் வந்ததைப் பார்த்தால் இறங்கலாம். அவரும் பிகில் போடவில்லை, கள்வனும் வரவில்லை பாவம்! என்ன செய்வார்கள், மணியும் 4 அடித்துவிட்டது.

சப் இன்ஸ்பெக்டர் மனதில் சந்தோஷம் பொங்குகிறது. "நாம் சொன்னேமே அப்போதே 'கள்வன் ஏமாற்றமென்று' நம்பவில்லையே! இப்போது தெரியும்" என்கிறார் மனதிற்குள்.

இன்ஸ்பெக்டருக்கு, கள்வனைப் பிடித்து விடப்போகிறோம் என்ற சந்தோஷம் இருந்தவிடந்தெரியாமல் மறைந்ததல்லாமல், "சப் இன்ஸ்பெக்டர் வார்த்தை நிஜமாகிவிட்டதே! இனி அவன் முகத்தில் எப்படி விழிப்பது?" என்றெண்ணி ஏங்குகிறார். மணியும் 5 அடித்துவிட்டது. கிளைகளில் தொத்திக்கொண்டு இரவெல்லாங் கண் விழித்து அலுத்துப்போன சிப்பந்திகள் மெய் மறந்துக் கண் அயர்ந்தார்கள்.

"கொக்கரக்கோ! கொக்கரக்கோ!!" என்று செட்டியார் வீட்டுச் சாவல்கள் சேகரிக்க ஆரம்பித்ததும், தூங்கிவிழுந்த சேவகர்கள் அலறிப் புடைத்து" "அதோ திருடன்! அதோ திருடன்!!" பிடியுங்கள்! பிடியுங்கள்!! என்று கத்திக்கொண்டே, பொத்து பொத்தென்று ஒருவர்பின் ஒருவராய் அனைவரும் மரத்தைவிட்டுக் கீழே குதித்தார்கள்.

எங்கேயடா வந்தான்? யாரையடா பிடிப்பது? முட்டாள்களா! பரிகாசமா செய்கிறீர்கள். சந்தடி செய்யாதீர்கள்! சந்தடி செய்யாதீர்கள்!! நீங்கள் வந்திருப்பது அவர்களுக்குச் சிறிதும் தெரியக்கூடாது என்று எவ்வளவோ உஷார்ப்படுத்தியும், ஒரே அட்டகாஸம், ஒரே அமர்க்களம். திருடன் எப்படி வருவான்?" என்று கர்ஜித்துச் சீறி விழுந்தார் இன்ஸ்பெக்டர்.

இதற்குள் செட்டியார் ஓடி வந்து "பணம் பத்திரமாயிருக்கிறதா ஸார்" என்று கவலையோடு கேட்டார்.

"உங்கள் பணம் எங்கே போகும் செட்டியாரே? போனால் போனில் அகப்பட்டுக்கொள்வோம். என்றுதான் திருட்டுப் பயல் உஷாராய் விட்டானே! வரவேயில்லையே! இந்தாருங்கள், உங்கள் பணத்தை நானே ஒப்பித்துவிட்டுச் செல்கிறேன்"

என்று, செட்டியாரின் கரத்தைப்பற்றியவாறே பணமிருக்கும் இடத்திற்குச் சென்று, அதை எடுப்பதற்காக கையை நீட்டிய வாறு குனிந்துப் பார்த்தார். தான் வைத்தப் பெரிய கவர் இல்லாது அங்கு ஒரு சிறிய கவர் இருப்பதைக் கண்டு "ஹா! என்ன ஆச்சரியம்!" என்று அலறிப் பிதற்றினர். விழிகள் பிதுங்கிற்று, வாய் குழறிற்று.

"ஐயோ! மோசம் போனேனே! பணத்தைக் காணுமே!" என்று அலறிப் பிரலாபித்தார் செட்டியார்.

"அப்போதே சொன்னேனே, பணத்தை வைக்காதே! என்று. என் பேச்சைக் கேட்டாயா? அடித்துக்கொண்டுப் போய் விட்டானே!" என்று செட்டியார் மகன் வாய்விட்டுப் புலம்பினர்.

"நாமெல்லோரும் பார்த்துக்கொண்டேயிருந்தோம், அதெப்படி வந்தான்? எப்படிக் கொண்டுபோனுன்? இதென்ன! கண்கட்டு காட்சியா? இந்திரஜால வித்தையா? பெரிய அதிசயமாய் அல்லவாயிருக்கிறது! அப்படி நாம் வைத்திராவிட்டால் அவன் பயமுறுத்தியதுபோல், எல்லாமும் இப்படித்தான் மாயமாக மறைந்திருக்குமோ என்னமோ! அத்துடன் 'உங்கள் கதியும் அதோகதிதான்' என்றுனே, அதன்படி உங்கள் உயிருக்கும் உலைவைத்து விட்டிருப்பானே என்னவோ! இதையெல்லாம் நினைத்தால், போனவரையில் துலைந்துபோகிறது, என்று திருப்தியடைவதுதான் சரி" என்று செட்டியார் மைத்துனர் சமாதானங்கூறினர். இதைக் கேட்டதும் செட்டியாருக்கும் அவர் பிள்ளைக்கும் "ஆம், உண்மைதான்" என்று தோன்றி மனந்தேறிவிட்டது. அச்சமயம் சப் இன்ஸ்பெக்டர், அங்கிருந்த சிறிய கவரை கையில் எடுத்து அதற்குள்ளிருந்த கடிதத்தை வாசித்தார். அக்கடிதம் பின் வருமாறு.

கடிதம்

மகா-ா-ா-ஸ்ரீ செட்டியார்! அவர்கள் திவ்ய சமுகத்திற்கு. என் வார்த்தையை அவமதிக்காமல், என் கோறிக்கையைப் பூர்த்திச் செய்ததற்காக நான் பெரிதும் நன்றி செலுத்துகிறேன். அத்துடன், நான் மேற்படி உமது தொகையைக்

கொண்டுச் செய்யப்போகும் தர்ம கைங்கர்யங்கள் மூலம் உமக்குப் பெரும் புண்ணியமும், மோக்ஷ சம்பிரதாயமும் உண்டாகும்படி எல்லாம்வல்ல ஈசுவரனைப் பிரார்த்திக்கிறேன். என் மனமார்ந்த வந்தனம் தங்களுக்கு உரித்தாகுக.

இங்ஙனம்
சதா உங்கள் நன்மையைக்கோரும்
லக்ஷ்மிநரசு

## 2-வது கடிதம்

சனம் இன்ஸ்பெக்டர்வாள்!

உங்கள் பிரமாத வேட்டைக்கும், போனுக்கும் கேவலம் உயிரற்ற இக்கடிதம் இலக்காகியதை எண்ணிச் செத்தப்பாம்பை அடித்தமாதிரியான உங்கள் பராக்கிரமத்தை நான் பெரிதும் புகழ்கிறேன். அன்றியும், இன்னும் இவ்விதமான பலகீர்த்திகளை நீங்கள் அடையவேண்டுமென்பதாக, சதா சர்வதாக் கடவுளை வேண்டும்,

உங்கள் அன்பன்,
லக்ஷ்மிநரசு

என்றதை, சப் இன்ஸ்பெக்டர் வாய்விட்டு வாசித்ததைக்கேட்ட இன்ஸ்பெக்டர் தேகமெல்லாம் பதறிப்போனதுமன்றி, பற்கள் நறநறவென உராய்ந்தன.

"என்ன உன் திமிர்! இதோடு நீ தப்பி விட்டாய் என்றா? எண்ணினாய். அற்பப்பதரே! இதோ, உன்னை விடுகிறேனா பார்!" என்று கர்ஜித்தார். அவரை அறியாமலே அவர் கைகள் மீசையை முறுக்கின.

"செட்டியார்! நீங்கள் பயப்படவேண்டாம். இப்போதும் உங்கள் பணம் எங்கும் போய்விடவில்லை. சற்றுப் பொருத்துக் கொள்ளுங்கள். உங்கள் சொத்தை உம்மிடம் சேர்ப்பிப்பது என் கடமை. இந்த கஜேந்திரன் உள்ளவரையில் உங்கள் பொருளும் போகாது, அந்தப் போக்கிரிக் கள்ளனும் தப்பமுடியாது.

"ரெங்கசாமி! (சப் இன்ஸ்பெக்டர்) ஜாக்கிரதை! பாதச் சுவடுகளைக்கொண்டு கள்ளன் வந்த வழியைக் கண்டுபிடிக்கவேண்டி



மேலெழும்பிய கார், கேட்டிற்குமேல் 4 அடி உயரத்தில் பாய்ந்து சென்றது. (82-ம் பக்கம் பார்க்க)

அதாவது ஒரு அறைக்குள் வந்துசேர்ந்தார்கள். அஃது ஒரு படுக்கை அறையைப்போன்ற அலங்காரங்களுடன் காணப் பட்டது.

கடைசியாக, செட்டியார் வீட்டின் எதிர் வீடாக அமைந்த ஓர் வீடு அஃது என்று தெரியவந்தது. குடித்தனத்திற்கு வேண்டிய சாமான்களெல்லாம் செட்டாகயிருந்ததுடன், நவீன நாகரீக முறையில் சுத்தமாகவும் கம்பீரமாகவும் பொலிவுபெற்று விளங்கிய அவ்வில்லம், ஓர் பெரிய உத்தியோகஸ்தரின் வாசஸ் தலம்போல் காணப்பட்டது. ஆனால், அதில் ஒரு மனித பிரஜையுமின்றி நிர்மானுஷ்யமாகவிருந்தது.

அவ்வீட்டுச் சொந்தக்காரரை விசாரித்ததில், மதுரையி லிருந்து ஓர் வியாபாரி வந்து 6 மாதகாலமாய் அங்கு வாசம் செய்ததாகவும், நேற்றிரவும் அங்கிருந்தார்கள் என்றும் தெரிய வந்தது.

"உங்களுக்கு வாடகை ஏதேனும் பாக்கி உண்டா" என்று ஒரு குறுக்கு விசாரணை போட்டார் இன்ஸ்பெக்டர். "ஐயோ! பாவம்! அவர் எனக்கு ஒன்றும் பாக்கியில்லை. நான்தான் அவ ரிடம் அவ்வப்போது 10, 20, 50 ரூபாய்கள் கடனுக்குக் கேட்டு வாங்கினேன். கேட்டது கேட்டமாதிரி தாராளமாய்க் கடன் கொடுக்கும் புண்ய மூர்த்தி போய்விட்டாரே!" என்று வாய்விட் டுக் கூறி விசனப்பட்டார் வீட்டுச் சொந்தக்காரர்.

"மதுரையிலிருந்து வந்தார் என்றீரே, மதுரையில் அவரது விலாசம் கொஞ்சம் சொல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டே புஸ்தகத்தில் அவர் சொல்லியவைகளையெல்லாம் எழுதிக்கொண் டிருந்தார். அதே சமயம், பக்கத்து வீட்டுத் தெருத்திண்ணையில் படுத்திருந்த இரண்டு பேர்வழிகள் ஓடி வந்து "இன்ஸ்பெக்டர் சார்! இரவு சுமார் 2-மணியிருக்கும் இவ்வீட்டிலிருந்து, இரண்டு மோட்டார் வண்டிகளில் நிறைய ஆண்பிள்ளைகள் மட்டும் சென் றார்கள்" என்று சொன்னதுதான் தாமதம் உடனே தெரிந்துக் கொண்டார்; அவன் தெரிவித்திருந்ததுபோல், சரியாய் ஒரு மணிக்கு வந்து பணத்தை அடித்துக்கொண்டு அப்போதே

புறப்பட்டு அவன் இருப்பிடம்போய்சேர்ந்து விட்டான் என்று. என்ன செய்வார் பாவம்! அவருக்கு வந்த கோபத்தில் வாயில் விரலைவைத்து கடித்துக்கொண்டார்.

---

## 6-வது அத்தியாயம்.

### மருமகன் வரவு—மகத்தான களவு

பிற்பகல் 3-மணிக்கு இடைவேளை டிபன் காரியங்களை முடித்துக்கொண்டு தாம்பூலம் தரித்தவண்ணம் ஊஞ்சலில் வீற்றிருந்த சந்திரசேகர பிரபு, தன் மனைவியைப் பார்த்து "மரகதம்! நீ, என்னமோ அந்தக் குறத்தியின் மந்திரபலத்தைப்பற்றி, பிரமாதமாய்ப் புகழ்ந்து விட்டாய்! இன்றோடு அவள் சொன்ன தவணை தீர்ந்துவிட்டதல்லவா? எங்கே மாப்பிள்ளை இன்னும் வரவில்லையே? வீணாய் இவைகளுக்கெல்லாம் சிலவு செய்கிறாயே? இதெல்லாம் சுத்த 'ஹம்பக்' என்பதை இப்போதாவது தெரிந்துகொள்.

மரகதம் :—இன்று பூராவும் பார்த்துவிட்டு, அதின் பிறகல்லவா சொல்லவேண்டும். சில மணி நேரங்கள் இருக்கின்றதே.

சந்திரசேகரர் :—ஆம் ; இது வரையில் நடவாத காரியம் இன்னும் சில மணி நேரத்தில் நடந்து விடுமோ? என்ன உன் பேதமை புத்தி, என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, வீதியில் ஒரு மோட்டார் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது. சிறிது நேரத்தில் சுமார் 23–24 வயதென மதிக்கக்கூடிய ஓர் வாலிபன், நவீன அலங்கிருத 'யுவனாய்' அவர்கள் முன்தோன்றி "மாமா! நமஸ்காரம்" என்றான்.

14 வயதில், தம் பெண்ணுக்கு மாங்கல்யதாரணம் செய்துவிட்டு கல்கத்தாவிற்குத் தாய் தந்தையருடன் சென்ற

பிறகு, இன்று புதிதாய்ப் பார்க்க நேர்ந்தமையினால், அடையாளங் கண்டுக்கொள்ள முடியாமல் தம்பதிகள் இருவரும் சற்றுத் திகைத்தார்கள். இளம் பிராயத்தில் பார்த்த ஜாடை கொஞ்சங் கொஞ்சமாய் ஞாபகம் வரத் தொடங்கி "ஓ! வாருங்கள், மாப்பிள்ளை ஸார்! ஊரில் தாய் தந்தையர் சுகமா? இப்படி உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு மரகதத்தின் நம்பிக்கை வீண்போக வில்லையே!" என்று மனதிற்குள் எண்ணி மகிழ்ந்தார் மாமனார்.

அங்கிருந்த ஓர் சோபாவில் அமர்ந்து சிரமபரிஹாரஞ் செய்து கொண்டார் மாப்பிள்ளை. வராத மாப்பிள்ளை வந்துவிட்டதைப்பற்றி வீடு முழுவதும் ஒரே குதூகலம்.

மரகதத்தின் சினேகிதைகள், ஒவ்வொருவராய் விஜயஞ் செய்து, மரகதத்தின் கவலை தீர்ந்துவிட்டதைக் குறித்துச் சந்தோஷம் கூறிச் சென்றனர்.

அதில் ஒருத்தி:—"என்ன மரகதம்! மாப்பிள்ளை வந்துவிட்டாராமே! முன் என்னமோ சொன்னாயே! அந்தப் பெரிய பங்களாவை அவள் பேருக்கு எழுதினால்தான் பெண்ணை அழைத்துப் போவார்களாம் என்று; அப்படி ஏதாவது ஏற்பாடு செய்தீர்களா?

மற்றொருத்தி:—அதெப்படி? பரம்பரை, பரம்பரையாய் மூன்று தலைமுறையாய் ஆண்டு வந்த வீட்டை பிள்ளைகளுக்கெல்லாமில்லாமல், பெண்ணுக்கா கொடுத்துவிடுவார்கள்? பாவம்! இவர்களுக்காகத்தான் ரொம்ப அவசர அவசரமாய் ரூ. 50,000 சிலவு செய்து புதுப்பித்தார் போலும். அவர்கள் கெட்டார்கள்; நீ வேலையைப்பார்!

இன்னொருத்தி:—முன்பே ஒரு வீடு அவள் பெயருக்கு எழுதி வைத்ததாகக் கேள்விப்பட்டேனே!

மரகதம்:—ஆம், அது சிறிய வீடாம். அது வேண்டியதில்லை. கொடுத்தால் இதைக் கொடுங்கள்; இல்லையானால் உங்கள் வீடும் வேண்டாம், பெண்ணும் வேண்டாம், என்றல்லவா துவஜம் கட்டுகிறார்கள்.

பின்னொருத்தி:—ஓ! அப்படியா? சரிதான், பார்த்தார்கள், செல்லபெண் ஒரே பெண், கேட்டமாதிரியெல்லாஞ் செய்கிறார் கள்; இதையும் அப்படியே செய்து விடுவார்கள்! என்று நினைத் தார்கள் போலும்.

—அச்சமயம், மாகதத்தின் கடைசி மகன் 5-வயது சீனு, ஓட்டமாய் ஓடி வந்து "என்ன! அத்தான் வந்திருக்கார். நீங்க இப்படி 'சளவள'ண்ணு பேசுரீங்களே!"

ஒரு சினேகிதை:—ஓ! அத்தான் வந்தாரா? உனக்கு என்ன கொண்டாந்தார்?

மற்றொரு சினேகிதை:—ஏண்டா சீனு! அத்தான் வந் தாரே! அவர் என்ன சொன்னார்?

சீனு:—ஆத்துலேயிருக்கிற பாவற்காயை அறுக்கச் சொன் னார், அதைப்பொரிக்கச் சொன்னார்.—

என்று சொல்லிக்கொண்டே ஒரே ஓட்டமாய் ஓடி, அத் தான் முன் நின்று "அத்தான்! நீங்க வந்தாலும் வந்திங்க எல்லாரும் என்னை உங்க அத்தான் வந்தாரே, உனக்கென்ன வாங்கி வந்தாருன்னு கேழ்கிறாங்க. எனக்கு நீங்க என்ன வாங்கி வந்திங்க?

அத்தான்! அத்தான் அதோப் பாருங்கோ! எங்க அக்கா சுலோசனா நீங்க வந்தபோதிலிருந்து 'அப்படி போரது' இப்படி போரது' 'அப்படிப் பார்க்கிறது' 'இப்புடிப் பார்க்கிறது' இதுவே வேலைதான்.

அக்கா! நீ, இங்கே வந்து நேராய்தான் பாரேன்! (எல்லோ ரும் சிரிக்கின்றனர்.)

மாப்பிள்ளை:—குட்டி மச்சான்! நீ ரொம்ப கெட்டிக்காரன். உன்னைப்பற்றி எனக்கு ஞாபகமே இல்லாமற்போயிற்று. இப் போது நான் வெளியில் போகிறேன், உனக்கு என்னவேணும் சொல்லு? வாங்கி வருகிறேன்.

அங்கிருந்த ஒரு கிழவர்:—பரவாயில்லை, மாப்பிள்ளை! அதெல்லாம் ஒன்றும் வேண்டாம், சீக்கிரமாய் ஒரு பெண்ணைப்பெற்று அவனுக்குக் கொடுத்துடுங்கோ! ஏண்டா சீனு! உனக்கு அது தானே வேணும்?

சீனு:—ஆமாமா.—என்று சொல்லிக்கொண்டே ஓரே ஓட்டம் பிடித்தான். அனைவரும் கொல்லென்று சிரித்தார்கள்.

* * * *

இரவு 8 மணி. மாப்பிள்ளைக்கு அறுசுவையுடன் கூடிய விருந்தளிக்கப்பட்டது. அவர் திருப்தியாய் உண்டு தாம்பூலம் தரித்து, எல்லோருடனும் வெகுநேரம் சிரிப்புக்கேளிக்கையுடன் சந்தோஷங் கொண்டாடினார்.

இதற்குள் மாமனார் தனது பள்ளியறையில், மாப்பிள்ளைக்கு படுக்கை தயார் செய்துவிட்டு "வெகு நேரமாகிவிட்டது, நீங்கள் சென்று படுத்துக்கொள்ளுங்கள்"; என்று கூறி அவரை அழைத்துக்கொண்டு சென்றார். மாப்பிள்ளை உள்ளே சென்று கட்டிலின்மீது உட்கார்ந்துகொண்டு, தான் இதுவரையில் பார்த்தும் கேட்டுமிராத விதமான விநோதக் கட்டில், வெல்வெட் மெத்தை, திண்டு முதலியவற்றின் சிறப்பைக்கண்டு, மனத்திற்குள் வியந்தார். மற்றும் அவ்வறையில் என்னென்ன உண்டோ அவற்றையெல்லாம் ஒரு முறை கவனித்தார். கடைசியாக தன் உடைகளை குனிந்து கவனித்தார். உடனே "எனக்கு இந்த உடையோடு படுத்தால் தூக்கம் பிடிக்காது ஸ்லீபிங் சூட் (Sleeping Suit) எடுக்கவேண்டும்; தயவு செய்து என் சூட் கேஸை (Suitcase) இங்கு அனுப்பிவையுங்கள்" என்றார்.

அதைக் கேட்ட மாமனார் உடனே சென்று வேலையாள் ஒருவனைக் கூப்பிட்டு உத்திரவிட்டார். சிறிது நேரத்தில் சூட் கேஸ் தன் எஜமானனைத் தேடிக்கொண்டு வந்துவிட்டது.

ஸ்லீபிங் சூட்டை யணிந்துக்கொண்ட மாப்பிள்ளை கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்து உறங்கினார்.

நடு நிசி. வீடு முழுவதும் ஓரே நிசப்தம். மாப்பிள்ளைக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. எழுந்து உட்கார்ந்தார். அறை

முழுதும் உலாவினர். "ஊம், இனி நமது வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான்" என்ற முடிவுக்கு வந்தார். உடனே தன் ஜேபியிலிருந்த பேனுக் கத்தியைப் போன்ற ஓர் கூர்மையான ஆயுதத்தைக் கையில் எடுத்தார். (அதைக்கொண்டு எப்படிப் பட்ட இரும்புப் பெட்டிகளையும் பீரோக்களையும் திறக்கக்கூடிய ஆயுதம்) அங்கிருந்த இரும்புப்பெட்டியைத் திறந்தார். அதில் கட்டுக் கட்டாக அடுக்கிக் கட்டிவைக்கப்பட்டிருந்த 1000 ரூபாய் கரென்ஸி நோட்டுகளாக மூன்று கட்டுகள் யிருந்தன. அதில் ஒவ்வொன்றிலும் 50, 50 நோட்டுகள் கட்டப்பட்டிருந் தன. அவைகள் மூன்றையும் எடுத்துத் தன் சூட்கேஸில் வைத்துக் கொண்டார். மற்றும் பலரின் கொதுவை நகை களாக அனேக வைர நகைகள், அவரவர் பெயர் விலாச முத லியவைகளோடு தனித்தனிப் பைகளில் கட்டிவைத்திருந்தது. அவைகளையும் எடுத்துப் பத்திரப்படுத்திக்கொண்டார். வேறு ஒரு பீரோவைத் திறந்தார். அதிலிருந்த சில தங்க நகைகளை யும் சவரன் முதலியவைகளையும் எடுத்துவைத்துக்கொண்டார். போதும், பாவம்! இனி ஒன்றும் வேண்டாம் என்று மனதில் கருணை பிறக்கவே, அவை அவைகளை அப்படி அப்படியே பூட் டிவைத்துவிட்டு, சமீபத்திலிருந்த ஒரு மேஜையின்மீது உட் கார்ந்து எதையோ கடிதத்தில் எழுதினர். அதன் பிறகு படுக் கையில் சென்று நிம்மதியாகத் தூங்கினர்.

காலை மணி 6 அடித்த ஓசையைக் கேட்டு கண் விழித்த மாப்பிள்ளை, வாரிச் சுருட்டி எழுந்து உட்கார்ந்து, தான் அன் றிரவு அடைந்த வெற்றிக்கு ஆதாரமாகிய முழுமுதற்கடவுளைத் துதித்து வணங்கினர். அதன்பிறகு கதவைத் திறந்துகொண்டு வெளியில் வர, அங்கு தயாராய்க் காத்திருந்த வேலையாள் ஒரு வன் "ஸார்! ஸ்நானத்திற்குத் தயார்செய்திருக்கிறேன், வாருங் கள்" என்றான். உடனே தன் சூட் கேஸைத் திறந்து டவல், டூத்பேஸ்ட், டூத் பிரஷ் முதலியவைகளை எடுத்துக்கொண்டு அவனுல் காண்பிக்கப்பட்ட ஸ்நான அறையை அடைந்து பல்லைத் தேய்த்துக்கொண்டிருந்தார். அச்சமயம் வீதியில் ஓர் மோட்டார்கார் வந்து நின்றது. அதினின்று இறங்கிவந்த ஆள் ஒருவன் "மிஸ்டர் ரகு! மிஸ்டர் ரகு!! என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தான். மாப்பிள்ளைக்கு இச்செய்தி அறிவிக்கப்

பட்டதும், துரிதமாய் முகத்தைக் கழுவிக்கொண்டு துவாலையால் துடைத்துக்கொண்டேவந்து, வந்த மனிதனைச் சந்தித்தார். இருவரும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தபிறகு மாப்பிள்ளை, மாமனாரிடம் சென்று, "என்னை என் தகப்பனார் தேடிவந்திருப்ப தாகவும், இன்னும் சிறிதுநேரத்தில் இவ்விடம் வருவார் என் றும் தெரிகிறது. அந்தக் கிழட்டுப்பிணம் என்னை இப்படித் தொடர்ந்துவந்து, தன் பிடிவாதத்திற்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டுமென்று அழைத்துச் செல்லவே வந்திருக்கிறது. ஆகை யால் நான் இப்போதே இந்நண்பனோடு சென்றுவிடுகிறேன். அவர் வந்து கேட்டால், நான் இவ்விடம் வரவேயில்லை என்று சொல்லித் துரத்திவிடுங்கள். பிறகு நான் வந்து பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறிக்கொண்டே சென்று தன் உடை களைத் துரிதமாய் அணிந்துகொண்டு சூட்கேஸைக் கையில் பிடித்தவண்ணம் சென்று காரில் அமர்ந்தார். காரும் காற்றாய்ப் பறந்துசென்றது.

காலை டிபனை முன்னிட்டு, மருமகனுக்காக விசேஷ பக்ஷண வகையறாக்களைத் தயாரிக்க, அவர் அவைகளைச் சாப்பிட மாட்டாமற் செல்லநேர்ந்ததைப்பற்றிச் சிறிது விசனித்தார் மாமனார். எனினும், அந்தத்தகப்பனார் பேயினிடமிருந்து உபதே சம் பெறாமல் தப்பிச்சென்றதைப்பற்றிச் சந்தோஷமடைந்தவ ராய், தன் மருமகன் இப்படித் தாய்தந்தையர் வார்த்தையையும் மீறித் தங்கள் பக்ஷமாய்ச் சேர்ந்துகொண்டதற்குக் காரணம் அந்த சாக்ஷாத் குறத்தியின் மந்திர பலன்தான், என்று மனதிற் குள் எண்ணி மகிழ்ந்தவராய் உலாவிக்கொண்டிருந்தார். அச் சமயம், அங்கிருந்த ஓர் நாற்காலியின்மீது மருமகன் களைந்து விட்டுச் சென்ற பிஜாமாஸ் நனைந்திருந்ததைக் கண்டு அந்த வழியாகச் சென்றுகொண்டிருந்த, தனது குமாரத்தியை அழைத்து "சுலோசனா! இதோபார்! உனது கணவருடைய பிஜாமாஸ் (Pyjamas) கொஞ்சம் நனைந்துகிடக்கிறது. இதைக் கொண்டுபோய் காயவைத்து மடித்துப்பத்திரமாய் வைத்திருந்து அவர் வந்தவுடன் அவரிடம் கொடு" என்று தன் மகளுக்குப் பதி சேவை என்பவைகளைக் கற்றுக்கொடுக்கும் முறையில், கூறிக் கொண்டே அதை எடுத்துக் கையில் கொடுத்தார். அவள் அதை வெகு லஜ்ஜையுடன் வாங்கிக்கொண்டுபோய் ஒரு கொடிக்

கயிற்றின்மீது போட்டாள். அப்பொழுது அதினின்றும் ஒரு கடிதம் கீழே விழுந்தது. அதைக் கையில் எடுத்துப் பார்த்தாள். அதன் உரைமீது தன் தந்தையின் பெயரும் விலாசமுமிருக்கக் கண்டு, அதைத் தந்தையிடம் கொண்டுபோய்க் கொடுத்தாள். அவர் அதைத் திறந்து பார்த்தார். அதற்குள்ளிருந்த கடிதம் கீழ்வருமாறு:—

கடிதம்

மகா-ள-ள-ஸ்ரீ சந்திரசேகர பிரபு அவர்கள் திவ்ய சமுகத்திற்கு அடியேன் லக்ஷ்மிநரசு அநேக நமஸ்காரம் செய்து தெரிவித்துக்கொள்ளும் விண்ணப்பம்.

நான், நீங்கள் நினைத்ததுபோல் உங்கள் உண்மை மருமகன் அல்லவென்றும், நான் பேர்பெற்ற திருடனேயாயினும், முக்கியமாய் ஜன சமூகத்திலுள்ள ஊழல்களை வேரறுக்க வந்த பரோபகாரி என்றும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் ஒற்றைக்கு இரட்டையாய் அநியாய வட்டி வாங்கியும், உங்கள் வைர வியாபாரத்தின்மூலம் அநீதமுறையில் பெருவாரியான லாபமடைந்து இருபது லக்ஷ ரூபாய் ஆஸ்தியைக்கொண்டுள்ள தாங்கள், தங்கள் அருமை மகள் சுக துக்கத்தைப்பற்றிச் சிறிதும் கவனியாமலும், ஏழை எளியவர்களுக்குத் தான தருமம் செய்யாமலும், கருமித்தனத்துடன் காலங் கழிக்கும் உங்கள் விபரீத நிலமையைக் கண்ட நான், எப்படியும் உங்கள் ஆஸ்தியினின்றும் ஐந்துலக்ஷ ரூபாயை அபகரித்து, ஏழை எளியவர்க்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் எனது மூல தனத்துடன் சேர்த்துக்கொள்ள விரும்பியவனாய், மேற்படி கபட நாடகத்தில் போலி மருமகன் என்ற சரித்திரத்தை நடித்துப் பூரண வெற்றியடைந்துவிட்டேன். இதைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். என்றாலும், இதையறிந்து நீங்கள் விசனப் படப்போகிறீர்களே, என்று கவலைப்படுகிறேன்.

இதில் முக்கியமாய் ஒரு விஷயத்தை நீங்கள் கவனிக்க வேண்டும். அதாவது,

"இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பர் என்றெண்ணவோ திடமில்லையே" என்றார் தாயுமானவர். இந்நிலமையைப் பெற்ற நம்

முடன் வருவது எதுவுமில்லை. நாம் செய்த பாவ புண்ணியமே நம்மைத் தொடர்ந்து வருகிறது. அப்படியாகப் பார்த்தால் நீங்கள் இதுவரையில் அவ்வித புண்ணிய காரியம் ஏதும் செய்யவில்லை. இப்போது நீங்கள் இழந்து விட்ட இப்பெருந்தொகையை அப்படியே புண்ணியகாரியத்திற்கே விநியோகிக்கப்படுமாதலால் இதன் மூலம் தங்களுக்குப் பெரும் புண்ணியமேற்பட்டிருக்கிறதென்பதை யறிந்து, சந்தோஷமடையும்படிக் கேட்டுக்கொள்கிறேன். கவனிக்கவும், உங்கள் விருப்பப்படி உங்கள் மருமகன் கூடிய சீக்கிரம் வந்துசேர்ந்து உங்கள் குறையை நிவர்த்தி செய்யும்படியான ஏற்பாடுகள் பல செய்திருக்கிறேன். அவற்றுள் ஒன்று, ஒரு கடிதம், அதன் நகலை இத்துடன் வைத்திருக்கிறேன், என்றதைப் படித்தவுடன், அதிலிருந்த மற்றோர் கடிதத்தையும் எடுத்து வாசித்தார். அது கீழ் வரும் விதம்:—

நகல்

மிஸ்டர் ரகுபதி!

நவநாகரீகத்தில் சிறந்துவிளங்கும் தாங்கள் முக்கியமான ஒரு விஷயத்தில் அநாகரீகமுறையில் நடந்துக்கொள்வதைப் பற்றி விசனிக்கிறேன். நீங்கள் அவ்வாறு நடந்துகொண்டதன் பயனாய் உங்கள் மாமனார் நீங்கள் விரும்பும் அவரது ஆஸ்தியினின்றும் பெரும் தொகையை யிழந்துவிட்டார், என்பதையும், இதற்குக் காரணம் தாங்கள்தான் என்பதையும் வற்புறுத்திக்கூறுகிறேன்.

அஃதெப்படி என்றால், வரதக்ஷிணை, வரதக்ஷிணை என்று வழங்கிவந்த துர்வழக்கத்தை வெறுத்துத் தள்ளிய மஹான்கள் ஏற்பட்டிருக்கும் இந்நாளில், நீங்கள் கேவலம் ஒரு பங்களாவிற்கு ஆசைப்பட்டு அதை உங்கள் மாமனார் கொடுக்கவில்லை என்பதன் காரணமாய் அபலை மனைவியை வெறுத்து நீக்கிய உமது நிலைமையைக் கேள்விப்பட்ட ஓர் கள்வன், உம்மீது பெறும் ஆத்திரமூண்டவனாய், உமக்குச் சரியான புத்தி கற்பிக்க விரும்பி இவ்வாறு செய்தான். இதன் விவரங்கள் பல பத்திரிகைகளின் வாயிலாய்த் தாங்கள் அறியக்கூடுமாதலால் அதைப் பற்றி நான் விஸ்தரிக்கவில்லை.

ஆனால் இப்போது நடந்த சம்பவத்தில் அக்கள்வன் ஓர் அற்பனாகவிருந்தால், உங்கள் மனைவியையுமிழந்திருப்பீர். அவ்

வித ஆபத்திற்கும் அவமானத்திற்கும் ஆளாகாமல் போனது உங்கள் அதிர்ஷ்டவசமென்றும், கடவுள் சகாயமென்றும் நினைக்கிறேன். இனியாவது இவ்விதக்கஷ்டத்திற்கு ஆளாகாமல், உங்கள் பேராசையை ஒழித்து, உத்தமியாகிய உங்கள் மனைவியை ஏற்றுச் சந்தோஷமாய் வாழ்ந்துவரும்படி கேட்டுக்கொள்கிறேன். அக்கள்வன் யாரோவல்ல, நான்தான் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

லக்ஷ்மிநரசு.

—என்றதைப் படித்து முடித்த சந்திரசேகரர், கடிதங்களை கீழே வீசி எறிந்துவிட்டு, பெருமூச்சு விட்டவண்ணம் "இதெல்லாம் கனவா" என்று வாய்க்குள் கூறிக்கொண்டே மேலும் கீழுமாய் விழித்து விழித்துப் பார்த்தார். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவர்போல் வேகமாய்ச் சென்று படுக்கையறையில் நுழைந்து கஜானாவைத் திறந்து பார்த்து "ஹா! எல்லாம் உண்மைதான். மோசம்! படுமோசம்!! என்ன! மருமகனா! கள்வனா!! லக்ஷ்மிநரசா!!! ஐயோ! மோசம் போய்விட்டேனே! அடே பாதகா! என்ன காரியம் செய்தாய்! என்ன உன் அட்டூழியம்" என்று ஒரு பைத்தியக்காரனைப்போல் தாறுமாறாய்ப் பிதற்றினார். தலையில் அடித்துக்கொண்டார், கதறினார், பதறினார். வீடுமுழுவதும் ஒரே அமர்க்களம்.

இச்சம்பவங்கள் நடந்து 4-நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை 3-மணிக்கு, கள்வன் வந்து களவாடிப்போன விஷயத்தை எண்ணி யெண்ணி ஏக்கங்கொண்டு சித்தபிரமை யடைந்தவராய் ஓர் ஈஸிசெயரில் சாய்ந்துகிடந்தார் சந்திரசேகர பிரபு. அச்சமயம் அவரது உண்மை மருமகனாகிய ரகுபதி, மீசைகள் துடிக்க வீராவேசத்துடன் அவர் முன் வந்து நின்றான்.

புத்திமாராட்ட மடைந்த பிரபு இதைக் கவனிக்காமல் மவுனமாயிருந்ததைக் கண்ட ரகுபதி ஆத்திரங்கொண்டவனாய் "பணப் பேய்ப்பிடித்த அற்பப்பதரே! உன் முகத்தில் விழிக்கவும் கூடாதென்றால், நான் உன் வீடேறிவந்ததற்கு நீ என்னைச் சட்டை பண்ணாமலாயிருக்கிறாய்? என்ன உன் திமிர். ஆம்; என்னை

மதிப்பாயா? எவனாவது வழியில்போகிற திருட்டுப் பயல் வந்தால், அவனை மதித்து உபசரிப்பாய். நாளை உன் பெண்ணை அவனுடன் அனுப்பிவிடவும் தயாராயிருப்பாய். ஹா! என்ன காரியம் செய்தாய்! மண்டையில் மூளையில்லாமல் நீ செய்த காரியத்திற்கு உன் கன்னத்தில் இப்படியே சுடசுட நாலு அறை அறைந்தால்''—என்று கூறிக்கொண்டே கையை நீட்டிக்கொண்டு அருகிற் சென்றான்.

அங்கிருந்த ஓர் அறைக்குள் இவைகளையெல்லாங் கேட்டுக் கொண்டிருந்த சந்திரசேகர பிரபுவின் மூத்த குமாரன் சம்பந்தம் ஓடிவந்து கைகளைப் பிடித்துக்கொண்டு "என்ன சொன்னாய்? பணப் பேய்பிடித்த அற்பப்பதர். அந்தப் பதம் யாருக்குப் பொருந்தும் என்பதை நன்றாயோசித்துப்பார்! உங்கள் வீட்டை கொடு! வாசலைக்கொடு! இல்லாவிட்டால் பெண்ணை அழைத்துக்கொண்டு போகமாட்டோம், என்றெல்லாம் பணப் பேய் பிடித்தலையும் உன்னையும் உன் பெற்றோரையும் செருப்பால் அடித்தாலும் பாதகமில்லையே!

அடேய்! என்ன சொன்னாய்? பெண்ணைக் கட்டிக் கொடுத்து சம்மந்திகள் கேட்டமாதிரியெல்லாம் சீர் சிறப்புச் செய்ய வக்கற்றுப் பெண்ணை வாழவிடாமல் வீட்டில்வைத்து, வந்தவன் போனவனோடெல்லாம் அனுப்பிவிடத்தயாராயிருந்த அயோக்கியப் பதரே! நாக்கை உள்ளடக்கிப் பேசு! என்னையும் என் பெற்றோரையுமா செருப்பால் அடிப்பாய்?" என்று கூறிக்கொண்டே சம்பந்தத்தின் மென்னியைப் பிடித்தான் ரகுபதி. உடனே இருவருக்கும் பெரிய மல்யுத்தம்.

இந்தக் கோரக்காட்சியைக் கண்டவுடன் சுய உணர்ச்சி பெற்ற சந்திரசேகரர், இருவரையும் தடுத்து சமாதானப்படுத்துகிறார்.

பொங்கிய கோபத்துடன், "என் பெற்றோர் வார்த்தையை மீறி, வரத்தகாத வீட்டிற்கு வந்ததற்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது. போதும், போதும்'' என்று முரண்டிக் கொண்டு சென்றான் ரகுபதி.

வீதியில் சென்றுவிட்ட மருமகனைக் காலில் விழாதகுறையாய் கெஞ்சி வருந்தி அழைத்து வருவதற்குள் மாமனார் பாடு மூன்றாங் கட்டிற்கு வந்தது. உடனே தன் மகனை அழைத்து நீ செய்தது ரொம்பப் பிசகு. அறியாத் தனமாய்ச் செய்து விட்டாய். ஆகையால் "நான் செய்தது தப்பு, மன்னித்துக்கொள்ளுங்கள்" என்று அவரைக் கேட்டுக்கொள், என்றார்.

"உனக்கு அக்கரையானால் நீ எது வேணுமானாலும் செய்துகொள். வேண்டிக்கொள், கேட்டுக்கொள், காலிலானாலும் விழு. நான் ஒன்றுஞ் செய்யமாட்டேன்" என்று அவ்விடத்தைவிட்டுச் செல்ல முயன்றான் சம்பந்தம்.

"அப்படி மன்னிப்பு கேட்டுக்கொள்ளாதவரையில் தான் அங்கிருக்க முடியாதென்று" எழுந்தான் ரகுபதி. இருவரையும் போகவிடாது இடைமறித்துக் கெஞ்சித் தவிக்கிறார் சந்திரசேகரர்.

"அண்ணா! நீங்கள் எனக்காகவேனும் அப்படிச் செய்யுங்களேன்" என்று கண்ணீர் பெருக ஓடிவந்து அண்ணனை வற்புறுத்தினாள் சுலோசனை.

அழுது அழுது சிவந்த கன்னங்களிடையே வழிந்தோடிய கண்ணீரைக் கண்ட அண்ணன் மனங் கரைந்துவிட்டது. எனவே,

"தங்கையே! நீ அழுததெல்லாம் போதாவென, இன்னமும் அழவைக்க என் மனமென்ன கல்லா? வேண்டாம், நீ அழாதே; உன்பொருட்டு நான் எதையும் செய்யத் தயார்" என்று கூறிக்கொண்டே மறுபக்கம் திரும்பி,

"அத்தான்! ஏதோ, இதுவரையில் நடந்த சம்பவங்களால் வெட்கமும் துயரமும் நிறைந்த என் மனம் உங்களைப்பற்றிய நினைவையே மறந்துவிட்டது. இப்போது என் தங்கையைப் பார்த்தபிறகுதான் நீங்கள் யாரென்றும், எங்கள் முழு மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவராகிய உம்மிடம், நான் நடந்துகொண்டமாதிரி மகா தவறு என்றுமறிந்தேன். ஏதோ சிறியவன் அறியாமல் செய்த பிழையைப் பொருத்து என்னை மன்னிப்பதோடு, இதோ! தங்கள் அபலை மனைவியின் துயரத்தையும்

தீர்த்துக் கார்த்திடவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்" என்று கூறியவாறு மண்டியிட்டுக் கைகூப்பி நமஸ்கரித்தான்.

"உன் கோரிக்கை பூர்த்தியாகும் மைத்துனு! எழுந்திரு!" என்று சம்பந்தத்தின் இரு புஜங்களையும் பிடித்து எழுப்பிவிட்டு,

'மாமா! ஏதோ நானும் அப்படிதான் நடந்த விபரீதங்களால் மனமுடைந்து உங்களிடம் மரியாதைக்குறைவாய் நடந்துகொண்டேன். அதைப்பற்றி என்னையும் மன்னிக்கவேண்டும்" என்று கூறிக்கொண்டே அவர் காலடியில் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்தான் ரகுபதி. மங்களமுண்டாகட்டும், பல்லாண்டு பல்லாண்டாய் வாழ்ந்திடுவாய், அப்பனே! எழுந்திரு" என்று மனமுவந்து ஆசிகூறி மருமகனை எழுப்பிவிட்டு "இத்தனையும் அந்தப் போலி மருமகனுல் ஏற்பட்ட பாக்கியமல்லவா?" என்று மனதிற்குள் நினைத்துப் பூரித்து மகிழ்ந்தார்.

---

## 7-வது அத்தியாயம்.

### பாதள நிலயத்தில்—பலத்த ஆலோசனைகள்

மின்சார விளக்குகளின் ஒளி நிரம்பி ஜெகஜ்ஜோதியாய் பிரகாசித்துக்கொண்டிருந்த ஓர் அலங்கார மண்டபத்தில், தகதகாயமாய்த் துலங்கும் சிம்மாசனமொன்றில், லக்ஷ்மிநரசு விசித்திராலங்காரங்களுடன் கொலுவீற்றிருக்கும் காக்ஷி இராஜாதி ராஜாக்கள் கொலுவிருக்கும் தர்பார் மண்டபமோ, தெய்வலோகத்து இந்திரன் கொலுமண்டபமோ! என்று பிரமிக்கும்படி யிருந்தது.

லக்ஷ்மிநரசுவின் தலைக்குமேல் தங்கமயமான குடையொன்று, வரிசைக்கிரமமா யமைந்த எலக்ட்ரிக் கலர் பல்புகள் எரிந்தவண்ணம், கரகரவெனச் சுழன்றுகொண்டிருந்த காக்ஷி

பார்ப்பவர் மனதிற்கும் கண்களுக்கும் பரமானந்தத்தை யளித்தது.

ஆனால், அக்குடை மழையையோ வெய்யிலையோ தடுப்பதற்காக அமைக்கவில்லை எனினும், அதற்குள் சுழன்றுகொண்டிருந்த மின்சார விசிறி ஜில்லென்ற காற்றைப் பொழிந்து லக்ஷ்மிநரசுவைப் பரவசப்படுத்திக்கொண்டிருந்தது. இதன்றி மற்றும் பல மின்சார விசிறிகள் ஆங்காங்கு சுழன்றுக்கொண்டிருந்தன. ஆனால், அவைகள் நமக்கு மாத்திரம் ஏன் அவ்விதக் குடையை அமைக்கவில்லை? என்று கோபங்கொண்டவைகள் போல், சிடு சிடுப்பான தோற்றத்துடன் சுழன்றுகொண்டிருந்தன.

லக்ஷ்மிநரசுவின் வலப்பக்கம் இடப்பக்கமாகப் பிரத்தியேகமாய் அமைக்கப்பட்டிருந்த இரண்டு ஆசனங்களில், லக்ஷ்மிநரசுவின் மந்திரிகள் போன்ற குப்புசாமியும் கந்தசாமியும் அமர்ந்திருந்தார்கள்.

மற்றும் அக்கூடத்தின் வலப்புறம் இடப்புறமாகிய இரு பக்கங்களிலும் நெடுக சாதாரண நாற்காலிகளில், லக்ஷ்மிநரசுவின் முக்கியஸ்தர்களனைவரும் வரிசையாக அமர்ந்திருந்தார்கள். மற்றும் ஆங்காங்கு, குமாஸ்தாக்களும், சேவகர்களும் நடமாடிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கிருந்த ஒரு பெரிய கடிகாரத்தில் டாங் டாங்கென்று மணி 10 அடித்தது. அக்கடிகாரத்தின் ஒரு புறம் பகல்-இரவு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் பகல் என்ற பகுதியில் பிரகாசம் பொருந்தியும், இரவு என்ற பகுதி மங்கலாகவுமிருந்தது. இதனால் இரவும் பகலும் இருண்டுகிடக்கும் ஒரு தனிவிடம் என்றும், இப்போது பகல் 10 மணி என்றும் விளங்கிற்று.

மணி 10 அடித்ததைக் கண்ட விக்னேச்வர ஆச்சாரி என்பவர் தன் ஆசனத்தினின்றும் எழுந்துவந்து லக்ஷ்மிநரசுவின் முன் நின்றார். உடனே லக்ஷ்மிநரசு தன் ஜேபியிலிருந்து ஒரு சாவியை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

ஆச்சாரி, அச்சாவியைக் கொண்டு மேஜைக்கு அருகிலிருந்த ஒரு பெட்டியைத் திறந்து, அதிலிருந்த வைர ஆபரணங்

களை யெல்லாம் ஒரு குவியலாகவும், இரத்தினுபரணங்களை யெல்லாம் ஒரு குவியலாகவும் சொர்ணுப்ரணங்களெல்லாம் ஒரு குவியலாகவும் மேஜைக்கு எதிரில் தரையில் விரிக்கப்பட்டிருந்த ரத்ன கம்பளத்தின் மீது வைத்தார். பிறகு மேஜைமீதிருந்த ஒரு புஸ்தகத்தில் அவைகளின் எண்ணிக்கைகளைத் தனித்தனியாய் எழுதி வைத்துவிட்டுத், தன் ஜேபியிலிருந்த ஒரு கடிதத்தைத் திறந்து லக்ஷ்மிநரசுவின் முன் வைத்தார். அதில் முன் தடவை கொடுத்த ஆபரணங்களில், பிரித்தெடுக்கப்பட்ட வைரம், இரத்தின முதலியவைகளின் எண்ணிக்கையும், தங்க முதலியவைகளின் நிகரங்களும் குறித்திருந்ததல்லாமல், அவைகளை விற்றெடுத்த கிரயங்களையும் குறித்து அதில் கண்ட சிலவுபோக மிகுதி இவ்வளவுத்தொகைப் பொக்கிஷதாரரிடம் சேர்ந்திருக்கிறதென்றும் குறித்திருந்தது. அதைப்படித்து விவரமறிந்த லக்ஷ்மிநரசு, சரி போகலாம், என்றவுடன் ஆச்சாரி, அந்நகைகளை யெல்லாம் எடுத்து அந்தப்பெட்டியிலேயே வைத்துப் பூட்டினுர். அங்கிருந்த சேவகன் ஒருவன் ஓடிவந்து அப்பெட்டியைத் தூக்கிக்கொண்டபின், ஆச்சாரி முன்னும் சேவகன் பின்னுமாகச் சென்றனர். அதன்பிறகு, கதர் வஸ்திராலயத்தின் மானேஜர் சுப்பிரமணிய பிள்ளை எழுந்து வந்து லக்ஷ்மிநரசுமுன் நின்று, அவர் கையில் கொண்டுவந்த கடிதத்தை மேஜைமீது வைத்தார். அதில், வஸ்திராலயத்தில் புதிதாய் நெய்யப்பட்ட காதிவஸ்திரங்களில், ஏழைகளுக்கு தானம் கொடுத்ததுபோக மிகுதி விற்கப்பட்டத் தொகையின் எண் ணிக்கையும், அதில் சிலவுபோக மிகுதி பொக்கிஷதாரரிடம் கொடுக்கப்பட்டிருக்கும் தொகையின் எண்ணிக்கையையும் குறித்திருந்தது. அதைப்படித்து விவரமறிந்த,

லக்ஷ்மி நரசு :—மிஸ்டர் பிள்ளை! இன்று நான் அழைத்து வந்த ஆட்களைப்பற்றி உமக்குத்தெரியுமா?

பிள்ளை:—ஆம், 8 ஆட்களை நீங்கள் அழைத்துவந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர்களுக்கு நான் செய்யவேண்டியது எதுவோ, தெரிவித்தால், அதன்படி செய்கிறேன்.

லக்ஷ்மி:—வேறு ஒன்றுமில்லை. அவர்கள் எல்லோரும் ஒரு பஞ்சாலையில், வேலைசெய்துக்கொண்டிருந்தவர்கள். கேட்டீரா அநியாயத்தை? அந்த மில்லுக்கு வருவாய் குறைந்து

விட்டதாம். அதற்காக, 5000, 10,000 சம்பளம் வாங்கும் அன்னியர்கள் எத்தனையோ பேரிருக்க, கேவலம் 20, 30 ரூபாய் சம்பளதாரராகிய இவர்களைத்தானா நீக்கவேண்டும்? அவர்கள் பட்ட துன்பத்தைக் காணச் சகியாத யான், அவர்களில் பிள்ளை குட்டிக்காரரான சிலரைமட்டும், நமது நிபந்தனைகளையெல்லாங் கூறி அதற்குச் சம்மதித்தவர்களை மாத்திரம் அழைத்து வந்திருக்கிறேன். அவர்கள் நிலைமைக்குத் தகுந்த வேலைகளையும் அதற்குத்தக்கச் சம்பளத்தையும் கொடுத்து நமது வஸ்திராலயத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

பிள்ளை:—சரி, உத்திரவுப்படியே! (சென்றுவிட்டார்) அதன்பிறகு பொக்கிஷதாரர், ரெங்கநாதம் என்பவர் எழுந்து வந்து அவர் கையிலிருந்த கடிதத்தை மேஜைமீது வைத்தார். அதில், லக்ஷ்மிநரசுவால் ஆங்காங்கு நிர்மாணித்துள்ள சாதுக்கள் மடம், அன்னசாலை, தர்ம வைத்தியசாலை இலவசப்பாடசாலை முதலியவைகளுடன், பாதாள நிலயத்திலிருக்கும் சிப்பந்திகளின் சம்பளம், சாப்பாட்டுச் சிலவு முதலிய சிலவுகளின் விவரமும், மிகுதி யிருக்கும் ரொக்கத் தொகையின் எண்ணிக்கையையும் குறித்திருந்தது. அதைப் படித்து விவரமறிந்து கொண்ட லக்ஷ்மிநரசு, மற்றுந் தன்னிடமிருந்த கற்றை கற்றையான கரன்ஸி நோட்டுகளையும் சிலப் பவுன்களையும் அவரிடம் கொடுத்து, இருப்புத் தொகையுடன் இவைகளையும் சேர்த்து 12-பாகமாய்ச் செய்து எங்கள் 12 பேர் வீடுகளுக்கும் அனுப்பிவிடும்'' என்று சொல்ல "உத்திரவுப்படி'' என்று கூறிவிட்டு அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டுபோய் விட்டார். அதன் பிறகு காரியதரிசி முத்துசாமி என்பவர் எழுந்து வந்து, "பிரபு! இங்குள்ள நமது சிப்பந்திகளில், 500 ரூபாய் சம்பளக்காரர் முதல் 50 ரூபாய் சம்பளக்காரர் உள்பட அனைவருக்கும் நேற்றிய தினம் சம்பளப் பட்டுவாடா சரியாகச் செலுத்தப்பட்டுவிட்டது. மற்றும், யாவரும் சுக க்ஷேமத்தோடு யாதொரு மனஸ்தாபம் குற்றங்குறையின்றி சந்தோஷமாயிருக்கிறார்கள்'' என்றார்.

லக்ஷ்மி:—சரி, ரொம்ப சந்தோஷம். போகலாம்.

மாணிக்கம்:—(பத்திரிகை ஆராய்ச்சிக்காரர்) பிரபோ! நான் சென்ற மாதம் பூராவாய், எல்லாப் பத்திரிகைகளையும் பரி

சீலனைச் செய்துவந்ததில், இந்த ஒரு விஷயத்தை தான் எல்லாப் பத்திரிகைகளிலும் சென்ற 5–6 நாட்களாய்ப் பார்த்து வருகிறேன். இதை வாசித்துப் பாருங்கள், என்று ஒரு தினசரிப் பத்திரிகையில் ஒரு விடத்தைக் குறிப்பிட்டுக் காண்பித்தவண்ணம் லக்ஷ்மிநரசுவின் முன் வைக்க, அதை லக்ஷ்மிநரசு வாசிக்கிருன். அது பின் வரும் விதம் :—

கடிதம்

நுண்ணறிவு கழகம்
140, வேதகிரி தெருவு
லக்ஷ்மிபுரம்

அதிவீர பராக்கிரமசாலியாகிய, ஜெகஜ்ஜாலக் கள்ளசிகாமணி லக்ஷ்மிநரசுக்கு சர்வாபீஷ்டமுண்டாகுக:—முதலில், நாங்கள் எல்லோரும் உம்மீது கடுஞ்சினமும் ஆத்திரமுங் கொண்டிருந்தோம். ஆயினும், நாளாவட்டத்தில் உமது அபூர்வச் செய்கைகளைக் கண்டு மயங்கிய நாங்கள், உம்மீது பாஸ்பாவாஞ்சை கொண்டு நீர் ஏதோ கடவுளின் அபூர்வச் சிருஷ்டி என்பதாய் மதித்து உம்மீது பேரன்புகொண்டுவிட்டோம். சாதாரணமாய், மனித வர்க்கத்தினர் புத்திசாலிகளாகவும், சாமர்த்தியசாலிகளாகவும், சுறுசுறுப்புடன் முன்னேற்றமடையவேண்டும் என்பதே எமது கழகத்தின் கொள்கை. கழகத்தின் சார்பாக மேற்படி கொள்கைகளை மேற்கொண்ட நாங்கள், உமது விஷயத்தில் அன்பு கொண்டதில் ஆச்சர்யமில்லை.

எக்காரியத்திலாயினும், நுண்ணறிவின் பயனுய்க் கீர்த்தியடையும் பிரமுகர்களுக்கு, மெடல்கள், கப்புகள், ஷீல்ட்கள் முதலியவைகளை வழங்கிவரும் நமது கழகம், உமக்குச் சரியாய் ஒரு டஜன் தங்கமெடல்களை வழங்கி பரிபூர்ணுசீர்வாதம் செய்யக் கார்த்திருக்கிறது. எனவே, தாங்கள் கீழ்காணும் விவரப்படிச் செய்து, மேற்படி மெடல்களை அடைந்து எமது கோரிக்கையைப் பூர்த்தி செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிருேம்.

இந்த 12 மெடல்களில் ஒன்றைத்தான் நமது கழகம் வழங்குகிறது. மற்ற 11-ஐ உம்மீது பேரன்புகொண்ட பொது

ஜனங்களும் உம்மால் நன்மையடைந்த சிலரும் கழகத்தின் சார் பாக உமக்கு அளிக்கிறார்கள். அவர்களின் பெயர்களை மெடல் மீது காண்க.

மேற்படி 12 மெடல்களையும் சிறிய வெல்வெட் பெட்டி ஒன்றில் வைத்து, அதை நீங்கள் அடையும்பொருட்டு இவ்வூர் புளியங்காட்டின் மத்தியிலுள்ள மாமரத்தின் அடியில் சிறிய மேஜை ஒன்றின்மீது வைத்திருக்கிறோம். அத்துடன், அதை வேறுயாரும் அணுகாதிருக்க போயி ஒருவனை அங்கு காவல் வைத்திருக்கிறோம். அவனைப்பற்றி உமக்கு ஒருவிதக் கவலையும் வேண்டாம். ஆயினும் இதன் மூலம் போலீஸார் உஷாராக விருந்து நீங்கள் வரப்பார்த்து எங்கே பிடித்து விடுகிறார்களோ, என்று முதலில் கொஞ்சம் பயந்தோம். ஆனால், எப்பேர்ப்பட் டக் கட்டுக்காவல்களையெல்லாம் சரிப்படுத்திவிட்டு, எத்தனையோ வித அதிசய சம்பவங்களை நிகழ்த்திய உமக்கு இது ஒரு பொருட்டல்ல என்பதாக துணிந்து செய்திருக்கிறோம். என் றாலும் நீங்கள் அதிக ஜாக்கிரதையாகவேயிருந்து இக்காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டுமாய் கழகத்தின் சார்பாகவும், கழ கத்தின் அங்கத்தினர் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறோம்.

இதில் உமக்கு ஒருவிதக் கஷ்டமும் ஏற்படாமல் எங்கள் கோரிக்கை ஈடேறவேண்டுமாய் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,
பரமசிவம் பிள்ளை,
காரியதரிசி, நுண்ணறிவு கழகம்.

என்றதைப் படித்து முடித்த லக்ஷ்மிநரசு, இன்ஸ்பெக்டர் கஜேந்திரம் அன்று எனக்கு அமைத்த போனில் செட்டியார் பணம் இரையாகவிருந்தது. இந்த இரண்டாவது போனுக்கு மெடல்கள்; மேலும் நுண்ணறிவு கழகத்தின் ஒரு டஜன் மெடல் கள், என்று அலட்சியமாய் ஒரு சிரிப்பு சிரித்துக்கொண்டே குப்புசாமியின் பக்கமாய்த் திரும்பினான். குப்புசாமியும் லக்ஷ்மி நரசுவின் பக்கம் திரும்பி "இதை நீங்கள் போலீசாரின் சூட்சி

யென்று நினைக்கிறீர்கள்?'' என்றான். அதேசமயம் கந்தசாமியும் லக்ஷ்மிநரசுவின் பக்கம் திரும்பி, ஆம், நானும் கேள்விப்பட்டேன். லக்ஷ்மிபுரத்திலுள்ள நுண்ணறிவு சங்கத்தார் நம்மை எப்போதும் புகழ்ந்து பேசுகிறார்கள் என்று; ஆகையால் இது உண்மையாக இருந்தாலுமிருக்கும், என்றான். (இவர்கள் மூவரின் ஆசனங்களும் ரிவால்விங் ஸிஸ்டமாய் (Revolving system) அமைக்கப்பட்டிருந்தமையினால், இம்மூவரும் சுலபமாய் ஒருவர் பக்கம் ஒருவர் திரும்பிக்கொள்ள ஏதுவாக இருந்தது.

லக்ஷ்மிநரசு:—இல்லை; இது முற்றும் அந்த இன்ஸ்பெக்டரின் சூழ்ச்சிதான்.

குப்புசாமி:—ஆனால் இதைப்பற்றி நாம் கவனியாமலிருந்துவிட்டால் போகிறது.

கந்தசாமி:—ஆம்; அவ்வளவுதான்.

லக்ஷ்மி:—இல்லையில்லை, நான் அப்படிச் செய்யமாட்டேன். முந்திய போனில் என்னைப் பிடிக்க முயன்றபோது எவ்வித வெற்றியும் புகழுமடைந்தாரோ, அதேபோல் இதிலும் அடையச் செய்வேன். அதைப்பற்றி நீங்கள் ஒன்றும் யோசிக்க வேண்டாம்.

குப்புசாமி:—உண்மையில், போலீஸார் நம் விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாகவும் விடாமுயற்சியாகவும்தான் வேலை செய்கிறார்கள். இனி நாம் அன்று நீங்கள் சொல்லியதைப்போல், இத்தொழிலினின்றும் மரியாதையாய் விலகிக்கொள்வதுதான் சரி.

லக்ஷ்மி:—என்ன குப்புசாமி! நானென்ன! அவர்களுக்குப் பயந்துகொண்டா அப்படிச் செய்யவேண்டுமென்றேன்? ஏதோ நம் கஷ்டத்தின் கொடுமையால் சிலநாள் இத்துர்மார்க்க நடையைப் பின்பற்றினோம். இனி நம் கஷ்டங்கள் ஒழிந்துவிட்டமையினால், இத் தீத்தொழிலினின்றும் விலகி, இருப்பதை வைத்துக்கொண்டு நல்வழியில் காலத்தை செலவிடுவோமென்றேன்.

கந்தசாமி:—ஆம், தாங்களென்னமோ அந்த ராஜசேகரனைப் பற்றிய விஷயமாய்ச் சொன்னதாக குப்புசாமி கூறுகிறார். அதைப்பற்றிய விவரமென்ன?

லக்ஷ்மி:—வேறு ஒன்றுமில்லை. ராஜசேகரன் வீட்டு உளவுகளை யெல்லாம் நான் நன்றாய் அறிந்துவிட்டேன். ராஜசேகரனின் சிறிய தந்தை சௌந்தரராமன் என்பவர் 15தாவது வயதில் காணாமற் போய்விட்டார். அவரின் ஞாபகார்த்தமாகத்தான் அவர்கள் வீட்டிற்கு சௌந்தர விலாஸ் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அவர் பள்ளிக்கூடத்திற் நாலாவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தபோது அவரது கிளாஸ்மேட்டாகிய 19 வயது பையன் ஒருவன் அவரது வைரக் கடுக்கன், தங்க அரைஞாண், காப்பு, கொலுசு, முதலியவைகளின்மீது ஆசை கொண்டவனாய், அவனுடைய வெகு நாளைய ஏற்பாட்டின்படி ஒருநாள் பள்ளிக்கூடத்தினின்று வரும்பொழுது அவரை ஏதோ ஒரு சாக்குச் சொல்லித்தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் தானும் தன் அண்ணனுமாகச் சேர்ந்து அந்நகைகளைக் கழற்றிக்கொண்டு அவர் கழுத்தை யறுத்து அவர்கள் புழக்கடையில் அவரையும் அவரது புஸ்தக முதலியவைகளையும் புதைத்துவிட்டார்கள். நல்லவேளையாய் இது யாருக்குமே தெரியாமல் போய்விடவே அவரைத் தேடி யலைந்த அவர் வீட்டார் அவர் இன்னமும் எங்கேயோ உயிரோடுதான் இருக்கிறார், என்று நினைத்திருக்கிறார்கள். இராஜசேகரனின் தந்தை சிவராமன் எழுதிவைத்திருக்கும் உயிலிலும், தன் தம்பி எந்த காலத்தில் வந்து சேர்ந்தாலும் தன்சொத்துபூராவிலும் (இருபது லட்சம்) சரிபாதி அவருக்கு கொடுத்துவிடவேண்டும், என்று எழுதியிருக்கிறது. அவரது போட்டோ படத்தையும் நான் பார்த்தேன்: சரியாய் அவர் என் சாயலாகத்தான் இருக்கிறார். இப்போது அவரிருந்தால் 28 வயதுதான் ஆகிறது. இப்போது எனக்கு 26 முடிந்து 27 பிறக்கப்போகிறது. இரண்டொரு வருஷம்தான் அவருக்கும் எனக்கும் வித்தியாசம். அதைப்பற்றிக்கவலையில்லை. நான் சரியாக அவர் திரும்பிவந்தது போலவே நடித்து அவர் சொத்துக்கெல்லாம் பூரண உரிமைகொள்வேன்.

அதன் பிறகு நான் பகிரங்கமாய் வாழ்க்கை நடத்துவேன். நீங்களும் உங்களுக்கிருப்பதை வைத்துக்கொண்டு நிம்மதியாயிருங்கள்.

குப்புசாமி:—அந்த பஞ்சாக்ஷரபிரபுவின் வீட்டைப்பற்றி மறந்துவிட்டீர்களா? அதைக் கொஞ்சம் கவனித்துவிட்ட பிறகு தான் நமது தொழிலைப் பூர்த்திச் செய்யவேண்டும்.

லக்ஷ்மி:—ஓ! அதை நானும் மறந்துவிடவில்லை. கூடியசீக்கிரத்தில் அதை முடித்துவிடுகிறேன். இதில் முக்கியமான ஒரு சங்கதியை மறந்துவிட்டேன். அன்றைக்கு ஒரு நாள் என்னை போலீஸார் வலப்புறம் இடப்புறம் பின்புறம் ஆக மூன்று பக்கங்களிலும் துறத்திக்கொண்டு வருகிற சமயம் எனக்கெதிர்ப்புறமிருந்த ரயில்கேட்டும் சாத்தப்பெற்றுவிட்டது. அந்த நெருக்கடியான சமயம் நான் தப்பியது தெய்வச்செயல்தான். அது போன்ற ரயில் கேட்டுத் தொந்திரவு எனக்கு எப்பொழுதும் பெருத்த கஷ்டத்தை விளைவிக்கிறது. ஆகையால் அம்மாதிரி சந்தர்ப்பத்தில் அப்படியே அந்த கேட்டைத் தாண்டிக்கொண்டுச் செல்லக்கூடிய மோட்டார்காராக விருந்தால் ரொம்ப நன்மையாகவிருக்கும்.

கந்தசாமி:—அதற்கென்ன? நல்ல ஒரு டிரைவரைப் பிடித்து நமது காரையே அவ்விதம் செல்லக்கூடிய முறையில் அமைக்கச் செய்தால் போகிறது.

குப்புசாமி:—இல்லை யில்லை; இதற்கு டிரைவரால் என்ன செய்யமுடியும்? எனக்குத் தெரிந்த மோட்டார் மெக்கானிகல் இஞ்சினீயர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஏரோப்பிளேனைப் பற்றியும் தெரியுமாம். அந்த முறையையும் அனுசரித்து ஒரு பிரத்தியேக முறையில் தகுந்த கார் ஒன்று நீங்கள் விரும்புவது போல் கூடியசீக்கிரம் அமைத்துத் தருகிறேன்.

லக்ஷ்மி:—எவ்வளவு நாளையில் செய்ய முடியும்?

குப்புசாமி:—நான் மனது வைத்தால், எந்தக்காரியம் உமக்கு சீக்கிரம் முடியாமலிருக்கும்? அநேகமாய் இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாகவே முடித்துத் தருகிறேன், பயப்படாதீர்கள்.

லக்ஷ்மி :—ஆம், உண்மைதான். நீர் மனதுவைத்தால் ஆகாத விஷயம் எது? சந்தோஷம். அப்படியே செய்யவும். நான் போய்வருகிறேன், இன்று இவ்வளவோடு நமது சபை கலையட்டும்—என்று சொன்னவுடனே நமது கதையின் 6வது அத்தியாயத்திற் குறிப்பிடப்பட்டிருந்த குறத்தி பணிவுடன் லக்ஷ்மிநரசுவின் முன்வந்து,

பிரபுவே! நமஸ்காரம். இதுவரையில் நான் நடித்துவந்த வைகளில், ஐயாவுக்குத் திருப்திபோல் நடந்ததா? இன்னும் எதாவது என்னால் ஆகவேண்டிய காரியமிருக்கிறதா? இருந்தால் இந்த நாய்க்கு உடனே உத்திரவு கொடுங்கள்!

லக்ஷ்மி:—ஆம், உன்னால் ஆகவேண்டிய காரியம் இன்னொன்று இருக்கிறது. ஆனால் இப்போது ஒன்றும் அவசரமில்லை, அதற்குமுன்பு எம்மால் ஆகவேண்டிய சில காரியங்கள் இருக்கிறது. அவைகளெல்லாம் முடிந்தபிறகு சொல்லுகிறேன்; அதன்பிறகு நீ ஆரம்பித்தால் சரியாகவிருக்கும். ஆனால் குப்புசாமி! அவ்விஷயத்தை இப்போதிருந்தே, இவளுக்கு விபரமாய்ச் சொல்லிவை!

குப்புசாமி:—எந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறீர்கள்?

லக்ஷ்மி:—அதுதான், ராஜசேகரன் வீட்டு விஷயம்.

குப்புசாமி:—ஓ! அதுவா? அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். ஏ! குறத்தி! அதைப்பற்றிய விவரம் நாளைய தினம் என்னிடம் வந்து கேள்:—என்று சொன்னவுடன் குறத்தி சென்று அங்கு தயாராய் வைத்திருந்த ஆலத்தித்தட்டை எடுத்து, அதில் ஒருபலம் கற்பூரக் கட்டி ஒன்றை ஏற்றிவைத்து லக்ஷ்மிநரசுவின் அருகில் சென்று,

ஆலத்தி நான் எடுப்பேன்—என் ஐயருக்கு ஆலத்தி
திசை எட்டும் புகழும்—தீரவீர சூரருக்கு
திருஷ்டி தோஷம் கழிய ஆலத்தி
வலியோரிடம் பறித்து—எளியோர்க்குதவிசெய்யும்
உத்தம சீலருக்கு ஓமல் ஒழிந்திட ஆலத்தி
நாதியற்றபேரை—ஆதரிக்கும் வள்ளல்
பாரில் புகழ் மிகுந்து நீடூழி வாழ்ந்திட ஆலத்தி

என்ற பாட்டை இசைந்த மெட்டில் பாடிக் கொண்டே ஒரு சிறிய நடனமும் செய்த வண்ணம் ஆரத்தியைச்சுற்றி முடித்தாள். அத்துடன் சபை கலைந்தது.

---

## 8-வது அத்தியாயம்.

### கள்ளப்புலியின் வெற்றி—காவலரின் தோல்வி

போயி எற்றய்யா, மணி 8 அடிக்கப்போவதைக் கண்டு, தான் புளியங் காட்டில் மெடல்களைக் காவல் புரியும் இராட்டி (Night duty) 9மணிக்கு ஆஜராகவேண்டியதை எண்ணி, போஜன காரியங்களைத்துரிதமாய் முடித்துக்கொண்டு, சாயதோவத்தி ஒன்றை எடுத்து இடுப்பில் கிழ்பாசியாகக்கட்டி உடம்பில் ஒரு ஷாட்டை மாட்டிக்கொண்டு முண்டாசு ஒன்றை தலையில் பாகையாக வரித்து வரித்துக் கட்டினான். அச்சமயம் வீதிக் கதவையாரோ தட்டும் சப்தம் கேட்டது. குளிருக்குப் போர்த்துக்கொள்ளும் கம்பிளியை எடுத்து தோளில் போட்டுக்கொண்டு பூட்டு சாவியை கையில் பிடித்தவண்ணம் கதவைத்திறந்து கொண்டு வெளியில் வந்தான். அப்போது அவனை இடைமறித்து “ஏய்! 102! உன்னிடம் ஒரு விஷயம் பேசவேண்டும் இங்கே வா” என்று கையை பிடித்து இழுத்துக்கொண்டு உள்ளே வந்தார் சாக்ஷாத் இன்ஸ்பெக்டர் ஒருவர். “போயி எற்றய்யா என்ற பெயரையன்றி, 102 என்ற பெயரெல்லாம் வேறு யாருக்குத் தெரியும்?” என்ற நம்பிக்கைக்கொண்ட எற்றய்யா, வெகு பயபக்தியுடன் உள்ளே சென்று தன் பெட்டி ஒன்றை துணியால் துடைத்துச் சுத்தம் செய்து, அதன்மீது உட்காரும்படி இன்ஸ்பெக்டரை வற்புறுத்தினான்.

இன்ஸ்பெக்டர் :—அதிருக்கட்டும் 102! நான் ஒரு இரகஸியத்தை உன்னிடம் சொல்லவேண்டும். வேறு யாரு மிங்

கில்லையே?—என்று கேட்டுக்கொண்டே தன் பார்வையால் அச் சிறிய வீட்டை ஒரு சுற்று கவனித்தார்.

102:—வேறு யாருமில்லைங்கோ! நீங்கோ சொல்லுங்கோ சும்மா.

இன்ஸ்:—அந்த கதவைத் தாளிட்டு விட்டுவா!

102:—(தாளிட்டுவிட்டு வந்து) ஊம், சொல்லுங்கோ!

இன்ஸ்:—நீ இந்த உடையில்தானு அங்குசெல்வது ?

102:—ஆமாங்கோ.

இன்ஸ்:—இரகஸியம் பேச காதின் அருகில் செல்பவர் போல் நடித்து, ஒரு கையால் அவனது இரு கைகளையும் கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு மற்ருெரு கையிலிருந்த துணிப்பந்தை அவன் வாய்க்குள் திணித்தார். அதன் பிறகு அவரது நிக்கர்ஸ் (Knickers) பாக்கெட்டில் சென்ற கை, உறுதியும் நீளமுமான கயிறு ஒன்றை வெளியில் இழுத்தது. அடுத்தக்ஷணம் 102 கை கால் கட்டப்பட்டு கம்பத்தைத் தழுவினுன். அதே சமயம், வந்த இன்ஸ்பெக்டர், தன் வஸ்திரங்களையெல்லாம் உரிந்துக்கொண்டு கம்பளியையும் பூட்டு சாவியையும் எடுத்துச் செல்வதைக்கண்டு கலங்கினுன்.

மறுக்ஷணம், தன் வீடு வெளிப்புறம் தாளிடப்பட்டு பூட்டப்படும் சப்தத்தையும் கேட்டு "ஹா! இன்ஸ்பெக்டர் என்று நம்பி மோசம் போய்விட்டேனே! இவன் யார்? இவன்தான் அந்தத் திருடனு! ஆஹா! என்ன சாமர்த்தியம்! சி. ஐ. டி. போலீஸ் இலாகாவில் இந்த 10 வருஷ காலமாக, எவ்வளவோ யுக்தி புத்தியாய் வேலை செய்துவந்த நான், இன்று இவனிடம் ஏமார்ந்து இந்தக்கதியானேனே!" என்று மனதிலேயே எண்ணி யெண்ணி நொந்துகொண்டான் 102ம் நம்பர் கான்ஸ்டபிள்.

* * * *

புளியங்காட்டில், பகல் டூட்டிக்காரனுகிய போயி திம்மி காடு என்பவன் "ஹா! பசி பொருக்கமுடியவில்லையே! மணி 9

அடித்தும் பாழாய் போனவன் வந்த பாடில்லையே! என்று மன தில் எண்ணி வேதனைப்பட்டுக்கொண்டிருந்தபோது போயி எற்றய்யா, கம்பளியைப் போர்த்திக்கொண்டு அமாவாசைக் கருக்கலான இருட்டில் சரியாய் ஒரு பிசாசின் ரூபத்தோடு காட்சி யளித்தான். அவனைக் கண்டதும் போயி திம்மி காடு ஏமிலொய்! எற்றய்யா! இந்தா சேபு? ஏவேளகு தொம்மிதி கொட் டிந்தி, நீவேமோ ஈ வேளகு ஒஸ்துன்னுவே. தொம்மீதி கொட்டே சரி கெல்ல நீவு இக்கட உண்டாலேசுமா." (என்ன ஓய்! எற்றய்யா! இவ்வளவு நேரம்? எந்த நேரத்துக்கு ஒன்ப தடித்தது, நீ என்னமோ இன்னேரத்திற்கு வாரயே. ஒன்பது அடிக்கும்போதெல்லாம் நீ இங்கிருக்கணும் தெரியுமா?) என்று ஒரு சீறு சீறிக்கொண்டே தன் கையிலிருந்த ஊது குழலை அவன் கையில் கொடுத்துவிட்டு அவனது பதிலையும் எதிர் பார்க்காமல் ஓடினான்.

ஊதுகுழல் சகிதம் கம்பளியை இழுத்துப் போர்த்துக் கொண்டு தரையில் படுத்துக் குறட்டைவிட்டான் போயி எற்றய்யா.

அத்துடன், நடு ராத்திரி 12 மணி என்றபொழுது எற் றய்யாவின் குரட்டை நின்றது; தூக்கந் தெளிந்தது. எழுந்து மெடல் பெட்டியை எடுத்துக் கக்கத்தில் அடக்கினான். அதற்கு மேல் கம்பளியை எடுத்துப்போட்டுக்கொண்டான். ஊதுகுழ லைக் கையில் எடுத்து பலமாய் ஊதினான். புற்றிலிருந்து ஈசல் கிளம்பியதைப்போல், மூலைக்கு மூலையாயிருந்த போலீஸாரெல் லாம் உருண்டுதிரண்டு ஓடி வந்தார்கள்.

"அதோ! அதோ!! அந்தப்பக்கம்தான் ஓடினான். ஓடுங் கள், பிடியுங்கள்"—என்று கத்திக்கொண்டே, தான் ஒருபக்கம் ஓடி மறைந்தான் போயி எற்றய்யா.

நாலாபக்கமும் ஓடி அலைந்து எந்த பக்கமும் யாருமில்லாத தைக்கண்ட போலீஸார், எந்தப் பக்கம் போனான்? பெட்டியை எடுத்துக்கொண்டு போனானா? எடுக்காமல் ஓடிவிட்டானா? முத லிய விவரமறியும் பொருட்டு எற்றய்யாவைத் தேடிக்கொண்டுத் திரும்பி வந்தார்கள். எற்றய்யாவைக் காணவில்லை. "அவனைத்

தேடிக்கொண்டு போயிருப்பான்; சரி, வரட்டும் பெட்டியிருக்கிறதா?”—என்று பெட்டியிருந்த விடத்தைப் பார்க்க பெட்டியுமில்லை மெடலுமில்லை. ஆனல் அங்கு ஒரு கடிதமும் சாவியுமிருந்தது. வெகு ஆத்திரத்துடன் அக்கடிதத்தைக் கையில் எடுத்துப் பார்த்தார் இன்ஸ்பெக்டர் கஜேந்திரம்; அக்கடிதம் கீழ்வருமாறு:—

சற்று முன் போயி ரூபத்தில் ஊதுகுழலை ஊதி, இந்தப் பக்கம் அந்தப்பக்கம் என்று உங்களெல்லோரையும் அலையவிட்டவனும், மெடல் பெட்டியை அடித்துக்கொண்டு போனவனும் நான்தான். உங்கள் 102ம் நெம்பர், பெரும் வேதனைப் பட்டுக்கொண்டு வீட்டிலிருக்கும் நிலைமையை உடனே சென்று கவனியுங்கள். இத்துடனிருக்கும் சாவியை எடுத்துக்கொண்டு சீக்கிரம் சென்று பூட்டைத்திறவுங்கள். எனக்காக வைத்ததை நான் எடுத்துக்கொண்டதில் உங்களுக்கேன் ஆத்திரம் ? இனி ஆகவேண்டியதைக் கவனியுங்கள்.

லக்ஷ்மி நரசு.

என்றதை வாசித்த இன்ஸ்பெக்டர் மனம் எவ்விதமிருந்திருக்கும்? என்பதை நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள்.

“என் சமீபத்தில் நின்று இதோ! இந்தப் பக்கம், அதோ! அந்தப்பக்கம், என்று காண்பித்தபோது அவன் கைகள் என் நெற்றியின் சமீபத்திலல்லவா இருந்தது. அப்போது ‘அவன் தான், என்று கொஞ்சம் தெரிந்திருந்தால்; நான் அப்படியே இரண்டு கைகளாலும் சேர்த்துப் பிடித்து ஹா ! அவனை என்ன பாடுபடுத்தியிருப்பேன்? எவ்வித புகழை யடைந்திருப்பேன்” என்று நினைக்கும்போது அவரது தேகமும் மனமும் ஒருங்கே சேர்ந்துத் துடியாய்த் துடித்தது. என்றாலும் அவரது இளகிய மனம் 102ம் நெம்பர் நிலைமையை எண்ணி அவைகளை ஒருவாறு மறந்துவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடச்செய்தது. அவர் பின்னல் எல்லோரும் ஓடினர்கள்.

பூட்டைத் திறந்து உள்ளே சென்று அவன் கட்டுகளையெல்லாம் அவிழ்த்துவிட்டு, விவரம் என்னவென்று கேட்டார்

கள். அவன் நடந்ததை நடந்தவண்ணம் சொன்னதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், அப்படியே பிரமித்துப்போனூர்.

* * * *

நான்கு தினங்களுக்குப் பிறகு ஒரு நாள், 'இன்ஸ்பெக்டர் கஜேந்திரம் அவர்களுக்கு' என்று ஒரு ரிஜிஸ்டர் பார்ஸல் வந்தது. வெகு அவசரத்துடன் அதைத் திறந்து பார்த்தார். அதில் தான் தயாரித்திருந்த ஒரு டஜன் மெடல்களையும் அணிந்துகொண்டு ஒருவன் கம்பீரமாய்க் காக்ஷியளிக்கும் போட்டோப் படத்தைக் கண்டார். அவர் வயிற்றில் என்னமோ ஒரு வித சங்கடத்தையுண்டுபண்ணிற்று. அதே சமயம், அதிலிருந்த ஒரு கடிதம் அவர் மனதைக் கவர்ந்தது. வெறுப்புடன் அதை எடுத்து வாசித்தார். அக்கடிதம் பின்வருமாறு:—

கடிதம்

மகா-ள-ள-ஸ்ரீ நுண்ணறிவுக்கழகத்தின் காரியதரிசியாக நடித்து, ஒரு டஜன் மெடல்களை எனக்கு அன்பாக சன்மானித்த கனம் இன்ஸ்பெக்டர் கஜேந்திர பிரபு அவர்களே! உங்கள் உத்திரவுப்படி அதிஜாக்கிரதையாய் நடந்து மெடல்களை அடைந்தேன். அவைகளை நான் அணிந்திருப்பதைத் தாங்கள் கண்டு களிக்கும் பொருட்டு, இதோ! என் போட்டோப் படத்தை (இந்தப் புஸ்தகத்தின் மேல் அட்டையிலிருப்பது இந்த போட்டோதான்) அனுப்பியிருக்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்பன்,
ஜெகஜ்ஜாலக் கள்வன்.

தங்களால் அளிக்கப்பட்ட இப்பட்டப்பெயர் கிடைத்துவிட்டமையினுல், இனி என் சொந்தப் பெயர் எதற்கு? என்று அதைத் தள்ளிவிட்டேன். என்றதைப் படித்து முடித்த இன்ஸ்பெக்டர், தள்ளிவிட்டாயா? ஊம், என்ன கம்பீரமாய் லக்ஷ்மிநாசு, லக்ஷ்மி நாசு, என்று எழுதிக்கொண்டு திரிந்தாய்.

என் வயிற்றெரிச்சலைக் கிளப்பும் உனது அகம்பாவப்பெயர் இன்று மறைந்துவிட்டதா?

நீ, எங்களுக்குப் பயந்து மறைந்து திரிந்தாலும், உனது ஆணவம் பிடித்தப் பெயர் மட்டும் எங்கள் முன்னால்—எந்த ரயிலில் பார்! லக்ஷ்மிநரசு, எந்த பஸ்ஸில் பார்! லக்ஷ்மிநரசு. கிழங்கள் முதல் குழந்தைகள் வாயிலெல்லாம் லக்ஷ்மிநரசு என்ற பெயராகத்தானே பரவிக்கொண்டிருந்தது. உனக்காக நான் எடுத்துக்கொண்ட முயற்சியில் இன்று உனது அகம்பாவம் பிடித்தபெயர் மறைந்து ஒழிந்தது. இன்னும் கூடிய சீக்கிரம் பயலே! நீயும் மறைந்தொழிவாய்! இப்போது உன் பிரதிபிம்பம் என் கையில் சிக்கியிருக்கிறது. கூடிய சீக்கிரம் நீயே! இப்படி என் கையில் சிக்கித்தவிப்பாய்! இப்படத்தைக்கொண்டே உன்னைச் சரிப்படுத்துகிறேன் பார்!—என்று கூறிக்கொண்டே வீராவேசத்துடன் அவ்விடத்தைவிட்டுச் சென்றார்.

---

## 9-வது அத்தியாயம்.

### தெப்போற்ஸவ காட்சி—திகைப்படைந்து போச்சி

லக்ஷ்மிபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு இன்று நடைபெறவிருக்கும் தெப்போற்ஸவக் காட்சியைக் கண்டு களிக்கும் பொருட்டு திரள் திரளாக ஜனங்கள் சென்றுகொண்டேயிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் "எங்கே போகிறாய்? என்ற கேள்வியும் "கிருஷ்ணன் கோவில் தெப்பத்திற்குதான்" என்ற விடையுமாக விருந்தது.

மாலை 7 மணி. கோவிலுக்கு எதிரிலமைந்துள்ள குளத்தின் கரை நாலா பக்கமும் ஒரே கும்பல் நிறைந்திருந்தது. குளத்தில் கலர்வாரியான எலக்டிரிக் பல்புகளால் நானாவித அலங்காரங்கள் செய்யப்பட்டு ஜெகஜோதியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்த தெப்பத்தின்மீது ஸ்ரீ கிருஷ்ணன் ராதா ருக்மணி சமேதராய் பவனி வந்துகொண்டிருந்தார்.

அந்த அற்புதக்காக்ஷியைக் கண்ணாரக் கண்டுகளித்தவர் சிலரும், நெருக்கடியின் காரணத்தால் காணமாட்டாமற் தவித்துத் தத்தளித்து ஜனத்தோடு ஜனமாய் மோதித் திண்டாடியவர் பலருமாக விருந்தனர்.

இதில், சாமர்த்தியமுள்ளவர்கள் எல்லோரையுமிடித்துப் பின்னால் தள்ளிவிட்டு, முன்னுக்குச் செல்கிறார்கள். சாமர்த்தியமற்ற கோழைகள் பலருடைய புடைப்பைத் தாங்கமாட்டாதவர்களாய் பின்னுக்கே செல்கிறார்கள். அந்த இனத்தைச் சார்ந்த பெண் ஒருத்தி, பலராலும் புடைக்கப்பட்டு நசுங்கலைத் தாங்கமாட்டாதவளாய் பின்னுக்கே சென்றுகொண்டிருந்தாள். அவளுக்கு சுமார் 15 வயதிருக்கும். கவிகளாலும் வர்ணிக்க முடியாத அவளது பேரழகைக் கண்கொட்டாது பார்ப்பவர் சிலரும், அவள் இளம்பிராய வடிவத்தைக்கண்டு திகைப்போர் சிலரும், அவளது ஆபரண வைபவத்தைக்கண்டு விழிப்போர் சிலருமாக பலரும் அவளையே விரைக்கப் பார்த்துக்கொண்டு முன்னுக்கு சென்றுகொண்டிருந்தார்கள். அவளுடைய தாய் தந்தை அண்ணன் தம்பி முதலியவர்களும் எதையும் கவனிக்காமல் தெப்பத்தின் மீதே நோக்க முடையவர்களாய் முன்னுக்கு சென்றுக்கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் தன்னையே நோக்குவதைக்கண்ட இளம் பெண் பெரும் லஜ்ஜைக்கொண்டவளாய் மேல் மேலும் பின்னுக்கே சென்றுகொண்டிருந்தாள். இவளைத் தொடர்ந்து இரு ஆடவர்கள் அவளுடன் பின்னுக்கே சென்றார்கள். பாவம்! அவளுடைய தாய் தந்தையர், உடன்பிறந்தாருக்கு மில்லாத சிரத்தை இவர்களுக்கேற்பட்டிருப்பதில் என்ன அனுகூலமோ? தெரியவில்லை. அவளின் பாதுகாப்பிற்காகவே அமைக்கப்பட்டவர்கள்போல், இரண்டு பக்கம் இரண்டுபேராய் நின்று அவளைக் கவனித்துக்கொண்டே அவளுடன் சென்றார்கள். இப்படிப்பட்ட பாதுகாப்பாளர் யிருக்கும்பொழுது, அவளைப்பற்றிய சிரத்தையின்றி அவளது பெற்றோர்கள் சென்றதில் என்ன ஆச்சர்யம்!

தன் பெற்றோரை வெகு தூரத்திற்கண்ட பெண்மணி கதிகலங்கியவளாய், முன்னுக்குச் செல்ல முயன்றாள். அது

சமயம், பின்புற மிருந்து வந்த ஒரு கை அவளது நாசியை அணுகிற்று. அக்கையிலுள்ள கைகுட்டையினின்று வந்த வாசனை அவளை மயங்கச் செய்தது. உடனே பிரக்ஞையற்றுச் சாய்ந்தாள். அதே சமயம் ஒருவன் அவளை அப்படியே இரண்டு கைகளாலும் ஏந்திப்பிடித்து சிறு குழந்தையைத் தூக்கிச் செல்வதுபோல், ஊம் வழிவிடுங்கள்! வழிவிடுங்கள்!!" என்று இரைந்து கூறி ஜனங்களை விலக்கிக்கொண்டு சென்றான். ஏமார்ந்த ஜனங்கள், நெருக்கடி தாங்காமல் மூர்ச்சித்தப் பெண்ணை யாரோ அவளுக்கு வேண்டியவரே அப்படி தூக்கிச்செல்லுகிறார், என்பதாய் எண்ணி அவனுக்குச் சகாயமாய் வெகு சீக்கிரம் விலகி வழிவிட்டார்கள். சமீபமாய் ஓர் விடத்தில் தயாராய் வைக்கப்பட்டிருந்த மோட்டாரில் அவளை ஏற்றிக்கொண்டு காற்றாய் பறந்துச் சென்றான், காரியத்திலேயே கண்ணாயிருந்த ஒரு காரியஸ்தன்.

திகைத்து நின்ற பெருங்கூட்டத்தில் ஒருவர், "பாவம்! சுகவாசியான பெண், இந்த நெருக்கடியைத் தாங்கமாட்டாமல் மூர்ச்சையாகிவிட்டாள்" என்றார். மற்றொருவர் "யாரவள்" என்றார். இன்னொருவர் "யாரோ தெரியவில்லை" என்றார். என்ன! அப்படி சொல்லிவிட்டீரே! அவளைத் தெரியவில்லையா? நமது பஞ்சாக்ஷர பிரபுவின் மகளல்லவா அவள்" என்றார் ஊரறிந்த ஒரு பேர்வழி.

இந்தச் சொல் காதில் விழுந்ததும், வெகு தூரத்தில் நின்றிருந்த பெண்ணின் தகப்பனார், திரும்பிப் பெண்ணைப் பார்த்தார். பெண்ணைக் காணவில்லை. "சரோஜா எங்கே?" என்று கேட்டுக்கொண்டே ஓடிவந்து மனைவி மக்களை விளித்தார்.

அதுவரையில், பக்தியிலோ, வேடிக்கையின் மீதோ லயித்திருந்த தாய் பேந்தப் பேந்த விழித்தாள்.

உடனே, சரோஜா! சரோஜா!! என்று கூப்பிட்ட வண்ணம், முன்பு தன் பெயரைச்சொல்லி அவர் மகள் என்று குறிப்பிட்டாரே! அவரிடம் ஓடிவந்து "எங்கே சரோஜா" என்றார். அதைக்கேட்ட அப்பெரியார் "என்ன! உங்களுக்குத் தெரியாதா?" என்று பெருமூச்செறிந்தார். இதைக்கேட்ட தந்தை

தன் மகள் நெருக்கடியில் குளத்தில் தள்ளப்பட்டாளோ? என்றெண்ணி விலவிலத்துப்போனவராய் "என்ன சங்கதி? விவரமாய்கூறுங்களேன்" என்று அழுகைகலந்த குரலில் பரிதாபமாய்க் கேட்டார்.

வேறு ஒன்றுமில்லை. சற்றுமுன் உங்கள் குழந்தையை இங்கு பார்த்தேன்; அதன் பிறகு அவள் மூர்ச்சித்து விழுந்து விட்டதாகவும் அவளை ஒருவர் தூக்கிச் சென்றதாகவும் கேள்விப்பட்டேன். சுகவாசியான உங்கள் குழந்தை இந்த நெருக்கடியைத் தாங்காமல் மூர்ச்சித்து விழுந்திருக்கும், அதை நீங்கள்தான் சிகிச்சைக்காக அவசரமாய் தூக்கிச் சென்றிருப்பீர், என்றும் நினைத்தேன். அவளைப்பற்றிய விவரமே உங்களுக்குத் தெரியவில்லை என்றால், அவளைத் தூக்கிச் சென்றவன் யார்? என்றார்.

உடனே, அங்கிருந்தவர்களில் ஒருவர் "ஓ! தெரிந்தது! அந்த போக்கிரி கள்ளப்பயல், லக்ஷ்மிநராசுவின் வேலைதான் இது!"—என்றார்.

"ஆம், சந்தேகமில்லை. அந்த படவாப்பயல் வேலைதான் இது" என்றார் மற்றொருவர்.

"அவளாக மூர்ச்சித்திருக்கமாட்டாள். அவன்தான் மூர்ச்சிக்கச் செய்து கடத்திச் சென்றிருப்பான்" என்றார், யோசனை சொல்வதில் நிபுணர் போன்ற ஓர் யூகசாலி.

இவைகளைக்கேட்ட அப்பெண்ணின் தந்தை அப்படியே திகைத்துப்போனார். அவர் மட்டுமா திகைத்துப்போனார்? இதைக் கேட்டவர்கள், பார்த்தவர்கள் எல்லோரும் அப்படி அப்படியே திகைத்து நின்றுவிட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி கம்பீரமாய் பவனிவந்துக்கொண்டிருந்த தெப்பமும் அப்படியே திகைப்படைந்து நின்றுவிட்டதென்றால், அதிகம் சொல்வானேன். நிமிஷத்தில் இச்சங்கதி காட்டுத்தீப்போல் ஊரெங்கும் பரவிவிட்டது. ஒவ்வொரு டிவிஷன் போலீஸாரும் மோட்டார்கார்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் குதிரைகள் மீதுமாக மூலைக்கு மூலையாக பலதிக்குகளிலும் பறந்து சென்றார்கள்.

அவர்களின் விடா முயற்சியின் பயனாய், கள்வன் செல்லும் மார்க்கத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள். வாயுவேக மனோ வேகமாய் மண்மாரி பொழிந்துக் கொண்டு செல்லும் கள்வனின் காரை வெகு சமீபத்திற் கண்ட போலீஸார் "ஹே! துஷ்டா! எங்கே ஓடுகிறாய்? நில்! இம்முறை நீ தப்ப முடியாது!" என்றெல்லாம் கூறிக்கொண்டே வேகமாய் பின்தொடர்ந்தார்கள்.

"பிடித்துக்கொள்ளுங்கள்! இதோ! நானும் இடைமறித்துத் தடுத்துவிடுகிறேன்" என்பவைபோல், அங்கிருந்த ரயில்வே லெவல்கிராஸிங் கேட்டும் சடேரென்று மூடிக்கொண்டது. இதனைக்கண்ட லக்ஷ்மிநரசு, அதற்காக பிரத்தியேகமாய் அமைக்கப் பட்டிருந்த விசைக்கருவியை உபயோகிக்க, உடனே மேலெழும்பிய கார், கேட்டிற்குமேல் 4 அடி உயரத்தில் பாய்ந்து சென்றது. அதற்கடுத்தபடி ரயிலும் வந்துசென்றது. அதன் பிறகு கேட்டுத் திறக்கப்பட்டு போலீஸார் வந்து பார்த்தபோது, அவன் சென்றதிசை எதுவென்பதையு மறிந்துகொள்ள முடியாதவர்களாய்த் திகைத்து நின்றுவிட்டார்கள்.

* * * *

இரவு 10 மணி. லக்ஷ்மிபுரத்திலுள்ள கோஷா ஆஸ்பத்திரியின் அர்ஜண்ட் கேஸிற்காக அமைக்கப்பட்டிருந்த கேட்டின் முன் ஒரு டாக்ஸிக் கார் வந்து நின்றது. அதன் டிரைவர் காரை நிறுத்திவிட்டு அதனின்றும் யாரோ இறங்கவேண்டியவர்கள் இறங்குகிறார்களா—என்று எதிர்பார்த்த வண்ணம் சிறிது நேரமிருந்தான். அதன் பிறகு "ஸார்! ஏன் இன்னுமிறங்காமலிருக்கிறீர்கள்? ஆஸ்பத்திரி வந்துவிட்டதே! இறங்குங்கள்!" என்றான். பதில் ஒன்றுமில்லாததைக்கண்ட டிரைவர், மற்றும் ஒரு முறை, "ஸார். ஹாஸ்பிடல் வந்துவிட்டது, இறங்குங்கள்" என்றான். அதற்கும் பதிலில்லை.

"என்ன ஸார்! தூக்கமா?" என்ற கேள்வியுடன் திரும்பிப் பார்த்தான். இருட்டில் ஒன்றும் தெரியாமையினால், ஸார்! ஸார்!! என்று பலத்துக்கத்தினான். ஒன்றும் பதிலில்லை. வெகு நேரமாய் டிரைவர் படும் அவஸ்தையைக்கண்டு மனமிறங்

கிய கேட்டுக் காவற்காரன் "யாரய்யா அது! கார் நிண்ணு எம்மாநேரமாச்சி, பேசாமே யிருக்கிங்களே! அர்ஜண்டு கேஸைக் கொண்டாந்தவங்கோ, இப்படியா தூங்கறது? நல்ல வேடிக்கே" என்று கூறிக்கொண்டே கதவைத்திறந்தான். அதன் மூலம் வெளிச்சம் உள்ளே சென்றதால் விவரமறிந்த டிரைவர் திடுக்கிட்டுக் கீழே யிறங்கிப் பின்புறத்தை உற்று கவனித்தான்.

ஹா! இதென்ன மோசம்! அந்த ஆள் எங்கே சென்றான் ? இந்த பெண்பிள்ளை உயிருடன் இருக்கா? இறந்துக் கிடக்கா?" என்று உளரித் தவித்தான்.

காவற்காரனால் விஷயமறிந்த அன்றய முறை லேடி டாக்டரும் சில நர்ஸுகளுமாக ஓடிவந்தார்கள். உடனே லேடி டாக்டர் மோட்டாருக்குள் சென்று பெண்ணைப் பரிசோதித்து மயக்க மருந்தால் மயங்கிக்கிடக்கிறாள். இன்னும் சிறிது நேரத்தில் பிரக்ஞை வந்துவிடும் என்பதாய் கூறிக்கொண்டே, டிரைவரைப் பார்த்து "என்ன சங்கதி? யார் இந்தப் பெண் ?" என்றாள்.

டிரைவர்:—பிள்ளையார் கோவில் தெருவிலுள்ள ஓர் மனிதன், தன் மனைவி பிரஸவ வேதனைப் படுவதாகவும் கோஷா ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டுமென்றும் என்னை அழைத்துக் கொண்டு சென்றார். உடனே இரண்டு ஆண்பிள்ளைகளாகச் சேர்ந்து இந்தம்மாளைத் தூக்கிக்கொண்டு வந்து காரில் ஏற்றினார்கள். என்னை அழைத்து வந்தவர் மட்டும் காரில் ஏறிக்கொண்டு 'ஊம் விடுசீக்கிரம்' என்றார். நான் சிறிது தூரம் வேகமாய்க் காரை விட்டுக்கொண்டு வந்தேன். பிறகு அம்மனிதர் 'கார் வேகமாய்ச் செல்வதால் அதிர்ச்சியைத் தருகிறது. நிதானமாய்ச் செலுத்து' என்றார். நானும் நிதானமாய் விட்டுக் கொண்டு வந்தேன். இங்கு வந்து பார்த்தபோது அம்மனிதனைக்காணவில்லை.

லேடி டாக்டர்:—ஓ! தெரிந்தது. இன்று மாலை தெப்போற்ஸவத்தில் ஒரு பெண்ணை திருடன் தூக்கிக்கொண்டு போய் விட்டான், என்றார்களே! அந்தப்பெண் இவள்தான் போலும். பாவம்! அவள் அணிந்திருந்த நகைகளில் கழுத்திலிருந்த ஒரு

நெக்லேஸ் மட்டும் 50,000மாம். திருட்டுப்பயல்! கார் நிதான மாய் வந்தபோது இறங்கிவிட்டிருப்பான். ஊம் சரி, நீ இப் பெண்ணை அப்படியே போலிஸ் ஸ்டேஷனில் கொண்டுசென்று கம்பிளேயிண்ட் கொடுத்துவிட்டுச் செல்!

எதோ! உன் கார் நெம்பர், உனது பெயர் முதலியவை களைச்சொல்லு, என்று டைரியில் குறித்துக்கொண்டாள். டிரைவர், "அட கஷ்டகாலமே! சிவனே! என்று என்விதியைத் துலைத்துக்கொண்டு நானிருந்தால், எனக்கு வருவதெல்லாம் இப்படியா வரவேண்டும்" என்று தன் பொல்லாத வேளையை நொந்துகொண்டே போலீஸ் ஸ்டேஷன் பக்கம் காரை நடத்தினான்.

---

## 10-வது அத்தியாயம்.

### குறத்தியின் குறி—சொன்னதெல்லாம் சரி

லக்ஷ்மிபுரத்திற்கடுத்த சாரதா நகரிலுள்ள, சௌந்தர விலாஸ் மாளிகையின் முன்புறத்து வராண்டா ஒன்றில் பாட்டி சௌபாக்கியம்மாள், தன் சகாக்களோடு சொக்கட்டான் விளை யாடிக்கொண்டிருக்கிறாள். 10-வயது சுந்தரி என்னும் சிறுமி பாட்டியின் கைவரிசையாக அமைந்து ஆட்டத்தை வெகு ஸ்வா ரஸ்யப்படுத்துகிறாள்.

சுந்தரி:—பாட்டி! எதோ! ஒரு தொகைப் போடுங்கள், சொல்றேன்.

பாட்டி:—என்ன! ஒரு தொகையா வேணும்?

சுந்தரி:–ஆம்! பாட்டி! போடுங்க நீங்கோ! நான் கேட்டதை மட்டும் சரியாய் போடுங்கோ, அத்தையைத் துரத்திடுறேன், மாமியை விரட்டிடுறேன். பாருங்களேன் நீங்கோ!

பாட்டி:—ஏதோ! அடே அப்பா! பழனியாண்டவா? எங்க சுந்தரி கேட்டமாதிரியாய் விழவேண்டுமே!—என்று பாட்டி மனமாரக் கடவுளை வேண்டிக்கொண்டு பாச்சிகையை உருட்டினுள்.

சுந்தரி:—ஆ! அதோ! நான் கேட்டமாதிரிதான்! சரியாய் நான் கேட்டதுதான்! போதும் பாட்டி! அத்தையைத் துரத்தி விட்டேன். மாமியை விரட்டிவிட்டேன். ஆட்டம் நமதுதான். என்று ஆரவரிக்கும் சுந்தரியின் கொண்டாட்டத்தைச் சொல்ல முடியாதிருந்தது. அத்துடன் பாட்டியின் சிரிப்பும் சந்தோஷமும் பார்க்க வெகு வேடிக்கையாக விருந்தது. பாவம்! அத்தை மாமி அவர்கள் ஏமாற்றத்தைப் பார்க்கப் பரிதாபமாகவிருந்தது.

மாமி:—என்ன சுந்தரி! இப்படி வெட்டி வெட்டி வைத்துக் கொண்டே யிருக்கிருயே!

அத்தை:-அடேயப்பா! சுந்தரியோடு ஆடி நம்மால் ஜெயிக்க முடியுமா?

சுந்தரி:—அத்தை! மாமி! உங்களால் முடியாது ஓடிடுங் கோன்னு அப்பவே சொன்னேனே!

மாமி :—பாட்டி, போடுகிற பந்தயத்திலே யிருக்கிறது. பாட்டி பந்தயம் போடாவிட்டால், சுந்தரி என்ன பண்ணுவாள். பாட்டியைப் பாரு! கேட்டது கேட்டமாதிரியாய் பந்தயம் போடுகிறதை!—என்று அத்தை மாமி கைவரிசைக்கு ஆட்டத்தின் மீதே உற்சாக மில்லாதிருக்கும் சமயம், வீதியிலிருந்து ஒரு இனிமையான ராகம் வருகிறது. மாமி, "ஓ! அதென்ன" என்று கண்ணைக்குழித்துக்கொண்டு வீதியை நோக்கி கவனிக்கிருள். அச்சமயம், கீழ்படிப்பாட்டைப் பாடிக்கொண்டு குறத்தி ஒருத்தி வீதியில் செல்கிருள்.

### குறத்திப் பாட்டு

ஊசிமணி வாங்கலேயோ ஆச்சிமாரே, உங்க
கைப்பார்த்துக் கொள்ளலேயோ அக்கேமாரே
பின்னேவரும் சேதிதனே முன்னேசொல்லுவேனே
நான், நடந்துபோன விவரங்களைத் தெரிந்து சொல்லுவேனே
வாருங்கோ குறிகேளுங்கோ மனந்தேருங்கோ

கலியாணமாகாத காரிகைக்கு வெகு, சீக்கிர
மணமுடிய விதம் சொல்லுவேன்.
வாழாத பெண்களை நான் வாழும்படிச்செய்வேன்
தீராத வியாதிகளைத் தீரும்படிச் செய்வேன்

வாருங்கோ குறிகேளுங்கோ மனந்தேருங்கோ

மக்களைப்பெருத மங்கையற்கு, இன்றே
மலடு ஒழியும்படி நான் செய்குவேன்.
காணுத வஸ்துகளைக் கண்டு சொல்லுவேனே
முன்னே, தேசாந்திரம் போனபேரை திரும்பச்செய்யிவேனே

வாருங்கோ குறிகேளுங்கோ மனந்தேருங்கோ

(இப்பாட்டை, "கூடை முறம் கட்டுவோம்" என்ற மெட்டில் ஆரம்பித்து, பின்னடியை வேறுவிதமாய் முடிக்கவும்.)

அத்தை:—ஓ! நான் கேள்விப்பட்டேன்; ஒரு குறத்திக் குறி சொல்லுகிருள், சரியாயிருக்கிறதென்று, அது இவள்தானு?

மாமி:—ஆம், குறத்திகள் சொல்லும் குறி, எப்போதும் சரியாயிருக்குமே!

அத்தை:—அம்மா! நீங்கோ, உங்கபிள்ளைக்காக எத்தனையோ பணத்தை சிலவு செய்து யாராரையோ கேட்டீங்களே! இவளைக் கொஞ்சம் கேட்டு பாருங்களேன். சுந்தரி! ஓடிப்போய் கூப்பிடம்மா அவளை.

சுந்தரி:—(ஓட்டமாய் ஓடி) அடி! அடீ குறத்தி! இங்கே வா! இந்த பாட்டீம்மா கூப்பிடுராங்கோ, உனக்கு நெரய காசு கொடுப்பாங்கோ வா!

குறத்தி:—யாராயா! என்னே கூப்பிட்டது?—என்று கேட்டுக்கொண்டே பாட்டியின் அருகில் வந்து கூடையை இறக்கி விட்டு தூரமாய் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டாள்.

அத்தை:—அடி குறத்தி! பாட்டீம்மாவுக்கு சரியான குறி சொன்னையானு நல்ல வெகுமதி வாங்குவே தெரியுமா?

குறத்தி:—என்ன ஆயா! அப்பிடி சொல்ரே? நம்ம சிவகாமி ஆச்சி அந்த பாவாடேகாரி சுடுகாடு காத்தா இவங்கெல்லாம் அப்பிடி தப்புகுறி சொல்லுவாங்களா?-என்று கூறிக்கொண்டே கூடையிலிருந்த ஒரு கோலேக் கையில் பிடித்துக்கொண்டு, கீழ் படிப் பாட்டைக் கட்டபொம்மை மெட்டில் பாட ஆரம்பித்தாள்.

மங்களமாய் குறி சொல்லுவேனே
மனக்குறை தன்னை நான் வெல்லுவேனே, அம்மா
மனக்குறை தன்னை நான் வெல்லுவேனே.
பதினைந்து வயது பாலனம்மா
பள்ளிக்குச் சென்ற சிறுவனம்மா, அவன்
பள்ளிக்குச் சென்ற சிறுவனம்மா.
உயிரோடு மைந்தனைப் பறிகோடுத்து
உள்ளம் வெதும்பி தவித்தாயம்மா, நீ
உள்ளம் பதறியே நின்றாயம்மா.

மாமி:—பாட்டி! பார்த்துகோங்கோ! இதுவரையில் நீங்கோ பார்த்த ஜோஸியர்களெல்லாம், முன்னே நீங்கோ சங்கதியை சொல்லிக் கேட்ட பிறகுதானே, அவர்கள் சொல்லுவார்கள். இவளைப் பார்த்தீர்களா ? நீங்கோ வாயைத்திறந்து ஒன்றும் சொல்லாத 'முன்பே, உங்கள் மனதிலுள்ளதை அப்படியே சரியாய்ச் சொல்லிவிட்டாளே!

அத்தை:—அடி குறத்தி! நீ, சொல்றதெல்லாம் சரியாத்தானிருக்கிறது. ஆனால் இந்த பாட்டு ராகம் ஒண்ணும் வேண்டாம் பிளெயின விஷயத்தை மாத்திரம் சொல்லு பார்க்கலாம்.

சுந்தரி :—பிளெயினு கிளெயினுனுக்கா அவளுக்கென்ன தெரியும்? பாவம்! அடி குறத்தி! நீ பாட்டு ஒண்ணும் பாடாமே சாதாரணமா சங்கதியை மட்டும் சொல்லு பார்க்கலாம்.

பாட்டி:-(கண்களில் நீர் கலங்க) ஏண்டிம்மா! அவள் சொல்றது நமக்குப் புரியலேயா என்ன? நன்னாதான் புரியுதே; அவள் சொல்றவழக்கம்போலே சொல்லட்டுமே!

குறத்தி:—பரவாயில்லே ஆயாலே! நான் சும்மாதான் சொல்றேன்.

13 வருசத்துக்கு முன்னே ஒரு நாள் ஆயா! உன்மவன் படிச்சிபுட்டு திரும்பி வாரப்போ வழியிலே ஒரு மந்திரக்காரன் மாயவேடிக்கே ஜாலவேடிக்கே எல்லாம் பண்ணிகினு இருந்தான். அதே ஓம்மவன் ஓடிப்போயி பார்த்தது. புள்ளே யில்லாத அந்த மந்திரவாதி பாவி, அயகான ஓம் புள்ளே மூஞ்சிலே களே யைப் பார்த்து, இந்தப் பையனே நம்போ கொண்டு போயி வளக் கணு மிண்ணு மனசுலே நினேச்சிட்டான். உடனே வீபூதி பை யிலே கையைப் போட்டுக் கொஞ்சம் வீபூதியை எடுத்து இந்த பையனுக்கு திஷ்டி ரொம்ப, திஷ்டி ரொம்பண்ணு சொல்லி கினே பையன் தலேமேலே போட்டான். அப்பறம் அவன் எழுந்து போனு; அவனோடே கூடவே போயிடுதாயா ஓம் புள்ளே.

அத்தை, மாமி:—ச்சு, ச்சு, ச்சு ஊம் (பெருமூச்சு விட்டார் கள்).

பாட்டி:—(கண்ணீர் வடித்த வண்ணம்) இப்போ எங்கே யிருக்கான்? எப்படியிருக்கான்? அதையெல்லாம் சித்தே சரியா சொல்லேன்?

குறத்தி:—இதோ! இந்தாபுறம் வடக்கே தேசத்திலே, பை ராகிங்கோ செந்நாசிங்கோகூட சேந்துகினு கோதுமெ அடை யே தின்னூட்டு குண்டுகல்லு மாதிரியாக் கொண்டாட்டமா யிருக்குது ஆயா! உம் புள்ளே. அதுக்கென்ன கொருச்சிலு ?

பாட்டி:—அந்தப் பிள்ளையை என்னண்டே வரவழைக்க முடியாதா உன்னலே?

குறத்தி:—அம்பிட்டு மாத்திரம் செய்ய என்னலே முடியா தே போனு ? அப்புறம் இந்த கூடே என்னாத்துக்கு ? இந்த கோலு என்னாத்துக்கு? இந்த நாயி இல்லெடத்தே விட்டுட்டு இங்கெல்லாம் எதுக்கு வரணும்?

அத்தை!—அடியம்மா! அப்படின்னுக்கா, உனக்கு வேண்டி யதே கேட்டு வாங்கிக்கினு செய்யவேண்டியதைச் சீக்கிரமா செய்யேன்!

பாட்டி :—அடியம்மா! என் குறையைத் தீர்க்கவந்த குல தெய்வமே! உனக்கு என்னவேணுமோ, தாராளமா கேட்டு வாங்கிக்கினு என் குழந்தையே சீக்கிரம் என்னண்டே வந்து சேர்ந்துடவேண்டிய வழியைச் செய்யடிம்மா!

குறத்தி:— ஆயா, நம்போல்லாம் இவ்வளக்கொடு, அவ்வளக் கொடுன்னு கண்டிச்சிக் கேக்க மாட்டோம், பித்தலாட்டம் செய்ய மாட்டோம். ஏதோ ஒரு வேளைச் சாப்பாட்டுக்கு ஆயா! அரெப்படி அரிசி, ஒரு அணு தெச்சினே, அம்பிட்டுதான்.

பாட்டி:—அடியம்மா! அரைப்படி அரிசியல்ல, ஒரு படி அரிசித்தறேன். ஒரு அணு அல்ல, ஒரு ரூபா தக்ஷிணைத் தறேன். நீ செய்யிறகாரியம் பலிக்கட்டும். அப்புறம் ஒரு நாள் வா! உனக்கு வேணது உண்டு.—என்று கூறிக்கொண்டே முறம் நிறைய அரிசியும் கற்றை வெற்றிலைப்பாக்கு ரூபாய் ஒன்றையும் எடுத்துக்கொண்டுவந்து "ஊம் இந்தா! இன்னும் என்னென்ன வேணும் சொல்லு?

குறத்தி:—அதெ! இந்தகூடையிலே கொட்டு ஆயா! வேறே ஒண்ணுமில்லே, இம்மட்டு கர்பூரம் சாம்பிராணி, மூன்று மஞ்சா, 9 மொளுவு அம்பிட்டுதான் எனக்கு வேண்டியது.

பாட்டி சென்று அவைகளைக் கொண்டுவந்ததும் குறத்தி, "ஒரு செம்பிலே தண்ணி, ஒரு தட்டிலே கொஞ்சம் நெருப்பு இம்பிட்டுதான் ஆயா!"

பாட்டி மறுபடியும் சென்று அவைகளைக் கொண்டுவந்து கொடுக்க, குறத்தி அந்த 'கற்பூரம் சாம்பிராணியை எறித்துக் கொண்டே, கண்களை மூடி வாயில் எதையோ சிறிது நேரம் முணுமுணுத்தாள். பிறகு கண் விழித்து, மஞ்சள் மிளகு சாம்பிராணி முதலியதைக் கையிலெடுத்து ஏதோ ஒரு மந்திரத்தை வாயிற்குள் ஜபித்துக்கொண்டே கூடைக்குள் வைத்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு அதைக் கையிலெடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்டு "இந்தா! ஆயாளோ! இதை ஒன்பது நாளைக்கி, காலையிலே எழுந்து குளிச்சி முழுவி உன் இஷ்ட தெய்வத்தே பூசே பண்ணி, இந்த சாம்பிராணியை தினம் கொஞ்சம் நெருப்பு மேலே போட்டு, தினம் ஒரு மொளுவா எடுத்து சாம்பிராணி தூபங்காட்டி கெணத்துலே போடு. இந்த 3 மஞ்சளே, ஒரு மஞ்சளை யெடுத்து மூணு நாளைக்கிக் கல்லு மேலே வெச்சி எழச்சி மூணாந் நாள் கேணியிலே போட்டுடு. இந்தமாதிரி மூணு மஞ்சாவையும் 9 நாளைக்கிச் செய்யி. இந்த

சாம்பிராணி எறிய எறிய, இந்த மஞ்சா எழைய எழைய, இந்த மொளுவு தண்ணிலே ஊர ஊர ஓம் பிள்ளே மேலே மந்திரம் ஒழிஞ்சி, மயக்கந் தெளிஞ்சி, ஊட்டுமேலே ஞாபகம் உன்மேலே ஞாபகம் எல்லாம் வந்துடும். சொல்லாமே பொறப்பட்டு நில்லாமே வந்து எண்ணி 21 நாளேயிலே உன்னண்டை வந்து சேந்திடும். இம்பிட்டுதான் எம்மந்திரம் பாத்துக்கோ! நான் போய் வரட்டா ஆயாலே!" என்று கூறிக்கொண்டே கூடையை இடுக்கிக்கொண்டு புறப்பட்டுவிட்டாள். பாட்டியும், போய் வாடியம்மா! புண்யவதி! மவராசியா போய்ட்டு வா! அப்புறம் ஒரு நாள் நீ, அவசியம் வரணும் தெரியுமா? மறந்துடாதே! என்று வாயார வாழ்த்தி அனுப்பிவிட்டு, மறு நாள் முதல் வெகு சிறத்தையோடு, அவள் கூறிய விதமெல்லாம் செய்து வந்தார், பாட்டியம்மாள்.

* * * *

ஒருநாள் மாலே 5 மணி. சுந்தரி அழகாய் டிரஸ் பண்ணிக்கொண்டு உல்லாசமாய் உலாவி வரும் பொருட்டு வெளியில் வந்தாள். வந்தவள் அங்கு உலாவிக்கொண்டிருந்த ஒருவரைக் கண்டுத் திடுக்கிட்டாள். நல்ல 6 அடி உயரமும் அதற்குத்தக்க பருமனும் தங்க நிறத்தோடு பொலிவு பெற்ற முகச் சாயலுங் கொண்ட ஓர் கம்பீர புருஷன், காவி அங்கி ஒன்றை நெடுக அணிந்து, தலேயில் ஒரு ஜாண் நீளமுள்ள மயிரை நேராக வகுத்து கழுத்தளவு சுருண்டு தொங்கும் ஜிலுபாவுடன், டக்டக் கென காலிலுள்ள மிதியடி ஓசைப்பட உலாவிக்கொண்டிருந்தார். அழகு வடிந்த முகத்தில் கருத்தடர்ந்து வளர்ந்திருந்த பெருத்த மீசை, அவர் வீரம் பொருந்திய தீர புருஷர் என்பதை விளக்கியது. அவர் நெற்றியில், சந்திர பிரை வடிவமாய் மூன்று விரல் அகலத்தில் இட்டிருந்த சந்தனப்பொட்டைக் கண்டவர்கள் இவர் ஜங்கமரோ! சுவாமியாரோ! என்று எண்ணும்படி யிருந்தது. அவர் வாயில் எதையோ முணுமுணுத்துக்கொண்டே உலாவிக்கொண்டிருந்தார். சுந்தரி அம்முணுமுணுப்பைக் கவனிக்கிருள்.

**முணுமுணுப்பு:**—ஆம், என் அன்னேயின்மீது இவ்வித பிரேமைகொண்டு பார்க்கவந்தேனே! வயோதிகமடைந்த என்

அன்னை உயிருடன் இருப்பார் என்பது என்ன நிச்சயம்? ஒருக்கால் அன்னை இறந்துவிட்டார் என்று கேட்க்க நேர்ந்தால் என்ன செய்வது? ஏன் எனக்கு இதுவரையிலில்லாத ஆசை உதித்து இவ்வித வேதனைக்குள்ளாக்கியது?—இவைகளைக் கேட்ட சுந்தரி ஒரே ஓட்டமாய் ஓடி "பாட்டி! பாட்டி!! இதோ உங்கள் காணாதுபோன பிள்ளை வந்துவிட்டாரே! குறத்தியின் குறி சரியாகிவிட்டதே! வாருங்கள்! வந்து பாருங்கள்!" என்று ஆத்திரத்தோடு கூறினாள். இதே நினைவாக விருந்த பாட்டி ஒரே வேகமாய் வந்து உற்று கவனிக்கிறார். உடனே சுவாமியார் "ஹா! என் தாயே! உம்மை உயிருடன் பார்க்கும்படியான பாக்கியம் பெற்றேனே! நானே தன்யன்" என்றெல்லாம் கூறி தாயைக் கட்டிப்பிடித்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்.

"ஹா! என் கண்மணி மைந்தா! என் அன்பே! என் ஆருயிரே! என்னை இப்படித் தவிக்கவிட்டு, எங்கேயடா சென்றிருந்தாய்? எந்தப் பாபிகள் நகையைக் கழற்றிக்கொண்டு உயிர் வதைசெய்துவிட்டார்களோ? என்று எண்ணியெண்ணி ஏங்கித் தவித்த இந்த மகா பாபிக்கு உயிருடன் உன்னைக் காணும் பாக்கியம் கிடைத்ததே! மாதா செய்தது மக்களைக் காக்கும் என்பார்களே! அதன் உண்மை இதுதானா? அப்படி உன்னைக்காக்கும்படி நான் என்ன புண்ணியஞ் செய்தேனோ தெரியவில்லையே!

மகன்:–நீங்கள் நினைத்ததுபோல், என்னை அப்படி நகைக்கு ஆசைப்பட்டவர்கள் அழைத்துக்கொண்டு போகவில்லையம்மா! மக்கட்பேறடையாத ஓர் உத்தமர் என்னை எப்படியோ மயக்கி, அழைத்துக்கொண்டுபோய் வெகு அன்பாய் வளர்த்து வந்தாரம்மா! அவர் மனைவி என்னிடத்தில் காட்டிவந்த அன்பினால், சாக்ஷாத் என் அன்னை அவர்களே என்று எண்ணி உங்கள் எல்லோரையும் க்ஷணத்தில் மறந்துவிட்டேனம்மா! இப்போது சுமார் 20 நாளாக திடீரென உங்கள் ஞாபகம் வந்து, நமது அன்னையை எப்பொழுது காணப்போகிறோம் என்று ஒரே பிரமையாக விருந்ததம்மா!—என்று சொன்னதைக்கேட்ட,

தாய்:—உத்தமர்! வெகு நன்றாய் சொன்னாய்! தாயினிடமிருந்த குழந்தையைப் பிரித்த மகா சண்டாளனவன். அவனை

உத்தமர் என்று புகழ்கிருயே! நாசமாய் போனவன் எந்த ஜென்மத்தில் என்ன பாபம் செய்தானே? இந்த ஜன்மத்தில் மக்கட் பேறடையா மாபாவியானுன். தாயின்கீழ் குழந்தையைப் பிரித்து என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்ட வினை அவனை ஏழு ஜென்மத்திலும் மக்களை பிரிந்த மாபாவியாக தவிக்கச் செய்யாதா ! உத்தமர், நீ என்ன செய்வாய் ? அவனது மந்திரம் உன்னை அப்படிச் செய்கிறது. இவன் மந்திர பலம் இவனுக்கிருந்தால், எனக்குக் கடவுளில்லையா? அவர், குலதெய்வம் போன்ற ஒரு குறத்தியைக்கொண்டு வந்து விட்டார். ஹா ! அவள் மந்திர மகிமையை என்னென்று சொல்வேன்! எண்ணி 21 நாள், என்ருள். இன்று 20 நாள்தான் ஆயிற்று. 20 நாளாக திடீரென்று ஞாபகம் வந்து ஓரே பிரமையாகவிருந்தது என்ருயே! அப்படி உனக்கு ஞாபகம் உண்டாக்கியது அந்த குறத்தியின் செயல்தான். அதை விவரமாய் சொல்கிறேன் உள்ளேவா! என்று பிள்ளையின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போய் ஒரு சோபாவில் அமரச் செய்தார் நமது பாட்டி.

மகன்:—அம்மா! அண்ணு எங்கு சென்றிருக்கிருர் ? குழந்தை ராஜசேகரன்—என்று இன்னும் ஏதோ சொல்வதற்குள்,

தாய்:—ஹா! அவன் சென்று 5 வருஷங்கள் ஆகிவிட்டதே! அந்த அநியாயத்தை என்னென்று சொல்லுவேன்!—என்று பிரலாபிக்க ஆரம்பித்தார். இதைக்கேட்ட,

மகன்:—ஹா! அண்ணு! வயோதிகமடைந்த தாயார் விஷயத்தில்தான் எனக்கு இவ்வித சந்தேக முண்டாயிற்று. உம்மைப்பற்றி நான் கிஞ்சிற்றும் எண்ணவில்லையே! நான் எதிர்பாராத விதமாகவும், நான் நினைத்ததற்கு எதிர்மாறாகவும் உங்களையா பார்க்கக் கொடுத்துவையாத பாவியானேன்? தெய்வமே! இதென்ன சோதனை!—என்று கதறினர். சிறிது நேரத்திற்குப் பிறகு தன்னைத்தான் தேற்றிக்கொண்டு, தாயிக்கும் தேருதல் சொல்லி அமர்த்தினர்.

மகன்:—அம்மா! குழந்தை ராஜசேகரன் மன்னி முதலியவர்கள் குசலமெப்படி? அவர்கள் எங்கே?

தாய்:—ராஜசேகரன் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்து சுகமாய்த்தான் இருக்கிறான். டென்னிசு (Tennis) க்குச் சென்றிருக்கிறான். இதோ! இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவான். மதனி அதோ! உன்னைப்பார்த்து வெட்கப்பட்டு உள்ளேயே கிடக்கிறாள்.

அடியம்மா விசாலாக்ஷி! இப்படித்தான் வாயேன்! நீ வளர்த்த குழந்தைதானே அவன்! அவனைக் கண்டு வெட்கப்படுகிறாயே!

மகன்:—அம்மா! ராஜசேகரன் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்ததாய்ச் சொன்னீரே! ஏதாவது பரீக்ஷையில் தேரிவந்தானோ?

தாய்:—ஊம், அந்த அநியாயத்தை என்னென்று சொல்லுவது!

மகன்:—அதென்னம்மா! அப்படிச் சொல்லுகிறீர்.

தாய்:—வேறு ஒன்றுமில்லை. உன் தமயன் உயிருடன் இருக்கும்போதே அவனுடைய சிநேகிதன் ஒருவனுடைய மகளை இவனுக்கு மணஞ் செய்வதென நியமித்திருந்தான். அதிர்ஷ்டயீனமாய் இருவரும் 2 வருஷங்கள் முன்னும் பின்னுமாய் மாண்டு ஒழிந்தார்கள். தகப்பன்மார்கள் நோக்கத்தின்படி சிறுவர்களிருவரும் மனமொத்த காதலர்களாக விருந்தார்கள். இங்கிலாந்திற்குச் சென்று பாரீஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பிவந்து மணஞ்செய்துகொள்வதாய் ராஜசேகரன் சென்றான். அவன் சென்ற மறு வருஷம் அப்பெண்ணின் மாமனும் தாயுமாகச் சேர்ந்து அவர்களுக்குப் பிரியமான ஒருவனுக்குக் கல்யாண ஏற்பாடு செய்துவிட்டார்கள். அப்பெண்ணும், ராஜசேகரனைவிட்டு வேறு ஒருவனை மணந்து வாழமாட்டேன், என்று கூடியமட்டும் சொல்லிப்பார்த்தது. அவள் பேச்சைச் சற்றும் கவனியாமல் பாவிகள் விவாகத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஆச்சு, விடிய 5 மணிக்குத் தாலிகட்டவேண்டும். 3 மணிக்குப் பெண்ணைப்பார்த்தால் எரிந்து சாம்பலாய் கிடக்கிறாள்.

மகன்:—ஹா! கோரம்! என்ன கொடுமை! மகனின் மனோ பாவத்தை யறியாத அந்த மகாபாபியும் ஒரு பெற்றவளா?—என்று மனம் பதறினர். அவரை அறியாமலே அவர் கண்களில் நீர் துளித்தது.

தாய்:—இந்தச் சங்கதியைக் கேள்விப்பட்ட ராஜசேகரன் இனி யாருக்காக நான் படிக்கவேண்டும்? இனி எனக்குப் படிப்பும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று படிப்பை நிறுத்திக்கொண்டு, மனதை யாற்றிக்கொள்ளும்பொருட்டு ஒரு வருஷ காலமாய் எல்லா ஊர்களையும் சுற்றிக்கொண்டு 6 மாதத்திற்கு முன் இங்கு வந்து சேர்ந்தான். அவன் வந்தது முதல் எத்தனையோ பிரபுக்கள் தங்கள் பெண்களைக் கொடுக்கிறோமென்று மேல்விழுந்துகொண்டு வந்தார்கள். இவன் ஒரே பிடிவாதமாய் இனிக் கல்யாணமே செய்துகொள்ளமாட்டேன், என்றான். என்ன செய்வது?—என்று இன்னும் எதோ சொல்வதற்குள் ராஜசேகரனும் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட பாட்டி ஆனந்தத்தால் மனம் பொங்கியவராய், "அடே அப்பா! ராஜசேகரா! இதோ பார்த்தாயா? இது யார்? சொல்லு பார்க்கலாம்.

ராஜ:—(சிறிதுநேரம் வெறிக்கப்பார்த்துவிட்டு) யாரம்மா இவர்? எனக்குத் தெரியவில்லையே!

பாட்டி:—(கடகடவென சிறித்துவிட்டு) தெரியவில்லையா? இவன்தானப்பா, உன் சிறிய தந்தை சௌந்தர ராமன். குறத்தி சொன்னவித மெல்லாம் நான் செய்ததைப் ப்பார்த்துப் பரிகசித்தாயே! பார்த்துக்கொள்! குறத்தியின் குறி—சொன்னதெல்லாம் சரியாக முடிந்ததை,—என்று கூறி பின்னும் சிறித்துச் சிறித்து மகிழ்ந்தாள் பாட்டி. பெற்று 15 வருஷம் வரையில் வளர்த்த தாய், தன் பிள்ளை தான் என்று ஆமோதித்தப் பிறகு 9வயதில் பார்த்த ராஜசேகரன் நம்பாமல் என்ன செய்வான்? சிறிய தந்தையைக்கண்டு ஆனந்தத்தால் மெய்மறந்த,

ராஜ:—ஹலோ! மிஸ்டர் சௌந்தர்—(என்று கூறி பிறகு தான் அவ்வித மழைத்தது பிசகு என்பதை யறிந்து)

ராஜ:—ஐ ஆம் ஸாரி, மைடியர் அங்கிள், பிளீஸ் எக்ஸ்கியூஸ் மி (I am sorry, my dear uncle, please excuse me) தங்கள் வருகை என்னை பிரும்மானந்தப்படுத்துகிறது. நீங்கள் இவ்வளவு காலமாய் எங்கிருந்தீர்கள்? எங்களைவிட்டுப் பிரிந்து சென்ற காரணம் என்ன? அவைகளை யெல்லாம் விவரமாய்க் கூறுங்கள்.

சிற்றப்பா:—(கண்களில் நீர் பெருக) அப்பா! ராஜசேகரா! அண்ணனைக்காணக் கொடுத்துவைக்காத மகா பாபி நான், அவரது அம்சமாக வந்த உன்னைக்கண்டு மனந் தேறுகிறேன். ராஜா! ஏன் நிற்கிறாய்? இப்படி வந்து உட்கார்ந்துகொள்—என்று அவனது கரத்தைப்பற்றி இழுத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, தான் தவறிப்போன விதத்தைக் குறத்தி கூறியதுபோலவே கூறி முடித்தார்.

---

## 11-வது அத்தியாயம்.

### காதலின் வன்மை—கட்டிற்கடங்கா தன்மை

பகற் போஜன முடிந்து சிரமபரிகாரமாய் தனது படுக்கையறையில் மஞ்சத்தின்மீது படுத்துப் புரண்டுகொண்டிருந்தான் ராஜசேகரன். அவனது மனம் எங்கெங்கோ சென்று அலைந்து கொண்டிருந்தது. மனதை ஒரு நிலையில் நிறுத்தி நிற்சிந்தையாயிருக்க எவ்வளவோ முயன்றும் அவனால் முடியவில்லை. அப்படி அவன் மனதை அலட்டிக்கொண்டிருந்த விஷயமாவது:—

இங்கிலாந்தைவிட்டுத் திரும்பி வந்த ராஜசேகரன், தன் பொருட்டு உயிரிழந்தத் தன் அருமைக் காதலி விஜயலக்ஷ்மியை எண்ணியெண்ணி மனம் நைந்தவனாய் தன் பாட்டியார் ஏற்பாடு செய்துவந்த விவாகங்களை யெல்லாந் தடுத்துவிட்டு இனி விவாகமே செய்துகொள்வதில்லை என்று உறுதிகொண்டிருந்தான்.

சிற்றப்பா வந்து சேர்ந்த பிறகு, பாட்டியம்மாள் பேரப் பிள்ளையை வற்புறுத்துவதை விட்டுத்தன் சொந்த பிள்ளையை கலியாணத்திற்குத் தூண்டிக்கொண்டிருந்தார். இச்சங்கதி ராஜ சேகரனுக்குப் பெரும் நிம்மதியை அளித்தது. ஆனால் சிற்றப் பாவின் நிர்பந்தம் சகிக்கமுடியவில்லை. பாட்டியை ஏமாற்றி யதுபோல், சிற்றப்பாவை ஏமாற்றுவது எப்படி? அவரை இனி இந்தக் கல்லியாணப் பேச்சையே, எடுக்காமலிருக்கும்படிச் செய்வதெப்படி? என்று யோசித்துக்கொண்டிருந்த நாளையில் திடீரென்று ஒரு நாள் மனமோஹன பார்க் என்னும் சிங்கார வனத்தின் பெண் ஒருத்தி, அவனது உறுதியை இழக்கச்செய்து எப்போது நம் விருப்பப்படி விவாகம் நடைபெறும் என்ற ஓரே ஆவலைத்தூண்டிவிட்டாள். அவ்வாறு இன்று அவன் மனதில் எழும்பிய எண்ணங்களாவன:—

இந்த 3 மாதகாலமாய் பார்க்கில் நாம் தினமும் கண்டு வரும் அப்பெண்மணி யாராயிருப்பாள்? அவளுக்கு விவாக மாகிவிட்டதோ! இல்லையோ! தெரியவில்லையே! ஆஹா! அவ ளது அற்புதவடிவழகு என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டதே! விஜயாள் ஒருத்தியே இந்த உலகில் அழகு மிகுந்தவள் என்று எண்ணியிருந்த நமது மனதில், அவளைவிடப் பன்மடங்கு அதிக மான அழகுடையவள் இவள்தான் என்று நிரூபித்து விட் டதே! ஆஹா! என்ன அழகு! சிறிக்கும்போது அவளது சந்திர பிம்பம்போன்ற முகாரவிந்தத்தின் சோபைதான் என்ன! அந்தப் பல் வரிசையின் அழகுதான் என்ன! அந்தக் கண்களில் என்ன பிரகாசம்! எவ்வளவு கம்பீரம்! ஸ்திரீகளை ஏறெடுத்துப் பாராத வனுகிய நான், ஒரு நாள் அகஸ்மாத்தாய் ஹா! இப்பெண் சரி யாய் நமது விஜயாவைப்போலல்லவா யிருக்கிறுள்? என்று சற்று அவளை கவனித்தபொழுது, அவளும் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். என்னே! அவளது கண்களின் சக்தி! ஒளிமிகுந்த அவளது காந்தக்கண்கள் அப்படியே என்னையும் என்மனதை யும் ஒருங்கே வசீகரித்துவிட்டதே! என் உள்ளத்தில் பதிந்து கிடந்த என் விஜயாவின் சுந்தர வடிவத்தை விரட்டிவிட்டது மன்றி, அந்த பிரதான விடத்தில் என் உத்திரவுமின்றி கம்பீர மாய் அமர்ந்து ஏகாதிபத்யம் செலுத்துகிறதே!

எவ்வளவோ மனோ உறுதியுடனிருந்துவந்த நான் க்ஷணத்தில் உறுதியை இழந்து சதா அவளையே நினைத்துப் பித்துப் பிடித்தவன் போலல்லவா அலைகிறேன். வெட்கம்! என் நிலைமையைக் கண்டவர்கள் பரிகசிக்கும்படியல்லவா நடந்துகொண்டேன். சீ! இது சரியல்ல. இனி அவளை மறந்துவிட்டு, மனத்தை ஒரு நிலையில் நிறுத்தவேண்டும், என்று எண்ணுவான். அடுத்த க்ஷணம்,

"கம்பீரம் பொருந்திய அவளது நடையின் அழகே ஒரு தனி அழகு. அன்ன நடை என்பார்களே! அது இதுதானோ! ஹா! என்ன ஒய்யாரம்! என்ன சிங்காரம்! இத்தனை ஊர்களைச் சுற்றி வந்தேனே! எங்கையாவது இப்படிப்பட்ட ஓர் அழகியைக் கண்டிருப்பேனு? தங்கநிறமான மேனி, என்கிறார்களே! சீ! அது இவளுக்குச் சற்றும் பொருந்தாது. உயர்தரமான தங்கத்தைக் கடைந்தெடுத்தால், எவ்விதகாந்தியோ! அவ்வித காந்தியும் சோபையுமிருந்த அவளின்மேனி அழகே ஒரு தனி அழகு. இப்படிப்பட்ட மங்கையரை மணந்து வாழாத ஜென்மங்களும் ஒரு ஜென்மமாகுமா? எப்படியும் கண்டிப்பாய் அவளை மணந்து சுகித்து வாழ்வேன். என்று நினைப்பான். உடனே சீ! என்னபரிதாபம்! என்பொருட்டு விஜயாள், தன் சுகதுக்கங்களை சிறிதுமெண்ணுமல் இவ்வுலகவாழ்க்கையையே வெறுத்து உயிர்நீத்தாள் என்றால், அவளை விட்டு நான் வேறு ஒரு மங்கையை மணந்து வாழ்வதா? என்னகொடுமை! ஏ! மனமே! ஏன்? உன் உறுதியை இழந்து உண்மைக் காதலியை மறந்து முன்பின் அறியாத யாரோ ஒரு அன்னிய மாதைக் கண்டு மோகவெறி கொண்டலைகிறாய்? என்ன உன்பேதமை! ஒருக்கால் அவள் ஒருவனுக்கு வாழ்க்கைபட்ட மனைவியாக விருந்தால் நீ என்ன செய்வாய்? உனக்கென்றே பிறந்துவளர்ந்த விஜயாளை மணந்து வாழக்கொடுத்துவைக்காத நீ, ஊர்பெண்களையெல்லாம் நினைத்து உருகுவது சரியா? இதோடு இந்த ஆசையை வெறுத்து இவ்வித எண்ணங்களை ஒழித்து நிம்மதியாகயிரு" என்று மனதை அடக்குவான். சிறிது நேரத்திற்குப்பிறகு "என்ன! என்மனம் என்கட்டிற்கடங்காமல் என்னை இப்படி சஞ்சலப்படுத்துகிறதே! இந்நிலைமையில் நான் எப்படிக் காலத்தைக்கழிப்பேன்? இனி என்மனதை அடக்குவது என்பது வீண்முயற்சி. இனி ஒன்றை

யும் கவனிக்காமல், இன்றே அவளை அணுகி முதலில் அவளுக்கு விவாகமாயிற்ரு? இல்லையா? என்பதைத் தெரிந்துக்கொள்ள வேண்டும். என் அதிர்ஷ்டவேளையாய் விவாகமாகவில்லை என்று தெரிந்தால், உடனே அவளுக்கு எனது காதலைத் தெரிவித்து என்னை மணந்துகொள்ளும்படித் தூண்டி கூடியசீக்கிரம் விவா கத்தை முடிக்கவேண்டும். அதன்பிறகு, அவள் அழகை இந்த இந்தியர்மட்டும் கண்டுகளித்தது போதாதென்று இங்கி லாந்திற்கழைத்துச்சென்று அந்த மேல்நாட்டாரும் அவள் அழகைக் கண்டு களித்துப் புகழும்படிச் செய்யவேண்டும். என்று நினைக்கும்பொழுது அங்கிருந்த கடிகாரம் டங்டிங்டங் என்று மூன்று மணி அடித்தது. அதைக்கண்ட ராஜசேகரன், ஹா! நான் எண்ணியது போல் முடியும் என்பதற்கு அறிகுறி யாக சுபசகுணமாய் அதோ மணியும் அடித்தது. சரி, இனி புறப்படுவோம்" என்று மஞ்சத்தை விட்டு இறங்கினான்.

* * * *

மனமோஹன பார்க்கில், சிமெண்டு மேடை ஒன்றின்மீது 18 வயதென மதிக்கக்கூடிய ஓர் யுவதி வெகு நாஸுக்கான அலங்காரங்களுடன் காண்பவர் இவள் மோஹினியோ! மின் னற்கொடியோ எவன திகைக்கும்படி உட்கார்ந்திருந்தாள். ஆனல் அவளைக் கண்டவர்கள் எவரும் அவள் ஒரு பார்ஸீகப் பெண்ணென்று எளிதில் அறிந்துகொள்வார்கள். அவள் கண்கள் யாரோ ஒருவரின் வருகையை எதிர்பார்ப்பவைப் போன்றும் அங்குமிங்கும் ஆராய்ந்துகொண்டே யிருந்தன. சிறிது நேரத்தில் அங்கு வந்த ராஜசேகரனைக் கண்ட அக்கண் கள் மலர்ந்தன. ஆயினும் எதையுமறியாததுபோல் நிலமை யைச் சமாளித்துக்கொண்டு அமைதியாயிருந்தன.

இன்று எப்படியும் அவளுடன் சம்பாஷித்து அவள் மனோ பாவத்தை யறியவேண்டுமென்ற ஒரே ஆவலாய் அங்கு வந்த ராஜசேகரன், அவள் இன்று வந்தாளோ? இல்லையோ? என்ற எண்ணத்துடன், அவள் வழக்கமாய் உட்காருமிடத்தை அதிக உன்னிப்பாய் கூர்ந்து கவனித்துக்கொண்டே வந்தவனாகை யால் அவள் அங்கிருப்பதைக் கண்டு மனதிற்குள் மகிழ்ந்தான். ஆயினும் எப்படி அவளிடம் பேச்சு ஆரம்பிப்பது? என்ற

ஓரே கவலைகொண்டவனாய், அவள் உட்கார்ந்திருந்த பக்கமாய் வந்துக்கொண்டிருந்தான். அச்சமயம் அவன் முகத்தில் அரும்பிய வியர்வையைக் கைக்குட்டையில் துடைத்துக்கொண்டே வந்தான். அவள் சமீபமாய் வந்தபோது அக்கைகுட்டை அவனது கையினின்றும் தவறி அப்பெண்ணின் கால்களுக்குச் சமீபத்தில் விழுந்து விட்டது. அதை எப்படி எடுப்பது என்று தியங்குபவன்போல் நடித்து நின்றான். இதைக்கண்ட அப்பெண் உடனே குனிந்து அதை எடுத்து அவன் கையில் கொடுத்தாள்.

அதைப்பெற்றுக்கொண்ட ராஜசேகரன், "தேங்க்யூ மேடம்! பிளீஸ் எக்ஸ்கியூஸ்மி" (Thank you, Madam, Please excuse me) என்றான். இதைக்கேட்ட அம்மின்னிடையாள் "ேநா மென்ஷன் பிளீஸ்" (No mention please) என்று மெல்லிய குரலில்நைஸாக மொழிந்தாள். அவ்வினிய குரலோசையைக் கேட்டுமகிழ்ந்தவண்ணம் ராஜசேகரன், "நான் இப்படி உட்கார்ந்துக்கொள்வதில் தங்களுக்கொன்றும் அசவுகர்யம் ஏற்படாதென்றுநினைக்கிறேன்" என்று கூறிக்கொண்டே அவள் பதிலையும்எதிர்பாராதவனாய் அந்த மேடையின்மீதே ஒரு பக்கம் ஒதுங்கி உட்கார்ந்தான். தான் அப்படி உட்கார்ந்துக்கொண்டதைப்பற்றி, அவள் வெறுப்போ, அசூயையோ கொள்கிறாளாவென்று குறிப்பாய் கவனித்தான். அவள் அவ்விதமாய் ஒன்றும் தோற்றுவிக்காமல் முக மலர்ச்சியுடன் நாணிக் கோணி ஒதுங்கி உட்கார்ந்ததைக்கண்ட அவன் மனம் களித்தது.

"பார்க் (Park) இன்றென்னமோ ரொம்ப ரஷ்ஷா (Rush) யிருக்கிறதே!" என்று பேச்சை ஆரம்பித்தவன், "தாங்கள் எந்த ஊரோ? என்று ஒரு கேள்விபோட்டான்.

பெண் :—நான் பரோடா (Baroda) என்னும் ஊரில் இருப்பவள், ஒருவரைத் தேடும் பொருட்டாய்த் தற்சமயம் இவ்வூரில் வசித்து வருகிறேன்.

ராஜ:—ஓ! அப்படியா? இவ்வூரில் அநேகமாய் எல்லோரையும் எனக்குத் தெரியும். ஆதலால் தாங்கள் தேடும் பேர்வழி

யைப் பற்றிய விவரம் சிறிது எனக்குத் தெரிந்திருந்தால் உடனே கண்டுபிடித்துவிடுவேன். தாங்கள் தேடும் பேர்வழி ஆணா? பெண்ணா?

பெண்:—ஆம், ஆண் பிள்ளை தான்.

ராஜ:—பாவம்! அவர் தங்கள் கணவராகயிருப்பார், என்று நினைக்கிறேன்.

பெண்:—இல்லை யில்லை.

ராஜ:—என்ன! தங்கள் கணவரல்லவா? ஆனால் தங்களுக் கின்னும் விவாகமாகவில்லையோ?

பெண்:—இல்லை.

ராஜ:—அப்படியானால் தாங்கள் தேடும் பேர்வழி யார்?

பெண்:—(மவுனம்)

ராஜ:—ஓ! தாங்கள் மவுனம் சாதிப்பதிலிருந்து நான் தெரிந்துகொண்டேன், அவர் தங்களால் காதலிக்கப்பட்ட ஒரு வராயிருப்பார். என்று உண்மைதானே! சரி, அப்படியானால் அவர் எப்படியிருப்பார்? கருப்பா? சிகப்பா? நெட்டையாய் யிருப்பாரா? குட்டையாயிருப்பாரா?

பெண்:—(லஜ்ஜையுடன்) அவர் நிறத்திலும் விதத்திலும் சரியாய்த் தங்களைப்போலவே யிருப்பார். ஆனால் தவவேடம் பூண்டிருப்பார்.

ராஜ:—ஹா! என்ன! என்காதலிதான் சரியாய் உன்போல் என்றால், உன் காதலரும் என்னைப்போலாயிருப்பார்? ஊம், சரி அவர் தவவேடங்கொள்ளக் காரணம்? இவ்விவரங்களெல் லாம் எனக்குத் தெரிந்தால் நான் வெகு சீக்கிரம் கண்டுபிடித்து விடுவேன்.

பெண்:—காதலர்கள் நாங்கள் ஒருமித்துக் கல்யாணத் திற்கு ஏற்பாடு செய்யும்போது, என் காதலரின் தந்தை தனது

நண்பர் ஒருவர் பெண்ணை விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்திக் கல்லியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்துவிட்டார். விவாக காலம் நெருங்கியதை யறிந்த என் காதலர், இல்லற வாழ்க்கையில் வெறுப்புற்று தவ வேடங் கொண்டு எவ்விடமோ சென்று மறைந்துவிட்டார். அவரைத் தேடிக்கொண்டு தேச சஞ்சாரம் செய்துவரும் நான், அவர் இவ்வூரில் இருப்பதாய்க் கேள்விப்பட்டு இவ்வூருக்கு வந்திருக் கிறேன்.

ராஜ:—ஹா! எல்லாம் என் கதையைப் போலல்லவா யிருக்கிறது!

பேண்:—என்ன! எல்லாம் உங்கள் கதையைப்போலவா இருக்கிறது! அதெப்படி? அந்த விவரத்தை நான் அறிய லாமோ?

ராஜ:—வேறு ஒன்றுமில்லை. என் காதலியும் இப்படித் தான், என்னைவிட்டு வேறு ஒருவனை மணக்க நேர்ந்ததால் அவள், உன் காதலர் உயிருடன் மறைந்தார். ஹா! என் காதலியோ உயிரையே விட்டு மறைந்தாள். ஆகையால் எனக்கு அவளைத் தேடும்படியான சிரமமின்றி நிம்மதியாயிருக்க நேர்ந்தது. பெண் மணி! அவர் பெயரென்ன?

பேண்:—சேகர் என்பார்கள்.

ராஜ:—ஹா! பெயரும் என் பெயரைப்போல்தான்.

பேண்:—தங்கள் பெயரும் அதுதானே?

ராஜ:—என்னை ராஜசேகர் என்பார்கள். உம் பெயர் என்னவோ! நான் அறியலாமோ?

பேண்:—என் பெயர் ஜெயலக்ஷ்மீ என்பார்கள்.

ராஜ:—என்ன ஆச்சர்யம்! சாயல்தான் ஒன்றுகவிருக்கிற தென்றல், பெயருமா? ஒன்றுகயிருக்கவேண்டும்.

பேண்:—ஆனல், உமது காதலியின் பெயரும் அதுதானே?

ராஜ:—ஒரே ஒரு அக்ஷரம்தான் வித்யாஸம். உனது பெயருடன் வி என்னும் எழுத்தை முதலில் சேர்த்தால் சரியாகி விடும்.

பெண்:—ஆனால், விஜயலெக்ஷ்மி என்பதா?

ராஜ:—ஆம், அதுதான். அப்பெயர் மறைந்து இரண்டு வருடங்களாகிவிட்டது.

பெண்:—இரண்டு வருடங்களாகிவிட்டதா? ஆனால் இது பரியந்தம் தாங்கள் வேறு ஒரு பெண்ணை மணந்துகொண்டிருப்பீர்! என்று நினைக்கிறேன்.

ராஜ:—இல்லை யில்லை இதுவரையிலுமில்லை; இனிமேலு மில்லை.

பெண்:—என்ன! அப்படிச்சொல்லி விட்டீர்?

ராஜ:—ஆம்; அவள் என்பொருட்டு உயிரையே வெறுத்தாள் என்றால், அவள்பொருட்டு நான் மணவாழ்க்கையை வெறுத்துவிட்டதில் என்ன ஆச்சர்யம்! இனி வேறொரு பெண்ணை மணந்து வாழ்வதில்லை என்று உறுதிகொண்டுவிட்டேன். ஆணாகப்பிறந்த என் நிலைமை இப்படியென்றால், பாவம்! தங்கள் நிலைமையை நினைத்தால் எனக்கு மிக்க வருத்தத்தைத் தருகிறது. ஆகையால் நான் இன்று முதல் அவரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் வெகு சிரத்தைகொள்வேன். அவருக்கு என்னவயதிருக்கும்?

பெண்:—அவருக்கு இப்போது 24 வயதாகிறது.

ராஜ:—சரி, வயதிலும் என்னையே ஒத்திருக்கிறார்.

பெண்:—ஆம், எல்லாவிதத்திலும் சரியாக நீங்கள்தான். உங்களைப் பார்த்தால் அவரைப் பார்க்கவேண்டாம், அவரைப் பார்த்தால் உங்களைப் பார்க்கவேண்டாம். எல்லாம் ஒரே அமைப்புதான். ஆகவே, முதலில் நான் உங்களைக்கண்டபோது அவர்தான் என்றெண்ணிவிட்டேன். பிறகு அவர் தவவேடத்திலல்லவாயிருப்பார், என்று மனந்தேறினேன்.

ராஜ:—ஆம், நானும் அப்படித்தான் உன்னைக்கண்டபோது சாக்ஷாத் என் விஜயாவென்றே எண்ணிவிட்டேன். என்ன ஆச்சர்யம்! காதலர்களை இழந்து தவிக்கும் நம்மை இந்நிலைமையில் ஒருவரை ஒருவர் கண்டு மனந்தேறும்படி அருள்புரிந்தக் கடவுளின் கிருபையை என்னென்று புகழ்வேன்! (தனக்குள்), இதுதான் சமயமென்று விவாகத்தைக் குறித்துப் பேச்சை ஆரம்பிக்கலாமா? என்று எண்ணுவான் பிறகு, இதற்குள் நாம் அப்பேச்சை எடுத்தால் அவள் என்ன நினைப்பாளோ? எதற்கும் பொறுமை வேண்டும். ஏதோ இன்று இதுவரையில் பேச்சுப் பழக்கம் உண்டாயிற்று. இனி பிரதி தினமும் சந்தித்து அதிகமான பழக்கம் உண்டான பிறகு பார்த்துக்கொள்வோம். இன்று மரியாதையாக இவ்வளவில் விட்டுவிடுவோம். இனி இங்கிருந்தால், நம்மையுமறியாது ஏதாவது தாருமாராய் உளற ஏற்பட்டாலும் ஏற்படும். ஆகையால், இப்போதே பதமாய் இவ்விடத்தைவிட்டுச் செல்வோம். என்பதாய் எண்ணி, வெளிப்படையாய் "ஓ! நான் ஒரு முக்கிய காரியமாய்ச் செல்லவேண்டியிருப்பதை பேச்சுபராக்கில் மறந்துவிட்டேன். இனி எனக்கு உத்திரவு கொடும். நான் சென்று வருகிறேன். வேணுமானால், தாங்கள் வருவதானாலும் வந்து காரில் ஏறிக்கொள்ளுங்கள். தங்களைத் தங்கள் விடுதியில் சேர்த்துவிட்டுச் செல்கிறேன்.

பெண்:—என் சகோதரன் ஹாக்கி (Hockey) விளையாடச் சென்றிருக்கிறான். அவன் வந்த பிறகு நாங்கள் இருவருமாக வீடு செல்வது வழக்கம்! தயவு செய்து மன்னிக்கவும்.

ராஜ:—ஆனால் சரி, நான் சென்று வருகிறேன். குட் ஈவினிங் (Good evening) என்று கூறிக்கொண்டே தன் பக்கத்திலிருந்த ஈவினிங் ஹேட்டை (Evening Hat) எடுத்துத் தலையில் போட்டுக்கொண்டு, வாக்கிங் ஸ்டிக்கை (Walking Stick) கையில் பிடித்துக்கொண்டு கிளம்பினான். காதலியின் உள்ளம் தவித்தது. மேலுக்குக் காட்டிக்கொள்ளாமல் "குட் ஈவினிங் சென்று வாருங்கள்" என்று கூறிப் புன்னகை புரிந்த வண்ணம் உத்திரவளித்தாள்.

முற்றுமனதைப் பறிக்கொடுத்தவனாய் 10 அடி தூரம் செல்வான்; திரும்பிப்பார்த்து ஒரு புன்னகைப் புரிவான். மற்

றும் சிறிது தூரம் சென்று திரும்பிப்பார்த்து சிறித்து மகிழ்வான். தன்னைப்போலவே அவளும் பதிலுக்கு பதில் தன்னைப் பார்த்துப்பார்த்துச் சிறிப்பதைக்கண்டு பெரும் சந்தோஷங் கொண்டவனாய்ச் சென்றுகொண்டிருக்கும் சமயம், எதிரில் வரும் சிறுவன் முதுகில் மாட்டியிருந்த ஒரு படம் அவனைத் திடுக்கிடச் செய்தது. அப்படத்தில் ஒரு டஜன் மெடல்களை கம்பீரமாய் அணிந்துகொண்டிருந்த ஒரு உருவம், எதையோ ஞாபகப்படுத்திவிட்டது. யார் இவன்? என்று அப்படத்தை உற்று கவனித்தான். அதில்.

## இனம்! இனம்!! இனம்!!!

இப்பெயர்போன கள்வனைப் பிடித்துப் போலீஸில் ஒப்பு விப்பவருக்கு ரூபாய் 10,000 இனம் கொடுக்கப்படும்.

என்று, இருந்ததை வாசித்து விட்டு, இவனை நான் பலதடவைப் பார்த்திருப்பதாக ஞாபகம் வருகிறதே! மேலும், வெகு சமீபத்தில், ஏன்? இன்றும் அவனைப் பார்த்தமாதிரியல்லவா ஞாபகம் வருகிறது. யார் இவன்? என்ற ஒரே சிந்தனையில் ஆழ்ந்தவனாய்க் காதலியை மறந்து சென்றுகொண்டிருந்தான்.

பெண்:—(தனக்குள்) ஹா! என்னகாரியம் செய்தேன்! இந்த பகிரங்கமான விடத்தில், இவ்வளவு ஜனங்களின் முன்பாகச் சற்றும் நாணமின்றி ஓர் ஆடவனைக்கண்டு அவ்விதம் சிறித்தேனே! யாராவது பார்த்திருந்தால் என்ன நினைத்திருப்பார்கள்? என்று திடுக்கிட்டவளாய் சுற்று முற்றும் பார்த்தாள். அப்போது அங்கிருப்பவரெல்லாம் ரேடியோவின் பக்கமே பார்த்து அதினின்று வரும் வீணாகானத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு, "நல்லவேளையாய் நம்மை யாரும் கவனிக்கவில்லை." என்றெண்ணி மனதிற்குள் மகிழ்ந்தாள்.

# 12-வது அத்தியாயம்.

## உப்புக்கடலை சுவாமியார்—உய்யான வனத்து காமியர்

தபோகிருஹம் என்னும் சிறிய வீட்டைத் தமது ஆசிரமமாகக் கொண்ட உப்புக்கடலைச் சுவாமியார் அவர்களின் ஜீவிய சரித்திரத்தைச் சற்று ஆராய்வோம்.

நிர்மலமான காலை வேளை. சுவாமியாரின் தபோமஹிமையால், தபோகிருஹத்தின் பின்புறத்து நந்தவனம் தபோவனமாகவே அமைந்திருந்தது. நிஷ்டை கலைந்து எழுந்த சுவாமியார், தாம் அப்போதே தபோலோகத்தினின்றும் இறங்கி வந்தவர்போல் தாடியை உருவிக்கொண்டே கம்பீரமாய் எழுந்து உள்ளேவந்தார்

குருவின் வருகையைக் கண்ட சிஷ்யன் தீவிரமாய் எழுந்து புலித்தோல் ஆசனத்தைத் தரையில் ஒரு பக்கம் விரித்து, அதற்கெதிரில் தான் அப்போதே வாங்கிக்கொண்டுவந்த அமிர்த பவனத்தின் (காபிஹோட்டல்) பொட்டணங்களை அவிழ்க்கத் தொடங்கினன்.

பளபளவென துலங்கும் பீங்கான் தட்டு (சைனுப்பிளேட்) ஒன்றில், இரண்டு இட்டிலி இரண்டு வடை சிறிதளவு சட்னித் தயாராயிருப்பதைக்கண்ட சுவமியார், தாமதமின்றி ஆசனத்திலமர்ந்து க்ஷணத்தில் சுவாஹா பண்ணினர்.

பிளாஸ்க் (Thermoflask) கைத்திறந்து, காலியாகவிருந்த கப் அண்டு சாஸரில் நிறப்பப்பட்ட சூடான காப்பியை உருஞ்சி உருஞ்சி தாமசமாய்ச் சாப்பிட்டு முடித்தார் சுவாமியார்.

கையைக் கழுவிக்கொண்டு மீசையை முறுக்கிக்கொண்டே வந்த சுவாமியார், சிஷ்யனல் நிறப்பிவைக்கப்பட்டிருந்த உப்புக் கடலை ஜோல்னா பையை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டார்.

பச்சை பசேர் என்ற பயிர்கள் சாய்ந்து மிளிரும் தேனூர் கிராமத்துச் சிறுவர்கள், தெருவைத் தெருவைப் பார்த்து

"எங்கே உப்புக்கடலைச் சுவாமியார் இன்னும் வரவில்லையே?" என்று ஏங்கிய வதனத்துடன் திரும்பி உள்ளே செல்கின்றனர்.

ஹா! அதென்ன! ஸ்ரீ வாணிதேவியின் வீணகானமா! ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் வேணுகானமா! என்று திகைக்கும்படி இன்னிசை ராகம் எல்லோர் காதுகளையும் தாக்குகிறது.

வீட்டிற்குள்ளிருந்த சிறுவர்களெல்லாம் "அதோ புல்லாங்குழல் சப்தம்! உப்புக்கடலை சுவாமியார் வந்து விட்டார்" என்று அவரவர் காரியங்களை அப்படி அப்படியே விட்டு விட்டு, ஸ்ரீ கிருஷ்ணனது வேணுகானத்தைக் கேட்ட கோபிகாஸ்திரீகளைப்போல உருண்டுதிரண்டு ஓடிவருகிறார்கள்.

சத்திரத்தின், முன் பக்கமிருக்கும் ஆல மரத்தடியில் அமர்ந்து புல்லாங்குழலை வாசித்துக்கொண்டிருக்கும் உப்புக்கடலை சுவாமியாரை 10 சிறுமியர் (7-வயது முதல் 12-வயது வரையிலுள்ள பெண்கள்) அவர் கானத்திற் கிசைந்தபடி கைகளைத் தட்டிப் பாடிக்கொண்டேவந்து, அவரைச் சுற்றி வருகிறார்கள்.

பாட்டு முடிந்து சுவாமியார் புல்லாங்குழலைக் கீழே வைத்ததைக்கண்ட சிறுமியர், அவருக்கு எதிரில் தரையில் இரண்டு வரிசையாக உட்கார்ந்தார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு சுவாமியார், புல்லாங்குழலை எடுத்து காம்போஜி ராகத்தை ஆலாபனம் செய்து "மாஜானகி சேட்டபட்டக" என்ற கீர்த்தனத்தை வாசிக்கத் தொடங்கினார். உடனே சிறுமியரும் கையில் தாளம் போட்டுக்கொண்டே அதற்குச் சரியாய்ப் பாடி பல்லவியை முடித்தார்கள். அன்றைய தினப் புதுப்பாடமாக "ராஜராஜவர—ராஜீவாக்ஷவினு" என்று அனுபல்லவியைப் பாட ஆரம்பித்தார்.

அச்சமயம் அச்சத்திரத்துத் திண்ணையில் உட்கார்ந்திருந்த இரண்டு கிழவர்களின் சம்பாஷணையைக் கவனிப்போம்.

சப்தரிஷி ஐயர் :—இந்த சுவாமியாருக்கு இவர்கள் ஏதேனும் சம்பளம் கொடுக்கிறார்களோ ?

அஷ்டவசு ஐயர் :—சம்பளமாவது, பண்ணுங்கட்டியாவது. அவரே, இந்த பசங்களுக்காக மாதம் 10—12 ரூபாய் சில விடுகிறார். கரும்பு தின்னக் கூலி என்பதுபோல் இலவசமாய்க் கற்றுக்கொள்ளும் பசங்களுக்கு, அவர்களைப் புரோத்ஸாகப் படுத்தும்பொருட்டு தினமும் ஒருநாளைக்குப் பெப்ரமிண்டு, ஒரு நாளைக்கு லட்டுமிட்டாய், ஒருநாளைக்குத் திராட்சைப்பழம், ஒருநாளைக்கு வாழைப்பழம் இப்படியாக ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு தின்பண்டமாகக் கொடுத்துவருகிறார். ஆனால், அனேகமாய் பிரதிதினமும் உப்புக்கடலையைத்தான் வழங்குவார். அதனால்தான் இந்தப் பசங்கள் அவருக்கு உப்புக்கடலை சுவாமியார் என்ற பெயரைச் சூட்டிவிட்டார்கள். அவரால் இந்த கிராமத்துச் சிறுவர்கள் எவ்வளவு முன்னேற்றமடைந்திருக்கிறார்கள் தெரியுமா ?

இன்று இச்சிறுவர்களுக்கு இப்படி வாய்ப்பாட்டாயிற்று. நாளை, சில பசங்களுக்கு ஹார்மோனிய சங்கீதம் கற்றுக்கொடுப்பார். நாளைய மறுநாள், சில பசங்களுக்குப் பிடில் வாசிக்கக் கற்றுக்கொடுப்பார். இப்படி முறையே ஒவ்வொரு நாள் ஒவ்வொன்றைப் பெண்களுக்குச் சொல்லித்தருகிறாரா ?

பையன்களுக்கெல்லாம் சிலநாள், அவர்களுக்கு வேண்டிய ஸ்கூல் பாடங்களையெல்லாஞ் சொல்லித்தருவார். சிலநாட்களில், பையன்களுக்கும் பெண்களுக்குமாய் சுகாதார முறைகளைக் கிரமப்படி போதிப்பார். சிறுவர்களுக்காக இவ்வளவு சிரமம் என்றால்! நம்போன்றவர்களுக்காக, இரவு 8 மணி முதல் 10 மணி வரையில், ஹா! என்ன அருமையான உபந்யாசம்! காலக்ஷேபம்! கேட்க வெகு ஆனந்தமாயிருக்கும். இப்படியாய் இந்த 2 வருஷங்களாக இவரால் இந்தக் கிராமம் வெகு மேன்மையை அடைந்திருக்கிறது.—

—இதற்குள், பாடத்தை முடித்த சுவாமியார், தனது இடக்கரத்தின் ரிஸ்ட் வாட்சைக் கவனிக்க, அதில் மணி 11¼ ஆய்விட்டதைக் கண்டு, உடனே எழுந்து தன் ஜோல்னாவிலுள்ள

உப்புக்கடலையை அங்கிருப்பவர் அனைவருக்கும் வழங்கிவிட்டுப் பையைத் தட்டித் தோளில் மாட்டினர். பாதக்குறடைக் காலில் மாட்டினர். குடையை விரித்துப் பிடித்தவண்ணம் 'என்ன வேகமான நடை!, என்று, சப்தரிஷி ஐயர் புகழ்ந்துபேசும்படி வீசி நடந்தார்.

மணி 12க்குச் சுவாமியார், தன் வீட்டின் சமீபம் வந்த போது, சற்றுமுன் அங்குவந்த அவரது சிஷ்யன், சைக்கிளை விட்டிறங்கிப் பூட்டைத் திறந்து சைக்கிளில் மாட்டியிருந்த டிபின் கேரியரை (Tiffin Carrier) எடுத்து உள்ளே சென்று தன் குருவின் பகற் போஜனத்தைத் துரிதமாய்த் தயாரித்தான்.

* * * *

பிற்பகல் மணி 3. தபோகிருஹத்திற்குள்ளிருந்து சுமார் 18-வயதுள்ளப் பெண் ஒருத்தி, நவநாகரீக அலங்காரங்களுடன் காண்பவர், இவள் கந்தர்வஸ்திரியோ! அப்ஸரஸ பெண்ணோ! என்று திகைக்கும்படி வாசலில் நின்று யாரோ ஒருவரின் வருகையை எதிர்பார்த்திருந்தாள்.

அவ்வீதியில் செல்பவர், அவள் முக ஜாடையைக்கண்டு இவள் அந்த சுவாமியாரின் மகள் போலும், என்று நினைத்த வண்ணம் அவ்வழியே சென்றனர்

அச்சமயம், டாக்டிக், டாக்டிக் என்று ஒரு குதிரை வண்டி வேகமாய் ஓடிவந்து நின்றது. அதினின்றும் சுமார் 14-வயது சிறுவன் ஒருவன் "அக்கா! தயாராகிவிட்டாயா? நீ வந்து வண்டியில் ஏறிக்கொள்! நான் கதவைப் பூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று கூறிய வண்ணம் வண்டியைவிட்டுக் குதித்திறங்கினன். உடனே அப்பெண்ணும் வண்டியில் ஏறினள். சிறிது நேரத்தில், கதவைப்பூட்டிவிட்டுச் சாவியை ஜோபியில் போட்டுக்கொண்டே தானும் வந்து வண்டியில் ஏறிக்கொண்டான். உடனே, காற்றுய்ப் பறந்த ஜட்கா வண்டி சரியாய் ஒரு மணி நேர சாவகாசத்தில், சாரதா நகரிலுள்ள மனமோஹனப் பார்க்கை வந்தடைந்தது.

வழக்கமாய் தான் உட்காரும் செமெண்ட் மேடையில் வந்தமர்ந்த ஜெயலக்ஷ்மி, தன் கை கடிகாரத்தைப் பார்த்து

"சரி, மணி 5 அடிக்க இன்னும் 10 நிமிஷம்தான் இருக்கிறது" என்று மனதிற்குள் மகிழ்ந்தாள். ஏன், எதற்காக? அந்த 5 மணிக்குதானே! அவளது காதலன் (ராஜசேகரன்) அங்கு வருவான்.

முதல் முதலாக ஒருவரை ஒருவர் நெருங்கிப் பேச்சுப் பழக்கமுண்டான, அன்றையதினமே! ஒருவரை ஒருவர் பிரிய மனமில்லாது பிரிந்து சென்ற இக்காதலர்கள், இப்போது ஒரு மாத காலமாய்ப் பிரதிதினமும் சந்தித்து மிக்க அன்னியோன்னியமாய் மேலும் ஒருவரை ஒருவர் விவாகம் செய்துகொள்வது என்ற முடிவுக்கும் வந்த பிறகு இவர்கள் மனநிலையை விவரிக்க வேண்டுமா?

"ஆச்சு, மணி 5 அடிக்க இன்னும் 5 நிமிஷந்தான். நாதன் வர இன்னும் சிறிது நேரந்தான் இருக்கிறது. இந்த 5 நிமிஷத்தைக் கழிப்பதெப்படி? ஹா! அந்தக்கொடி என்ன அழகாய்ப் படர்ந்திருக்கிறது பார்!" என்று தனக்குள் எண்ணியவளாய் வெகு பாடுபட்டு அந்த 5 நிமிஷ நேரத்தைச் சம்பங்கிக் கொடியைக் கவனித்துக் கொண்டே போக்கிவிட்டாள்.

"ஹா! மணி 5 அடித்துவிட்டது! நாதன் இந்த வழியாக வல்லவா வருவார். எதோ! வருகிறாரா? பார்ப்போம்" என்று எட்டிப்பார்த்துவிட்டு "பீடை ஜனங்கள் இப்படி வழியை மறைக்கிறதே! (வேறு வழியாய்ப்பார்த்து) ஏன்! இன்னும் வரவில்லை? இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார். சரி, வரட்டும். அதோ! அந்த புஷ்பச் செடிகளின் அழகைப் பார்! சீ! அந்த புஷ்பச் செடிகளைவிட எனக்கு இந்த குரோடன்ஸ் (Crotons) செடிகள்தான் வெகு அழகாய் இருக்கிறது. சரி, இப்போது மணி என்ன? 5½ ஆகிவிட்டதே! என்ன ஆச்சர்யம்! பிராணகாந்தன் ஏன் இன்னும் வரவில்லை? எனக்கு அவரது முகாரவிந்தத்தைக் காணாது நேரத்தைக் கழிப்பது வெகு கஷ்டமாயிருக்கிறதே!

அதோ! அந்த மயில் தோகையை விரித்தாடுவது என்ன ரமணீயமாயிருக்கிறது! அந்த மான்களைப் பார்! அவைகள் மனிதரைக்கண்டு மிரண்டு ஓடுங்காக்ஷி என்ன வேடிக்கையாக

விருக்கிறது. இந்த குரங்குக் கூட்டத்தைப்பார்! அவைகள் கிளையைப் பிடித்து ஊஞ்சலாடுங் காக்ஷி என்ன விநோதமா யிருக்கிறது! சரி இப்போது மணி என்னவென்று பார்ப்போம். ஹா! மணி 6 அடித்துவிட்டதே! காதலர் ஏன்? இன்னும் வர வில்லை? ஆச்சு, தம்பியும் தனது ஹாக்கிவிளையாட்டை முடித் துக்கொண்டு திரும்பி வரும் வேளை ஆய்விட்டதே! ஏது இன்று நம் நாதனைப்பார்க்க முடியாதுபோலிருக்கிறதே! ஹா! அவரை பார்க்காமல் நான் எப்படித் திரும்பிச் செல்வேன்? அவர் வரு வதானல் இன்னேரம் வந்தே யிருப்பார். ஏதோ! அசந்தர்ப் பம் நேர்ந்துதான் வரமுடியவில்லைப்போனும், இன்னும் நாளைய வரையில் அவரைக் காணுது நான் எப்படி உயிர்தரிப்பேன்!

ஹே ஜெகதீசா! இதுவும் நினது சோதனையோ!—என்று மனங்கலங்கினள். அச்சமயம் அங்குவந்த ஓர் மனிதன், "ஜெய லக்ஷ்மி அம்மாள் தாங்கள்தானு?" என்ருன். இதைக்கேட்ட அந்நங்கை "ஆம், என்ன விசேஷம்?"

வந்த மனிதன்:—இதோ! இக்கடிதத்தைத் தங்களிடம் கொடுக்கும்படி எங்கள் எஜமானர் ராஜசேகர பிரபுக் கொடுத் தார்.

—என்று கூறிக்கொண்டே ஒருகவரை அவளிடம் கொடுத் தான். அதை வெகு ஆவலுடன் கையில் வாங்கி உரையைத் திறந்து கடிதத்தைப் படித்தாள். அது கீழ்வரும் விதமிருந் தது:—

என் பிரிய காதலி ஜெயா! நமது விவாக விஷயமாய் நம் சிறிய தந்தையிடம் பேசப்போகிறேன். என்று உன்னிடம் கூறி யதுபோல், இன்று பேச ஏற்பட்டது. அவர் அதற்குச் சம் மதித்துவிட்டார். ஆனல் இன்று உன்னை நேரில் கண்டு பேச விரும்புகிருர். ஆகையால், நீ உடனே புறப்பட்டு என் காரில் இவ்விடம் வந்துசேரவும்.

இப்படிக்கு,

உன் அன்பன் S. S. ராஜசேகர்.

என்றதைப் படித்து முடித்த ஜெயலக்ஷ்மி, மனதில் பேரானந்த மடைந்தவளாய் "சரி, போகலாம்" என்று கூறிக்கொண்டே

எழுந்து அவன் பின் சென்று காரில் ஏறி அமர்ந்தாள். காரும் வேகமாய் ஓடி மறைந்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு அங்கு வந்து சேர்ந்த அவளது தம்பி, வழக்கமாய் அவளிருக்கும் விடத்தில் காணுது போனதைக் கண்டு திடுக்கிட்டான். பிறகு "சரி, நந்தவனத்தில் உலாவிக்கொண்டிருப்பாள் தேடிப்பார்ப்போம்." என்று அவள் வழக்கமாய் செல்லும் ஒவ்வொரு விடத்திலும் சென்று தேடிப் பார்த்தான். அவள் எங்கும் காணவில்லை. இதைக்கண்ட அவன் மனம் தத்தளித்தது. "ஹா! அந்தத் திருட்டுப்பயல், லக்ஷ்மி நரசுவின் வேலையாக விருக்குமோ!" என்று நினைத்த வண்ணம் வெளியில் சென்று கார்கள் நிற்குமிடத்தைத் தொடர்ந்து தரையை நோக்கி சிறிது தூரம் முன்னும் பின்னுமாக நடந்து எதையோ தேடுகிறுன். சிறிது நேரத்தில் திடீரென்று ஓர் விடத்தைக்கண்ட அவன் மனம் நடுங்கிற்று. "ஹா! நான் எண்ணியது சரியாகத்தான் முடிந்துவிட்டது.

ஹே! துஷ்டா! உன் கைவரிசையை என்னிடத்திலுமா? காட்டி விட்டாய். நீ, எங்கெங்கெல்லாமோ என்னென்னவோ, செய்து தப்பிவிட்டாய். என்னிடத்தில் நீ தப்பமுடியாது. என்று கூறிக்கொண்டே, தரையில் தான் கண்ட அடையாளத்தை விடாது, அது போகும் வழியாகவே தானும் வெகுதூரம் சென்ருன். அப்போது இருட்டிவிட்டதால் அவ்வடையாளம் சரியாகத் தெரியாததைக் கண்ட அவன், "அடேய்! திருட்டுப்பயலே! நீ, தப்பிவிட்டாய் என்று எண்ணிவிடாதே! இதோ! நான் சென்று நாளை காலை 4 மணிக்கெல்லாம் எழுந்து இவ்விடம் வந்து இந்த அடையாளத்தைப் பிடித்தே, உன்னைக் கண்டுபிடித்து என்ன பாடுபடுத்துகிறேன் பார்!

இதுவரையில் பிறர் விஷயமாய் நீ செய்த அட்டூழியங்களைக் கண்டே என் மனம் உன்மீது பெரும் ஆத்திரத்தைக் கொண்டிருந்தது. நம் விஷயத்தில் சம்மந்தப்படாதவரையில் சரி, ஒழியட்டும் என்றிருந்தேன். இப்போது என் காலை மிதித்த பிறகும் நான் சும்மாவிருப்பேனே?" என்று உறுமிக்கொண்டே திரும்பிவிட்டான்.

தன் சகோதரியை ஒருநாளும் பிரிந்தறியாத அவன் மனம் சகோதரியின் பிரிவாற்றுமையினுல் தத்தளித்தது. ஹா! அக்கா! நீ, எங்கு சென்ருய்? எப்படியிருக்கிருய்? அந்தத் திருட்டுப் பயல் உன்னை என்ன பாடுபடுத்துவானே! கடவுள் கடவுள் என்று கடவுளையே நம்பியிருக்கும் உனக்கு வருவதெல்லாம் இப்படிப்பட்டத் துன்பங்களாகவிருக்கிறதே! எதோ! நீ நம்பும் கடவுள் ஒருவர் இருப்பது உண்மையானல், அவர் உன்னைக் கட்டாயம் காப்பாற்றுவார். உன் தெய்வீகம் பொருந்திய 'கற்பு' அவனை எமனுக எதிர்த்து அவன் உயிரை மாய்க்கும் இது சத்யம்.

இராவணன் எத்தனையோ கொடுமைகளைச் செய்துகொண்டு வந்தான், கடைசியில் சீதையால் ஒழிந்தான். அதேபோல், உன்னுல் அவனுக்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டது. இதோ! அவனை அழிக்கப் பிறந்தவன் நான் இருக்கிறேன். கூடிய சீக்கிரம் அவனை எமபுரமனுப்பிவிட்டு, உன்னை மீட்கிறேன். நீ, ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்.

என்று தன் அகக் கண்களுக்கு முன் காக்ஷியளிக்கும் தன் அருமை சகோதரிச்கு ஆறுதல் கூறினுன். முன்பு விஜயலக்ஷ்மி யின் சகோதரன் 12 வயது பையன், நான் இப்படிச் செய்வேன் அப்படிச் செய்வேன் என்றெல்லாம் வீரம் பேசி அநியாயமாய் சகோதரியைச் சாம்பலாக்கினுன்.

இப்போது, இந்த ஜெயலக்ஷ்மியின் சகோதரன் 14-வயது பையன் இவ்வளவு பேசுகிறுன். இவன் வீரம் எத்தன்மையது? என்பதைச் சற்றே கவனிப்போம்.

# 13-வது அத்தியாயம்.

## விநோத பார்ஸல் வரவு—விபரீத முடிவு

காலை 8-மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்த வக்கீல் சாம்பசிவம், நிலைக்கண்ணுடி முன் நின்று தன் பற்கள் அவ்வளவு அழகாயிருப்பதற்குக் காரணமாகவிருந்த கோலினேஸ் (Kolynos) டூத் பேஸ்டைப் புகழ்ந்துகொண்டே டர்கிஷ்டவலால் முகத்தைத் துடைத்துக்கொண்டிருந்தார்.

அதன் பிறகு அங்கிருந்த ஈஸிசேர் ஒன்றில் சாய்ந்து நியூஸ் பேப்பரைப் புரட்டினுர். அச்சமயம், வேலையாள் சங்கரன் ஒரு கப் காபியைக் கொண்டுவந்து அவர் முன்பிருந்த டீ மேஜைமீது வைத்து விட்டுச் சென்றுன். உடனே அதைப் பருகி முடித்த சாம்பசிவம், சிகரெட் ஒன்றை பற்றவைத்து அன்றையதினப் பிரயோகத்தில் அதை முதல் தடவையாக ஆரம்பித்தார். எண்ணி இரண்டு உரிஞ்சு உரிஞ்சினுரோயில்லையோ, அதற்குள் சங்கரன் அப்போதுவந்த தபால் கடிதங்கள் நான்கை எடுத்துக்கொண்டு வந்து அவர் முன் வைத்தான்.

அவற்றை ஒவ்வொன்ருக எடுத்துப் பார்த்த சாம்பசிவம், தன் நண்பன் ராஜசேகரனிடமிருந்து வந்ததெனத் தெரிந்த ஒரு கடிதத்தைப் பிரித்து வாசித்தார். அது கீழ்வருமாறு:—

என் ஆருயிர் நண்பா !

நான் உனக்கொரு ரயில்வே பார்ஸல் அனுப்பியிருக்கிறேன். அதன் ரசீது இத்துடன் அனுப்பியிருக்கிறேன். இதைக் கொண்டு நீ அந்தப் பார்ஸலை உடனே பெற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்,
உன் பிரிய நண்பன்,
S. S. ராஜசேகர்.

என்றதைப் படித்த சாம்பசிவம், ஆனந்தத்தால் மெய்மறந்தவராய், மற்றக் கடிதங்களையும் திறக்கவில்லை வேறு காரியத்தையும் பார்க்கவில்லை. கையிலுள்ள சிகரெட்டை வீசி எறிந்துவிட்டு குதித்தெழுந்து 2 நிமிஷத்தில் டிரஸ்பண்ணிக்கொண்டு,

காரைப்போட்டுக்கொண்டு ஜம்பமாய் ரயில்வேஸ்டேஷனுக்குக் கிளம்பினுர். சிறிது நேரத்திற்குப் பிறகு, பார்ஸலைப்பெற்றுத் திரும்பி வந்த வக்கீல் சாம்பசிவம், அடேய் சங்கரா! இந்தப் பெட்டியைத் திறக்கவேண்டும். எங்கே? அந்த ஹாமர், ஸ்பேனர் முதலியவைகளைக் கொண்டுவா!—அச்சமயம் அங்கு வந்த அவரது,

தாயார்:—என்னடா அப்பா! என்னமோ கடுதாசி வந்ததாம். அதைப் படித்துவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடினுயாமே! என்ன கடுதாசி அது?

வக்கீல் சாம்ப:—அம்மா நீ சும்மாயிரு! எல்லாம் அப்புறம் சொல்லுகிறேன்.

தாயார்:—இதென்ன! இத்தனைபெரிய ஜாதிக்காய் பெட்டி! இது எங்கிருந்து வந்தது?

வ. சாம்ப:—அட அவஸ்தே! நீ சும்மாயிருன்னு, சும்மாயிறேன்! எல்லாம் அப்புறஞ் சொல்றேன்.

தாயார் :—இந்த பெட்டி வந்தப்போபிடிச்சி என்னமோ நாற்றம் அடிக்கிறதே! இதில் என்ன வந்திருக்கும்?

வ. சா. :—என்னம்மா நீ! சும்மாவே யிருக்கமாட்டேன் கிறையே! இந்தப் பெட்டிக்குள்ளேயிருந்தா நாற்றம் வருகிறது? நன்னுச்சொன்னே! நீ கொஞ்சநேரம் அப்படிப் போயிருந்துவிட்டு அப்புறம் வா! சொல்றேன். அடேப் ஆமாண்டா சொன்னுப்போலே, என்னமோ ஒரு வீச்சடிக்கிறதே! (சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, தாயைப் பார்த்து) அதோபார்! டார்டிஹேபிட் அந்தபீரோ, அல்மைராவெல்லாம் சுவற்றோடு ஒட்டிக்கொண்டிருக்கிறதே! அந்த சந்துகளில்தான் எலியோ! பெருச்சாளியோ! செத்துக்கிடக்கிறது. அதனுல்தான் இப்படிப்பட்ட நாற்றம். இதற்குத்தானே நான் எப்போதும் சாமான்களை சுவற்றோடு சேர்ந்தாப்போல் வைக்காமல் கொஞ்சம் இடம் விட்டு அப்போதைக்கப்போது கையைவிட்டு சந்துபொந்தெல்லாம் பெருக்கி சுத்தஞ்செய்யிறமாதிரி வையுங்கோ வையுங்கோன்னு அடிச்சுக்

கொள்றது. நாசமாய்ப்போனவங்கள் வீட்டை வைத்திருக்கிற அழகும், சம்ஸாரம் பண்ணுகிற லக்ஷணத்தையும் பார்! பீடைகள்! சனியன்கள்! சகிக்கமுடியவில்லையே! அடேய்! இங்கே உட்காரமுடியவில்லையடா! இந்த செயரைத் தூக்கிவந்து அந்த வராண்டாவிலே போடு. இந்தப் பெட்டியை அங்கே கொண்டு வந்துவிடு.

தாய் :—ஏம்பா! அப்படி இந்த வீட்டிலிருந்து நாற்றம் வந்தால், காலையிலெல்லாம் இல்லாமே, இப்போ திடீரென்று எப்படி வரும்? இல்லவேயில்லை கண்டிப்பா நான் சொல்றேன் இந்தப் பெட்டிக்குள்ளிருந்துதான் நாற்றம் வருகிறது. இந்தப் பெட்டிக்குள் என்ன வந்திருக்கிறது? சொல்லேன்.

வ. சா. :—ஏம்மா! உனக்கென்ன? பைத்தியங்கியித்தியம் பிடிச்சிருக்கா என்ன? இந்தப் பெட்டியிலேயிருந்துதான் நாற்றம் வருகிறதாம். இந்தப் பெட்டியிலே என்னயிருக்குன்னுக் கேழ்கிறே?

என் சிநேகிதன் ராஜசேகரன் இங்கிலாந்துக்குப் போய் வந்த சங்கதி உனக்குத் தெரியுமோல்லியோ! அவன் அங்கிருந்து எனக்கு வாங்கிக்கொண்டுவந்த அருமையான சீமைச் சாமான்கள்! பாரீஸ் சாமான்கள் தெரியுமா? எல்லாம் எடுத்து இந்த ஹாலை நிறப்பப்போகிறேன் பார்! நீ இங்கே ரோதனைப் பண்ணிக்கொண்டிருக்கவேண்டாம். கொஞ்சம் அப்படி போயிட்டு வா! ஏண்டா! இன்னுந் தொறக்கவில்லையா? நீ ஒரு கையாலாகாதவன். அந்த இரும்புப் பட்டையை அப்படியே கட் (Cut) பண்ணிவிட்டுப் பலகை பலகையாய் எடுத்துவிட்டால் தீர்ந்தது.

சங்கரன் :—இதோ! திறந்துவிட்டேன் ஸார்! அம்மா சொன்னமாதிரி இதுக்குள்ளிருந்துதான் நாற்றம் வருகிறது ஸார்!

வ. சா. :—டேய்! ரேஸ்கல்! உனக்கென்ன? உதைகிதைக் கேழ்கிறதா? அந்தப் பைத்தியந்தான் அப்படிச் சொன்னால், நீயுமா? அப்படிச் சொல்றே! பத்திரம்! நீ அந்தப் பெட்டியைத்

திறக்கிறதற்குள், நான் உன் மண்டையைத் திறந்துவிடுவேன்! ஜாக்கிரதை! வாயை மூடிக்கொண்டு உன் வேலையைப்பார்!

சங்கரன் :—(ஒரு பலகையைத் திறந்துவிட்டு முகத்தைச் சுளித்துக்கொண்டு) ஸார்! கண்டிப்பா இதிலிருந்துதான் நாற்றம் வருகிறது ஸார்!

சாம்பசிவம் :—ஷட்டப்! என்னசொன்னுய்? இடியட் நான் ஸேன்ஸ்! யாரிடம் பேசுகிருய் என்று ஞாபகம் இருக்கட்டும். என்னைவிட நீ ரொம்பப் படித்தவனே! என் மூளையைவிட உனக்கு ரொம்பப் பெரிய மூளையோ! முட்டாள்! இன்னெரு விசை இப்படிச் சொன்னுயானுல் உன்னை கிக் அவுட் பண்ணு வேன். தெரியுமா? உஷார்!

சங்கரன் :—(இரண்டு பலகையை எடுத்துவிட்டு கையை உள்ளேவிட்டு ஒரு கடிதத்தை எடுத்து எஜமானிடம் கொடுத்தான். அதை வாங்கி ஜோபியில் போட்டுக்கொண்டு சரி, ஆகட்டும் என்ருர் அவர்.) அதன்பிறகு $1\frac{1}{2}$ அடி நீளத்தில் பிரௌன் பேப்பரில் சுற்றப்பட்டிருந்த ஒரு பொட்டணத்தை எடுத்து அதைக் கட்டப்பட்டிருந்த டுவைன் கயிறை அவிழ்கத் தொடங்கினுன். அதைக்கண்ட சாம்பசிவம் ஓ! இதென்ன பாரீஸிலிருந்து ஒரு ஜதை ஷூ-பூஸ் வாங்கி வரும்படி எழுதியிருந்தேன். இது, அதாகத்தான் இருக்கும்.

சங்கரன்:—ஸார்! அப்படியானுல், அழகாய் அட்டைப் பெட்டிக்குள் அல்லவாயிருக்கும். இப்படி சும்மா பிரவுன் பேப் பரிலா சுற்றியிருக்கும்?

சாம்பசிவம் :–டர்டிபேக்கர்! அப்படிப்பெட்டிப் பெட்டியாய் வைத்தால் இவ்வளவு சாமான்கள் இதில் கொள்ளுமாடா? அதற் காகத்தான் அவர் பெட்டிகளை எடுத்துவிட்டு வைத்திருக்கிருர். சீக்கிரம் அவுரு பார்ப்போம். என்ன இவ்வளவு நேரமா? சரி, அதை இப்படி என்னிடங் கொடுத்துவிட்டு, இன்னொன்றை எடுத்து அவிழ்.

சங்கரன்:—(அதைக் கொடுத்துவிட்டு, இன்னெரு பெரியப் பொட்டணத்தைக் கையில் எடுத்து) ஸார்! இதென்ன ஸார்!

புட்பால் (Foot-ball) மாதிரியிருக்கிறதே! ஆனால் ரொம்ப கன மாயிருக்கிறது ஸார்! பாலாகவிருந்தால் இவ்வளவு பளுவாயிருக் குமா ஸார்!—என்று கூறிக்கொண்டே அவிழ்க்கத் தொடங்கி னன். அதற்குள் சாம்பசிவம், தன் பொட்டணத்தை அவிழ்த்து ஆவலோடு உற்றுப்பார்த்தார். அது முழங்கை வரையில் துண் டிக்கப்பட்ட இரண்டு முன்னங்கைகளாக விருந்ததைக் கண்டுத் திடுக்கிட்டார். அதற்குள் சங்கரனும் அவிழ்த்துவிட்டு "ஸார்! இது ஒரு பொம்புள்ளை தலை ஸார்! என்று வீரிட்டான்"

சாம்பசிவம்:—(தேகமெல்லாம் நடுங்க) அடேய் சங்கரா! இதென்னவென்று பாரடா!

சங்க:—இது இந்த பொம்புள்ளையின் இரண்டு கையிங்கோ ஸார்!

சாம்ப:—(உடம்பெல்லாம் ஒரே நடுக்கத்துடன்) ஐயையோ அம்மாடி! அம்மாடி! இங்கேவாயேன் சொல்றேன்—என்று போட்டக் கூச்சலைக் கேட்டு அவரது தாயார் ஒரு பக்கம், சம் ஸாரம் ஒரு பக்கம் அலறிக் கட்டிக்கொண்டு ஓடிவந்தார்கள். வந்தவர்கள் சாம்பசிவத்தின் பயங்கரத்தோற்றத்தையும் அங்கு கிடக்கும் அலங்கோலத்தையும் கண்டு திடுக்கிட்டவர்களாய் "ஹா! இதென்ன விபரீதம்! மஹா உத்தமனாகிய அந்த ராஜசே கரன் அனுப்பிய பார்ஸலா இது? இது என்ன விந்தை" என் றூர்கள்.

சாம்ப:—ஆம், அந்தச் சண்டாளன் அனுப்பியதுதான் இது! இத்துடன் ஒரு கடிதமுமிருந்தது. அதை நான் இன்னும் படிக்கவில்லை—என்று கூறிக்கொண்டே ஜோபியில் கையை விட்டுக்கடிதத்தை எடுத்து வாசித்தார். அது கீழ்வரும் விதம்:-

என் அன்பார்ந்த நண்பா!

இதில் கண்ட துண்டமாயிருக்கும் இச்சண்டாளி என்னை மணந்துகொள்வதாய்ச் சொல்லி வெகு நாட்களாய் ஏமாற்றி வந்து, இப்போது வேறு ஒருவனை மணக்கத்துணிந்தாள். எனவே, தீரா சினங்கொண்ட நான் என் வஞ்சத்தை இவ்வாறு தீர்த்துக்கொண்டேன். ஆனால் இதை இங்கு எங்கும் புதைக்க

சந்தர்ப்பப்படாமையினல் உனக்கு அனுப்பியுள்ளேன். நீ இதை உன் வீட்டுப் புழக்கடையிலேயே புதைத்து எனக்கு உதவிபுரிய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதால் இதைப்பற்றிய புகாரே வெளிக்கு வாராமல் மறைந்து ஒழிந்துவிடும். இன்னும் வேண்டிய விவரங்களை நான், நாளையப் பகல் 2 மணிக்கு அவ்விடம் வந்து நேரில் சொல்லுகிறேன்.

இங்ஙனம்,

உனது ஆப்த மித்திரன்,

S. S. ராஜசேகர்.

என்றதை வாசிக்கக்கேட்ட அவரது மனைவி கனகவல்லியம்மாள் "அடப்பாவி! இங்கிலாந்துக்குச் சென்று படித்துத் திரும்பி வரும் உத்தமர்கள் வழியைப் பின்பற்றிய சண்டாளன் நீ, உன்னோடு ஒழியாமல் ஊராரையுமா கெடுக்கப்பார்க்கிறாய் ?

நாதா! இனி தாங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம். இந்தச் சண்டாளனின் சிநேகத்தை உடனே மறந்து இந்தப் பார்ஸலையுங் கடிதத்தையும் போலீஸில் ஒப்படைத்து விஷயத்தையும் விவரமாய்க் கூறிவிடுங்கள்" என்றாள். இதைக்கேட்ட சாம்பசிவம் "ஆம், கனகம்! நானும் அப்படித்தான் செய்ய நினைத்திருக்கிறேன். இதோ! நான் இப்போதே சென்று போலீஸாரை அழைத்துவருகிறேன்" என்று வேகமாய்ச் சென்று சிறிதுநேரத்தில் போலீஸாருடன் திரும்பி வந்தார். இன்ஸ்பெக்டர் தீனதயாளு, சரியாய் 3 மணி நேரம் வரையில் ஒவ்வொருவராய் எல்லோரிடத்திலும் வாக்குமூலம் வாங்கிக் கொண்டிருந்தார். அச்சமயம் ராஜசேகரன், காரைவிட்டிறங்கி "ஹலோ! மிஸ்டர் சாம்பசிவம் !" என்று கம்பீரமாய் கூறிக் கொண்டே உள்ளே வந்தான். சாம்பசிவம் பதில் ஒன்றும் பேசாது இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கண்ணடித்தார். உடனே இன்ஸ்பெக்டர், ராஜசேகரனைப் பார்த்து "ஹலோ!வாருங்கள்! சாரதா நகரிலிருந்து வரும் ராஜசேகரப் பிரபுதாங்கள்தானே?" என்றார். இதைக்கேட்ட ராஜசேகரன், சற்று வியப்புந் திகைப்புமாக "ஆம், நான்தான். என்ன விசேஷம்? என்றான்.

இன்ஸ்:—வேறு ஒன்றுமில்லை. தாங்கள் அனுப்பியிருந்த விநோதப் பார்ஸலைக் கண்ட தங்கள் நண்பர், தங்கள் கைத் திறமைக்கு மெச்சியவராய் இத்தங்கத் தோடாவைத் தங்களுக்குச் சன்மானிக்க; மேலும் அதை என்மூலம் சன்மானிக்க நியமித்திருக்கிறார். நான் இந்த கௌரீபுரத்து 4வது டிவிஷன் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னும் ஹோதாவில் தங்களை அரெஸ்ட் (Arrest) செய்கிறேன். உடனே ஸ்டேஷனுக்கு வரவும்" என்று கூறிக்கொண்டே ராஜசேகரன் கைகளுக்கு விலங்கிட்டார்.

ராஜசேகரன் :—ஹா! நான் என்னகுற்றம் செய்தேன்? என்னை எதற்காக அரெஸ்ட் செய்யவேண்டும்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! விஷயத்தை விவரமாய்க் கூறுங்கள்.

இன்ஸ் :—ஓஹோ! உங்களுக்கு ஒன்றும் புரியவில்லையா? சரி, அங்கே வாருங்கள் புரியும்படிச் செய்கிறேன். என்று கூறிக்கொண்டே ராஜசேகரனை நெட்டித் தள்ளிக்கொண்டு சென்றார். அச்சமயம் ராஜசேகரன், அங்கிருந்த சாம்பசிவத்தைப் பார்த்து "அடேய்! சாம்பசிவம்! இதற்காகவா என்னைச் சரியாய் 2 மணிக்கு வரும்படி தந்தியடித்திருந்தாய்? ஏ வஞ்சகா! இதோ! இந்தத் தந்தியைக் கண்டு உனக்கு என்ன ஆபத்து நேர்ந்துவிட்டதோ? என்று பதறி ஓடிவந்தேனே! இதென்ன கபட சூழ்ச்சியடா! இப்படி உனது மோச வலையை என்மீதிலா வீசவேண்டும்? இதுதானே? நான் உனக்குச் செய்த உபகாரங்களுக்குப் பிரதி?—என்று கண்ணீர்விட்டுக் கதறிக்கொண்டே காரில் ஏறினன்.

"ஆம்; நீ எனக்கு உபகாரம் செய்தது உண்மைதான். அதற்காக நான் இவ்வித உனது தீத்தொழிலுக்கு உடந்தையாவேனோ?" என்று கூறிக்கொண்டே சாம்பசிவம் தன் காரில் ஏறினர். உடனே கார்களெல்லாம் காற்றாய்ப் பறந்து போலீஸ் ஸ்டேஷன் பக்கம் சென்றன.

# 14-வது அத்தியாயம்.

## தீவாந்தர சிட்சை—தீர்ந்தது ரச்சை

சென்ற அத்தியாயத்தின் இறுதியில், அரெஸ்ட் செய்து அழைத்துச் சென்ற ராஜசேகரனை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணை செய்து செஷன்ஸுக்குக் கமிட் செய்தார்கள். அங்கு நடந்த விசாரணை முழுவதையும் விஸ்தரிப்பதைவிட சுருங்கச் சோல்லி விளங்கவைப்பது, என்று தீர்மானித்துள்ளோம். அதன்படி, அவ்விசாரணையில் முக்கியமான ஜெயலெக்ஷ்மியின் முதல் காதலன் என்று ஏற்பட்ட ஒருவன் வாக்கு மூலத்தில், "நாங்கள் இருவரும் சம்மதித்து விவாகத்திற்கு ஏற்பாடு செய்ததை என் பிதா தடுத்து, வேறு ஒரு பெண்ணை விவாகத்திற்கு ஏற்பாடு செய்தார். இதைக்கண்ட நான், சிறிது காலம் மறைந்திருப்பது நலம் என்றெண்ணி உடனே புறப்பட்டு தேச சஞ்சாரம் செய்து வந்தேன். என்னைத்தேடியலைந்த எனது காதலி ராஜசேகரனை சந்தித்து, அவர் தன்னை மணந்து கொள்ளும்படிக் கேட்டபோது இவ்விவரமெல்லாந் தெரிவித்து அவரை மணஞ்செய்துகொள்ள முடியாதென்று கூறிவிட்டாள்.

பப்ளிக் பிராஸிகியூடர் :—(ராஜசேகரனைப் பார்த்து) உமது காதலி இவ்விஷயம் உம்மிடங் கூறியது உண்மைதானா?

ராஜ :—ஆம், கூறியது உண்மைதான். ஆனால், அவளது காதலன், சரியாய் என்னைப்போலவே யிருப்பார் என்றும், அவர் இது வரையில் கிடைக்காமையினால், அவரைப்போலுள்ள என்னை மணந்துகொள்வதில் தனக்கு வெகு திருப்தி என்றுங் கூறினாள். ஆகையால், இவர் சிறிதும் என் சாயலாகவல்லாமல் முற்றும் வேறுபட்டிருப்பதிலிருந்து இவர் அவளது காதலனாக யிருக்கமுடியாதென்று நினைக்கிறேன். (உடனே யாவரும் நகைத்தனர்).

ஜட்ஜ் அபிப்பிராயம் :—(தனக்குள்) இதெல்லாம் வீண் பிதற்றல்.)

பப்ளிக் பிராஸிகியூடர்:—(ஜெயலக்ஷ்மியின் முதல் காதலனைப்பார்த்து)

ஊம், அதன் பிறகு?

ஜே. மு. காதலன் :—பிறகு இவருடைய வற்புறுத்தலின் பேரில் இவரை மணந்துகொள்ளச் சம்மதித்திருந்த எனது காதலி நான் வந்துசேர்ந்த மறுதினமே இவரிடம் சென்று, நான் வந்திருக்கும் விஷயத்தைக் கூறி 'இனி நான் உம்மை மணஞ்செய்துகொள்ள முடியாது' என்றுங் கூறினுள். அதைக் கேட்ட இவர் மகா கோபங்கொண்டவராய் 'அப்படி என்னை ஆசைகாட்டி மோசஞ்செய்து அவமதிப்பாயானல், அவனை மணந்து வாழும்படி நான் உன்னை உயிருடன் விடமாட்டேன், என்று சபதங் கூறிச்சென்றதாகத் தெரிவித்தாள்.

ப. பிராஸிகியூடர் :—(ராஜசேகரனைப் பார்த்து) தாங்கள் அவ்விதம் கூறியது உண்மைதானு?

ராஜசேகரன் :—அவள் அப்படி ஒன்றும் என்னிடம் கூறியதுமில்லை, நானும் அவ்விதம் ஒன்றும் சொல்லவில்லை; இது வெறும் அபாண்டமென்று நினைக்கிறேன்.

ஜட்ஜ் :—(தனக்குள் அபிப்பிராயம்) ஆம், இதை உண்மை என்று ஒப்புக்கொள்வானு? அப்படித்தான் மறுப்பான்.

ப. பிராஸிகியூடர் :—சரி, அதிருக்கட்டும் பார்ஸலைப்பற்றிய, விவரமே உமக்குத் தெரியாது என்றீரே! அதிலிருந்த கடிதத்தின்படி சரியாய் 2 மணிக்கு உமது நண்பர் வீட்டிற்கு எதற்காக வந்தீர்?

ராஜ :—அன்று காலை 10 மணிக்கு என் நண்பன் சாம்பசிவத்திடமிருந்து 'ஒரு முக்கிய காரணத்தின்பொருட்டு நீ இன்று பகல் சரியாய் 2 மணிக்கு இங்கு வரவும்' என்று வந்த ஒரு தந்தியைக் கண்டு, தனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்த காலத்தில்தான் என் சகாயத்தைக் கோறுவது வழக்கமாதலால், இன்றும் அப்படித்தான் இருக்கும் என்று உடனே புறப்பட்டு அவன் கோறியபடி சரியாய் 2 மணிக்கு அவன் வீட்டையடைந்தேன்.

உடனே, ராஜசேகரனின் வக்கீல் எழுந்து, இதோ! அத் தந்தி என்னிடமிருக்கிறது.—என்று கூறிக்கொண்டே சென்று

அதை ஜட்ஜியினிடம் கொடுத்தார். அதைக்கண்ட ஜட்ஜ் (தனக்குள் அபிப்பிராயம்) அப்படி ஏதாவது விபரீதம் நேர்ந்தால், தப்பித்துக்கொள்வதற்கென்று முன் ஜாக்கிரதையாய் செய்துகொண்ட ஏற்பாடு இது.

ப. பிராஸிகியூடர்:—(ராஜசேகரனைப் பார்த்து) அந்தப் பார்ஸலில் உள்ள கடிதம் தங்களுடையதல்லவென்றீரே! உம்முடைய கையெழுத்துப் பிரதிகளையெல்லாம் பரிசோதித்த கையெழுத்துப் பரிசோதகர், அது உம்முடைய கையெழுத்துதான் என்று நிரூபிக்கிறாரே! அதற்கென்ன சொல்கிறீர்?

ராஜ:—ஆம், அதைப்பார்த்தால் சரியாய் என்னுடைய கையெழுத்தைப்போல்தான் யிருக்கிறது. ஆனால்........(மேலே என்ன சொல்வதென்று தோன்றாமல் சற்று விழித்தான்) இதைக்கண்ட

ஜட்ஜ்:—(தனக்குள்) அம்பிட்டுகிட்டான் தும்மட்டிக்காய் பட்டன்—என்று விழிக்கிறான். இதிலிருந்தே இவன் குற்றவாளிதான் என்று நன்றாய் விளங்குகிறது.

இதே அபிப்பிராயத்தைக்கொண்ட ஜூரிர்களெல்லாம் ஏகமனதாய், "குற்றவாளிதான்" என்று ஆமோதித்தார்கள்.

உடனே ஜட்ஜ், "தூக்குதண்டனை" என்று தீர்ப்பளித்தார்.

சிற்றப்பாவின் விடாமுயற்சியினால், சாரதாநகர் ஹைகோர்ட் அப்பீலில், ராஜசேகரனுக்கு தீவாந்தர சிக்ஷையாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதன்படி, இன்று ராஜசேகரனை அந்தமான் கப்பலில் ஏற்றி அனுப்பப்போகிறார்கள். எனவே, சாராதா நகர் ஹார்பரில் சொல்லமுடியாத கும்பல்கூடி அல்லோலகல்லோலமாயிருக்கிறது.

ராஜசேகரனின் தாயும் பாட்டியும் அவனைப் பிரிந்து செல்லமாட்டாதவர்களாய் அழுவது, மூர்ச்சித்துவிழுவது, மூர்ச்சைத்தெளிந்தெழுந்து மறுபடியும் பிரலாபிப்பதுமாகவிருக்கி

ருர்கள். கடைசித் தடவையாக அவன் தாய் மூர்ச்சித்ததைக் கண்ட அவனது சிற்றப்பா, அவர்களிருவரையும் காரில் ஏற்றி வீட்டிற்கழைத்துச் செல்லும்படி ஏற்பாடு செய்துவிட்டுவந்து தானும் கதர ஆரம்பித்தார். சிற்றப்பாவின் துயரத்தைகாண சகியாத ராஜசேகரன் புலம்பலையும், அவனுடைய துக்கத்தைக் காண சகியாமல் சிற்றப்பா புலப்புவதையுங் கண்ட எல்லோர் கண்களிலும் நீர் ஆராய்ப் பெறுகி ஓடிற்று. அச்சமயம், கப்பல் புறப்படும் நேரமாகிவிட்டமையினுல் போலீஸார் கும்பலை ஒதுக்கிவிட்டு ராஜசேகரனைக் கப்பலில் ஏற்றினுர்கள்.

ஆச்சு கப்பல் கிளம்ப இன்னும் இரண்டொரு நிமிஷங்களே யிருந்தது. கப்பலின் மேல் தட்டில் நின்று ராஜசேகரன், தன் நண்பர்களுடைய பிரிவுபசாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிருன். அடுத்தக்ஷணம் பெரும் ஆரவாரத்துடன் கிளம்பிவிட்டது கப்பல். அச்சமயம், எதிர்பாராத விதமாய் ஹார்பரில் ஒருவித கிளர்ச்சி ஏற்பட்டது. ஜனங்கள் அங்குமிங்குமாய்த் தத்தளித்துக்கொண்டிருக்கிருர்கள். அதே சமயம் யாரைக் கொலைசெய்த குற்றத்திற்காக ராஜசேகரன் தீவாந்தரசிக்ஷை பெற்று இப்போது பயணப்பட்டானே அதே பெண்மணி ஜெயலக்ஷ்மியும், அவளது சகோதரனும் கப்பலைப்பார்த்தவண்ணமாக ஓரேப்பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடிவருகிருர்கள். ஓடி வந்த வேகத்தில் ஜெயலக்ஷ்மியின் தலையிலிருந்த முக்காடு நழுவி விழுந்துவிட்டது. இதனுல் அவள் பார்ஸீகப் பெண்ணுகத் தோற்றுமல் சாதாரண பெண்ணுகவேத் தோன்றினுள். அப்படியிருந்தும், கப்பலின் முன் தட்டினின்றும் கவனித்துக்கொண்டே செல்லும் ராஜசேகரனுக்குத் திட்டமாய் தன் காதலி தான் என்று தெரிந்துவிட்டது. மாண்டுபோன தன் உண்மைக் காதலி உயிர் பெற்று வந்ததைக்கண்ட அவன் உள்ளம் சொல்ல முடியாத ஆனந்தத்தையடைந்தது. அப்போதைக்குக் கப்பல் கரையைவிட்டு 10 கஜதூரத்தைச் சென்றுவிட்டதைக் கண்ட அவன் மனம், என்ன செய்வதென்றும் தோன்றுமல் க்ஷண நேரம் தவித்தது. மென்மேலும் கப்பல் சென்றுகொண்டேயிருப்பதைக்கண்ட அவன் முன்பின் யோசியாமல் உடனே தன் காதலியின் பக்கம் நோக்கி ஓரேப் பாய்ச்சலாய் பாய்ந்து குதித்துவிட்டான். இதைக்கண்ட கப்பலிலிருந்த ஜனங்களும் கீழே

யிருந்தவர்களும் அவன் தண்ணீரில் (சமுத்திரத்தில்) தான் விழுந்துவிடுவான் என்று கவலேயோடு அவனேயே பார்த்துக் கொண்டிருந்தார்கள். நல்லவேளேயாய் ராஜசேகரன் யாதொரு துன்பமும் ஏற்படாமல் தன் காதலியின் சமீபத்தில் சர்க்கஸ் ஜம்பிங் மாஸ்டர் மாதிரி குதித்தெழுந்தான். உடனே தன் காதலியின் இருகரங்களேயும்பற்றி "ஹா! என் கண்ணே! நீ கொலே செய்யப்பட்டாய் என்றும் உன்னே நானே கொலே செய்தேன் என்றும் வதந்தி ஏற்பட்டிருக்க நீ எப்படி உயிர்பெற்று வந்தாய் இது வரையில் நீ எங்கிருந்தாய்? உனது விவரமென்ன? என்ருன். இதைக்கேட்ட அப்பெண் பக்கத்திலிருந்த தன் சகோதரனேச் சுட்டிக்காட்டி "நாதா! எல்லாம் இந்தத் துப்பறியும் சிங்கத்தால் ஏற்பட்ட சம்பவங்கள் இவனேக் கேட்டால் விவரங்கள் வெளியாகும்" என்ருள். அதைக்கேட்ட ராஜசேகரன் அப்போதே அவனே ஏறிட்டுப் பார்த்து "ஹா! ராஜபஹதூர்! நீயா! என்று ஆர்வத்துடன் அவனேக் கட்டித்தழுவி "காதலீ! இவன் யாரென்று உனக்குத் தெரியுமா? இவன்தான் எனது முதல் காதலி விஜயாவின் சகோதரன் என்ருன். இதைக் கேட்ட அப்பெண் "நன்ருகச் சொன்னீர்! இவன் என் சகோதரன் அல்லவா?" என்ருள். இதைக்கேட்ட ராஜசேகரன் திரு திருவென விழித்தவண்ணம் "ராஜபஹதூர்! இப்பெண்மணி யார்?" என்ருன்.

பெண்ணின் சகோதரன்:—ஓ! நான் ராஜபஹதூரா? "சரி, இருங்கள் நான்வந்து எல்லாம் விவரமாய் தெரிவிக்கிறேன்" என்று கூறிக்கொண்டே சென்ருன். சென்றவன், அங்கிருந்த ஒரு போலீஸ் சூப்ரெண்டிடம் சென்று தன் ஜோபியிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து அவரிடம் கொடுத்தான். அதை வாசித்துப்பார்த்த சூப்ரெண்டு துரை, "இப்போது இவன் எங்கிருக்கிருன்? உனக்குத் தெரியுமா?" என்ற கேள்வியை ஆங்கிலத்தில் கேட்டார்.

"ஆம், எனக்குத் தெரியும். இப்போது அவன் இங்குதான் யிருக்கிருன். வாருங்கள் அவனேக் காண்பிக்கிறேன் என்று ஆங்கிலத்தில் கூறிக்கொண்டே அவன் முன் நடக்க துரை பின்னே நடந்து வருகிருர். சிறிது தூரத்தில் ராஜசேகரனிடம்

பேசிக்கொண்டிருந்தப் போலி சிற்றப்பாவைக் கண்ட சூப்ரெண்ட் துரை "ஹலோ! மிஸ்டர், தாங்கள்தானு ராஜசேகரனின் சிற்றப்பா?" என்று ஆங்கிலத்தில் கேட்க, "ஆம்" என்று ஆங்கிலத்தில் பதிலளித்தார் சிற்றப்பா.

அதைக்கேட்ட சூப்ரெண்ட் துரை, "ஓ! மைடியர் பிரண்டு! உம்மைப் பார்க்கவேண்டுமென்று நான் வெகு நாளாய் ஆவல் கொண்டிருந்தேன்" என்று ஆங்கிலத்தில் கூறிக்கொண்டே, சிற்றப்பாவின் கரத்தைப்பற்றி ஷேக்ஹேண்ட்ஸ் கொடுத்து கையை அப்படியே கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். பக்கத்தில் சாதாரண உடையிலிருந்த சி. ஐ. டி. போலீஸார் கையிலுள்ள விலங்கைச் சிற்றப்பாவின் கரத்தில் பூட்ட நெருங்கினுர்கள். உடனே ஒரு திமிர் திமிரிக்கொண்டு ஓட்டம் பிடித்தார் சிற்றப்பா. விவரமறியாத ராஜசேகரன், முன்பு நம்மீது ஏற்பட்ட அபாண்டம் இப்போது சிற்றப்பாவின் மீது ஏற்பட்டதோவென கதிகலங்கினுன்.

ஒரே ஓட்டமாய் ஹார்பரைவிட்டு வெளியில் ஓடிவந்த சிற்றப்பா லக்ஷ்மிநரசு (சிற்றப்பாவின் சம்மந்தம் இனி தீர்ந்துவிட்டது எனவே, நாம் பழையபடி லக்ஷ்மிநரசு என்றே அழைக்கலாம்) மோட்டார் கார்களைப் பிடித்தால், அதை ஸ்டார்ட் (புறப்பட) பண்ணுவதற்குள் போலீஸார் நெருங்கி விடுவார்கள் என்றெண்ணி, அங்கு சாதாரண சைக்கிள் ஒன்று ஸ்டாண்டில் நின்றிருந்ததை ஒரு நெட்டு நெட்டித்தள்ளி அதில் ஏறிக்கொண்டு விட்டார் சவாரி.

பழயபடி, போலீஸார் மோட்டார்கார்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும், குதிரைகள் மீதிலுமாக மூலைக்கு மூலையாக எல்லா திசைகளிலும் போலீஸார் பின் தொடர்ந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் கஜேந்திரத்திற்கு இச்செய்தி எட்டியதும் "இத்தடவை அத்திருட்டுப்பயலை எப்படியும் விடுவதேயில்லை" என்று மார்பைத் தட்டிக்கொண்டுப் புறப்பட்டார்.

இப்படியாய் லக்ஷ்மிநரசுவைப் பின் தொடர்ந்த போலீஸாரெல்லாம் வெகு தீவிரமாய் செய்த முயற்சியில் ஒரு கூட்டத்

தார், லக்ஷ்மிநரசுவின் சைக்கிளை நாலுபக்கமும் வளைத்துப் பிடித்துவிட்டார்கள். அக்கூட்டத்தின் தலைவராகிய இன்ஸ்பெக்டர் பாஷ்யம் என்பவர். எத்தனையோ இன்ஸ்பெக்டர்கள் அவனைப் பிடிக்க முயன்று பலதடவைத் தோல்வியடைந்திருக்க, தான் இன்றுதான் முதல் தடவையாக முயன்றும் உடனே வெற்றி கிடைத்துவிட்டதை எண்ணி பேரானந்தமடைந்தவராய், லக்ஷ்மிநரசுவின் கைகளுக்கு விலங்கிட்டார். "வாருங்கள் ஐயா! வாருங்கள்! உங்கள்வரவை எதிர்பார்க்கும் சர்க்கார் மண்டபத்திற்கு வாருங்கள்! உங்களை சர்க்கார் விருந்தினராக செய்துவைக்கிறேன் வாருங்கள்!" என்று கம்பீரமாய் கூறி அழைத்துச் சென்று காரில் ஏறும்படி செய்தார், இன்ஸ்பெக்டர் பாஷ்யங்காரு.

பின்சீட்டில், லக்ஷ்மிநரசுவை உட்காரவைத்து, பக்கத்திற்கொருவராய் இரு கான்ஸ்டேபிள்கள் உட்கார்ந்தார்கள். மற்ற இரு கான்ஸ்டபிள்கள் பக்கத்திற்கொருவராய் அவன் கால்மாட்டில் உட்கார்ந்தார்கள். முன் சீட்டில், இன்ஸ்பெக்டரும் சப் இன்ஸ்பெக்டரும் அமர்ந்தார்கள். லக்ஷ்மிநரசுவைப் பார்த்து சரி காரை விடலாமோ?" என்றார் இன்ஸ்பெக்டர் பாஷ்யம்.

"ஏன் என்னைமட்டும் அழைத்துப்போவதில் தங்களுக்குத் திருப்தியில்லையோ? என் சகாக்களையும் அழைத்துச் செல்ல வேண்டுமென்று நினைக்கிறீர்களோ? அப்படித்தான் செய்யுங்களேன்! நான் அவர்களைக் காட்டிக்கொடுக்கமாட்டேன் என்று நினைத்தீர்கள்? நானே அகப்பட்டுக்கொண்டபோது அவர்கள் தப்பித்துக்கொள்வதில், எனக்கென்ன லாபம்? எப்போதும் போல் இதிலும் அவர்கள் என்னோடு துணையாக வருவதுதான் எனக்குத் திருப்தி. வேணுமானால் இதோ! சமீபத்தில்தான் இருக்கிறார்கள். இந்தப்பக்கமாய் காரை விடுங்கள்; அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடுகிறேன். பலவிதத்திலும் கஷ்டப்பட்ட நான் ஒழிந்துவிடுவது, அவர்கள் சுகமாயிருப்பதா?" என்றான் லக்ஷ்மிநரசு. இதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், வெகு சந்தோஷமடைந்தவராய் "சரி அப்படியே!" என்று அவன் காட்டிய வழியாகக் காரைச் செலுத்தினார்.

(ரகசியமாய்) "என்னங்கோ ஸார்! அவன் பேச்சைக்கேட்டு நாம் அங்கு செல்வது சரியா? சற்று யோசித்துப் பாருங்கள்"

என்றார் சப் இன்ஸ்பெக்டர் சடகோபன். "என்ன! சடகோபன், என்னை என்ன! ஏமாந்த சோணகிரி என்று எண்ணிவிட்டாய்? தூரமாய்க் காரில் இருந்தபடியே அவர்கள் இருப்பிடத்தைக் கொஞ்சம் பார்த்துக்கொண்டு வந்து விட்டால், பிறகு பார்த்துக்கொள்ளலாம். இந்தத்திருட்டுக் கூட்டத்தை பூண்டோடு வேறறுத்தக்கீர்த்தி நம்முடையதாக விருக்கட்டும்" என்றார் இன்ஸ்பெக்டர். இதற்குள் கார் வெகுதூரம் வந்துவிட்டது. இனி கார் போகமுடியாது என்ற, மரமடர்ந்த கரடுமுரடான காட்டையடைந்தார்கள். எனவே, காரைவிட்டிறங்கி (காரை அங்கு ஒரு பக்கம் நிறுத்திவிட்டு) ஒற்றையடிப் பாதையின் வழியாக, மத்தியில் லக்ஷ்மிநரசுவை நடக்கவிட்டு அவனது இடப்பக்கம் வலப்பக்கமாக இன்ஸ்பெக்டரும் சப் இன்ஸ்பெக்டருமாய் நடந்தார்கள். மற்றும் லக்ஷ்மிநரசுக்கு முன்பக்கம் இரு கான்ஸ்டபிள்களும் பின்பக்கம் இரு கான்ஸ்டபிள்களுமாக காவல்புரிந்து சென்றார்கள். அப்போதும் சப் இன்ஸ்பெக்டர், "நம் கையில் துப்பாக்கி முதலியதுமில்லாமல் இப்படி அவன் இருப்பிடத்திற்குச் செல்வது சரியா?" என்று ஜாடைமாடையாக எச்சரித்தார்.

"இந்தப் பகல் வேளையில் நீ என்ன! இப்படி பயப்படுகிறாயே! இப்படி பயங்கொள்ளித்தனமாக விருந்தால் இந்த போலீஸ் இலாகாவில் நீ எப்படி முன்னேற்றமடைவாய்! வெறும் கோழையாகவிருக்கிறாயே!" என்று ஏளனம் செய்தார் பேராசைப்பிடித்த பாஷ்யம் நாயுடு.

அதன் பயனாக, திடீரென்று ஓர் விடத்தில் லக்ஷ்மிநரசு, "ஹோ! ஹா! புலி! புலி!!" என்று அலறினதைக் கண்டு திடுக்கிட்டார். உடனே, கான்ஸ்டபிள்களும் "ஆமாங்கோ! ஆமாங்கோ!! அதோ வரிசையாய் நாலு புலிங்கோ ஸார்!" என்றதுதான் தாமதம். உடனே எல்லோரும் லக்ஷ்மிநரசுவை அப்படியே விட்டுவிட்டு பின்னுக்காய் ஓரே ஓட்டம் பிடித்தார்கள். அதைக்கண்ட லக்ஷ்மிநரசு "என்ன! அநியாயமய்யா இது? என்னை எங்கையோ விருந்தாளியாக்குகிறேன் என்று அழைத்துக்கொண்டுவந்து, இந்தப் புலிகளுக்கு இரையாக்கிவிட்டுச் செல்கிறீர்களே! ஐயா! ஐயா!! என்னை இப்படித் தனியாய்

விட்டுச் செல்வது உங்களுக்குத் தர்மமா? ஐயோ நான் இனி என்னசெய்வேன்'' என்று அலறிக்கொண்டு அவ்விடத்திலேயே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். பாவம்! புலியைப்பார்த்து பயந்த வேகத்தில் அவனுக்குக் கைகால் ஆடவில்லைபோலும்! அப்படியே திகைத்துச் சிறிதுநேரம் அவர்கள் ஓடுவதைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

கண்ணுக்கெட்டாததூரம் அவர்கள் ஓடி மறைந்ததைக் கண்ட அவன் மனம் ஆனந்தத்தால் களித்தது. "ஊம், இனி என் புலி என்னை என்னசெய்யும்?'' என்று அலட்சியமாய் ஒரு சிறிப்புச்சிறித்துக்கொண்டே புலிகள் நிற்குமிடத்தை நோக்கிச் சென்றான். அந்த அசட்டுப் புலிகள் அவனைக் கண்டு பாயவுமில்லை, பயந்து ஓடவுமில்லை. லக்ஷ்மிநரசு, அவைகளின் அருகில் சென்று, அன்பாய் வளர்த்த நாய், குதிரை முதலியவைகளைத் தட்டிக்கொடுப்பதுபோல் தன் விலங்கிட்ட கைகளால் தட்டிக் கொடுத்தவண்ணம் வாயால் ஒருவித சீழ்கை அடித்தான். அதற்குப் பதிலாக அங்கிருந்த குன்றுக்குப் பின்புறத்திலிருந்து வேறுவிதமான சீழ்கைச் சப்தம் கேட்டது. சிறிதுநேரத்தில் அவனது சகாக்களாகிய அறுவர், அங்குவந்து சேர்ந்தார்கள். அவர்களிடம் லக்ஷ்மிநரசு, நடந்த விவரங்களை யெல்லாம் (ராஜசேகரனைக் கப்பல் ஏற்றியது முதல் அதன் பிறகு நடந்த ஒவ்வொன்றையும்) விடாது கூறினான். அதைக் கேட்ட அவனது ஆட்கள், நமது சூழ்ச்சிப்படி இன்று இப்புலிகளைக் கொண்டு, போலீஸ் புலிகளைத் துரத்தி விட்டோமா?'' என்று கூறி கொல்லென்று சிறித்து மகிழ்ந்தார்கள். உடனே அப்புலிகளிடம் சென்று அதன் விசையைப் பிரயோகிக்க, அதினின்றும் காற்று வெளிப்பட்டு விட்டமையினால் புலிகளெல்லாம் சப்பை சப்பையாய் சாதாரண தோல் பைகளாக மாறி பொத்து பொத்தென்று தரையில் சாய்ந்தன. தப்பி போலீஸாரிடம் அகப்பட்டுக்கொண்டால் இப்படி புரளி கூறி போலீஸாரை இங்கு அழைத்துவந்து இப் புலிகளைக் காட்டி ஏமாற்றுவதென்று லக்ஷ்மிநரசு, முன்ஜாக்கிரதையாக, ரப்பரால் புலியைப்போல் செய்து வர்ணமிட்டு, வேண்டிய போது மோட்டார், சைக்கிள் முதலிய டியூப்புகளுக்குக் காற்றை நிறப்புவதுபோல், நிறப்பினால் உடனே அவைகள் சரியாய்ப்

புலியின் சாயலைப் பெற்று நிற்கவும், வேண்டாதபோது காற்றை வெளிப்படுத்திவிட்டால் சப்பையாக சாதாரண ரப்பர் பைகளாக மாறும்படியும் செய்த சூழ்ச்சி இஃது. இதன்படி, பிரதிதினமும் காலை 6 மணிக்கு இங்கு இப்புலிகளைத் தயாரித்து, இதன் பாதுகாப்புக்காகவும் சமயம் நேர்ந்தபோது லக்ஷ்மிநரசுக்குச் சகாயம் செய்யவும் நல்ல திடசாலிகளான 6வர், அங்கு மறைந்திருந்து லக்ஷ்மிநரசுவின் குறிப்பான சீழ்கைச் சப்தம் கேட்டால் வெளிவருவது. அப்படி ஒன்றும் நேராதவரையில், பிரதிதினம் மாலை 7 மணி ஆனபிறகு வெளியில் வந்து அவைகளை எடுத்துக் கொண்டு அவர்களின் இருப்பிடம் போய்ச் சேருவது. இவர்கள் தினப்படி இவ்விதம் போகவும் வரவும் பக்கத்திலுள்ள ஒரு ஆற்றில் இவர்களுடைய படகு ஒன்று எப்போதும் தயாராகக் காத்துக்கொண்டிருக்கும். அதன்படி, இப்போதும் அந்தப் புலிகளைப் பாயைச் சுற்றுவதுபோல் சுருட்டி எடுத்துக்கொண்டு சென்று அனைவரும் படகில் ஏறி அமர்ந்தார்கள். அதில் நால்வர், ஆனந்தமாய் பாடிக்கொண்டே படகைச் செலுத்துகிறார்கள். படகின் மத்தியிலமர்ந்த லக்ஷ்மிநரசும் அவனது இடப்புறம் வலப்புறமாக அமர்ந்த குப்புசாமி கந்தசாமி முதலியவர்களும், படகோட்டிகளின் பாட்டிற் கிசைந்தபடித் தலையாட்டித் தாளம் போட்டுக் கொண்டுப் பரவச முற்றவர்களாய் சென்றுக் கொண்டிருக்கிறார்கள்.

முன்பு, புலியைக்கண்டு மிரண்டு ஒரே ஓட்டமாய் ஓடிவந்த போலீஸார் அவர்களது காரையணுகியபோது, தீவிர முயற்சியோடுத் தேடிக் கொண்டுவரும் போலீஸ் இன்ஸ்பெக்டர் கஜேந்திரம் ரெங்கசாமி முதலியவர் குறிக்கிட்டு "என்ன சங்கதி? அக்கள்வன் இவ்வழியாகத்தான் வந்திருப்பான், என்று நம்பி நாங்களும் இவ்வழியாகவே வந்தோமே! நீங்கள் சும்மாத் திரும்பி வந்ததைப் பார்த்தால் அவன் இந்த பக்கம் வரவில்லையோ?" என்று ஆத்திரத்தோடு கேட்டார்கள். நடந்ததை நடந்தபடிச் சொன்னார் பாஷியம். "ஓ! அப்படியா? ஆனால், அவனைக் கண்டிப்பாய் புலிகள் அடித்திருக்குமா? வாருங்கள் சென்று பார்ப்போம். இதோ! எங்கள் கையில் ரிவால்வர்கள் யிருக்கிறது. நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்.

ஓடி வாருங்கள்'' என்று எல்லோரையும் அழைத்துக் கொண்டு ஓடி வந்தார் இன்ஸ்பெக்டர் கஜேந்திரம்.

சுமார் 3 பர்லாங்கு தூரத்தில், இரண்டு வேங்கையும் இரண்டு சிறுத்தையும் சமபாவத்துடன் நின்றிருப்பதையும், லக்ஷ்மி நரசு அவைகளின் பக்கமாய் சென்றுக் கொண்டிருப்பதையுங் கண்டார்கள். "சரி, அவன் அவைகளுக்கு இரையாவது நிச்சயம். நாம் இதோ! இந்த மரத்தின்மேல் ஏறியிருந்து பார்ப்போம்'' என்று அங்கிருந்த ஒரு மரத்தில் எல்லோரும் ஏறினார்கள். அச்சமயம், வேறு 6-வர், அங்கு வந்ததும், புலிகளைச் சாதாரணப் பைகளாக்கிச் சுற்றிக்கொண்டுச் செல்வதையுங் கண்டு "ஆஹா! திருட்டுப் பயல்களின் மோசத்தைப் பார்த்தீர்களா? ஊம், சீக்கிரம் இறங்கி ஓடிவாருங்கள்'' என்று கூறிக் கொண்டே கஜேந்திரம், ரிவால்வரை எடுத்துக் கையில் பிடித்த வண்ணம் ஓடி வருகிறார். அவர் பின்னால் மற்றவர்களும் பெரும் ஆத்திரங் கொண்டவர்களாய் ஓடிவருகிறார்கள். இதற்குள் கள்வர் படகிலமர்ந்து வெகு தூரஞ் சென்றுவிட்டார்கள். ஓடி வந்த போலீஸாரெல்லாம் உடைகளைக் களைந்து விட்டு, உள்ளாடையுடன் தண்ணீரில் குதித்து நீந்திக் கொண்டுச் சென்று படகோட்டும் துடுப்புகளைப் பற்றியிழுத்தார்கள் சிலர், படகைச் செல்ல விடாது இழுத்துப் பிடித்தார்கள் பலர். இதைக் கண்ட கள்வர், மறுபக்கம் தண்ணீரில் குதித்து நீந்தி அக்கரையைச் சேர்ந்து ஓட முயன்றார்கள். அச்சமயம், போலீஸ் இன்ஸ்பெக்டரும் சப் இன்ஸ்பெக்டரும் (கஜேந்திரம்-ரெங்கசாமி) தங்கள் ரிவால்வர்களை யெடுத்துக் கள்வரின் முழங்கால்களுக்குக் கீழ் குறிபார்த்துச் சுட்டார்கள். லக்ஷ்மிநரஸைத் தவிர்த்து மற்றெல்லோர் கால்களிலும் குண்டுகள் பாய்ந்து ரத்தம் பீரிட்டது. "ஹா! ஐயோ!'' என்று அலறிக்கொண்டே ஓட மாட்டாமல் வேதனையோடு ஓடிவரும் தன் சகாக்களின் பரிதாபத்தைக் கண்ட லக்ஷ்மிநரசு "நண்பர்காள்! இனி நாம் தப்பமுடியாது. இந்த போலீஸாரிடம் சிக்கி அவமானப் படுவதைவிட, நாம் இந்த மலையின் உச்சியில் சென்று பக்கத்திலுள்ள கடலில் குதித்து உயிர் விடுவது தான் சிலாக்கியம், என்று நினைக்கிறேன். ஆகையால் நீங்கள் எல்லோரும் சற்றுச் சமாளித்துக் கொண்டு சீக்கிரமாய் என்னோடு வாருங்கள்'' என்று கூறிக்

கொண்டே வேகமாய்ச் சென்று மலை உச்சியை யடைந்தான். சற்றுநேர முன்னும் பின்னுமாக வெகு கஷ்டப் பட்டு மற்றவர் களும் உச்சியை அடைந்தார்கள். லக்ஷ்மிகராசு, அவர்களை நோக்கி "நண்பர்களே! 'நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது' என்பதுபோல் முடிந்தது நம் கதை. நாம் எவ் வளவோ யுக்தி புத்தியாயும் சாமர்த்தியமாகவும் இத் திருட்டுத் தொழிலை நடத்திவந்தோம். இவ்வளவையும் ஒரு நல்வழியில் உபயோகித்து வந்திருந்தோமானால், நாம் எவ்வளவோ புகழை யுங் கீர்த்தியையு மடைந்திருக்கலாம். அநியாயமாய் இத் தீத் தொழிலில் இறங்கிய நாம் கண்ட சுகமென்ன இருக்கிறது. பழி பாவங்களுக்காளாகி மனைவி மக்களை அலையவிட்டு இதோ! இந்த கோர மரணத்திற்காளானோம். கொலைக் களவு செய்த மகாபாபிகள் அடையும் ரௌரவாதி நரகத்தை யடைதல் ஒன்று தான் பாக்கியிருக்கிறது" என்று கூறிய வண்ணம் மலையின் அடிவாரத்தை எட்டிப் பார்த்து விட்டு "அதோ! போலீஸார் மலையை ஏறமாட்டாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் கள் நம்மை அணுகுவதற்குள், நாம் செய்த பாவ கிருத்தியங் களுக்குப் பிராயச்சித்தமாக, மனப்பூர்வமாய் ஸ்ரீமந் நாரா யணனை சிறிது நேரம் பஜித்து அவர் மன்னிப்பைப் பெற்று விஷ்ணு சாயுஜ்ஜியத்தையடைய முயலவேண்டும்' என்று கூறி ஸ்ரீமந் நாராயணனின் திவ்ய நாமாமுருதங்களை பலவித பாக்க ளாக வர்ஷித்த வண்ணம் கிர்த்தனம் செய்தான். அவனைச் சுற் றிக் கொண்டே அவன் பாடலுக் கிசைந்தபடி கைகளைத் தட்டி பஜித்தார்கள் மற்றவர்கள். இதற்குள் போலீஸார் தங்களை நெருங்கி விட்டதைக் கண்ட கள்வர்கள், "ரமா ரமண கோவிந்தா ஹாரி" என்ற பேரொலியோடு அனைவரும் கைகளை உயரத்தூக்கிக் கடலில் பாய்ந்தார்கள்.

இதைக்கண்ட் போலீஸார் பெரும் ஏமாற்றமடைந்தவர்க ளாய் ஓடிவந்து எட்டிப்பார்த்தார்கள். மலை உச்சிக்கும் கடலுக் கும் இடையிலிருந்த நீளமான பாறை ஒன்றில் சிவந்த இரத்தம் தோய்ந்திருந்ததல்லாமல் அதில் சிறு சிறு துண்டுகளாக மூளை சிதறிக்கிடந்த கோரக் காக்ஷியைக் கண்டு திடுக்கிட்டவர்களாய் பின்பக்கமாய் நகர்ந்துக்கொண்டார்கள் "அந்த மகாபாபிகள் கட லில் விழுவதற்குள்ளாகவே இந்த பிரமாண்டமான பாறைகளில்

மோதி மண்டையுடைந்து மூளை தெரித்துப் பிராணனை விட்டிருப்பார்கள். அதோ! அதோ!! பிரேதங்கள் கடலில் எப்படி உருண்டுச் செல்கிறது பார்! கடல் வாழ் ஜந்துக்கள் இன்னும் சிறிது நேரத்தில் இப்பிரேதங்களையும் சரிப்படுத்திவிடும். எப்படியும் இந்தச் சண்டாளக் கள்வரின் ரச்சை இன்றுடன் தீர்ந்துவிட்டது. மேலும் இப்போக்கிரி கள்ளப் பயல்களின் நிர்ப்பந்தத்தை ஒழித்தக்கீர்த்தி நம்மையே சார்ந்தது." என்று கூறி இன்ஸ்பெக்டர் கஜேந்திரம் தனது வலக்கரத்தை உயரத் தூக்கி "ஹிப், ஹிப்," என, அனைவரும் "ஹர்ரே! ஹிப், ஹிப் ஹர்ரே!! (Hip, Hip Hurrah) என்று சந்தோஷ ஆரவாரம் புரிந்த வண்ணம் மலையைவிட்டு இறங்கினார்கள். பாஷியம் நாயுடு மட்டும், "கையிற் கெட்டியது வாயிற் கெட்டவில்லை. என்பதுபோல், நம்கையில் கிடைத்தக் கள்வனைக் கொண்டு சென்று தனிப்புகழையடைய கொடுத்துவையாமற் போனோமே! பேராசை பெரும் நஷ்டமென்பது நம் விஷயத்தில் வெகு பொருத்தமாக முடிந்துவிட்டதே!" என்றெண்ணி வருத்தத்துடன் மலையை விட்டிறங்கினார்.

---

## 15-வது அத்தியாயம்.

### சிறுவனின் சூழ்ச்சி — திருமண நிகழ்ச்சி

அப்பா! ராஜபஹதூர்! என்ன இவ்வளவு நேரம்? என்று இரவு 10 மணிக்கு வெளியிலிருந்து வந்த தன் மகனை விசாரித்தாள் தாயார் சுந்திராம்பாள். அதைக்கேட்ட அவளது மகன் இராஜபஹதூர் "ஆம், அம்மா! வெகு நேரமாகிவிட்டது. நான் அன்று, அத்தான் ராஜசேகரனுக்கு விவாகமாகப்போகிறது என்று சொன்னேனே! உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அவர் பரோடாவிலிருந்து ஒரு பெண்ணை விவாகம் செய்து

அழைத்துக்கொண்டு வந்தார். அவர் நண்பர்களெல்லாம் ரயிலடியில் அவரை வரவேற்கச் சென்றூர்கள். அவர்களுடன் நானும் சென்றிருந்தேன். அம்மா! அந்த ஆச்சர்யத்தை நான் என்னவென்று சொல்வேன்!" என்று பெருமூச்செறிந்தான்.

சுந்திராம்பாள்:—ஆ! அதென்ன அப்படிப்பட்ட ஆச்சர்யம்! அதை எனக்கு விவரமாகத்தான் சொல்லேன்?

ராஜபகதூர்:—வேறு ஒன்றுமில்லே. அந்தப்பெண் சரியாய் நமது விஜயாவின் சாயலம்மா! நான் அவளைப் பார்த்தவுடன் ஹா! அக்கா! என்று கட்டிப் பிடித்துக்கொள்ள நினைத்தேனம்மா! பிறகு என் நினைவு எனக்கு வந்து ஐயோ! நமது அக்காள் அன்று சாம்பலாகினளே! அவள் எங்கிருந்து வரப்போகிறுள்? மனிதரைப்போல் மனிதருமிருக்கிறூர்கள், என்கிறூர்களே! அந்தவிதத்தைச் சேர்ந்த ஆச்சர்யமிதுபோலும், என்று மனந்தேறினேன். அம்மா! நீங்கள் அவளைப் பார்த்திருந்தால், என்ன செய்திருப்பீர்களோ? தெரியவில்லையம்மா!—என்று மிக்க வருத்தத்தோடு கூறினன். இதைக்கேட்ட சுந்திராம்பாள் துக்கம் நெஞ்சையடைக்க "ஆ! அப்படியா? அப்பா ராஜசேகரா! நீயே தீரன்! உன் காதலியைவிட்டு வேறு ஒரு மங்கையை மணப்பதில்லே என்று நீயிருந்த உறுதியும், உனது உறுதிக்கு மெச்சிய கடவுள் உன்காதலியைப் போன்ற ஒரு பெண்ணையே உனக்கு அளித்து மணமுடித்த விந்தையும், ஹா! என்னே உனது காதலின் மேன்மை! தெய்வீகம் பொருந்திய உங்கள் உண்மைக் காதலின் உயர்வையறியாது, நான் உலகம் பழிக்கும் மகாப் பாவியாகினேனே! அப்பா ராஜசேகரா! உனக்கு பெருந் தீங்கிழைத்தச் சண்டாளி நான் இனி உன் முகத்தில் எப்படி விழிப்பேன்? என் கண்மணியைப்போல் எங்கே பார்க்கப்போகிறேன் என்று ஏங்கியிருந்த எனக்குக் கடவுள் உன் மனைவியைக் கண்டு மனந்தேறும்படிக் கிருபைச் செய்தாரோ? தம்பீ ராஜபஹதூர்! இப்போதே என்னை அங்கு அழைத்துச் சென்று அந்த மாபெருஞ் செல்வியை எனக்கு அறிமுகப்படுத்திவையேன்.

ராஜ:—அம்மா! தாங்கள் இப்போது அங்கு சென்று பார்ப்பதைவிட, நான் ஒரு காரியம் செய்ய யோசித்திருக்கிறே

னம்மா. அதாவது ஒரு நாளைக்கு அப்புதிய தம்பதிகளை நம் வீட்டிற்கு அழைத்துவந்து விருந்து வைப்பதென்று எண்ணியிருக்கிறேன்.

சுந்தி:—ஆம், அதுரொம்ப பொருத்தமாகத்தானிருக்கும். அப்படியானால் நாளையதினமே அழைத்துக்கொண்டு வாயேன்.

ராஜ:—நாளைக்கு அழைப்பதைவிட, நாளைக்கு எல்லா சாமான்களையும் சேகரித்து வைத்துக்கொண்டு நாளைய மறு நாள் விருந்துவைக்க ஏற்பாடு செய்வோம்.

சுந்தி:—ஆம், இதுவும் நல்லயோசனைதான், நீ நாளையதினம் அவர்களுக்குச் சொல்லிவிட்டு வந்துவிடு, நான் விருந்துக்கான ஏற்பாடுகளையெல்லாஞ் செய்துவைக்கிறேன். ராஜபகதூர்! நீ இன்னொரு கார்யம் செய்யவேணும், அவர்கள் விருந்திற்கு வருந் தினம், நமது பந்துக்களில் முக்கியமான சிலரையும் வரும்படி செய்யவேண்டும். விஜயாவின்மீது ஆசையுள்ளவர்கள் எல்லோரையும் அழைத்துவிடு, அவர்களும் அவளைப்பார்த்து ஆறுதல் அடையட்டும்.

ராஜ:—ஆம், அதுவும் சரியான யோசனைதான். அப்படியாயின், யாராரை அழைக்கவேண்டும்? அதையும் சொல்லிவிடுங்கள்.

சுந்தி:—உன் அக்காள் விஜயாவுக்கு வேண்டியவர் யாரார்? நீ தான் யோசித்துப் பாரேன். தம்பி! நீ சீக்கிறம் சாப்பிட்டுப் படுத்துக்கொள்! நாளைக் காலையில் எழுந்து முன்னே மாமா ராமமூர்த்தி வீட்டிற்சென்று மாமாவை இங்கு அனுப்பிவிட்டு நீ சென்று உன் காரியத்தைப் பாரு! மாமா வந்தவுடன் ஆக வேண்டிய காரியங்களை யெல்லாம் நாங்கள் இருவருமாய்ப் பார்த்துக்கொள்கிறோம்—என்று கூறிக்கொண்டே எழுந்து மகனுக்கு போஜனம் தயாரிக்கச் சென்றாள்.

* * * *

ஒரு நாள் மாலை 6-மணி. ராஜபவனம் வீடு நிறைந்த ஜனங்களுடன் பெரிய ஆடம்பரமாக விருக்கிறது. "அதோ! பெண்ணு மாப்பிள்ளையும் வருகிறார்கள்! ஹாரதீ தயாராகட்டும்" என்றார்

ஒரு பெரியவர். "இதோ! எல்லாந் தயாராகத்தான் யிருக்கிறது" என்றாள் ஒரு அம்மாள். அதற்குள் வீதியில் ஒரு கார் வந்து நின்ற சப்தம் கேட்டது. உடனே வீட்டிற்குள்ளிருந்த எல்லா ஜனங்களும் உருண்டு திரண்டு வீதியை நோக்கிச் சென்றனர்.
"ஹா! சரியாய் நமது விஜயலக்ஷ்மி தான்"
"ஐயோ! நமது விஜயாள் தானோ"
"வேறு என்ன? இவள் விஜயாள் தான்"
"ஆம், சரியாய் நம் விஜயாள் தான்"
"சந்தேகமே யில்லை இவள் நம் விஜயாள் தான்"
என்று பலர் பலவிதம் கூறினர். "சரி, வழியைவிட்டு நில்லுங்க ளம்மா! அவர்கள் உள்ளே வரட்டும்" என்றார் ஒரு பெரியவர். காரை விட்டிறங்கி உள்ளே வந்த மணமகள் ஜனங்களை ஒதிக்கிக் கொண்டு சுந்திராம்பாளை அணுகி "அம்மா! இந்த இரண்டு வருஷ காலமாக உங்களை அழவைத்த மகாபாவியாகிய என்னை மன்னியுங்கள்" என்று காலில் சாஷ்டாங்கமாய் விழுந்தாள். அவளை வாரி யெடுத்து "ஹா என் கண்மணியின் திரு உரு வாய் வந்த என் அன்பே! என் ஆருயிரே! நீ யார்? உன்னை நான் எதற்காக மன்னிக்கவேண்டும்?" என்று மனத்தாங்கலோடு கேட்டாள் சுந்திராம்பாள்.

பெண்:—அம்மா! நான் யாரென்று உங்களுக்குத் தெரிய வில்லையா? உமது அருமை மகள் விஜயாள் நான்தானம்மா!

சுந்தி:—ஆ! அந்த பாக்கியவதியை நான் யிழந்து வெகு நாட்களாகி விட்டதே!

பெண்:—அம்மா! நீங்கள் இழந்து விட்டதாக எண்ணியி ருக்கும் உங்கள் பெண் விஜயாள் நான் தானம்மா!—என்று கூறி முடிப்பதற்குள் மற்றப் பெண்களெல்லோரும் விஜயாவைக்கட் டிப் பிடித்து "விஜயா! உன்னைப் பார்த்ததுமே நாங்கள் இதோ. விஜயாள் உயிர் பெற்று வந்து விட்டாள், என்று எண்ணி னோம். அது சரியாகவே முடிந்து விட்டதா? ஆனால் இதென்ன விந்தை! அன்று எறிந்து சாம்பலாய் தணிந்திருந்த பெண் யார்? நீ இதுகாறும் எங்கு மறைந்திருந்தாய்?" என்றார்கள். அதைக் கேட்ட விஜயாள், "தம்பீ! அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்' என்றாள். ராஜபஹதூர் சிறித்துக் கொண்டே தலையைக் கீழே

சாய்த்தான். "ஊம் சொல்லு உன்னை விடுவதில்லை. எல்லாம் உன் குறும்புத்தனம் தான்" என்றாள் ஒரு அண்ணி. "ஆம், நீங்கள் எல்லோரும் அப்பொழுது அருகில் யிருந்து என்ன பிரயோஜனம்? நான் ஒருவன் சற்று ஏமாந்திருந்தால், அக்காவை இன்றும் பார்க்க முடியாது இனி என்றும் பார்க்கமுடியாது."

அண்ணி:—அப்படியா? அப்படி என்ன நடந்தது? நான் பக்கத்திலேயே யிருந்தேனே! எனக்கு ஒன்றுந் தெரியாமல் போய் விட்டதே விவரமென்ன! விளங்கச்சொல்லு பார்ப்போம்.

ராஜு:—அக்காவுக்கு இஷ்டமில்லாத கல்யாணம் என்று உமக்குத் தெரியுமல்லவா?

அண்ணி:—ஆம், அதனால் என்ன?

ராஜு:—இரவு சுமார் 12 மணியிருக்கும் கிணற்றில் விழுந்து தற்கொலைச் செய்துக் கொள்ளப் பார்த்தாள். நல்ல வேளையாக நான் பார்த்துத் தடுத்து, அவள் விருப்பத்தின்படி விவாகத்தை நிறுத்தும் பொருட்டு அவளை அழைத்துக் கொண்டுபோய் என் சிநேகிதன் ஒருவன் வீட்டில் ஒரே ஒரு பாட்டி மட்டு மிருந்தாள். அவளிடம் விவாக விஷயத்தைச் சுருக்கமாகக் கூறி சகோதரியை அவளிடம் ஒப்படைத்து, எனது மற்றொரு சிநேகிதன் அதாவது சுடுக்காட்டு வெட்டியான் மகனிடம் சென்று நான் நிறைய பணந்தருகிறேன்; ஒரு பிரேதத்தை உன் தந்தையிடம் வாங்கிக் கொடு என்றேன். அவன் தந்தை அன்று மாலை புதைக்கப் பட்டிருந்த ஒரு பிரேதத்தைப் பெயர்த்துக் கொடுப்பதாய் வாக்களித்தான். உடனே அவன் கையில் 10 ரூபாய் நோட் ஒன்றைக் கொடுத்து பிரேதம் கொண்டு வந்தபிறகு இன்னும் 10 ரூபாய் கொடுப்பதாக வாக்களித்து, பிரேதம் நமது வீட்டுப் புழக்கடைப் பக்கம் சீக்கிரம் வந்து சேரவேண்டும் என்றேன். நான் முன்னதாக சைக்கிளில் வீட்டிற்கு வந்து புழக்கடையில் கட்டையை அடுக்கித் தயாராய் வைத்திருந்தேன். தமக்கையின் கடிதத்தையும் அங்கு வைத்து விட்டேன். இதற்குள் பிரேதமும் வந்து விட்டது அடுக்கிய கட்டையின் மீது வைத்து ஒரு புட்டி கிரோஸினாயிலை விட்டு ஒரே ஒரு தீக்குச்சியைக் கிழித்து தீ மூட்டி விட்டு நிம்மதியாகப் படுக்கையில்

படுத்து உறங்கினேன். பிறகு நீங்களெல்லாம் அழுததால் நானும் அழுதேன், ஞாயந்தானே? இல்லா விட்டால் நீங்களெல்லாம் அழுதால் நான்மட்டும் சிறிப்பேனு என்ன?—அம்மா! ஒரே ஒரு சங்கதி! நான் சுடுக்காட்டில் சென்று விளையாடுவதைப் பற்றியும் வெட்டியான் தலையாரி பறையன் முதலிய கீழ் தாத்தா ரோடெல்லாம் சினேகம் செய்வதைப் பற்றியும் என்னைத் திட்டி மிரட்டி பரிகாசம் செய்தீர்களே! பார்த்தீர்களா? அந்தக் கீழ் தாத்தாரால் எப்படிப்பட்ட காரியத்தை எவ்வளவு இலேசில் முடித்தேன்.

அண்ணி:—ஆஹா! ரொம்ப நல்லகாரியம் செய்தாயப்பா!

ராஜ:—நான் அப்படிச் செய்யாவிட்டால் அந்தக் கலியாணம் எப்படித்தவக்கப்படும்? என் சகோதரியின் கோறிக்கை எப்படிப் பூர்த்தியாகும்? நீங்கள்தான் யோசித்துப் பாருங்களேன்.

"ஞாயந்தான் நீ செய்த காரியம் வெகு பொருத்தந்தான் சபாஷ் மைத்துனு! உன்னை மெச்சினேன்" என்முன் ராஜசேகரன். "சரி, அதன் பிறகு இவ்வளவு காலமாய் விஜயாள் அந்த கிழவியினிடந்தானுயிருந்தாள்?" என்றூர் ஒரு மாமா இல்லையில்லை மாமா! அன்றைய மறுநாளே தேனூர் கிராமத்தில் தபோகிருஹம் என்னும் ஆசிரமத்தில் விஜயாள், காலையில் சுவாமியாராகவும் மாலையில் சிறு பெண்ணுகவுமாறி அவள் செய்து வந்த விசித்திர காரியங்களெல்லாம் ஒரு பெரிய கதையாக இனி நீங்களே கேள்விப்படுவீர்கள். அந்த சுவாமியாரை குருவாகக் கொண்ட நான், என் துஷ்டத்தனங்களை யெல்லாம் ஒழித்து பரமசாதுவாகவும் பெரும் விவேகியாகவும் மாறி சத்புத்திரனுகி விட்டேன் என்கிற சந்தோஷத்தில், என் குருவுக்கு சாப்பாடு கொடுத்துவிட்டுதான் நான் சாப்பிடுவேன், என்றதைக்கேட்டு அம்மா வெகு பயபக்தியோடு சமைத்து என்னிடங் கொடுத்தனுப்புவார்கள். நானும் அதை எடுத்துக்கொண்டு சைக்கலில் இரைக்க இரைக்க ஓடி சகோதரிக்கு, அல்ல, என் குருவுக்கு இட்டு நானும் உண்பேன். சுவாமியாரின் கைசிலவுக்கு அம்மாவைத் தெரிந்து கொஞ்சம் தெரியாமல் கொஞ்சமாக மாதம் 50, 60 ரூபாய் கொடுத்துவந்தேன்.

கடைசியாக, தன் விருப்பப்படி ராஜசேகரர் இந்த ஊர் திரும்பிவந்தது தெரிந்து அவரை சந்தித்து யாரோ ஒரு பார்ஸீகப் பெண்போல் நடித்து அவர் அன்பைப் பெற்ற விநோதங்களை விஸ்தரித்தால் அதுவே ஒரு தனிக்கதையாக அமைந்து விடும். நேற்றைய தினம் வரையிலும், அவள் யாரோ ஒரு பார்ஸீகப் பெண்ணென்றே எண்ணியிருந்த அத்தான் ராஜசேகரரின் ஏமாற்றத்தை என்னவென்று சொல்வேன்! இப்படிப்பட்ட ஏமாந்தசோணகிரி அத்தானுக்கா நமது வெகு சாமார்த்தியவதியாகிய சகோதரியை மணஞ்செய்து கொடுப்பது? என்று இப்போதும் என் உள்ளம் தவிக்கிறது. என்று ராஜசேகரனைப் பார்த்து ஒரு குறும்புச் சிறிப்புச் சிறித்தான் ராஜபஹதூர். அதைக்கேட்ட ஒரு தாத்தா, "ஆனால் இன்னும் மணமாகவில்லையா? இனிதான் மணஞ்செய்து கொடுக்கப் போகிறாயா?" என்றார். "ஆம், இனிதான் மணம் நடக்கவேண்டும். இதில் என் அபிப்பிராயம் அப்படி, உங்கள் அபிப்பிராயங்கள் எப்படியோ சொல்லுங்கள்'' என்று எல்லோரையும் ஒரு பார்வைப் பார்த்து மற்றொரு குறும்பு சிறிப்புச் கிறித்தான் ராஜபஹதூர்.

"மணந்தால் அவரையே மணப்பேன் இல்லாவிட்டால் இறப்பேன். என்று இவ்வளவு வரையில் செய்த விஜயாள், இனி உன் அபிப்பிராயத்தையும் எங்கள் அபிப்பிராயத்தையும் எதிர்பார்க்கப் போகிறாளா? அவள் கட்டாயம் அவரைத்தான் மணஞ்செய்துக்கொள்வாள். இதில் நாம்யோசிப்பதில் என்ன பிரயோஜனம்? அதைவிட விவாக காரியத்தில் முனைந்தால் தேவலை" என்றார் மற்றொரு தாத்தா. "ஆம், அது உண்மையான பேச்சுதான் காலமும் அப்படிப்பட்ட காலந்தான் நீங்கள் சொல்லுவதுபோல் இந்த வைகாசி மாதத்திலேயே விவாகம் நடக்க ஏற்பாடு செய்வதுதான் சரி, என்று கூறி யாவரும் ஏகமனதாக சம்மதித்தார்கள்.

"ராஜபஹதூர்! சரி, போதும் உன் பரிஹாசம்! அந்த கள்ளனிடமிருந்து உன் சகோதரியை எப்படி மீட்டாய்? அந்த கொலையுண்டப் பெண்யார்? இதில் நீ கண்டுபிடித்த துப்புகள் முதலியவைகளை விவரமாக கூறு" என்றான் ராஜசேகரன்.

ராஜபஹதூர் :—நந்தவனத்தில் ஒரு நாளும் தவராமல் உமது காதலியைச் சந்திப்பவர், அன்று ஒரு நாள் நீங்கள் வரா

ததன் காரணமென்ன! அதை முன்பு நீங்கள் சொல்லுங்கள் அதன் பிறகு நான் சொல்கிறேன்.

ராஜசேகர்:—ஆம், அன்று நான் புறப்பட்டு வரப்போகிற சமயம் எனக்குச் சிற்றப்பனென வந்தமைந்த அந்த சண்டாளன் என் தந்தைக்கு சினேகிதராகிய யாரோ ஒரு பெரிய மனிதர் அன்று என்னைப் பார்க்க வரப்போவதாகவும் நான் வெளியில் போகக்கூடாதென்றும் தடுத்துவிட்டான். அந்த படுபாவியை தந்தைக்குச் சமானமாய் எண்ணியிருந்த நான் அவன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நின்றுவிட்டேன்.

ராஜபஹதூர்:—உங்கள் வருகையை எதிர்பார்த்திருந்த என் சகோதரியிடம், ஒரு மனிதன் தங்களுடைய ஏவலாள் என்று கூறி தங்களுடைய கடிதமென ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதில் கண்டிருந்த உங்கள் உத்திரவின்படி சகோதரி உடனே எழுந்து அவனுடன் சென்று அவன் காண்பித்த மோட்டார் காரில் ஏறி அமர்ந்தாள். உடனே கார் வாயு வேக மனோவேகமாய் சென்று மறைந்துவிட்டது. அதன் பிறகு நான் அங்குவந்து சகோதரியைக் காணாமல் தவித்து, தெப்போற்ஸவத்தில் ஒரு பெண்ணைத்தூக்கிச் சென்றதுபோல் அந்த லக்ஷ்மிநரசுதான் நம் சகோதரியையும் தூக்கிச்சென்றானோ? என்று அவனுடைய கார் வந்த அடையாளமிருக்கிறதா பார்ப்போமென்று வெளியில் சென்று பார்த்ததில் நான் நினைத்தது போல் அவனுடைய கார் அடையாளத்தைக் கண்டேன்.

ராஜசேகர்:—அதென்ன! அவனுடைய கார் அடையாளமென்பது?

ராஜபஹதூர்:—தெப்போற்ஸவத்தில் பெண்ணைத் தூக்கிச் சென்றபோது அவனுடைய காரின் பின்புறம் நானும் சென்றேன். அவனுடைய கார் மேலெழும்பிய விடத்தில் அந்தக் காரின் பெரிய சக்கரங்கள் நான்கின் நடுமத்தியில் இரண்டு சிறிய சக்கரங்களும் தென்பட்டது. அச்சிறிய சக்கிரங்கள் கார்மேலெழும்பும சமயம் தரையில் நன்றாய் பதிந்து காரை மேலெழும்பச்செய்யுந் தன்மையையும், மற்ற சமயத்தில் அதற்கும் நிலத்திற்கும் சம்மந்தப்படாமல் நிலத்திற்குச் சற்று

மேலேயே தாங்கிநிற்கும் தன்மையையும் பெற்றிருந்தது. ஆனால் கார் செல்லும் வேகத்தில் சிற்சில சமயம் அஃது தரையில் ஆங்காங்கு பதிந்துசெல்லும் வழக்கத்தைக்கொண்டிருந்தது. அவன் வந்து சென்ற விடத்திலெல்லாம் இவ்வடையாளத்தை நான் ஊகித்திருந்தேன். அதன்படி அன்றுகண்ட அடையாளத்தில் லக்ஷ்மிநரசுவின் கார் வந்துசென்றதையும் அக்காருக்குச் சமீபத்தில் என் சகோதரியின் பாதசுவடுகளையுங் கண்ட நான் அக்கள்வனின் காரைத் தொடர்ந்துச் சென்றேன். இதற்குள் சூரியன் அஸ்தமித்து இருட்டிவிடவே திரும்பிவிட்டேன். மறு நாள் காலை 4 மணிக்கு படுக்கையை விட்டெழுந்து, அம்மா என்னை தேடாதிருக்கும் பொருட்டு ஒரு கடிதம் அதாவது நான் என் குருவுடன் ஹரித்துவாரம் யாத்திரைப் புறப்பட்டுவிட்டேன் திரும்பிவர தாமதிக்குமாயின் அதைப்பற்றி கவலைப்படவேண்டாம் என்று எழுதி மேஜைமீது வைத்துவிட்டு கிளம்பினேன். முந்திய நாள் நான் விட்டுச் சென்றவிடத்திற்குச் சென்று, பின்னும் அவ்வடையாளத்தைத் தொடர்ந்துச் சென்றேன். கடைசியாக அக்கார் மனிதசஞ்சாரமில்லாத ஒரு காட்டின் வழியாகச் சென்று ஒரு விடத்தில் நிறுத்தப்பட்டு திரும்பவும் கார் வந்த வழியாகவே திரும்பி வரப்பட்டிருப்பதையுங் கண்டேன். மற்றும் அக்கார் நிறுத்தப்பட்டிருந்த விடத்தினின்றும் இருவரின் பாதசுவடுகள் அக்காருக்குச் சமீபத்திலுள்ள ஒரு சப்பாத்தி புதர்வரையில் சென்று திரும்பிவந்து காரில் ஏறி காரை வந்த வழியாகவே திருப்பிக்கொண்டு சென்றிருக்கிறார்கள் என்றும் ஊகித்துக்கொண்டேன். அதில் காரினின்றும் இறங்கிச் சென்ற போது பாதசுவடுகள் பூமியில் நன்றாய் ஆழமாய்ப் பதிந்தும், திரும்பிவந்தபோது நன்றாய் பதியாமலுமிருந்தது. இதனால் அவர்கள் காரினின்றும் இறங்கிச் சென்றபோது கையில் ஏதோ ஒரு கனமான வஸ்துவைத் தாங்கிச் சென்றிருப்பதாகவும் கண்டுகொண்டேன். அப்படி அவர்கள் சுமந்துசென்ற வஸ்து எது? கார் புறப்பட்டவிடத்தில் சகோதரியின் காலடியைக் கண்டோமே பிறகு அவள் என்ன ஆயினள்? ஒருக்கால் அவளைத் தான் மூர்ச்சிக்க செய்து தூக்கிச் சென்றார்களோ? ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும். அப்படியானால் நம் சகோதரியை இங்குதான் எங்கோ மறைத்து வைத்திருக்கிறார்கள். அந்த

மறைவிடத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். என்று தீர்மானித்தேன். அப்போது பிற்பகல் 3மணியிருக்கும். 6மணிவரையில் தேடிப்பார்த்தேன் ஒன்றுமகப்படவில்லை சரி, இனிமேல் ஒருக்கால் அக்கள்வர்கள் இங்கு வரக்கூடும் ஆகையால் நாம் ஒரு மறைவிடத்தில் மறைந்திருந்து அவர்களைக் கவனிக்கவேண்டும். என்று நான் அந்த சப்பாத்திப்புதருக்குச் சற்று தூரத்திலிருந்த ஒரு ஆலமரத்தின்மீது ஏறி பதுங்கியவண்ணம் சப்பாத்திப் புதர் பக்கமே கவனித்துக்கொண்டிருந்தேன். சுமார் மணி 7 இருக்கும் போது ஒரு மோட்டார் வந்து நின்றது. அதனின்றும் ஒருவன் இறங்க மற்றவன் காரை வந்த வழியாகவே திருப்பிக்கொண்டு சென்று விட்டான். இறங்கியவன் புதருக்கு அருகிலிருந்த ஒரு அரசமரத்தின் மீதேறி அதன் பொந்து ஒன்றில் கையை விட்டு மற்ற கையிலிருந்த டார்ச்சை அழுத்திப் பிடித்த வண்ணம் புதரைக் கூர்ந்து கவனித்தான். அச்சமயம் புதர் இருந்த விடத்தினின்றும் விலக ஏற்பட்டதுமன்றி அப்புதர் யிருந்த விடத்தில் இறங்குவதற்கான படிகள் அமைந்த சுரங்கவழி தென்பட்டது. உடனே அம்மனிதன் கையை வெளியில் எடுத்துக்கொண்டு மரத்தை விட்டிறங்கி அச்சுரங்கத்தில் இறங்கினன். அதைக் கண்ட நான் தைரியத்தைக் கைவிடாமல் மரத்தை விட்டிறங்கி அவன் இறங்கிச் சென்ற சுரங்கத்தைச் சென்று பார்த்தேன். என்ன ஆச்சர்யம்! எப்போதும்போல் சப்பாத்திப்புதர் மூடிக்கொண்டிருந்தது. உடனே அவன் ஏறி கையை விட்ட மரபொந்தில் நானும் கையை நுழைத்து ஆராய்ந்து பார்த்தேன். அதில் பித்தான் போன்ற ஒரு பெரிய கைப்பிடி கைக்குத் தென்பட்டது. அதை நான் இடப்பக்கம் வலப்பக்கமாக இழுத்துப் பார்த்தேன். ஒன்றும் பிரயோஜனமில்லை. ஆனல் அப்பிடித் தட்டையாக உள்ளங் கையை வைத்து அழுத்துவதற்கு ஏதுவாகவுமிருந்தமையினல் உள்ளங் கையை வைத்து அழுத்திப் பார்த்தேன். உடனே அப்புதர் முன்போல் விலக ஏற்பட்டது. அதைக் கண்ட நான் பரமசந்தோஷத்துடன் மரத்தைவிட்டிறங்கி அதற்குள் இறங்கினேன். அப்போது நான் ஒரு சிறிய அறையின் மத்தியில் இறக்கப்பட்டு,ஏறிவந்த வழியைத் தவிர வேறு வழியில் செல்ல

முடியாத விதமாய் அகப்பட்டுக்கொண்டு தவித்தேன். நல்ல வேளையாய் அவ்வறையில் வேறுயாருமில்லாதிருந்ததோடு அவ் வறையின் கதவு சாத்தப்பட்டு சாவியால் பூட்டப்பட்டுமிருந்தது. கதவைத் திறந்துகொண்டு யாராவது வந்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணி பயத்தால் நடுங்கினேன். பின்னும் தைரியத்தைக் கைவிடாமல், அப்படி யாராவது வந்துவிட்டால், உடனே அவர்கள் கண்ணிற்படாமல் ஒளிந்துகொள்ளவேண் டும். அப்படி ஒளிந்துகொள்வதற்குத் தகுந்த இடத்தைக் கண்டு பிடித்து வைத்துக்கொள்ளலாம் என்பதாக அவ்வறை முழுதும் ஆராயத்தொடங்கினேன். அப்பொழுது அங்கிருந்த ஒரு சுவ ரில் எலெக்டிரிக் விளக்குகளைப் பொருத்துவதற்கான சில சிறிய பித்தான்களமைந்த குமிழ்கள் காணப்பட்டன. அவைகளுக்கு மேல் ஒரு பெரிய பித்தான் (முன்பு மரப்பொந்திலிருந்தது போன்ற) காணப்பட்டது. அதை அழுத்தினேன்; உடனே அவ்வறையின் கூரையாகவமைந்த அப்புதர் மூடிக்கொண்டது. ஆனால் அது உட்புறத்தில் அப்படி சப்பாத்திப் புதராகக் காணப் படாமல் சாதாரண தட்டை ஓட்டின் கூரையாகக் காணப்பட் டது. அதன் பிறகு நான் அவ்வறையிலிருந்த ஒரு மரப்பெட்டி யின் பின்புறத்தில் மறைந்திருந்து இனி நடக்கவேண்டியவை களைக் குறித்து ஆலோசித்தவண்ணமிருந்தேன். அச்சமயம் அவ்வறையின் மேற்கூரை திரவுபட்டு இருவர் இறங்கிவந்தனர். அதில் ஒருவன் தன் கால்சட்டை ஜேபியில் கையைவிட்டு ஒரு நீண்ட பெரிய சாவியைக் கையில் எடுத்து அக்கதவு துவாரத் தில் விட்டுத் திருப்பினான். உடனே படாரென்ற சப்தத்துடன் கதவு திறந்துகொண்டது. இருவரும் வெளியிற் சென்று திரும்பவும் கதவை மூடி சாவியால் பூட்டிக்கொண்டு சென்று விட்டார்கள். அதைக்கண்ட நான் இப்படியாயின் நம்கதி என்ன? என்ற ஒரே கவலையுடன் அவ்விரவைப் போக்கினேன். மறுநாள் காலை 4 மணி சுமாருக்கு மறுபடியும் அக்கதவுத் திறக் கப்பட்டு ஒருவன் உள்ளேவந்தான். வந்தவன் எதையோ நினைத்துக்கொண்டவனாய் அக்கதவை அப்படியே விட்டு விட்டு உள்ளே ஓடினான். நான் இதுதான் சமயமென்று பூனைபோல்

நழுவி உள்ளே வந்துவிட்டேன். அங்கு சிலவிடத்தில் விளக்கெரிந்துக்கொண்டும் சிலவிடங்கள் இருண்டும் கிடந்தன. நான் அந்த இருட்டுப்பக்கமாகச் சென்று மறைந்துகொண்டேன். இப்படியே மறைந்து ஒளிந்து 5, 6 நாள் திரிந்தேன் ஒன்றும் விவரந்தெரியவில்லை. சகோதரியை எங்கு வைத்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க எவ்வளவோ முயன்றேன் ஒன்றும் பிரயோஜனமில்லை. 4,5 நாள் பட்டினியாகவே கிடந்தேன். அதன் பிறகு பசி தாங்கமுடியாமல், சரி ஆனது ஆகட்டும் என்று துணிந்து அந்த வேலையாட்களுக்காக அங்கங்கே இலையில் போஜனம் பரிமாறப்பட்டிருக்கும். அவர்கள் கைகால் அலம்பிக்கொண்டு வருவதற்குள் வெடுக்கென்று ஒரு இலையை எடுத்துக் கொண்டுவந்து மறைவில் வைத்துச் சாப்பிடுவேன். இப்படியாக ஒருவாரம் கழிந்தது. பிறகு நான் அவ்விடத்து ஆட்களைப்போல் அவர்கள் உடைகளையும் திருடி உபயோகித்து, தவறி யார் கண்களிலாவது தென்பட்டுவிட்டால் அவர்கள் அந்தவேலையாட்களில் ஒருவன் என்று எண்ணும்படி ஏமாற்றி வந்தேன். இப்படியாக ஒரு வாரம் கழிந்துவிட்டது. அதன் பிறகு ஒரு நாள் அதிகாலை மணி 4 இருக்கும். ஒரு அறைக்குள் இருவர் பேசும் குரல் கேட்டது. அதை நான் உற்று கேட்டேன். "பெண்ணே! இதோ பார் இப்போது கடைசி முறையாகக்கேட்கிறேன். நீ என் இஷ்டம்போல் நடந்து சுகப்படப் போகிறாயா? அல்லது இக்கத்திக்கு இரையாகப்போகிறாயா?" என்று ஓர் ஆடவனின் அதிபயங்கரமான குரலோசையைக் கேட்ட நான் அக்கேள்வி என் சகோதரியைத்தான் எவனோ முரடன் கேட்கிறான் என்றெண்ணி வெகு ஜாக்கிரதையாக அவ்வறையின் கதவருகில் சென்று கதவினிடுக்கு வழியாக உட்புறத்தைப்பார்த்தேன். அப்போது மின்சார ஒளி நிறம்பிய அவ்வறையில் எழில்வாய்ந்த ஓர் இளங் நங்கை வாடிய முகத்துடன் "ஹே! பாதகா! உன் இஷ்டத்திற்கு ஒரு நாளும் இசையேன், வேணுமானால் நீ இப்போது கேட்ட கேள்விக்குத் தயாராகவிருக்கிறேன். எதோ! உன் வேலையை நடத்து" என்று கூறிக்கொண்டே மண்டியிட்டு உட்கார்ந்து தலையை சாய்த்துக்கொடுத்

தாள். "உன் விதி அவ்வாறிருந்தால் அதற்கு நான் என்ன செய்வேன்? எப்படியும் கடவுள் உனக்குப் பதிலாக உன்னைவிட பன்மடங்கு அதிகமான அழகுள்ள பெண்ணை எனக்கு அளித்திருக்கும்போது, வீணில் உன்னைக்கட்டி அழுவதில் என்ன பிரயோஜனம்! சரி, தலைந்துபோ!" என்று கூறிக்கொண்டே கத்தியை உயரத்தூக்கினன். அடுத்த க்ஷணம் "ஹா ! ஐயோ !" என்ற அலறலோடு அவள் சிரம் உடலைவிட்டு நிலத்தில் விழுந்து துடித்த கோரக் காக்ஷியைக் கண்டு நான் அப்படியே பிரமித்து நின்றுவிட்டேன். அச்சமயம் அவன் கதவை நோக்கி வருவதைக்கண்டு உடனே ஓடி மறைந்து கொண்டேன். வெளியில் சென்ற அம்மனிதன் சிறிது நேரத்திற்குப்பின் மற்றும் இரண்டு முரட்டு ஆட்களுடனும் இன்னும் இரண்டு கத்திகளுடனும் திரும்பிவந்தான். அவர்களுக்குப் பின்னல் ஒரு போயி சிறுவன் ஜாதிக்காய் பெட்டி ஒன்றைக் கொண்டுவந்தான். உடனே முன்போல் கதவைத் தாளிட்டுக்கொண்டார்கள். அதைக் கண்ட நான் மறுபடியும் கதவிடுக்கின் அருகில் சென்று பின்னும் நடப்பதைக் கவனித்தேன். ஒருவன் பெட்டிக்குள்ளிருந்த பிரௌன்பேப்பர்களை வெளியில் எடுத்துவைத்தான். மற்றொருவன் அப்பெட்டியைச் சாய்த்துப்பார்த்து அதன் எல்லா பக்கங்களிலும் ஆயில் கிளாத்து நன்ருக ஒட்டப்பட்டிருப்பதைக்கண்டு திருப்தியடைந்தான். அதன் பிறகு எல்லோரும் சேர்ந்து அப்பிரேதத்தை ஆளுக்கொரு கையும் காலுமாகப் பிடித்து கை வேறு கால்வேருக வெட்டி சின்னுபின்னப்படுத்தினர்கள். ஒருவன் வெட்டப்படும் பாகங்களுக்கெல்லாம் பிரௌன்பேப்பரைச் சுற்றி டுவைன் கயிற்ருல் கட்டி கட்டி வைத்தான். பிறகு யாவருமாய்ச் சேர்ந்து அவைகளைப் பெட்டிக்குள் அடுக்கி எங்கே அந்த கடிதம்? என்ருர்கள். உடனே ஒருவன் ஜோபியிலிருந்த ஒரு கவரை எடுத்து அவர்களிடம் கொடுத்தான், அதைவாங்கிப் பிரித்துப் பார்த்து "சரியாய் ராஜசேகரனின் கையெழுத்தைப் போலவே யிருக்கிறது" என்ருன் ஒருவன். மற்றொருவன் "ஊம், எத்தனையோ ஆச்சர்யங்களை செய்யும் லக்ஷ்மிநரசுக்கு ஒருவர் கையெழுத்தைப்போல் எழுதுவது வெகு கஷ்டமா? என்ருன். இதற்குள் ஒரு சிறுவன் ஓடிவந்து "கார் வந்துவிட்டது" என்ருன். உடனே யாவரும் வெகு பரபரப்புடன்

அதற்கு மூடியிட்டு ஆணி அடித்து வெளியில் எடுத்துச் சென்ருர்கள். சரி, அதை அப்படியே புதைத்து விடுவதற்காக எடுத்துச் சென்ருர்கள் போலும், என்று நான் நினைத்துக்கொண்டிருக்கும்போது அப்பாதகன் அப்பெண்ணை முதலில் கத்தியால் வெட்டியச் சண்டாளன் திரும்பிவந்து "அடே பையா! இந்த 4-ம் நெம்பர் அறை சாவியைக் கொண்டுவா!" என்று கூறிக்கொண்டே ஒரு பக்கம் சென்முன். உடனே ஒரு பையன் கையில் கொத்துச் சாவியை எடுத்துக்கொண்டு சென்று அவனிடம் கொடுத்தான். அவன் அதைக்கொண்டு அங்கிருந்த ஒரு அறையைத் திறந்து ஒருகாலை எடுத்து உள்ளே வைத்தவன் திடுக்கிட்டுப் பின்னுக்காய் நகர்ந்து "கண்மணி! பயப்படவேண்டாம் உன் சம்மதமன்னியில் நான் உன்னை ஒன்றுஞ் செய்யப்போவதில்லை இதோ பார்த்தாயா! (இரத்தம்தோய்ந்த கைகளைக் காண்பித்து) உனக்குப் பதிலாக உன் உயிரைக் காக்கும் பொருட்டு, என் உயிருக்கு உயிரான என் ஆசை நாயகியை வெட்டிச் சித்திரவதைச் செய்திருக்கிறேன். பிறகு உனக்கு விவரமாய்த் தெரிவிக்கிறேன். நான் சென்று வரட்டுமா? அடே பையா! அம்மாவுக்குச் சரியானபடி ஆகாரங்கள் கொடுத்து நன்ருய்க் கவனித்துக்கொள். நான் உனக்கு நல்ல வெகுமதி அளிப்பேன் தெரியுமா ஜாக்கிரதை!" என்று கூறிக்கொண்டே வேகமாய் சென்றுவிட்டான். இதற்குள் ஒரு கிழவி அவ்விடம் வந்து "அம்மா! வாயேன்!" என்ருள். உடனே அறைக்குள்ளிருந்த பெண் துயரமே உருவெடுத்து வந்தவள் போன்றும் எழுந்து கிழவியின் பின் நடந்தாள். ஹா! என்ன ஆச்சர்யம்! அவள்தான் என்னருமை சகோதரி! என்று அறிந்த என்மனம் அப்போது சந்தோஷித்ததோ! துக்கித்ததோ! தெரியவில்லை. பிரமையடைந்த நான், மற்றுமொரு தடவை அந்த திவ்ய ரூபத்தைக் காண்பதெப்போ! என்று ஏங்கியிருந்தேன். சிறிது நேரத்தில் தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு திரும்பிவந்த சோதரி அதே அறையில் நுழைந்தாள். இதற்குள் அவளுக்குவேண்டிய காலை ஆகாரங்களை ஒரு பையன் கொண்டுவந்து அவள் முன் வைத்து சென்ருன். சிறிது நேரத்திற்குப்பிறகு திரும்பி வந்த அச்சிறுவன் "என்னம்மா எல்லாம் அப்படியே யிருக்கிறதே! நீங்கள் சாப்பிடாமல் இப்படி பட்டினிக்கிடந்தால் எஜமான் என்னைக் கோபிப்பாரே!" என்ருன்.

"காலையில் நான் ஒன்றும் சாப்பிடுகிற வழக்கமில்லை சிறிது காப்பி மட்டும் சாப்பிட்டேன். எல்லாவற்றையும் நீ எடுத்துக் கொண்டுபோ!" என்று வெகு தீனமான குரலில் மொழிந்தாள்.

அதன் பிறகு அந்த போயி பையன்களில் ஒருவனைப்போல் நான் உருமாறி சகோதரிக்குச் சாப்பாடு கொடுக்கும் காரியங்களை யெல்லாம் கவனிக்கத்தொடங்கி, சாப்பாடு கொடுக்கச் செல்லும்போது நான் வந்திருக்கும் விவரங்களை யெல்லாம் கடிதத்தில் எழுதிவைத்திருந்து கொடுத்தேன். அதைக்கண்டு, அன்றே புத்துயிர் பெற்ற என் சகோதரி முகமலர்ச்சியுடன் உபாயமாய் என்னுடன் நடந்துகொண்டாள். "சரி, இனி சகோதரியுடன் வெளிச்செல்வதற்கு அந்த சாவி ஒன்று நமக்குத்தேவை, அந்தச் சாவியோ, முக்கியஸ்தர்களிடமட்டுந்தான் இருக்கிறது. அதை அவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் தங்கள் சாவியை வெகு ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு அவர்கள் வெளிச் செல்லும்போது திறந்துகொண்டு வெளியில் சென்று மறு பக்கம் அதே சாவியால் பூட்டிக்கொண்டு செல்கிறார்கள். திரும்பி வரும்போதும் அதே சாவியால் திறந்து உள்ளே வந்து பூட்டிவிட்டு வந்துவிடுகிறார்கள். அந்தச் சாவிகளில் ஒன்றை அடைந்தால் நம் காரியம் முடிந்தமாதிரிதான். ஆனால், அதை அடையும் மார்க்கம் எப்படி?" என்று யோசித்த வண்ணம் அங்கு நடப்பதை யெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தேன். ஒரு நாள் லக்ஷ்மிநரசுவை ஒருவன் "என்ன காரியம் செய்தீர்? அந்த ராஜசேகரன் இருப்பது எப்போதும் உங்களுக்கு ஆபத்தானகாரியம் என்று நாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு இந்த கேஸில் அவனை நுழைத்து தூக்கிவிடும்படி ஏற்பாடு செய்தால் நீங்கள் அப்பீலுக்கு மனுப்போட்டீராமே! ஒருக்கால் அங்கு விடுதலைப்பெற்றுவிட்டால் என்ன செய்வது?" என்று ஆத்திரத்தோடு கேட்டான். அதற்கு லக்ஷ்மிநரசு "ஊம், தெரியாதா! "கோழித்திருடி கூடத்தேடினாள்" என்று நான் அப்படிச் செய்யாவிட்டால் பார்ப்பவர் என்ன நினைப்பார்கள். மேலும் பாவம்! ஒரு குற்றமுமறியாத அச்சிறுவனை அநியாயமாய் தூக்கிட்டுக் கொல்ல என்மனம் சம்மதிக்கவில்லை. நான் இந்த அப்பீலில் அவனை தீவாந்தர சிக்ஷைப்பெற்று அந்தமான் தேசம்

சென்று வாழும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். கூடிய சீக்கிரம் இவ்விதத் தீர்ப்பைப் பெற்று அந்தமான் தீவையடைந்து விடுவான். அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்” என்று கூறிக்கொண்டே சென்றுவிட்டான். “முதலில் விவரமறியாது திகைத்த நான், நாளடைவில் விஷயங்களை வெகு நுட்பமாய் அறிந்து இனிநாம் தாமதித்தால் அத்தான் ராஜசேகாருக்கு ஆபத்தாய் முடிந்துவிடுமென, உடனே நடக்கவேண்டிய காரியங்களைக் கவனித்து, விஷயங்களையெல்லாம் விவரமாய் கடிதத்தில் போலீஸ் அதிகாரிகள் கண்டவுடன் கவனிக்கக்கூடிய முறையில் எழுதிவைத்துக்கொண்டு அதிஜாக்கிரதையாக சகோதரியுடன் வெளிக்கிளம்பினேன். அதன் பிறகு அன்று ஹார்பரில் நடந்த விஷயங்கள்தான் உமக்குத் தெரியுமே!” என்று கூறி முடித்தான் ராஜபஹதூர். இதனைக்கேட்ட யாவரும் சிறுவனின் சூழ்ச்சிக்குமெச்சியவர்களாய் அவனது சகோதரவாத்ஸல்யத்தை பெரிதும் பாராட்டிப் புகழ்ந்துக் கொண்டாடினார்கள். இதற்குள் போஜனம் தயாராகி போஜனத்திற்கு அழைக்கப்பட்டவர்களாய் அனைவரும் எழுந்து சென்றார்கள்.

* * * *

பலவித விசித்திராலங்காரங்களுடன் கூடிய சௌந்தர விலாஸத்தில் பதினெட்டுவித வாத்தியங்கள் தாம் தாமென முழங்க உதையாதி நாழிகை $5\text{-}37\frac{1}{2}$க்குமேல் $10\text{-}37\frac{1}{2}$ நாழிகைக்குள்ளாக சிம்மலக்னத்தில் திருநிறைசெல்வன் ராஜசேகரனுக்கும் திருநிறைசெல்வி விஜயலக்ஷ்மிக்கும் விவாக முகூர்த்தம் நடந்தேறியது. அன்று மாலை 5 மணிக்கு மேல், அவ்வூர் பிரபல நடனப்பெண்களாகிய ஜல்ஜலாபாய் சகோதரிகள் நால்வர், கச்சேரி சபையோர் தாங்களிருப்பது இந்திர சபையோ! கந்தர்வ சபையோ! வென திகைக்கும்படி வெகு திறமையுடன் நடனம் புரிந்து பாதநாட்டிய கலைக்குப் பெரும் புகழையளித்தனர். அதன் பிறகு அவ்வூரில் பிரசித்திப்பெற்ற மஹாகவி ஸ்ரீமான் தி. நா. வரதராஜுர் வாழ்த்துப் பாக்கள் பாடி மணமக்களை ஆசீர்வதித்தார். அத்துடன் விவாகம் இனிது முடிந்தது.

மங்களம்.

# 16-வது அத்தியாயம்.

## சுமதீபாய்

அல்லது

## கன்னியின் கனவு—கதையின் முடிவு

சகோதர சகோதரிகளே!

மூன்பு பிரேமாஹரன் என்னும் நாவலில் கலியாணமே ஆகாத காரிகையாகவிருந்த எனக்கு இன்று 60-தாம் கலியாணம் நடந்தேறிய வைபவத்தைச் சொல்லி உங்களைப் பரவசப் படுத்த முன்வந்துள்ளேன்.

எங்கள் சஷ்டியப்தப்பூர்த்தியின் காரணமாக ஏராளமான கூட்டங்கள் எங்கள் இல்லத்தில் நிறைந்துகிடக்கின்றனர். வீடு முழுவதும் ஒரே அலங்காரங்களும் அற்புதங்களுமாக, கண்களையு மனதையும் ஒருங்கே பறிக்கின்றன. எங்கள் முதல் கலியாணத்தில் என்னென்ன நடந்தது? என்பது எனக்கு சிறிதும் ஞாபகமில்லை, இந்த 60-தாம் கலியாணத்திலோ! அப்பப்பா! சொல்லமுடியாத வைபவங்கள். சுருங்கச் சொல்லவேண்டுமானல், மஹாராஜாக்கள் வீடுகளிலுமில்லாத வைபோகங்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

மஹா திருப்திகரமான விருந்தை உண்டு ஒரே ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்தவர்களாய் அங்கங்கே படுத்துப் புரண்டுக் கொண்டிருக்கும் எங்கள் பந்துக்கள் ஒவ்வொருவர் வாயிலும் "ஆஹா! நமது பல்வந்த்நாராயணமஸாஹேர்கர்-சுமதீபாய் இவர்களின் சஷ்டியப்தப்பூர்த்தியை நாம் என்றென்று மறவாதவிதமான சந்தோஷமும் திருப்தியுமேற்பட்டுவிட்டது. இதுவரையிலும் நாம் எத்தனையோ சஷ்டியப்தப்பூர்த்திகளைக் கண்டிருக்கிறோமே அதில் எந்தயாவது இதற்கு இணைச்சொல்லமுடியுமா? என்ற பேச்சுதான்.

மற்றும், கணக்கற்ற சிறுவர்களின் கோலாகல கிளர்ச்சியோ! சொல்லமுடியாததாகவிருந்தது. அதில், எங்கள் சொந்த பேரன் பேத்திகள் மட்டும் 37 குழந்தைகள். சரியாய் 3 டஜன்

என்றுதான் வைத்துக்கொள்ளுங்களேன். ஒன்று அதிகமாக தான்யிருக்கிறதேயன்றி குறையவில்லை.

இல்லாவிட்டால், நிரம்ப ஜாஸ்தி என்று நினைக்கிறீர்களோ! எங்களுக்கு 4 பிள்ளை 4 பெண் ஆக எண்மர் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் 4, 5 குழந்தைகள் வீதமென்றால் சரி, நீங்கள்தான் கணக்குப்பண்ணிப் பாருங்களேன்.

எங்கள் 60-தாம் ஆண்டு நிறைவிழாவின்போது இந்த 37 பேர்களுமாக எங்களைப்படுதியபாடும் அவர்கள் குறும்புத்தனங்கள் ஒவ்வொன்றையும் என்னவென்று சொல்வது! சிறித்து சிறித்து வயிற்றில் ஒரு பக்கம் இப்போதும் வலித்துக் கொண்டேயிருக்கிறது. அவர்கள் பரிஹாசத்தால் வெட்கம் தலையைக் கவிழ்த்துவிட்டது இப்போதும் தலையை நிமிர்த்தினால் ஒருபக்கம் கொஞ்சம்போலே வலித்துக்கொண்டேயிருக்கிறது. அதனால், நான் அப்பாடாவென்று ஓய்ந்து ஒரு சோபாவில் சாய்ந்தேன். சிறுவர்களும் சலித்து ஓய்ந்துவிட்டார்கள். ஆனால், எங்கள் கடைசி பேரன் 6 வயதும் நிறம்பாத அருங்குழந்தை கமலாஹரன் ஓடிவந்து "கிரேனி!—Granny (பாட்டி) என்ன உங்க யூஸ்லஸ் சஷ்டிப்பூர்த்தி?" என்றான். நான், ஏன் என்ன சங்கதி, என்றேன். அவன் சரி, முன்னே ஒரு கால் ரூபாய் கொடுங்க அப்புறம் சொல்றேன்.

நான்:—ஏன்? எதற்காக?

அவன்:—நான் கடைக்குப்போயி சுவ்விங்கம், நெஸில்ஸ் சாக்லெட், கேட்புரீஸ் சாக்லெட், ஐஸ்கிரீம் இதெல்லாம் வாங்கி சாப்பிட்டால்தான் எனக்குத் திருப்தியாகவிருக்கும். உங்க டெவில் மைசூர்பாக்கு ஜாங்கிரி இதெல்லாம் யாருக்குவேண்டும் அதெல்லாம் உங்களைப்போன்ற கிழவி கிழவன்கள்தான் தின்பார்கள். அவர்கள்தான் உங்கள் சஷ்டிப்பூர்த்தியைப் புகழ்ந்துக்கொண்டாடுகிறார்கள். எனக்கு ஒன்றும் சரிப்படவில்லை நான் இன்றெல்லாம் ஒன்றுமே சாப்பிடவில்லை. ஊம், கொடுங்க சீக்கிரம்! எனக்கு மாத்திரம் சிலவில்லை என்று எண்ணிவிட்டீரா கிரேனீ! நான் கேட்டால் நீங்கள் உடனே கொடுத்துவிடணும் நீங்க இப்படியெல்லாம் என்னத்துக்கு ஏதுக்கு என்றெல்லாம் கேழ்க்கக்கூடாது கிரேனீ!—என்று தன் மழலைச்சொற்களால்

போட்டான் ஒரு பெரிய ஆர்டர். அந்த கண்டிப்பான உத்திரவைக்கேட்ட நான் சரி, இனிமேல் நீ கேட்டால் அப்படிதான் ஒன்றும்கேட்காமல் உடனே எடுத்துக் கொடுத்துவிடுகிறேன். ஆனால், இன்றுமாத்திரம் என்னிடமில்லை நீ போயி கிராண்பா-Grandpa (தாத்தா) வைக் கேட்டு வாங்கிக்கொள் அதோ! கிரேண்பா, அங்கிருக்கிறார் பார்! என்றேன்.

"நீங்கோ போங்கோ கிரேனீ! நான் உங்களைக் கேட்டா நீங்கோ அங்கேபோய் கேழ்கச் சொல்றீங்களே! உங்களுக்கே எழுந்துபோய் எடுத்துக் கொடுக்க முடியலை என்றால், அந்த கிழவர் தொப்பையைப் போட்டுக்கொண்டு எழுந்துப்போய் எடுத்துக் கொடுக்கவா போறார்? உங்களுக்கு இஷ்டமிருந்தா கொடுங்க இல்லாவிட்டா இல்லேண்ணு சொல்லுங்கோ தண்டத்துக்கு அங்கேபோயிக்கேள், இங்கேபோய்க்கேள் என்று ஏன்? சொல்லவேண்டும் பிச்சையா எடுக்கச் சொல்றீங்கோ'' என்று அவன் நிஷ்டூரமாக பேசியதைக்கண்ட நான் "வாடா! என் கண்ணே நீ கோவிச்சுக்கொள்ளாதே உனக்கு நான்தான் தருகிறேன்" என்று அவனை வாரியெடுத்து முகத்தோடு முகமாய் அணைத்துக்கொண்டு என் பீரோவின் பக்கம் சென்றேன். அச் சமயம் என் தோழிகள் நால்வர் ஓர்விடத்தில் உட்கார்ந்து ராஜலக்ஷ்மி என்ற நாவலை வைத்துக்கொண்டு ஒருவர்க்கொருவர் தர்க்கங்கள்பேசி வாதித்துக்கொண்டிருக்கிறார்கள்:—

" அந்த தம்பதிகள் இருவரின் பெயரில், ராஜசேகரன். என்பதின் முதல் பாகமாகிய ராஜ—என்பதுடன் விஜயலக்ஷ்மி என்பதின் பின்பாகமாகிய லக்ஷ்மி என்பதையும் சேர்த்து தான் இக்கதைக்கு ராஜலக்ஷ்மி என்று பெயரிடப்பட்டிருக்கிறது.'' என்றாள் ஒருத்தி.

மற்றொருத்தி :—அல்ல; அல்ல இந்த சிக்கலான கேசில் துப்புகளைக் கண்டுபிடித்து அந்த பொல்லாத கள்வனையும் தொலைத்த மஹா புத்திசாலியாகிய ராஜபஹதூர் பெயரினின்றும் ராஜவென்பதையும் ஜனங்களின் மனதைக் கவர்ந்த அந்த போக்கிரி கள்வனின் லக்ஷ்மிநராசு வென்பதின் லக்ஷ்மி என்பதையும் சேர்த்து தான் இக்கதைக்கு ராஜலக்ஷ்மி என்று பெயரிடப்பட்டிருக்கிறது—என்றாள்.

இன்னொருத்தி:—அந்தக் கள்வனைதான் ஜேகஜால கள்வன் என்று சொல்லியிருக்கிறதே! அதல்லாமல் இதில் வேறே அவன் பெயரைச் சேர்ப்பார்களோ? என்றாள்.

பின்னொருத்தி:—சரி, எப்படியோ ஒன்று ஒழிந்துபோறது. இதற்கேன் இத்தனைவாதம்? அம்மா தூங்குகிறார்கள் என்று கூட் பாராமல்:—என்று எல்லோரையும் பார்த்து ஒரு அதட்டு அதட்டிப் போட்ட கூச்சலில் மூடியிருந்த என் கண்கள் திறந்துக்கொண்டன. நான் வழக்கமாய் என் பகற்போஜனமுடிந்து படுத்துக்கொள்ளு மஞ்சத்தில் படுத்திருந்தேன். அன்றைய தினசரி பத்திரிகை ஒன்றை என்கைகள் நெஞ்சின் மீது அணைத்துக் கொண்டிருந்தன.

“ஹா! என் கண்மணி கமலாஹரன் எங்கே.” என்று க்ஷணநேரம் தவித்தேன். உடனே தெரிந்துக் கொண்டேன் அதெல்லாம் பகற் கனவு. எனக்கு கமலாஹரனுமில்லை—பிரபாஹரனுமில்லை. எனக்கு இன்னுமுதல் கல்யாணமுமாகவில்லை 60-தாம் கல்யாணமுமாகவில்லை நான் எப்போதும் போல் நித்ய கன்னிகையாகவே யிருக்கிறேன் என்று.

நான் இப்படி பகற்கனவு காணும்படி அயர்ந்த நித்திரை ஏற்பட்டதன் காரணத்தையும் சொல்லிவிடுகிறேன். நீங்களும் கேட்டு விடுங்கள்.

நீங்கள் படித்து மகிழ்ந்த ராஜலக்ஷ்மி என்னும் நாவலின் கதாநாயகன் ராஜசேகரன் தன் நாயகிசகிதம் இங்கிலாந்துக்குச் சென்று தன் பரீக்ஷைகளைப் பூர்த்திச்செய்து வரும் பொருட்டு இன்று காலை 10-மணிக்கு எஸ். எஸ். ராஞ்சி (S. S. Ranchi) என்னும் கப்பலில் ஏறினார்.

இவ் விவரத்தை முன்னதாக பேப்பர்கள் வாயிலாய் கண்டறிந்த நான் வெகு சந்துஷ்டியுடன் இன்று துறைமுகம் சென்று அவர்களைக் கண்டு மகிழ்ந்து கப்பல் ஏற்றிவிட்டு, ஒரு மணிக்குக் கப்பல் விட்டப்பிறகு வந்தேன். அத்துடன் இன்றைய தினசரி பத்திரிகையில், அந்த மஹா கள்வனைத்தொலைத்ததன்றி அவன் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து போலீஸாருக்குக் காட்டிக் கொடுத்ததில், போலீஸார் சென்று அந்த பாதாள நிலயத்தைப் பறிமுதல் செய்தபோது லக்ஷக்கணக்கான சொத்

துக்கள் கிடைத்தது மன்றி அந்த ஆட்களையெல்லாம் வெகு இலேசில் பிடித்து தண்டிக்கப்பட்டு விட்டதாகவும். அந்த கணக்கற்ற பொருளின் நான்கில் ஒருபங்கு ராஜபஹதூருக்கு அளிப்பதோடு, எதிர்க்காலத்தில் போலீஸில் ஒரு பெரிய ஸ்தானத்தை அடைவதற்கான முறையில் ராஜபஹதூரை தேற்சிப் படுத்த பிரையத்தனங்கள் செய்வதாகவுமான விவரங்களையறிந்த நான் அடைந்த சந்தோஷத்தை என்னவென்று சொல்வேன்.

பிரேமாஹரனில் நீங்கள் தான் பார்த்திருக்கிறீர்களே! மற்றவர் சந்தோஷத்தை என் சொந்த சந்தோஷமாகக் கருதும் எனக்கு, இவர்கள் விஷயம் பெருமகிழ்ச்சியை யளித்துப் பேரானந்தமான அயர்ந்த நித்திரையை அளித்து விட்டது. அதன் பயனாய் இந்த அற்புதமான கனவைக்கண்டு பிரமானந்த மடைந்தேன். சரி, அதிருக்கட்டும்.

சகோதர சகோதரிகளே!

இந்த பகற்கனவுக்கு பலன் எதாவது உண்டா? அதைப் பற்றி உங்களுக்கு எதாவது தெரிந்திருந்தால், தயவுசெய்து உடனே எனக்குத் தெரிவியுங்கள். நான் சென்று வருகிறேன், நமஸ்காரம்.

* * * *

அன்பார்ந்த சிநேகிதை, பம்பாய் சகோதரி ஒருவரின் ஞாபகார்த்தமாக, அவர்கள குணபாவங்களை யனுசரித்து அவர்களின் பெயரைத் தலையங்கமாக வைத்து எழுதிவருகிறோம். அடுத்தடுத்து சுமதீபாய் என்ற தலையங்கத்தையே படிப்பது சகோதர சகோதரிகளுக்கு வெறுப்பை யளிக்குமாயின், 'கன்னியின் கனவு—கதையின் முடிவு' என்ற தலையங்கத்தை வாசித்து திருப்தி யடையட்டுமென்றே அதையும் சேர்த்துள்ளோம்

மேற்படி சகோதரியின் பகற்கனவு பலித்து அவர்கள் சந்தோஷம் நிலைக்கவேண்டுமென்றும், மேற்படி கதையைப்படித்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளுக்கும் மேற்படி பலன் உண்டாக வேண்டுமென்பதாகவும் எல்லாம் வல்ல சர்வேஸ்வரனைப் பிரார்த்திக்கிறோம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

காமராசர் பல்கலைக்கழ...

யிருப்பதால் யாரையும் இங்கு நெருங்கவிடாதே!" என்று கூறிக் கொண்டே பாதச்சுவடுகளை அதி தீவிரமாய் ஆராயத் தொடங்கினார். பாதச்சுவடுகள் ஒன்றுமகப்படாமல் இரண்டு முன்னங் கைச்சுவடுகள்மட்டும் பணமிருந்தவிடத்திற்கு அருகாமையில் காணப்பட்டது. அதைக் கூர்ந்து கவனித்த இன்ஸ்பெக்டர் கஜேந்திரம், ஓர் இடத்தைக் கண்டு முகமலர்ந்தார். உடனே அவ்விடத்திலுள்ள மணலைக் கையால் ஒதுக்கிக்கொண்டே, கடப்பாரை, கோடாலி முதலியதைக் கொண்டுவரச்சொன்னார். அதைக் கொண்டுவரும்பொருட்டு சில ஆட்கள் மூலைக்கொருவராய் விரைந்து சென்றார்கள். அச்சமயம் இன்ஸ்பெக்டர் தன்பாக் கெட்டிலிருந்த "கேமிரா"வை எடுத்து அந்த முன்னங் கைச் சுவடுகளைப் போட்டோ பிடித்துக்கொண்டார். மற்றும் இஞ்சு டேப்பு ஒன்றை எடுத்து அதன் அகல நீளங்களை அளவு எடுத்தார். இதற்குள் கோடாலி, கடப்பாரை முதலியதும் வந்துசேர்ந்தது. உடனே ஓர் இடத்தைக் கடப்பாரையால் இடித்தார். தண் தண்ணென்று இரும்புக் கதவை இடிப்பது போலான சப்தம் உண்டாகியது. யாவரும் அதை நெருங்கி கவனித்ததில் 2 அடி நீளமும் 2 அடி அகலமும் கொண்ட சதுரமான ஒரு இரும்புத் தகடு காணப்பட்டது. அது உட்புறம் பூட்டப்பட்டுமிருந்தது. கோடாலி, கடப்பாரை முதலியவைகளால் பலமாய்த் தாக்கி உடைத்துக் கதவைப் பெயர்த்தெடுத்தார்கள். யாவர் மனதும் திடுக்கிடக்கூடியவிதமாய் அங்கு படிகள் அமைத்த சுரங்க வழி காணப்பட்டது. இதைக் கண்ட இன்ஸ்பெக்டர் உள்ளம் பூரித்தது. உடனே ஆயுதங்கள் தாங்கிய 10 கான்ஸ்டபிள்களை, ஒவ்வொருவராய் அதில் இறங்கச் செய்தார். பிறகு "ரெங்கசாமி! நீயும் மற்றுமுள்ள கான்ஸ்டபிள்களுமாக சீக்கிரம் வாருங்கள்" என்று கூறிக்கொண்டே தானுமிறங்கினார். அவர் பின்னால் ரெங்கசாமியும் மிகுதிப் போலீஸாரும் இறங்கினார்கள். இறங்கக்கூடிய 30 படிகள் முடிந்ததும், சாதாரண நெடும் பாதையாக சுமார் 1 பர்லாங்கு தூரம் வரையில் சென்று, ஏறவேண்டிய சில படிகள் காணப்பட்டது. அதன் மீது ஏறிச் சென்றதும், முன்பு உடைத்ததுபோன்ற ஒரு இரும்புக் கதவு காணப்பட்டது. ஆனால் அஃது பூட்டப்படாமலிருந்தமையினால், சுலபமாய்த் திறந்துகொண்டு வெளியில் வந்தார்கள்;




காதலியின்பக்கம் நோக்கி ஒரேப் டாய்ச்சலாய் பாய்ந்து குதித்துவிட்டான். (123-ம் பக்கம் பார்க்க)